சரசுவதி மகால் வெளியீட்டு எண் 393

லோகஸ்வரூபம்

(கரதல லோகாணி)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

1998

விலை ரூ. 75/-

T. 22487

சரசுவதி மகால் வெளியீட்டு எண் 393

லோகஸ்வரூபம்

(கரதல லோகாணி)

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்கள்
அறங்கூறும் அன்னை திருமதி. ராஜலெட்சுமி ஜினகுமார்
&
திருமதி. வசந்தா அனந்த விஜயன் B.A.,
கரந்தை, தஞ்சாவூர்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	லோகஸ்வரூபம் (கரதல லோகாணி)
பதிப்பாசிரியர்	:	திருமதி. ராஜலெட்சுமி ஜினகுமார், வசந்தா அணந்த விஜயன்
வெளியிடுபவர்	:	இயக்குநர் சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	393
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியீட்டு நாள்	:	டிசம்பர் 1998
தாள்	:	16 கி. கி. டி.என்.பி.எல்.
நூல் அளவு	:	21 x 14 செ.மீ.
பக்கங்கள்	:	356
படிகள்	:	500
எழுத்து	:	10 புள்ளி
அச்சிட்டோர்	:	டாப்லைன் கம்ப்யூட்டர் அச்சகம்
புத்தகக்கட்டு	:	ஆப் காலிக்கோ
பொருள்	:	சமயநூல்
விலை	:	ரூ. 75

வெளியீட்டாளர் முகவுரை

லோகஸ்வரூபம்

கரதல லோகாணி

பன்மொழி நூல்களையும் பல சமய நூல்களையும் பழம்பெரும் சுவடிகளிலிருந்து பதிப்பித்து கற்போர் கனி உவந்து கொள்ளும் வகையில் பல்வேறு அரிய நூல்களை வெளியிட்டு வரும் சரசுவதி மகால் நூலகம், பேதங்கடந்த சமுதாயத்திற்கும், இந்திய ஒருமைப்பாட்டிற்கும் அரும்பணி ஆற்றி வருகிறது.

சமண சமயம் இலக்கணம், இலச்சியம் என இந்திய மொழிகளுக்கு அளித்த பல்துறை அறிவுக்கொடை பெரிது. அத்தகு சமணத்தின் அரிய நூல்களில் ஒன்றே இங்குப் பதிப்பித்து வெளியிடப் பெறுகின்ற 'கரதல லோகாணி' என்னும் ஜைன 'லோக ஸ்வரூபம்' நூலாகும்.

சரசுவதி மகால் நூலகம், 'திருக்குறள் ஜைன உரை' பார்சுவநாதர் அம்மானை' 'பதார்த்த சாரம்' ஆகிய சமண சமயஞ் சார்ந்த நூல்களை இதற்கு முன் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது வெளியிடப் பெறும், 'கரதல லோகாணி' என்னும் லோக சொரூப நூல், சமணர்களின் கருத்துப்படியான அவர்களின் உலக அமைப்பு, அவற்றில் வாழும் உயிர்கள், அவற்றின் பிறப்பு இறப்புக்களின் தன்மை, மனிதர்களும் தேவராகலாம் என்பன போன்ற கருத்துக்கள் முதலியவற்றை எடுத்துரைக்கின்றது.

மணிப்பிரவாள நடையிலமைந்த இந்நூலை மூலக்கருத்து மாறாமல் தமிழாக்கி நன்முறையில் திருமதி. இராஜலெட்சுமி ஜின குமார் அவர்கள், திருமதி. வசந்தா அனந்த விஜயன் அவர்களும் இணைந்து பதிப்பித்துள்ளனர். பதிப்பாசிரியர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் நன்முறையில் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய மைய அரசுக்கும், இந்த நூலகத்தைச் செவ்வனே பராமரித்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய பள்ளிக் கல்வித்துறைச் செயலாளர் திரு. எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப. அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இந்நூலை நுண்ணாய்வு செய்து வெளியிடம் பரிந்துரைத்த பன்மொழிப் புலவர் திரு. மு.கு. ஜகந்நாத ராஜா அவர்களுக்கு எனது நன்றியையும், இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் திரு. நா. தியாகராஜன், எம்.ஏ.பி.எல்., அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்., அவர்களுக்கும் எனது பாராட்டுக்களையும், தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலினை நன்முறையில் அச்சிட்டளித்த தஞ்சாவூர் டாப்லைன் கம்ப்யூட்டர் அச்சகர்தாருக்கும், இந்நூல் நன்முறையில் வெளிவரத் துணை நின்ற ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்.

சமய அன்பர்களுக்கும், சமயத்துறை ஆய்வாளர்களுக்கும் சமணப் பற்றாளர்களுக்கும் இந்நூல் பயன்மிக அளிக்குமென நம்புகின்றேன்.

ஒம். துநா. இராமநாதன், இ.ஆ.ப.,

தஞ்சாவூர் — மாவட்ட ஆட்சியர் மற்றும் பதவிவழி இயக்குநர்

19.12.1998 — சரசுவதி மகால் நூலகம்

ஸ்ரீ – ஜிநாயநம

ஜிந காஞ்சி மடாதிபதி

ஸ்வஸ்தி ஸ்ரீ லக்ஷ்மிஸேன பட்டாரக

பட்டாசார்ய வர்ய ஸ்வாமிகள்

ஆசியுரை

"மெய்ப்பொருள் காட்டி உயிர்க்கு அரணாகித்
துக்கங் கெடுப்பது நூல்".

அகப்பற்றையும் புறப்பற்றையும் நீக்கி, சுக்லத்யானத்தின் மூலமாக நான்கு காதி கர்மத்தைக்கெடுத்து, முழு அறிவு (கேவலஜ்ஞானம்) பெற்றவர்களே தீர்த்தங்கரர்களாவர்கள். அவர்களது திவ்யத்வனி மூலமாக வெளிவந்த தர்ம கருத்துக்களே சத்யவசனமாகும். குறைந்த அறிவு கொண்டவர்கள் கருத்துக்கள் சத்தியமாகாது. ஸ்ரீபகவானால் சொல்லப்பட்ட தர்மங்களை ஐயக்கண்கொண்டு பார்க்கின்றவர்கள் அபவ்யர்களாவர்.

பரத க்ஷேத்ரத்தில் தற்போது நடப்பது அவஸர்ப்பிணி காலம். ஐந்தாங்காலமாகிய தீக்காலம் நடந்து கொண்டுவருகிறது. அனைத்துப் பண்புகளும்-குணங்களும் குறைந்து கொண்டு வருகின்றன. ஆன்மீக ஞானமும் குறைந்துவிட்டது. செவிவழியாக வந்த ஆன்மஞானம் ஆ... வடிவில்-எழுத்து வடிவில் வரத் தொடங்கியது. கணதரர் அங்கப்ரகீர்ணம் எழுதினார். பிறகு சுருத கேவலிகள், ஆசாரியர்கள் முனிபுங்கவர்கள் சாதுக்கள் தர்மக்கருத்துக்களைத் தொகுத்தனர் பூதபலி புஷ்பதந்தர் ஷட்கண்டாகமமாகத் தொகுத்தனர். இப்படி பகவானால் சொல்லப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து, நூல்கள் செய்கின்ற பொழுது தங்கள் பெயரைக் குறிப்பிட மாட்டார்கள். அதனால்தான் சிலநூல்களின் ஆசிரியர் பெயர் இல்லாதிருப்பதைக் காணலாம்.

ஆகமங்கள் அனைத்தும் முடிந்த முடிபாக மிகவும் வலியுறுத்திக் கூறுவது மோட்சம் அடைவதேயாகும். ஆகமங்கள் படிக்காமல்-தத்துவ விசாரம் செய்யாமல் பகவானை வணங்கினாலும், ஜப-தப-விரத அனுஷ்டானங்களை செய்தாலும் முழுப்பயன் பெற

முடியாது. சௌதர்மேந்திரன் முதலான இந்திரர்கள் அடுத்த பிறவியில் மோட்சம் நிச்சயிக்கப்பட்டிருந்தும் ஆகமங்களைப் படிக்கிறார்கள்.

படிப்பது படிப்பிப்பது கேட்பது சிந்திப்பது ஆலோசனை செய்வது வினாகேட்டு விடைபெறுவது அனைத்தும் ஞானம் பெறுவதற்கான வழிகளாகும்.

ஆன்மாவை அடிப்படையாகக் கொண்டு தோன்றுவதே தர்மமாகும். அத்தர்மத்தைப்பெற ஞானம் வேண்டும் அப்பொழுதுதான் நம்முடைய ஆன்மாவை உயர்த்திக் கொள்ளமுடியும். மோட்சத்தை அடைய வழிகாட்டுவது எதுவோ அதுவே சாத்திரமாகும். பிறநூல்கள் அனைத்தும் ஆன்மாவைக் கெடுக்கின்ற சஸ்த்திரமாகும். அதாவது கொலைக் கருவிகளாகும்.

பிரதமானுயோகம், கரணானுயோகம், சரணானுயோகம், திரவ்யானு யோகம் நான்கும் பரமாகமமாகும். இவை நான்கும் ஆன்மாவுக்கு சத் எது? அசத் எது? நல்லது எது? கெட்டது எது? ஏற்றுக் கொள்வது எது? விட்டுத்தள்ளுவது எது? என்பதை விளக்கிக் கூறுகின்றன. இதில் சத்தையும் நல்லதையும் ஏற்போமானால் ஆன்ம (நிர்ணயம்) உறுதிப்பாடு ஏற்படும். சம்யக்ஞானம் தோன்றும். ஞானத்தால் சுவையும், நம்பிக்கையும், சாந்தமும், சுகமும், ஏற்படும். இறுதியில் மோட்சமடைய வழி விளங்கும்.

ஆன்ம விடுதலை பெற சம்யக்த்வம் ஒன்றே வழி. அனைத்து உயிர்களிடத்திலும் சம்யக்த்வம் அடங்கிகிடக்கிறது. சம்யத்வம் இல்லா தேவபிறவியைவிட சம்யத்வத்தோடு கூடிய நரகப்பிறவியே சிறந்தது.

இதுவரை வீடுபேறு அடைந்தவர்கள் அனைவரும் சம்யக்த்வம் பெற்றே உயர்ந்திருக்கிறார்கள். ஒன்று என்ற எண் எழுதி பிறகு எத்தனை பூஜ்யம் எழுதினாலும் மதிப்பு உண்டு. ஒன்று எண் எழுதாமல் எத்தனை பூஜ்யம் எழுதினாலும் மதிப்பு இல்லை. அதுபோல் சம்யக்த்வம் பெற்றால்தான் அனைத்தும் பெற்று உயரமுடியும். சம்யத்வம் பெறுவதற்கு சாத்திரங்கள், நூல்கள் துணை புரிகின்றன.

ஜைனரிடையே 'பதார்த்த ஸாரம்' என்ற தத்துவ நூலை அறிமுகப்படுத்தி பெருமை பெற்ற சரஸ்வதி மஹால் நூலகத்தினர் "உலக அமைப்பைப் பற்றி கூறும் லோக ஸொரூபம் என்கின்ற கரதல லோகாணியை வெளியிடும் அவர்களின் மனித நேயம் போற்றுதலுக்குரியது.

அறங்கூறும் அன்னை தஞ்சை திருமதி. இராஜலெட்சுமி அம்மையார் அவர்கள் ஓலைச்சுவடியில் இருந்த பதார்த்தசாரத்தை நூல்வடிவில் பதிப்பித்தார்கள். பூமியில் அழுந்தியிருந்த இரத்தினப்புதையலை வெளியே எடுத்தது போலாகும். யானைமீது பவனிவரச் செய்து சில ஆண்டுகளுக்குமுன் பதார்த்தசாரத்தை வெளியிட்டார்கள்.

தற்போது கரணானுயோகத்தின் அங்கமாகிய கரதலலோகானி- (லோகஸ்வரூபத்தை) நூலை பதிப்பித்துள்ளார்கள். அவர்களுடைய சிந்தனை -செயல் அனைத்தும் நூல்களைப் படிப்பதும் நூல்களை வெளியிடுவதுமே யாகும். அவர்கள் வீட்டில் உள்ள நூல் நிலையம் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டுவதாகும். திருமதி. இராஜலெட்சுமி அம்மையார் எண்ணச் செயல்களுக்கெல்லாம் உறுதுணையாக நின்று உதவிபுரிகின்ற குடும்பத்தினர் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். சங்கம் அல்லது மன்றம் சாதிக்கின்ற செயல்களை தனியொருவராக நின்று செயல்படுத்தி சாதனைபடைத்துள்ளார்கள். தஞ்சைத் தரணியில் கரந்தட்டாங்குடி ஜைனகோவில் மற்றைய கோவில்களுக்கெல்லாம் முன் உதாரணமாக சிறப்படையுமாறு நிர்வாகம் செய்து வருகிறார்கள்.

"வாமன் பொருள் புரி விழவு காண்பார் புண்ணிய உலகம் காண்பார்" என்ற தோலாமொழித் தேவரின் வாக்குக்கு இணங்க அவரது செயல்கள் அரியது! பெரியது! சீரியது! செம்மைமிக்கது!

தாய்மொழி மூலமாக தத்துவங்களை வெளியிட்டு அனைவரும் படித்து, புரிந்து, செயல்பட்டு ஆன் நலம் பெற உதவிய மேற்கண்ட அனைவரும் நீடுழி வாழ்ந்து மேலும் நூல் பல வெளியிட்டு ஆன்ம நலம் பெற வேண்டுமென ஸ்ரீ பார்ஸ்வநாத் பகவானை நமஸ்கரித்து ஆசி வழங்குகிறோம்.

வர்த்ததாம் ஜிந ஸாஸனம்! ஸத்தர்ம விருத்திரஸ்து!!

மேல்சித்தாமூர் லக்ஷ்மிஸேன ஸ்வாமிகள்

22.7.98

பதிப்புரை

'கரதல லோகாணி' (லோக ஸொரூபம்) என்னும் இவ்வுரைநடை நூல் உலகங்கள் அமைப்புப் பற்றி விளக்கும் நூலாகும். உலகங்கள் அமைப்புப் பற்றி எல்லா தரிசனங்களும் கூறுகின்றன. சமணமும் தம் கருத்தைக் கூறுகிறது. வேறு இந்திய தரிசன நூல்களில் உலகங்கள் அமைப்புப் பற்றிக் குறிப்புகள் / செய்திகள் நிறையவே கிடைக்கின்றன என்பர். ஆனால் உலகங்கள் அமைப்புக் குறித்துப் பேசும் தனி நூல்கள் அத் தரிசனங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஜைன ஆகமங்களுள் 'கரணானு யோகம்' என்னும் பிரிவில் உலக அமைப்புப் பற்றிப் பேசும் தனி நூல்கள் பல கிடைக்கின்றன என்பது சிறப்பாகும்.

கரதல லோகாணியை இதுவரை யாரும் வெளியிடவில்லை. தமிழ் உரைநடை நூலாக இருந்தும் அதனைப் பதிப்பிக்கும் முயற்சியை யாரும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. கரதல லோகாணி சுவடிகள் பல கிடைக்கின்றன. பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் இச்சுவடி கிடைப்பதால் இது பெரு வழக்காகப் பயிலப்பட்டு வந்துள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால் அண்மைக் காலங்களில் கரணானுயோகம் பயிலுதல் விடுபட்டுப் போயுள்ளது.

இப்பதிப்புக்கு இரண்டு சுவடிகளும், இரு கையேட்டுப் பிரதியும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பேராவூர் ஜிநாலயச் சுவடி, ஆசிரியர் குந்த குந்தர் கல்வி நிறுவனச் சுவடி, வேதாரண்யம் ஸ்ரீமான் ஆதீஸ்வர முதலியார் அவர்களிடமிருந்து பெற்ற கையேட்டுப் பிரதி, பதிப்பாசிரியரிடமிருந்த கை ஏட்டுப் பிரதி இவை நான்குமே, இப்பதிப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் ஒத்தே உள்ளன. பாட வேறுபாடுகள் மிக அரிதாகவே உள்ளன. ஆசாரியர் நேமிச்சந்தரருடைய திரிலோக ஸாரமும் ஒப்புப் பார்க்கப்பட்டது. பாட வேறுபாடுகள் அங்கங்கே காட்டப்பட்டுள்ளன.

ஆசாரியர் குந்த குந்தர் கல்வி நிறுவன சுவடியைத் தியாகி வீ.நா. பொன்னுசாமி ஜைன் தம் முதுமையிலும் கைமாறு கருதாது அன்புடன்படி எடுத்துக் கொடுத்தார். ஏட்டுப் பிரதியை நெல்லூர் திரு. அப்பாண்டை நைனார் படி எடுத்துக் கொடுத்தார். அவர்களுக்கும் படிகளை ஒப்புப் பார்த்தலுக்கு உடன் இருந்து உதவிய கூனம்பாடி திரு. மு. ஜென்னத் ஜைன் அவர்களுக்கும் அன்பான நன்றியைக் கூறிக் கொள்கிறேன். ஜைனேந்திர அகராதியிலிருந்து தேவையான படங்களை அன்புடன் படம் எடுத்துக் கொடுத்த அன்பர் C.S.P. ஜைன்

அவர்களுக்கும், சுவடிகள் தந்து உதவிய பேராவூர் ஜிநாலய அறங்காவலர்களுக்கும், ஆசாரியர் குந்தகுந்தர் கல்வி நிறுவனத்தாருக்கும் (வடவணக்கம்பாடி - பொன்னூர்மலை) நன்றியுடையேன்.

ஜிந காஞ்சி மடாதிபதி ஆசியுரை வழங்கி அருள் பாலித்தமையைப் பெரும்பேறாகக் கருதுகின்றனர் பதிப்பாசிரியர்கள். இந்நூல் அச்சில் வர காரணமாக இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர் திரு. து.நா. சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப. அவர்களுக்கும், நூலக நிர்வாக அலுவலர் திரு. நா. தியாகராஜன், M.A.B.L., அவர்களுக்கும் வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் M.A., M.Lis., அவர்களுக்கும் தமிழக சமண மக்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்களாவர்கள். டாப்லைன் கம்ப்யூட்டர் மைய உரிமையாளர் திரு. B.P. ராஜன், B.E., (Hons) M.B.A அவர்களுக்கும் அன்பு கலந்த நன்றி. ஆசாரியர் குந்த குந்தர் கல்வி நிறுவனத்தாரின் கைமாறு கருதாத பேருதவி என்றும் நினைவில் நிலைப்பெற்றிருக்கும். கைப்பிரதி கொடுத்த அன்பர்களுக்கும் இம்முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த சாஸ்திரியார்கள் அனைவருக்கும் மற்றும் பலவகையாலும் பல நிலைகளிலும் உற்றுழி உதவிய நல்ஆத்மாக்களுக்கும் ஸமஸ்த ஸ்ராவக ஸ்ராவகியர்க்கும் நன்றி உரித்தாகுக.

எளிய பதிப்பாசிரியர்களின் முயற்சியினை ஊக்குவித்து குறையைப் பொறுத்து நிறையை போற்றுதல் நலனே.

வாழிய நல்லறம் ! வளர்க ஆன்ம நலம்!!

இராஜலெட்சுமி ஜிநகுமார்
வஸந்தா அனந்தவிஜயன்
பதிப்பாசிரியர்கள்

நடுவுலகம் ஒரு தோற்றம்



படம்: 7

ஆய்வு முன்னுரை

நுழைவாயில்

மலர்மிசை ஏகிய வேண்டுதல் வேண்டாமை இலாத முழுதுணர் ஞானியாம் அருக பரம தேவர்கள் அருளிய பரம ஆகமங்கள் நான்கு வகைப்படும் என்பர். அவை, பிரதமானுயோகம், கரணானுயோகம், சரணானுயோகம், திரவியானுயோகம் என்பனவாம். இவை நான்கும் நான்கு வேதம் என்று அறியப்படும்.[1]

அவற்றுள் கரணானுயோகம் என்பது உலக அமைப்பு, கால மாறுதல்கள், வினைகள் செயல்பாடு, உயர்களது பரிணாம வேறுபாடுகள் முதலான பற்றி விரிவாகப் பேசும் என்பர்.

'உலகின் கிடக்கையும் வாழி, நிலையும்
மலைவின் றுரைப்பது நூல்'

என்று கரணானுயோக நூலுக்கு இலக்கணம் கூறும் அருங்கலச்செப்பு.[2] கரதல லோகாணி எனும் இந்நூல் உலக அமைப்பினைப் பேசுவதால் கரணானுயோக நூல் வகையைச் சார்ந்ததாகும்.

உலக அமைப்பு உரைக்கும் நூல்கள் :

ஜிந ஆகமங்களுள் பல நூல்கள் உலக அமைப்புத் தொடர்பான குறிப்புகளைப் பரவலாகத் தருகின்றன. என்றாலும் உலக அமைப்புப் பற்றிக் கூறும் தனி நூல்களும் ஜிந ஆகங்களுள் உள்ளடங்கி இருக்கின்றன. என்பது தனிச் சிறப்பு, ஆகும். பல நூல்கள் காலக் கறையானுக்கும் காப்பார் இன்மையாலும் அழிந்துபட்டாலும், 'தில்லோய பண்ணத்தி', 'திரிலோக சாரம்', 'ஜம்பூ தீப பண்ணத்தி' முதலான பாகத மொழி நூல்களும், 'லோக விபாகம்,' 'சித்தாந்த சார தீபகம்' போன்ற சமஸ்கிருத மொழி நூல்களும் உலக அமைப்பினைப் பேசும் தனி நூல்களாகக் கிடைத்துள்ளன. 'தத்துவார்த்த சூத்திரம்', 'ஹரிவம்ச புராணம்' முதலான நூல்களுள்ளும் உலக அமைப்பு பற்றிய செய்திகளை உரைக்கப்பட்டுள்ளன.

---

1 'வேதம் நான்கு விரித்தோய் நீ' - மே. பு. 807
2 அருங்கலச் செப்பு, 59

தமிழிலும் மேருமந்தர புராணம், சூளாமணி நீலகேசி, ஸ்ரீபுராணம் போன்ற நூல்களில் உலக அமைப்புப் பற்றிய குறிப்புகள் பரவிக் கிடக்கின்றன. கரதல லோகாணி என்னும் இந் நூலும் உலக அமைப்பினை உரைக்கும் தனி நூலாகும். இது உரைநடையில் அமைந்துள்ளது. பொதுவாக உலக அமைப்பினை விளக்கும் நூல்களை 'லோகாணி' என்றோ 'லோக சொரூபம்' என்றோ அழைக்கப்பெறும் வழக்கு இன்றும் ஜைனரிடையே காணப்படுகிறது. மேருமந்தர புராணம் உலக அமைப்புப் பற்றி 106 பாடல்களில் தனியாகவும் கூறுகிறது. அப்பகுதியை மட்டும் எடுத்து " லோக ஸ்வரூபம்' எனப் பெயரிட்டுத் தந்துள்ளமை இதனை வலியுறுத்தும்.

கரதல லோகாணி: பெயர் விளக்கம்

லோகாணி எனில் உலகங்கள் என்று பொருள். கரதல லோகாணி எனில் உள்ளங்கையில் உலகங்கள் என்று பொருளாகிறது. அதாவது உள்ளங்கையில் வைத்த நெல்லிக் கனி போல உலகங்களைப் பற்றித் தெளிவாக / எளிமையாகக் கூறும் நூல் என்பதாம்.

திரிலோகசாரம் எனும் பாகத மொழி நூலை எளிமைப்படுத்தி சிந்தாந்தசார தீபகம் எனச் சமற்கிருத மொழியில் அருளிய ஸ்ரீபட்டாரகர் சகலகீர்த்தியார் தம் நூல் உள்ளங்கை நெல்லிக்கனி போலப் பவ்வியர்களுக்கு எளிதாக விளங்கும் என்று குறிப்பிடுகிறார்.[5] ஏனெனில், உலக அமைப்புப் பற்றிப் பேசும் நூல்கள் பல வகையான நுட்பமான கணிதக் குறியீடுகளையும் கணிதக் குறிப்புகளையும் தருகின்றன. அவற்றை எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ள முடியாது. எனவே, அக் கணித நுட்பங்களை நீக்கிவிட்டு அல்லது விரித்து எளிமைப்படுத்தி பலரும் புரிந்து கொள்ளும் பாங்கில் நூலை படைத்துள்ளதால் அவ்வுவமையைக் கூறுகிறார். அதே போன்று இந் நூலாசிரியரும் எளிமை கருதி இந் நூலுக்கு கரதல லோகாணி எனப் பெயிட்டுள்ளார் எனலாம். இந்நூலுள்ளும் கணித நுட்பங்கள் இடம் பெறவில்லை என்பது எண்ணத் தக்கது.

---

3 மே.பு. செய்யுள் 1214 முதல் 1319 வரை

4 மேல் மின்னல் சக்கரவரத்தி நைனார் கை ஏட்டுப் பிரதி

5 சித்தாந்த சார தீபகம், சுலோ 37

நூற் பெயர்

இந் நூலுக்குக் கரதல் லோகாணி எனப் பெயர். ஆனால் நூலுள் இப் பெயர் எங்கும் ஆளப்பெற வில்லை. நூல் முடிவில் 'லோக ஸ்வருபம், ஸம்பூர்ணம்,' 'லோக சொரூபம் ஸமாப்தம்' என்றே ஏடுகளில் காணப்படுகின்றன. கரதல லோகாணி ஸம்பூர்ணம் / ஸமாப்தம் என்ற குறிப்பு, கிடைத்துள்ள சுவடிகளில், காணப்பட வில்லை. எனவே, நூலின் பெயரை 'லோக ஸ்வரூபம்' என்று கருதலாமோ என எண்ணத் தோன்றுகிறது. ஆனால், அப்படிக் கருதுவதற்குப் போதிய சான்றுகள் இல்லை. 'ஸம்பூர்ணம்,' 'ஸமாப்தம்' எனச் சொற்கள் வேறுபடுவதால் இந்த முடிப்பு வாக்கியங்களை ஏடு படி எடுத்தோர் எழுதியதாகவே கருத வேண்டும். மேலும் 'லோக ஸ்வரூபத்தில்' காண்க என மேற்கோளாகப் பிற நூல்களில் குறிக்கப்படாமையும் இக் கருத்துக்கு அரண் சேர்க்கிறது.

தனி நூலா ? உரை நூலா ?

பேராவூர் ஜிநாலயச் சுவடி முடிவில் படி எடித்தவர் 'பேராவூர் கொழந்தை அம்மா ளாவை த்ரிலோக சார வ்யாக்யானம் எழுதி வைத்த தர்மம். பேராவூர் அய்யண நயினார் 'ச்வ அஸ்த்த லிகிதம்' என்று குறிப்பிடுகிறார். இதனால், கரதல லோகாணி திரி லோக சாரத்தின் வியாக்யான(விளக்க) நூலாக அல்லது உரை நூலாகக் கருதப்பட்டதாகவும் தெரிகிறது.

திரிலோக சார நூலுக்கு ஸ்ரீமத் மாதவசந்திர ஆசாரியார் சமற்கிருத உரை அருளியுள்ளார். அவ் வுரையையும் இந் நூலையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பல இடங்களில் அச் சமற்கிருத உரையின் மொழி பெயர்ப்புப் போல இதன் உரைநடை அமைந்துள்ளதைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக,

ஸஸுகந்த புஷ்ப சோபித ரத்னதரா ரத்ன மித்யா: நித்ய ப்ரபா:!
ஸர்வேந்த்ரிய ஸுக தாயிபி: ஸ்ரீகண்டாதி மிச்சிதா பவனா:!!

என்பதனை,[6] 'நல்ல, சுகந்த புஷ்ப ஸோபித ரத்ன தரங்களும், ரத்ன மித்திகளும், நித்ய ப்ரகாசமும், ஸர்வேந்திரிய ஸுக காரணங்களும் ஸ்ரீகண்டாதி வஸ்து நிறைந்தது மாகக் கொள்க' என்றும்,[7]

அஷ்ட குணார்த்தி விசிஷ்டா: நாநா மணி பூஷணை: தீப்தாங்கா!
புஞ்ஜதே போக மிஷ்டம் ஸ்வகபூர்வ தபஸா தந்த்ரலாரா:!!

என்பதனை,[6] 'அதில் தேவர்கள் ஐஸ்வர்யமும் அணிமாத்யஷ்ட குண ரித்தி விசிஷ்டர்களும் நாநா பூஷணங்களால் தீப்த சரீரமும், தங்களுக்கு இஷ்டமான போகங்கள் எல்லாம் அனுபவிக்கிற பெருமாவார்கள்' என்றும்[7] மொழி பெயர்ப்பாக அமைத்துள்ளார். இப்படிப் பல இடங்களில் காண முடிகிறது. மேலும், மங்கல வாழ்த்து காதைகள் இரண்டினை எடுத்தாண்டு உரையும் எழுதியுள்ளார்.[8] இவற்றை எல்லாம் மனத்தில் கொண்டுதான் இந் நூலைத் திரிலோக சாரத்தின் வியாக்யான மாகக் கருதும் வழக்கு இருந்தது போலும். இது பற்றி ஆய்தல் பயனுடையதாகும்.

இந்நூலாசிரியர் தம் நூல் திரிலோக சாரத்தின் விளக்க நூல் என்று எங்கும் குறிப்பிடவில்லை. திரிலோக சாரத்தை எளிமைப்படுத்தும் பட்டாரகர் சகலகிர்த்தியார் தம் நூல் மூல நூலின் எளிய வடிவம் என்று குறிப்பிடுகிறார்.[9] அது போன்று மூல நூல் பற்றிய குறிப்பு இதில் காணப்படவில்லை. மங்கல வாழ்த்துப் பாடலாக அமைந்துள்ள வெண்பாவில் 'உலக இயல்பை நாமவகை உரைப்பன் நன்கு' என்றே குறிப்பிடுகிறார். நன்கு என்ற சொல்லாட்சி நூலின் பொருள் எளிமையைச் சுட்டுவது போலவே அமைகிறது. கரதல லோகாணி எனும் பெயருக்கு இது வலிவு ஊட்டுவதனை உய்த்துணரலாம். இதே மங்கல வாழ்த்துப் பாடலை மேல் மின்னல் சக்கரவர்த்தி நைனார் 'லோக ஸ்வரூபம்' எனத் தாம் தொகுத்துள்ள மேருமந்தர புராணம் பாடல் தொகுப்புக்கும் மங்கல வாழ்த்தாக அமைத்துள்ளார். அதனால், இது தனி நூலின் மங்கல வாழ்த்து என்று அறியலாம்.

திரிலோக சார நூலுக்குப் பிற்பட்டு எழுந்த 'ஜம்பூ தீப பண்ணத்தி', ' லோக விபாகம்' போன்ற நூல்களில் திரிலோக சாரத்தின் காதைகள் பெரும் எண்ணிக்கையில் எடுத்தாளப் பட்டுள்ளன என்பர். அது போல இந் நூலாசிரியரும் பல சுலோகங்களை எடுத்து

---

6 தி.ஸா.சுலோ 218.219
7 கரதல லோகாணி பக் 43.44
8 கரதல லோகாணி . பக் 41.213
9 திரிலோக சார தீபகம்.சு.41-44

ஆண்டுள்ளார் என்று கொள்ளுதலே பொருத்தமாகும். காலத்தால் பிற்பட்ட நூல்களில் திரிலோக சாரத்தின் தாக்கம் அதிகம் என்பதனையே இவை சுட்டுகின்றன. முன்னோர் நூற்பொருளைப் பொன்னே போல் போற்றுதல் இலக்கிய வழக்காகும்.

அடுத்து, நூல் வைப்பு முறையிலும் இந்நூல் சற்று மாறுபடுகிறது. திரிலோக சாரம் 1 உலக பொது அதிகாரம், 2 பவன அதிகாரம், 3 வியந்தர லோக அதிகாரம், 4 ஜோதிர் லோக 5.வைமானிக லோக அதிகாரம், 6. மனிதர் - விலங்கு லோக அதிகாரம் என ஆறு அதிகாரங்களைக் கொண்டுள்ளது. கரதல லோகாணியும் 1 உலகம் (நரக உலகம்) 2. பவன லோகம், 3. மத்யம லோகம் 4. வியந்தர லோகம், 5. ஜோதிர் லோகம் 6. கல்ப லோகம் என ஆறு அதிகாரங்களைக் கொண்டுள்ளது. மனிதர் விலங்கு உலக வருணனையை இந்நூலாசிரியர் கடைசியில் வைக்காமல் மூன்றாவதாக மத்யம லோகம் என அமைத்துள்ளார். இதே அமைப்பு முறையைத் தில்லோய பண்ணத்தியிலும் காண முடிகிறது. அதிகார வைப்பு முறையில் இந் நூலாசிரியர் காலத்தால் முற்பட்ட தில்லோய பண்ணத்தியைப் பின் பற்றியுள்ளார் எனக் கருதலாம். நூலின் தொடக்கத்தில் வரையறுத்துக் கொண்டவாறு கீழ், நடு, மேல் உலக வருணனை முறையாக இதில் அமைந்துள்ளது.

மேலும், கடல் தீவுகளின் பெயர்களையும் அவற்றின் அளவுகளையும் திரிலோக சாரம் ஜோதிர் உலக அதிகாரத் தொடக்கத்தில் தந்து பிற செய்திகளைக் கடைசி அதிகாரத்தில் தருகிறது. ஆனால் இந்நூலாசிரியர் பூமி பற்றிய எல்லாச் செய்திகளையும் ஒருசேர மத்யம லோக அதிகாரத்திலேயே தருகிறார்.

அடுத்து, இந்நூலாசிரியர் பதார்த்த சாரம், ஸ்ரீபுராணம் போன்ற உரைநடை நூல்களிலிருந்து பல பகுதிகளை வேண்டும் இடங்களில் அப்படியே எடுத்து ஆண்டுள்ளார். அவற்றுக்கு இணையான கருத்துடைய நூற்பாக்கள் திரிலோக சாரத்தில் இல்லை. அதனால் திரிலோக சாரத்தில் இல்லாத செய்திகளும் இதில் இடம்பெற்றுள்ளன என அறியலாம்.

திரிலோகசாரம் சுருக்கமாகக் கூறும் சில பகுதிகளை இந்நூல் விரிவு படுத்திக் கூறுகிறது. எடுத்துக்காட்டாக திரிலோக சாரம் நரக படல இந்திரகங்கள் விஸ்தாரங்களைத் தனித்தனியாகக் கூறவில்லை. ஆனால் இந்நூல் விரிவுபடுத்திக் கூறுகிறது.[10]

அடுத்து, மேருமந்தர புராண உரைகாரர் 'திரிலோகசாரம் கரதல லோகாணி முதலிய க்ரந்தங்களில் விஸாலமாக அறிந்து கொள்ளலாம்' என்று மேற்கோள் காட்டுதலால்[11] கரதலலோகாணி தனி நூலாகக் கருதப்பட்டுள்ளது என்பதனை உய்த்துணர முடிகிறது.

ஆகவே, இவ்வகைப் புறச் சான்றுகளால் இந்நூல் திரிலோக ஸார வ்யாக்யான நூல் அன்று என்றும், தமிழில் எழுந்த தனி நூல் என்றும் தெளிவாகிறது.

நூலாசிரியர் :

இந்நூலை ஆக்கிய ஆசிரியர் பெயர், காலம் முதலியன பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்கவில்லை. நூல் உரைநடையில் அமைந்துள்ளதால் உரைநடை வழக்கு மிகுந்த காலத்தில் இவர் இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

இந்நூல்வழி இந்நூலாசிரியர் பன்மொழிப் புலமை மிக்கவராகவும், பரம ஆகமங்களில் ஆழ்ந்தகன்ற பயிற்சி உடையவராகவும் இருந்துள்ளார் என்பதை அறிகிறோம். இவர் செய்திகளைச் சொல்லிச் செல்லும் நடை எளிமையாக ஆற்றொழுக்காக அமைந்துள்ளது. எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளலாம், அளவுகள், எண்ணிக்கைகளை வேண்டிய இடங்களில் விரித்துத் தருகிறார். சமஸ்கிருத சொற்களை பெரிமளவில் ஆண்டுள்ளதால் அவை அக்கால மக்களிடையே பெருவழக்கில் இருந்தன போலும்.

நூல் நுவலும் பொருள்:

இந்நூல் ஆறு அதிகா[illegible] அனந்த ஆகாய[illegible] [illegible]ரங்களைக் கொண்டு இலங்குகிறது. அவ்[illegible] [illegible] நட்ட நடுப்பகுதியில் உலகம் உள்ளது. [illegible]வுலகத்தின் நட்ட நடுப்பகுதியில் நாம் வாழும் ஜம்பூ தீவு உள்ளது. ஒவ்வொரு நிலப் பகுதியும் கடலால் சூழப்பட்டுள்ளதால் நிலப்பகுதி தீவு என்று குறிக்கப்படுகிறது. ஜம்பூ தீவின் நடுவில் மேரு மலை நிற்கிறது. அம்மேரு மலையே உலகை கீழ் நடு மேல் எனப் பிரிக்க அளவு கோலாகிறது.

---

10 கரதல லோகாணி, பக் 8-12

11 மேருமந்தர புராணம் செய்யுள் 1319 - ன் அடிக்குறிப்பு

இந்த உலகம் என்றும் நிலைபெற்று இருப்பது. அது யாராலும் படைக்கப்படுவதும் அன்று, காக்கப்படுவதுமன்று, அழிக்கப்படுவதுமன்று. படைப்பு அழிப்பு காத்தல் என்பதனை உத்பாதம் வ்யயம் த்ரௌவ்யம் என்று ஜிந ஆகமங்கள் கூறுகின்றன.[12] தோன்றுதலும் மறைதலும் நிலைத்திருத்தலும் ஒரே சமயத்தில் ஒவ்வொரு பொருளிலும் நிகழ்கின்றன. இந் நிகழ்வு அப் பொருளிடத்து உள்ள இயற்கையான ஆற்றலால் நிகழ்கிறது. அவற்றை வேறொரு ஆற்றல் செய்வித்தல் இல்லை என்பது ஜிந நூல்களின் முடிபாகும்.

முதலாம் அதிகாரம்

இக் கருத்தினையே முதல் அதிகாரத்தின் தொடக்கத்தில் குறிப்பிடுகிறார். உலகம் ஆக்கப்படாதது என்பதனை 'அக்ருத்திரிமமாகி' என்றும், என்றும் நிலைத்திருப்பது என்பதனை 'அனாதி ஸம்ஸித்தமாகி' என்றும் குறிப்பிட்டு நம் அனுபவத்திற்கு வரும் உலகம் அமைந்துள்ள இடம், வடிவம், உயரம், முதலானவற்றைச் சுருக்கமாகக் கூறுகிறார். உலகம் காற்று வளையங்களால் சூழப்பட்டுள்ளது என்று கூறி அவற்றின் அளவுகளையும் கூறுகிறார். கீழ், நடு, மேல் உலகங்கள் எப்படி அமைகின்றன என்றும் காட்டுகிறார்.

பிறகு நரக லோக வருணனை நரக லோகம் அமைந்துள்ள இடம், அதன் அமைப்பு முறை, நரகர் வாழிட அளவுகள், நரக பூமி இயல்பு, நரகில் பிறத்தலுக்கான காரணங்கள், நரகர் படும் சொல்லொணா துன்பம், நரகர் உடல் அளவு, ஆயுள், நரகர் பெறும் மறுபிறவிகள் ஆகியவற்றைக் கூறி முதல் அதிகாரத்தை முடிக்கிறார்.

இரண்டாம் அதிகாரம்

இதில் பவணரைப் பற்றிக் கூறுகிறார். இவர்கள் தேவர்கள் என்றாலும் பூமியில் வாழ்கின்றனர். இவர்களது பிரிவும், அடையாளமும், வாழிடம் உள்ள இடமும், அவற்றின் எண்ணிக்கை மற்றும் அளவுகளும், இவர்கள் பெறும் பரிவார சுக வைபவங்களும், ஆயுளும், உடல் அளவுகளும் மறு பிறவிகளும் இவ் வதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன.

---

12 உத்பாத வ்யயத்ரௌவ்ய யுக்தம் ஸத்' - தத்வார்த்த சூத்திரம் 5/30; Existence is characterized by origination, disappearance (destruction) and permanence, Reality p.155

மூன்றாம் அதிகாரம்:

நாம் வாழும் பூமி வருணனை மிக விரிவாகக் கூறப்படுகிறது., இவ்வதிகாரத்தில், நூலின் பாதி அளவினை இந்த அதிகாரமே பெறுகிறது. இதில், கடல்களும் தீவுகளும் ஒன்றை ஒன்று சூழ்ந்து அளவால் இரண்டு இரண்டு மடங்காகப் பெருகிப் போகின்றன என்று காட்டுகிறார். நாம் பார்க்கின்ற கடல்களிலிருந்து வேறுபட்டவை இதில் வருணிக்கப்படுகின்ற கடல்கள். அவை என்றும் இருப்பவை. எண்ணத்தெரியாத கடல் தீவுகளில் மனிதர் இயங்கும் இடம் 1800 கோடி மைல்கள் தாம் (45லஷம் யோஜனை) என்றும் அதற்கு மேல் மனிதர் சொல்லமுடியாது என்றும் காட்டுகிறார். இயற்கையாக அமைந்துள்ள மலைகள், நதிகள், நாடுகள், அவற்றின் பெயர்கள், அவற்றின் அளவுகள் இதில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இதில் கூறப்படும் கங்கை சிந்து முதலான நதிகள் நாம் இன்று அப்பெயர்களால் வழங்கும் நதிகளிலும் வேறானவை என்பதனை நினைவில் கொள்ள வேண்டும்.

இப் பூமி அமைப்பில் இயற்கையாக அமைந்து கிடக்கும் தன்மை வேறுபாடும் காட்டப்படுகிறது. போகபூமி என்ற நிலப்பகுதியில் உயிர்கள் இன்பமாக வாழ்கின்றன என்றும் இங்கு உழைப்பு இல்லை என்றும், வேண்டியன வேண்டியவாறு இயற்கையிலேயே கிடைக்கின்றன என்றும் வருணிக்கிறார்.

கர்ம பூமி என்ற பகுதியில் உயிர்கள் உழைத்து வாழ வேண்டியுள்ளது என்றும், அறம் உரைப்போர் இப் பூமியிலேயே பிறந்து அறம் உரைத்து மோக்ஷம் அடைகின்றனர், என்றும் காட்டுகிறார். இந்தக் கர்ம பூமியில் பிறப்பவர்களே தவம் செய்து வினைகளை அழித்து மோக்ஷம் செல்கின்றனர் என்றும் விளக்குகிறார். இந்தக் கர்ம பூமி நியத கர்மபூமி என்றும் அநியதக் கர்மபூமி என்றும் இரண்டு வகைப்படுகிறது. நியத கர்ம பூமியில் அறம் உரைக்கும் அறவோர் இருந்துகொண்டே இருப்போர் என்றும், மோக்ஷ சாதனையைச் செய்யும் துறவோர்களும் சாதனை செய்து மோக்ஷம் அடைந்து கொண்டே இருப்பர் என்றும் காட்டுகிறார். இந்த நியத கர்ம பூமிக்கு விதேகம் என்று பெயர்.

அநியத கர்மபூமி என்பது கால வேறுபாட்டால் போகபூமியாகவும் கர்மபூமியாகவும் மாறி மாறி அமைவதாகும். இப்போது நாம் வாழும் பூமி அநியத கர்ம பூமி. முன்பு இது போக பூமியாக இருந்தது. அந்தப்போக பூமி நில இயல்பு திரிந்து கர்ம பூமியாகத் திரிந்துள்ளது. பூமி நூல் வல்லுநர் பூமி அமைதல் பற்றி பல கருதுகோள்களைக் காட்டுகின்றனர். அதற்கான மூல விதைகளை இந்த

நிலத் திரிபு கொள்கையில் காணலாம். ஒன்று உறுதி. நாம் காணும் இந்தப் பூமியின் இயல்பு திரிபு அடைந்து கொண்டே இருக்கிறது என்பதுதான். எனவே அறிவியலார் கருதுகோள்களும் காலந்தோறும் மாறிக் கொண்டே இருக்கும்.

இக் கர்ம பூமியில் தோன்றும் அரசர்கள், அவர்கள் வைபவங்கள், தொழில் கற்பிப்போர், அற முரைப்போர் தோன்றுதல், நாரதர்கள், ருத்திரர்கள் தோன்றுதல், கல்கிகள் தோன்றி அழிவுக்கு ஏதுவாக அமைதல், காலந்தோறும் மனிதர், விலங்குகள் உடல்அளவு ஆயுள் முதலானவற்றில் காணப்படும் வேறுபாடுகள், உணவு முறையில் காணப்படும் வேறுபாடுகள் முதலான எல்லாம் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இன்று அறிவியலார் கூறுகின்ற உலக அமைப்பு பிற தரிசன நூல்கள் கூறுகின்ற உலக அமைப்பு ஜைன நூல்கள் கூறுகின்ற உலக அமைப்புப் பற்றிய செய்திகளைத் தொகுத்து அவை எந்த அளவுக்குப் பொருந்துகின்றன. எந்த அளவுக்கு வேறுபடுகின்றன, என்று வல்லுநர்கள் ஆராயலாம். அந்த ஆய்வுக்கு இந்த நூல் பெரிதும் பயன்படும்.

இந்த பூமிகளுக்கு எல்லாம் எல்லை உண்டு. அவற்றின் எல்லையாக இருப்பது பெருங்கடல். அப்பெருங்கடலின் விஸ்தாரம் என்ன தெரியுமா? நடு உலக விஸ்தாரத்தின் பாதிக்கு மேல் அதன் விஸ்தாரமாகும். அந்தப் பெருங்கடலின் பெயர் ஸ்வயம்புரமணம் ஆகும். இந்த ஸ்வயம்புரமண வருணனையோடு இந்த அதிகாரம் முடிவு பெறுகிறது.

நான்காம் அதிகாரம்:

வியந்தரர் வருணனை இதில் கூறப்படுகிறது. இவர்களும் தேவர்களுள் ஒருவகையினர். ஆனால், பூமியில் வாழ்கின்றவர்கள். இவர்களிடையே உள்ள பிரிவுகள், இவர்கள் வாழிடங்கள், அவற்றின் அளவு மற்றும் எண்ணிக்கை, இவர்கள் உடல் அளவு மற்றும் ஆயுள் முதலியன இவ் வதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாம் அதிகாரம்:

இவ் வதிகாரத்தில் சூரியன், சந்திரன் கிரஹங்கள், நக்ஷத்திரங்கள், தாரகைகள் பற்றிக் கூறுகிறார் ஆசிரியர். இவற்றில் வாழும் தேவர்கள் ஜோதிட தேவர்கள் என அழைக்கப்படுகின்றனர். பவணர், வியந்தரர், ஜோதிடர் மூவரும் கீழ் முத் தேவர்கள் எனப்படுவர்.

சூரியன் முதலானவை தேவர்கள் வாழும் இடமாகக் கருதப்படுவதால் அவை விமானங்கள் என்று குறிக்கப் படுகின்றன. அந்த விமானங்கள் பூமிக்கு மேலே இருந்தாலும் நடு உலக அமைப்பிலேயே உள்ளடக்கப்படுகின்றன. அவை நாம் காணும் பூமியிலிருந்து ஏறக்குறைய 31,60,000 மைல் (790 யோஜனை) தொலைவுக்கு மேல் தொடங்கி 4,40,000 மைல் (110 யோஜனை) உயர அளவு பரவிக் கிடக்கின்றன. அவற்றின் பெயர்களும், எண்ணிக்கையும், விஸ்தார அளவுகளும், வடிவ அமைப்பும், அவற்றுக்கு இடையே உள்ள தூர அளவுகளும், அவை வலம் வரும் முறையும், வீதிகளின் எண்ணிக்கையும், வீதிகளுக்கு இடையே உள்ள இடைவெளியும், வீதியைக் கடக்க ஆகும் கால அளவும், வீதிகளின் பரிதி அளவுகளும், இரவு பகல் அமைதலும் முதலானவை நுட்பமாகக் கூறப்படுகின்றன.

நாம் காணும் உலகில் இரண்டு சூரியன்கள் இரண்டு சந்திரன்கள் வலம் வருவதாகக் கூறப்பட்டுள்ளது. இதனால் ஒரே சூரியனை நாம் நாள்தோறும் பார்க்கவில்லை என்றாகிறது. இது போன்ற அரிய குறிப்புகள் பல இந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன. ஒளி மண்டலம் பற்றி ஆயும் வல்லுநர்களுக்கு பல அரிய குறிப்புகள் இதில் கிடைக்கும்.

அந்த விமானங்களில் வாழ்கின்ற தேவர்கள், ஆயுள், உடல் அளவு, வைபவங்கள் முதலானவற்றைக் கூறி இந்த அதிகாரத்தை முடிக்கிறார் ஆசிரியர்.

இதோடு நடு உலக வருணனை முடிகிறது.

ஆறாம் அதிகாரம்:

இதில் வான்உலகம் எனப்படும் தேவ உலகம் வருணிக்கப்படுகிறது. இங்கு வாழும் தேவர்கள் கல்பவாசியர் என்றும் கல்ப அதீதர் என்றும் இருவகைப்படுவர். அவ்விருவகை தேவர்களுடைய வாழிட விமானங்கள் அமைப்பு, அவற்றின் எண்ணிக்கை மற்றும் விஸ்தார அளவுகள், இந்திரன், இருப்பிடம் அவன் அரசவை மண்டப அமைப்பு, பரிவார தேவர்கள் விவரம், அவர்தம் பல்வகைப்பட்ட வைபவங்கள், அவர்கள் காம நுகர்ச்சி அவர்கள் உடலளவு, ஆயுள், மறுபிறவி முதலியன இவ்வதிகாரத்தில், கூறப்பட்டுள்ளன.

இதனை அடுத்து, உலக உச்சியில் உள்ள மோக்ஷ உலகம் வருணிக்கப்படுகிறது. ஒவ்வொரு உயிரும் தன் ஆற்றலால் மோக்ஷ

நிலையை அடைய முடியும் என்பது ஜிந நூல் முடிபாகும். மறுபிறவி கோட்பாட்டினை நம்பும் எல்லா தரிசனங்களும் மோக்ஷ நிலையை ஏற்றுள்ளன. பிறவிகள் எதுவாக இருந்தாலும் அவை நிலையற்றவை என்றும், துன்பங்கள் நிறைந்தவை என்றும், புலன் இன்பங்கள் உண்மையான இன்பங்கள் அல்ல என்றும் அவை கருதுகின்றன. எனவே மீண்டும் பிறவியில் உழலாத ஒரு ஸந்ஸித்தானந்த நிலையை - அனந்த ஆனந்த நிலையை உயிர்கள் அடைய முடியும் என்று அத் தரிசனங்கள் உறுதி செய்கின்றன. அந்த மோக்ஷ நிலை வருணனையோடு இந்த அதிகாரம் முடிகிறது. நூலும் முடிகிறது.

மங்களம் : சுபம்.

குறிப்பு நூல்கள் பெயர் சுருக்க விளக்கம்

1. அ.செ.	அருங்கலச் செப்பு ஸ்ரீஜயராமையா பதிப்பு 1941
2. கா.அ.	கார்த்திகேயானு ப்ரேக்ஷா (பிராகிருதம்) சுவாமி கார்த்திகேயர், ஸ்ரீராய்சந்திர ஆசிரமம் அகாஸ், குஜராத்
3. கி.க	கிரியா கலாபம் பூர்ண சந்திர சாஸ்திரியார் ஆதிபகவன் அறநூல் பதிப்பகம், சென்னை-14
4. சூ	சூளாமணி தோலா மொழித் தேவர், டாக்டர் உ.வே.சா நூல் நிலையம், சென்னை-41
5. தி.க	திருக்கலம்பகம், ஸ்ரீ உதீச தேவர், அருகன் துதிமாலை - 2 ஆசாரியர் குந்த குந்தர் அச்சுப்பயிற்சி நிலையம், குந்த குந்தர் நகர் - 604 502.
6. தி.ப	தில்லோய பண்ணத்தி (பிராகிருதம்) ஆசாரியர் யதி விருஷபர், ஸ்ரீ பாரதவர்ஷீய திகம்பர ஜைன மகாசபா, கோடா, ராஜஸ்தான்
7. தி.பா	திருப்பாமாலை, தருமசீலன் அச்சுக்கூடம், சென்னை.
8. தி.ஸா	திரிலோக ஸாரம் (பிராகிருதம்) ஆசாரியார் நேமி சந்திர சித்தாந்த சக்கரவர்த்தி, ஸ்ரீ சாந்திவீர் திகம்பர ஜைன ஸம்ஸ்தானம், ஸ்ரீ மகாவீர்ஜீ, ராஜஸ்தான்.
9. ப.ஸா	பதார்த்த ஸாரம், மாகநந்தி ஆசாரியார், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
10. மே.பு.	மேருமந்தர புராணம் ஸ்ரீவாமன முனிவர், ஸ்ரீகுந்த குந்தர் அச்சகம், ஆரணி.
11. ய.கா.	யசோதா காவியம் சாது அச்சுக்கூடம் சென்னை.
12. ஜீ.ஸ	ஜீவ ஸம்போதனை, ஸ்ரீஜைன சித்தாந்த நூல் நிலையம், சென்னை.
13. ஸ்ரீ.பு.	ஸ்ரீபுராணம், சென்னை ஸர்வகலாசாலை, சென்னை.
14. ஸி.தீ	ஸித்தாந்த ஸார தீபகம், பட்டாரகர் ஸகலகீர்த்தியார், (ஸமஸ்கிருதம்) ஸ்ரீ சிவசாகர் திகம்பர ஜைன கிரந்த மாலா, ஸ்ரீமகாவீர்ஜீ, ராஜஸ்தான்
15. Reality	Sri Pujyapada, Acharyar, Jwalamalini trust, Madras . 53

பொருளடக்கம்

அதிகாரம் 1 உலகம்

உலகம் வகை 1 காற்று வலயம் 3, உலக உயரம் 4, நரக லோகம் 5, ஆவாஸங்கள் 7, இந்திரங்கள் விஸ்தாரம் 8, சேணிபந்தம், பிரகீர்ணகம் 13, நரகபூமி இயல்பு 15, படலங்கள் அமைவு 18, ஆவாஸங்கள் இடைவெளி 19, சேணிபத்தங்கள் பெயர் 20, நரகர் பிறக்கும் இடம் 21, நரகில் பிறப்போர் 22, நரகர் துன்பம் 23, நரகர் ஆயுள், உயரம் 26, நரகர் துள்ளி விழுதல் 36, நரகர் விபங்க ஞானம் 37, லேஸ்யை 37, நரகர் பிறப்பு இறப்பு இல்லாக் காலம் 38, நரகர் மறு பிறப்பு 39.

அதிகாரம் 2 பவன லோகம்

பவனர் வகை, மகுட சின்னங்கள் 41, சைத்ய விருக்ஷம் 42, பவனங்கள் எண்ணிக்கை 43, பவனங்கள் அமைவு 41 பவனர் உட்பிரிவு 45, தேவியர் எண்ணிக்கை 47, பவனர் ஆயுள் 49, பவனர் உயரம் முதலியன 51.

அதிகாரம் 3 மத்யம லோகம்

திவுகளும் கடல்களும் 52, கடல்நீர் சுவை 55, கடல் வாழ் உயிர்கள் 55, மானுஷோத்தர மலை 56, ஜம்பு திவு வருணனை 58, நதிகள் 62, நாடு மலைகளின் அளவு 71, மேரு 75, ஜம்பூ விருக்ஷம் 85, போக கர்ம பூமிகள் 88, யமகிரி 89, காஞ்சன மலைகள் 91, கஜதந்த பர்வதம் 92, விதேஹம் 92, தேவ பூத ஆரண்யம் 95, அரசர் வைபவங்கள் 100. ஆறு காண்டங்கள் 101, வெள்ளியம் பெருமலை 101, விருஷப கிரி 104, நாபி கிரி 105, நதிகள் எண்ணிக்கை 108, வக்ஷார மலை கூடங்கள் 111, போகபூமியர் 117, கால மாறுதல் 118, ஆயுள் அளவு 119, உடல் அளவு 120, கல்ப தருக்கள் 121, மனுக்கள் 123, சலாகா புருஷர்கள் 131, ஜிந தர்மம் இல்லாத காலம் 135, தீர்த்தங்கரர் வம்சம் 136, சக்ரவர்த்திகள் உயரம் 137, நவநிதி 137, பல தேவர்கள் 138, நாரத ருத்ரங்கள் 140, கல்கிகள் 142, ஹூண்டாவஸர்ப்பிணி தோஷம் 144, உத்ஸர்ப்பிணி 146, எதிர்கால சலாகா புருஷர் 147, லவன சமுத்திரம் 150, பாதாளங்கள் 153, சந்திர சூரியர் 156, எட்டு மலைகள் 160, உள் திவுகள் 161, குமானுடர் திவுகள் 162, தாதகிஷண்டம் 169, புஷ்கரவர திவு 180, மானுஷோத்தர மலை 193, நந்தீச்வர திவு 194, குண்டல ருசகவர மலைகள் 205, ஜிந மாத சேவகியர் 207, திவு கடல்களுக்கு அதிபதி 209, ஸவயம்புரமணம் 210.

ஓம்

நமஸித்தேப்ய:

லோக ஸ்வரூபம்

கரதல லோகாணி

கடவுள் வாழ்த்து

உலகம் மூன்றும் ஒருங்குணர் கேவலத்து
அலகு இலாத அனந்த குணக்கடல்
விலகி வெவ்வினை வீடு விளைப்பதற்கு
இலகு மாமலர்ச் சேவடி ஏத்துவாம்.[1]

புரந்தரரும் பூமிமேல் மாந்தர்களும் ஆங்கே
நிரந்தரம் வந்திறைஞ்ச நேரில்[2] வரந்தரு நல்
வாமன் அடி வணங்கி மன்னும் உலகியல்பை[3]
நாம் வகையுரைப்ப நன்கு.

---

1 யசோதர காவியம் எனும் நூலின் கடவுள் வாழ்த்து இது; இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது. அடுத்துள்ள வெண்பா இந் நூலாசிரியர் யாத்தமை ஆகலாம்.

ஒருங்குணர் கேவலத்து - ஒரே சமயத்தில் ஒரு சேர உணரும் முழு ஞானத்து, முழுதுணரும் நின் மதி - திருக்கலம்பகம்; அலகு - எண், அளவு, இலகு - விளங்கு; புரந்தரரும் - தேவரும் ; ஆங்கே சமவசரணத்தில்; வாமன் - அருகன், மன்னும் - நிலைபெற்ற; நாமவகை - பெயர் வேறுபாடுகளுடன்; லோகம்- உலகம்; த்வி - இரண்டு; நிச்சய லோகம் - பிளவபடாத ஒருருவாகக் கருதப்பெறும் பேருலகம் பஞ்சாஸ்தி - பஞ்ச அஸ்தி - ஐந்து அத்திகாயங்கள்; அவை ஜீவ அத்திகாயம் புற்கலஸ்தி காயம் ஆகாய அத்திகாயம்; காயம் - மிகு பிரதேசம் - (இடப்பரப்பு) உடைமை பஞ்சகாயம் பணித்த பிரான் மே.பு. 489; அழியாத்தன்மையும் அகண்ட மிகு பிரதேச (இட)த் தன்மையும் உடையது - அஸ்திகாயம்; லோக ஸ்கந்தம் - உலகத் தொகுப்பு, உலகப் பேருரு.

பாட வேறுபாடு 2 நேரின் 3. உலகியல்பின்

1. உலகம்

உலக வகை

லோகம் த்வி விதம் - நிச்சய லோகம், வ்யவஹார லோகம் என்பது. தத்ர நிச்சய லோகம் என்பது பஞ்சாஸ்திகாய மயமாகிய மஹாலோக ஸ்கந்த மாகும்.

வ்யவஹார லோகம் என்பது[2] அனந்தானந்த ப்ரதேஸத்தது ஆகிய ஆகாஸ த்ரவ்ய மத்யம ப்ரதேஸத்து அக்ருத்ரிம மாகி, அநாதி ஸம்ஸித்தமாகி, கனோததி, கனவாத, தநுவாதம் என்னும் வாத த்ரயங்களால், பரிவேஷ்டிதமாகி, வேத்ராஸன, ஜல்லரி, ம்ருதங்க ஸம்ஸ்தான ரூபமான ஆதி மத்ய அவஸானங்களை உடைத்தாகி, நாளிகா தத்பாகிய பேதத்தாகி, தக்ஷிண உத்தர வ்யாஸம் ஆதி மத்ய அவஸானம் ஸப்த (7) ரஜ்ஜுப்ரமாணத்ததாகி, பூர்வாபர வ்யாஸம் அடியில் ஸப்த ரஜ்ஜு ப்ரமாணத்ததாகி, க்ரமத்தால் சுருங்கி வந்து மஹாமேரு மூலத்து நாளிகா வ்யாஸ மாகிய ஏக(1) ரஜ்ஜு ப்ரமாணத்ததாகி, புனரபி, க்ரமத்தால் விரிந்து சென்று, ப்ரஹ்ம கல்பத்து பஞ்ச (5) ரஜ்ஜு ப்ரமாணத்தாகி, புரபி, க்ரமத்தால் சுருங்கி சென்று ஸித்த க்ஷேத்திரத்தில் ஏக(1) ரஜ்ஜு ப்ரமாணத் தாகி, சதுர்தச

---

2 வயவஹார லோகம் - பிரிவுபட்ட உலகம்; அனந்தானந்தம் - அனந்தம் மடங்கான அனந்தம், ஆகாஸ த்ரவ்ய மத்யம ப்ரதேஸத்து - ஆகாயத்தின் நடுப்பகுதியில்; - உலகம் நடுவிலும் பிற எண் திசையிலும் தனி ஆகாயம் மட்டும் உள்ளது என்பது கருத்து; அளவின்றி அத்தியாய் அமூர்த்தியாய் உளவென்ற பொருட்கெலாம்' இடம் கொடுத்ததுடன் தளர்வின்றி நிற்பதாம் ஆகாயம், மே.93 ஆகாயம் நிறம் முதலிய- குணஇல்லாத, புலனுக்குப் புலப்படாத நுட்பமான பொருளாம் The function of space is tp provide accommodation . . . space exists everywhere Reality p -,143 அக்ருத்ரிம மாகி- ஆக்கப்படாத தாகி; அநாதி ஸம்ஸித்தமாகி - எப்போதும் முழுமையுடையதாகி; வாத த்ரயங்களால் - மூன்று காற்றுகளால்; வடிவுடைய உலகம் மூவாதம் சூழ்ந்ததே' மே.பு. 1214 பரிவேஷ்டிதமாகி - சூழப்பட்டதாகி, வேத்ராஸனம் - அடி அகன்று மேல் குறுகிய பிரம்பு ஆஸனம் ; ஜல்லரி - ஜால்ரா, ஸம்ஸ்தானம் - வடிவம், அமைப்பு; அவஸானம் - இடம் ; நாளிகா - தத் பாஹ்யம்; திரச நாளியும் - அதன் வெளியும்; 'நாளி பாயிரம்' மே.பு. 1917; நாளிகை . என்னும் பகுதியில் மட்டுமே இரண்டு முதல் ஐந்து பொறிகள் வரையான உயிர்கள் உள்ளன. ஒரு பொறி உயிர்கள் இங்கும் இதற்கு வெளியேயும் அதாவது உலகின் 343, கனரஜ்ஜுவிலும் உள்ளன. 'இந்தியம் ஒன்றினால் உலகு எங்குமாம்; ஐந்தினால் நாளிகை அகத்து வாழுமே; ' மே.பு.79 ...

ரஜ்ஜு ப்ரமாண உயரத்தை உடைத்தாய், அதோ மத்யம ஊர்த்தவ லோகம் என்னும் பேதம் உடையதாகிய வ்யவஹார லோகம் என்பது ஆகும்.

இந்த லோகத்தை பரிவேஷ்டித்திருந்த கனோததி வாதம் கன வாதம், தநுவாதம் என்னும் வாதத் த்ரயத்துக்கு பாஹுல்யம் எவ் வண்ணம் எனில்.

அதோ பாகத்தில் யதா க்ரமம் ப்ரத்யேகம் *20,000* , *20,000* ம் யோஜனையும், ஏழாம் நரகத்து ஸத்ருச பார்ச்வத்தில் *7,5,4* மான யோஜனையும், மத்யம லோகத்து ஸத்ருச பார்ச்வத்தில் *5,4,3* மான யோஜனையும் புனரபி, விரிந்து பிரம்ம லோகத்து ஸத்ருச பார்ச்வத்தில் *7,5,4* – மான யோஜனையும், புனரபி குறைந்து சென்று, மோக்ஷ ஸத்ருச பார்ச்வத்தில் *5,4,3* மான யோஜனையும், லோகாக்ரத்தில் *2,1,425* வில் குறைந்த ஒன்று*(1)* மான க்ரோசங்கள் ஆகும்.

உலக உயரம் :

ஸர்வ லோகமும் ஸ்தாவர ஜீவன்கட்கு அதிஷ்டமான மாகும். நாளிகை ஸ்தாவர ஜங்கம ஜீவன்கட்கு அதிஷ்டானமாகும்.[3]

நாளிகையினது அதோ பாகம் தொடங்கி ஏழாம் நரகத்தளவும் 'நிகோதம்' என்பது ஏக *(1)* ரஜ்ஜு ப்ரமான ப்ரமாணத்ததாகும். அதுவும் ஸ்தாவர ஜீவன்கட்கு அதிஷ்டான மாகும் .

---

3 வ்யாஸம் - அகலம், ரஜ்ஜு - கயிறு; ஓர் அளவு; புனரபி - மீண்டும்; தக்ஷிண உத்தர - தெற்கு வடக்கு; பூர்வாபர கிழக்கு மேற்கு ; 'முடிவு இடை அகலம் ஆயுதம் ஒன்று ஏழ், இடையின் ஐங்கயிறகன்று ஏழு நீளமாய், அடியின் ஏழ் அகன்று நீண்டு உயரம் ஈரேழுமாய், வடிவுடை உலகம் மூவாதம் சூழ்ந்ததே' மே. பு. *1214*; அதோ- கீழ்; மத்யம - நடு; ஊர்த்வ - மேல்; லோகத்தை - மூவுலகையும்; பரிவேஷ்டித்திருந்த - சூழ்ந்திருந்த ; கனோததி - உலகத்தை தாங்கி நிற்கும் முதல் காற்று வலயம். இது பசுமூத்திரம் போன்ற நிறமுடையது; கன வாதம் பாசிப்பயிறு நிறமுடையது தநுவாதம் பல நிறமுடையது. உததி - நீர் ; கன + உததி = கனோததி - நீரும் காற்றும் சேர்ந்தது -தநு வாதம் -இலேசான காற்று; கனமந்த; கனவாதம் மந்த காற்று இவை மூன்றும் உலகத்தைச் சூழ்ந்து இருந் [illegible]ும் அவை ஒன்றை ஒன்று தாங்கி நிற்கின்றன; முதலில் கனோததி, [illegible]து கனவாதம், அடுத்து கனவாதம் ; ஸத்ருச பார்ச்சவம் - நேராக இடை[illegible]ாக பக்கத்தில்; லோகாக்ரத்தில் - உலக உச்சியில் குரோசம் - *200*[illegible] வில் கொண்டது.

இதன் மேல் ஐந்து நரகமும் ஐந்து கயிற்றள வாகும். இதன் மேல் த்விதீய (2ம்) நரகமும் பிரதம (முதல்) நரகமும் பவன லோகமும் ஒரு கயிற்று அளவாகும்.[4]

இதன் மேல் மகாமேரு மூலமே தொடங்கி ஸௌதர்ம - ஈசான கல்பம் இறுதி 1 1/2 யும், ஸநத்குமார் - மாகேந்த்ர கல்பம் 1 1/2 யும் லாந்தவ - காபிஷ்டம் 1/2 சுக்கிர- மகாசுக்ர 1/2 யும், பிரம்ம பிரம்மோத்ரம் 1/2 யும், ஸதார - ஸஹஸ்ராரம் 1/2 யும், ஆனத - ப்ராதை 1/2 யும் ஆரண அச்சுதம் 1/2 யும் இதன் மேல் அஹமிந்த்ர லோகமாகிய நவ க்ரைவேயகமும், நவாணு திசையும், பஞ்சாணுத்தரமும் மோக்ஷமுமாகிய ஸித்த க்ஷேத்ர பர்யந்தம் ஒன்றுமான - ரஜ்ஜுக்கள் பதினான்கு ஆகும்.

மூவுலகம் :

நிகோதமும், நரக லோகமும், பவனலோகமும் என்பதாகும்[5]

---

4 ஸ்தாவர ஜீவன் - மண்ணுடலி, நீருடலி, நெருப்புடலி காற்றுடலி, தாவர உடலி என, ஐவகைப்படும் ஒரு பொறி உயி 'இந்தியம் ஒன்றினால் உலகு எங்குமாம் மே.பு. 79 அதிஷ்டானம் வாழிடம் ; ஸ்தாவர ஜங்கம ஜீவன்கள் - நிலை, இயங்கு உயிர்கள்; இரண்டு பொறி முதல் ஐந்து பொறிகள் வரையான உயிர்கள் ஜங்கம ஜீவன்கள்; அதோ பாகம் - கீழ்ப்பக்கம்; நிகோதம் - ஏழாம் நரகத்துக்கு கீழே உள்ள நிலம் அல்லாத பகுதி. கீழே ஒரு கயிறு அளவு நிலமில்லாத பகுதியில் நிகோதம் முதலான ஐந்து வகைப்படும் ஸ்தாவர உயிர்கள் உள்ளன.' கா. அ.காதை 120 உரை; 'நின்று வருந்து நிகோதப் பிறவியுள் ஒன்றறிவ எய்தி உழக்கும் உயிர்பல' சூ. 1958; மூலம் - அடிப்பக்கம், பர்யந்தம் - வரை; நிகோதமேல் நிரையங்கள் னிடை அச்சுதன் பகாதளவு அகலம் ஓர் கயிற்றாகுமே, மிகாது ஒரு கயிறுதான் மேரு எய்திடா பகா நரகு இரண்டும் மேற்பவனம் பத்துமாம் ஒன்றரை ஒன்றரையோடு ஆறுமாய் நின்ற ஒன்துறக்கம் ஓர் கயிறு நின்றவாம் மே.பு. 1219, 1220.

5 அடிக்குறிப்பு : சூளிகாக்ரம் - மலை முகட்டின் உச்சி, மேரு மலையின் உச்சி; அதோ, மத்திம, ஊர்த்தவ- கீழ், நடு, மேல்; பிரதம - முதல், முதல் நரகம் முதலாக இப்பெயர்கள் முறையே வழங்கப்படுகின்றன என்பதாகும்; 'ஏழுளநரகம் நாமம் இரதனம் சக்கவாலு, ஆழியங்கம் தூமம் தமம் தமத்தம மாகும்' - மே.பு. 936; 'இருளின் இருளும் இருளும் புகையும், அருளில் அளறும் மணலும் பரவும் மருளின் மணியும் என இப் பெயர, பொருளின் நரகங்கள் போதரக் கொள் நீ' - சூளாமணி 1925; குறிப்பெயர் - இடுகுறியாக வழங்கும் பெயர்; குணப்பெயர் - குண இயல்பால் வழங்கும் காரணப் பெயர்; கர்மை முதலியன குறிப் பெயர்கள்; ரத்ன

மூவுலக அமைப்பு



மகாமேரு மூலமே தொடங்கி மனுஷ்ய லோகமும் வ்யந்தர லோகமும் ஜ்யோதீர் லோகமும் மகாமேரு குளிகாக்ரமான ருது விமானம் ப்ர்யந்தம் ஆகும்.

கல்பமும் அஹமிந்தர லோகமும் ஸித்த க்ஷேத்ரமும் ஊர்த்வ லோகம் என்பதாகும்.

நரக லோகம் :

அவற்றுள் அதோ லோக ஸ்வரூபம் சொல்லுதும்.

நரகம் ஏழு வகைப்படும்: ரத்னா ப்ரபை, ஸர்க்கரா ப்ரபை, வாலுகா ப்ரபை, பங்க ப்ரபை, தூம ப்ரபை, தம ப்ரபை, தமஸ்தம ப்ரபை எனவும், கர்மை வம்சை, மேகை, அஞ்சனை, அரிஷ்டை, மகவி, மாகவி எனவுமான குறிப்பெயரும் குணப்பெயருமான இவை ப்ரதம நரகம் முதலாக அறிக.

வருணனை விவரம் :

இவற்றுள் படல விகல்பங்களும் ஆவாஸ ஸங்க்யைகளும் தத் விஸ்தாரங்களும், தத் பாஹுல்யங்களும், க்ஷேத்ர ஸ்வபாவங்களும், இப்பபடிப்பட்ட பாபம் பண்ணினவர்கள் இதில் பிறப்பார் என்பதும், துக்க விகல்பங்களும் ஆயுஷ்யங்களும் சரீர உத்ஸேதங்களும், எழுந்து விழுக்காடுகளும் யதா க்ரமம் சொல்லும்.

படலங்கள் எண்ணிக்கை :

1-ம், 3-ம், 5-ம், 7-ம், 9-ம், 11-ம், 13 மான ப்ரஸ்தாரங்கள் *49* - ம் ஸப்தம *(7-ம்)* நரகம் முதலாகக் கொள்க. [6]

---

6 அடிக்குறிப்பு : ஆவாஸம் - வாழிடம்; ஸங்க்யை - எண்ணிக்கை; அதன்; உத்ஸேதம் - உயரம்; ப்ரஸ்தாரங்கள் - படலங்கள்; படலம் என்பது தளம் போல அமைவது; படலத்தில் மூன்று வகையான வாழிடங்கள் அமைகின்றன.; நடுவில் இந்திரகமும், அதனைச் சுற்றி திசைகளிலும் விதிசைகளிலும் வரிசையாக சேணிபந்தங்களும், அவற்றுக்கு இடையே பூக்களைத் தெளித்தது போல பிரகீர்ணகங்களும் அமைகின்றன. பார்க்க படம்;

'ஒன்று மூன்று ஐந்து ஏழும் ஒன்பதும் பத்தோடு ஒன்று, நின்ற மூன்றோடு பத்து நிலையத்துப் புரைகள் மேன்மேல் ' - மே.பு. 937; 'அன்றி ஏழ்நிலப் புரை நாற்பத்தொன்பதில் , சென்ற இந்திரகத்து எண் திசையும் சேணியே' மே.பு. 1220; விழுக்காடு - விழுதல்; எழுந்து விழுதல் நரகிடை மருவும்'

படல அமைப்பு

இந்நாற்பத்தொன்பது ப்ரஸ்தாரந்தோறும் ஆவாஸங்கள் இந்த்ரகமும், ச்ரேணிபந்தமும், புற்பப்ரகீர்னகமும் என மூவகைப்படும்

அவற்றுள், மத்யம ஆவாஸம் 49 ம் இந்தரகம் ஆகும்.

திக்கு தோறும், விதிக்கு தோறும் பங்க்த்தி ரூபமாகிய ஆவாஸங்கள் ச்ரேணிபத்தங்கள் ஆகும்.

இவ் வந்தரங்களில் புஷ்ப ப்ரகீர்ணக ஆவாஸங்கள் ஆகும்.[2]

ஆவாஸங்கள் எண்ணிக்கை

ப்ரதம நரகத்து ப்ரதம ப்ரஸ்தாரத்து திக் ச்ரேணி நாற்பத்தொன்பதும், விதிக் ச்ரேணி நாற்பத்தெட்டும் ஆவாஸங்கள் ஆகும். இவ் ஆவாஸங்கள் த்விதீய (2வது) ப்ரஸ்தாரம் தொடங்கி ப்ரஸ்தாரம் ப்ரஸ்தாரம் தோறும் அஷ்ட அஷ்ட ஹீனமாகிச் சென்று ஸப்தம (7 ம்) நரகத்தில் விதிக் ச்ரேணி இன்றி திக் ஸ்ரேணியிலும் ஒவ்வொன்றே ஆவாஸங்கள் ஆகும்.[7]

ப்ரகீர்ணக ஆவாஸங்களும் க்ரமத்தால் குறைந்து சென்று ஸப்தம நரகத்துக்கு ப்ரகீர்ணகம் இல்லை ஆகும்.

மே.பு. 1220; விழுக்காடு - விழுதல்; எழுந்து விழுதல் நரகிடை மருவும்' மே.பு. 452 ; பங்க்கத்தி - வரிசை ; அந்தரம் - இடைவெளி;

பா.வே 1 எழுந்தும் விழுந்துகளும் ; 2. இவ் வந்தரங்களில் இருக்கும் ஆவாஸம் புஷ்ப ப்ரகீர்ணகம் என ஆகும்.

7 அடிக்குறிப்பு : திக் - திசை; விதிக் - விதிசை; அஷ்ட - அஷ்ட எட்டு எட்டாக, ஹீனமாகி - குறைந்து ; முதல் நரகத்தில் முதல் படலத்தில் ஒரு இந்திரகமும் அதைச் சுற்றி திசையில் 196 ம் (49X 4), விதிசையில் 192 ம் (48 X 4) , ஆக 388 சேணி பத்தங்கள் இருக்கும்; இரண்டாம் படலத்தில் ஒரு இந்திரகமும் திசையில் 192 (4 8X 4) ம் விதிசையில் 188 (47X4) ம் ஆக 380 சேணிபந்தங்கள் இருக்கும். இதுபோல படலம் தோறும் எட்டு, எட்டு குறையும்; 'ஆறெட்டாம் விதிக்கில் ஒன்றொன்றாங்கவை திக்கிலாமேல், ஊறிட்ட சேணிபந்தம் புரைதொறு ஒன்றொழித்தொன்றாம் கீழ், நூறிட்ட ஆயிரங்களேச ஐயாறு ஐயைந்து மூவைந்து, ஏறிட்ட ஈரைந்து மூன்று ஒன்று ஐந்திலா ஐந்து கிழாம்' மே.பு.' 1221' இந்தகங்கள் சேணி பகிணகந் தொகுப்ப வந்த ஏழினும் புக என்பத்துநான்கு லக்கங்களாகுமே மே.பு. 936 மேல் பட்டியல் காண்க.

கீழ் உலகம்



நரகம்	இந்தரகம்	சேணிபந்தம்	பிரகீர்ணகம்	மொத்தம்
1 வது	13	4420	29,95,567	30,00,000
2 வது	11	2684	24,97,305	25,00,000
3 வது	9	1476	14,98,515	15,00,000
4 வது	7	700	9,99,293	10,00,000
5 வது	5	260	2,99,735	3,00,000
6 வது	3	60	99,932	99,995
7 வது	1	4	–	5
மொத்தம்	49	9604	83,90,347	84,00,000

இவ் வளவாகிய ஆவாஸ ஸங்க்யை ப்ரதம(1) நரகத்துக்கு 30,00000; த்விதீய (2) நரகத்துக்கு 25,00000; த்ரதீய (3 ம்) நரகத்துக்கு 15,00000; சதுர்த்த (4 ம்) நரகத்துக்கு 10,00000; பஞ்சம 5 ம்) நரகத்துக்கு 3,00000; ஷஷ்டிக்கு (6) ஐந்து குறைந்த 1,00000; ஸப்தம (7 ம்) நரகத்துக்கு 5 ஆக ஆவாஸங்கள் 84,00000 என்று கொள்க.

இந்திரகங்கள் விஸ்தாரம்

ப்ரதம நரகத்தில் ஸீமேந்த்ரகம் மனுஷ்ய க்ஷேத்ர ப்ரமாணம் 45,00,000 யோஜனை விஸ்தார ப்ரமாண மாகும். ஸப்தம(7ம்) நரகத்து அப்ரதிஷ்டாபிதம்[1] ஜம்பூ த்வீப ஸம விஸ்தாரம் 1,00,000 யோஜனை ப்ரமாணமாகும். அவ்விரண்டும் விஷேசித்து ரூபோநேந்திரக பாகத்தினால் பெற்ற லப்தத்தினைக் கூட்டி ஒழிந்த இந்த்ரகங்களுக்கு ஹானி வ்ருத்தி அறிவது.[8]

---

8 அடிக்குறிப்பு : ஸீமேந்த்ரகம் - முதல் நரகத்து (முதல் படலத்து இந்திரகத்தின் பெயர்; மனுஷ்ய க்ஷேத்ரம் - இரண்டரை தீவு; அப்ரதிஷ்டாபிதம் - ஏழாம் நரகத்து இந்திரகத்தின் பெயர்; 'அவதிஸ்தானம்' என்றும் இது குறிக்கப்படும் (தி.ப. காதை 159) விசேஷித்து - வித்யாசம் கண்டு; ரூபோந்திரகம் - ஒன்று குறைந்த இந்திரக எண்ணிக்கை அதாவது *(49-1) 48* ; பாகத்தினால் - வகுத்தலினால் லப்தி - ஈவு; ஹானி - குறைவு; வ்ருத்தி - கூடுதல்; இங்கு ஒவ்வொரு இந்திரகத்திற்கும் தனித்தனி விஸ்தாரம் கண்டுபிடிக்க வாய்பாடு கூறப்பட்டுள்ளது. (45,00,000 _ 1,00,000) ÷ (49 -1) -91,666 2/3 யோஜனை இதனை முதல் இந்திரகவிஸ்தாரத்திலிருந்து கழித்துக்கொண்டும் கடைசி இந்திரக விஸ்தாரத்திலிருந்து கூட்டிக் கொண்டும் சென்று விடை அறியலாம்.

பா.வே. 1. அதிஷ்டாபிதம்

அது எவ்வண்ண மெனில்

ஸப்தம நரகத்துக்கு இந்த்ரக விஸ்தாரம் 1,00,000 நீக்கி நின்ற 44,00,000 மும் ஒழிந்த 48 இந்த்ரகத்தில் பாகம் கொள்ள வந்த ல்பதம் 91,666 யோஜனையும் ஒரு யோஜனையில் த்வீத்ரீ (2/3) பாகமும் ஆகும். இவை ஹானியிலும் வ்ருத்தியிலும் ஆகும்.

இவ் அளவு இரண்டாம் படலத்தில் இந்த்ரகம் 44,08,333 யோஜனையும் ஒரு யோஜனையில் ஏகத்ரீ (1/3) பாகமும் ஆகும். (45,00,000 - 91,666 2/3 = 44,08,333 1/3)

மூன்றாம் படலத்தில் இந்திரக விஸ்தாரம் 43,16,666 யோஜனையும் யோஜனையில் த்வீ த்ரீ (2/3) பாகமும் ஆகும். (44,08,333 1/3 - 91,666 2/3 = 43,16,666 2/3)

நாலாம் படலத்தில் இந்திரக விஸ்தாரம் 42,25,000 யோஜனை ஆகும். (43,16,666 2/3- 91,666 2/3 = 42,25,000)

ஐந்தாம் படலத்தில் இந்திரக விஸ்தாரம் 41,33,333 யோஜனையும் யோஜனையில் ஏக த்ரீ (1/3) பாகமும் ஆகும். (42,25,000 - 91,666 2/3- 41,33,333 (1/3)

ஆறாம் படலத்தில் இந்திரக விஸ்தாரம் 40,41,666 யோஜனையும் யோஜனையில் த்வித்ரி (2/3) பாகமும் ஆகும். (41,33,333 1/3- 91,666 2/3 = 40,41,666 2/3)

ஏழாம் படலத்தில் இந்திரக விஸ்தாரம் 39,50,000 யோஜனை ஆகும். (40,41,666 2/3 - 91,666 2/3 = 39,50,000)

எட்டாம் படலத்தில் இந்த்ரக விஸ்தாரம் 38,58,333 யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ (1/3) பாகமும் ஆகும். (39,50,000 - 91,666 2/3 = 38,58,333 1/3)

ஒன்பதாம் படலத்தில் இந்திரக விஸ்தாரம் 37,66,666 யோஜனையும் யோஜனையில் த்வித்ரீ (2/3) பாகமும் ஆகும். (38,58,333 1/3 - 91,666 2/3 = 37,66,666 2/3)

பத்தாம் படலத்தில் இந்திரக விஸ்தாரம் 36,75,000 யோஜனை ஆகும். (37,66,666 2/3 - 91,666 2/3 = 36,75,000 2/3)

பதினோராம் படலத்தில் இந்திரக விஸ்தாரம் *35,83,333* யோஜனையும், யோஜனையில் ஏக த்ரீ *(1/3)* பாகமும் ஆகும். *(36,75,000 - 91,666 2/3 = 35,83,333 1/3)*

பன்னிரண்டாம் படலத்தில் இந்திரக விஸ்தாரம் *34,91,666* யோஜனையும் யோஜனையில் ஏக த்ரீ *(2/3)* பாகமும் ஆகும். *(35,83,333 1/3 - 91,666 2/3 = 34,91,666 2/3)*

பதிமூன்றாம் படலத்தில் இந்திரக விஸ்தாரம் *34,00,000* யோஜனை விஸ்தாரமாகும். *(34,91,666 2/3 91,666 2/3 = 34,00,000)*

இரண்டாம் நரகம்

த்விதிய நரகத்து ப்ரதம படலத்தில் இந்தீரக விஸ்தாரம் *33,08,333* யோஜனையும் யோஜனைில் ஏக த்ரீ *(1/3)* பாகமும் ஆகும். *(34,00,000 - 91,666 2/3 = 33,08,333 1/3)*

இரண்டாம் படலத்தில் இந்தீரக விஸ்தாரம் *32,16,666* யோஜனையும் யோஜனையில் த்வித்ரீ *(2/3)* பாகமும் ஆகும். *(33,08,333 1/3 - 91,666 2/3 = 32,16,666 2/3)*

மூன்றாம் படலத்தில் இந்திரக விஸ்தாரம் *31,25,000* யோஜனை ஆகும். *(32,16,666 2/3, - 91,666 2/3 = 31,25, 000)*

நாலாம் படலத்தில் இந்த்ரக விஸ்தாரம் *30,33,333* யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ *(1/3)* பாகமும் ஆகும். *(31,25,000 - 91,666 2/3 = 30,33,333 1/3)*

ஐந்தாம் படல இந்த்ரகத்தின் விஸ்தாரம் *29,41,666* யோஜனையும் யோஜனையில் த்வித்ரீ *(2/3)* பாகமும் ஆகும். *(30,33,333 1/3- 91,666 2/3 = 29,41,666 2/3)*

ஆறாம் படல இந்த்ரகத்தின் விஸ்தாரம் *28,50,000* யோஜனை ஆகும் *(29,41,666 2/3- 91,666 2/3 = 28,50,000)*

ஏழாம் படல இந்தரகத்தின் விஸ்தாரம் *27,58,333* யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ *(1/3)* பாகமும் ஆகும். *(28,50,000 - 91,666 2/3 = 27,58,333 1/3)*

எட்டாம் படல இந்த்ரகத்தின் விஸ்தாரம் 26,66,666 யோஜனையும் யோஜனையில் த்வித்ரீ 2/3 பாகமும் ஆகும். *(27,58,333 1/3 - 91,666 2/3 = 26,66,666 2/3)*

ஒன்பதாம் படல இந்திரகத்தின் விஸ்தாரம் 25,75,000 யோஜனை ஆகும். *(26,66,666 2/3 - 91,666 2/3 = 25,75,000)*

பத்தாம் படல இந்த்ரகத்தின் விஸ்தாரம் 24,83,333 யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ (1/3) பாகமும் ஆகும். *(25,75,000 - 91,666 2/3 = 24,83,333 1/3)*

பதினோராம் படல இந்திரகத்தின் விஸ்தாரம் 23,91,666 யோஜனையும் யோஜனையில் த்வீத்ரீ (2/3) பாகமும் ஆகும் *(24,83,333 1/3 - 91, 666 2/3 = 23,91,666 2/3)*

மூன்றாம் நரகம்

த்ரிதீய நரகத்தில் ப்ரதம படல இந்திரகத்தின் விஸ்தாரம் 23,00,000 யோஜனை ஆகும். *(2391666 2/3 - 91,666 2/3 = 23,00,000)*

த்விதீய படல இந்திரக விஸ்தாரம் 22,08,333 யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ (1/3) பாகமும் ஆகும். *(23,00,000 - 91,666 2/3 = 22,08,333 - 1/3)*

மூன்றாம் படல இந்திரக விஸ்தாரம் 21,16,666 யோஜனையும் யோஜனையில் த்வித்ரீ (2/3) பாகமும் ஆகும். *(22,08,333 1/3 91,666 2/3 = 21,16,666 2/3)*

நான்காம் படல இந்திரக விஸ்தாரம் 20,25,000 யோஜனை ஆகும். *(21,16,666 2/3 - 91,666 2/3 = 20,25,000)*

ஐந்தாம் படல இந்திரக விஸ்தாரம் 19,33,333 யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ (1/3) பாகமும் ஆகும். *(20,25,000-91,666 2/3 = 19,33,333 1/3)*

ஆறாம் படல இந்திரக விஸ்தாரம் 18,41,666 யோஜனையும் யோஜனையில் த்வித்ரீ (2/3) பாகமும் ஆகும் *(19,33,333 1/3 - 91,666 2/3 = 18,41,666 2/3)*

ஏழாம் படல இந்திரக விஸ்தாரம் 17,50,000 யோஜனை ஆகும் *(18,41,666 2/3 - 91,666 2/3 = 17,50,000)*

எட்டாம் படல இந்தீரக விஸ்தாரம் *16,58,333* யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ *(1/3)* பாகமும் ஆகும். *(17,50,000 - 91,666 2/3 = 16,58,333 1/3)*

ஒன்பதாம் படல இந்தீரக விஸ்தாரம் *15,66,666* யோஜனையும் யோஜனையில் த்வித்ரீ *(2/3)* பாகமும் ஆகும். *(16,58,333 1/3 - 91,666 2/3, = 15,66,666 2/3)*

நான்காம் நரகம்

சதுர்த்த நரகத்து ப்ரதம படல இந்திரக விஸ்தாரம் *14,75,000* யோஜனை ஆகும் *(15,66,666 2/3 - 91,666 2/3 = 14,75,000)*

இரண்டாம் படல இந்த்ரக விஸ்தாரம் *13,83, 333* யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ *(1/3)* பாகமும் ஆகும் *(14,75,000 - 91,666 2/3 = 13,83,333 1/3)*

மூன்றாம் படல இந்திரக விஸ்தாரம் *12,91,666* யோஜனையும் யோஜனையில் த்வித்ரீ *(2/3)* பாகமும் ஆகும். *(13,83,333 1/3 - 91,666 2/3 = 12,91,666 2/3*

நான்காம் படல இந்த்ரக விஸ்தாரம் *12,00,000* யோஜனையாகும். *(12,91,666 2/3 - 91,666 2/3 = 12,00,000)*

ஐந்தாம் படல இந்த்ரக விஸ்தாரம் *11,08,333* யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ *(1/3)* பாகமும் ஆகும். *(12,00,000–91,666 2/3 11,08,333 1/3)*

ஆறாம் படல இந்திரக விஸ்தாரம் *10,16,666* யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ *(2/3)* பாகமும் ஆகும். *(11,08,333 1/3 - 91,666 2/3 = 10,16,666 2/3)*

ஏழாம் படல இந்திரக விஸ்தாரம் *9,25,000* யோஜனை ஆகும். *(10,16,666 2/3–91,666 2/3 =9,25,000)*

ஐந்தாம் நகரம்:

பஞ்சம நரக ப்ரதம படல இந்திரக விஸ்தாரம் *8,33,333* யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ *(1/3)* பாகமும் ஆகும். *(9,25,000-91,666 2/3= 8,33,333 1/3)*

இரண்டாம் படல இந்தீரக விஸ்தாம் *7,41,666* யோஜனையும் யோஜனையில் த்வீத்ரீ *(2/3)* பாகமும் ஆகும்

(8,33,333 1/3-91,666 2/3 = 7,41,666 2/3)

மூன்றாம் படல இந்த்ரக விஸ்தாரம் 6,50,000 யோஜனை ஆகும். *(7, 41,666 2/3-91,666 2/3 = 6,50,000).*

நான்காம் படல இந்த்ரக விஸ்தாரம் 5,58,333 யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ (1/3) பாகமும் ஆகும் *(6,50,000-91,666 2/3 = -5,58,333 1/3)*

ஐந்தாம் படல இந்த்ரக விஸ்தாரம் 4,66,666 யோஜனையும் யோஜனையில் த்வித்ரீ (2/3) பாகமும் ஆகும் *(5,58,333 1/3-91,666 2/3 = 4,66,666 2/3)*

ஆறாம் நரகம்:

ஷஷ்டம நரக ப்ரதம படல இந்த்ரக விஸ்தாரம் 3,75,000 யோஜனை யாகும் *(4,66,666 2/3-91,666 2/3 = 3,75,000)*

இரண்டாம் படல இந்த்ரக விஸ்தாரம் 2,83,333 யோஜனையும் யோஜனையில் ஏகத்ரீ (1/3) பாகமும் ஆகும். *(3,75,000 -91,666 2/3= 2,83,333 1/3)*

மூன்றாம் படல இந்த்ரக விஸ்தாரம் 1,91,666 யோஜனையும் யோஜனையில் த்வித்ரீ (2/3) பாகமும் ஆகும். *(2,83,333 1/3 - 91,666 2/3 = 1,91,666 2/3)*

ஏழாம் நரகம்:

ஸப்தம நரக அவதிஸ்தான[1] இந்த்ரக விஸ்தாரம் 1,00,000 யோஜனை யாகும் *(1,91,666 2/3-91,666 2/3 = 1,00000).*[9]

சிரேணி பத்த விஸ்தாரம்:

ஸமஸ்த ச்ரேணி பத்தம் 9604 ஆவாஸங்களும் அஸங்க்யாத யோஜனை விஸ்தாரங்கள் ஆகும்.

---

9 ஏழு நரகத்திலும் மொத்தம் (13+11+9+7+5+3+1) 49 படலங்கள். ஒவ்வொரு படலத்திலும் ஒவ்வொரு இந்த்ரகம் உள்ளது. ஒவ்வொரு இந்த்ரகத்தில் விஸ்தாரம் இங்கே தனித்தனியாக கூறப்பட்டுள்ளது. அடைப்புக்குறிக்குள் வாய்ப்பாட்டு வழி, அதனை விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. பார்க்க ப.ஸா. முன்னுரை பக் 71-76

பா.வே 1 அவக்னிஸ்தான

பிரகீர்ணக விஸ்தாரம்:

ப்ரகீர்ணக ஆவாஸங்களில் 2மி16,79,951 ஆவாஸங்கள் ஸங்க்யாத யோஜனை விஸ்தார ப்ரமாணங்களாகும். 67,10,396 ஆவாஸங்கள் அஸங்க்யாத யோஜனை விஸ்தார ப்ரமாணங்கள் ஆகும்.

இந்த்ரகங்களும் சர்வமும் கூடி 16,80,000* [10] ஆவாஸங்கள் ஸங்க்யாத யோஜனை விஸ்தார ப்ரமாணங்களும் 67,20,000** ஆவாஸங்களும் அஸங்க்யாத யோஜனை விஸ்தார ப்ரமாணங்களும்[1] ஆகும். இவை எல்லாம் கூடி ஸப்த (7) நரகத்திலும் 84,00,000*** ஆவாஸங்கள் ஆகும்.

நரகபூமி	ஸங்க்யாத யோஜனை (1/5)	அஸங்க்யாத யோஜனை (4/5)	மொத்தம்
முதலாவது	6,00,000	24,00,000	30,00,000
இரண்டாவது	5,00,000	20,00,000	25,00,000
மூன்றாவது	3,00,000	12,00,000	15,00,000
நான்காவது	2,00,000	8,00,000	10,00,000
ஐந்தாவது	60,000	2,40,000	3,00,000
ஆறாவது	19,999	79,996	99,995
ஏழாவது	1	4	5
மொத்தம்	16,80,000	67,20,000	84,00,000

10 * இந்திரகங்கள் 49 ம் பிரகீர்ணகங்கள் 16,79,951 சேர்ந்து 16,80,000 ஆவாஸங்கள்

** சிரேணி பந்தம் 9604 ம் பிரகிரணகங்கள் 67,10,396 ம் சேர்ந்து 67,20,000 ஆவாஸங்கள்

*** ஒவ்வொரு நரக பூமியிலும் உள்ள ஆவாஸங்களின் மொத்த எண்ணிக்கையில் 4/5 பாகம் அஸங்க்யாத யோஜனை விஸ்தார பிரமாணம் உடையன 1/5 பாகம் ஸங்க்யாத யோஜனை விஸ்தார பிரமாணம் உடையன அவை வருமாறு (தி.ப. காதை 167)

மேல் அட்டவணை காண்க

பா.வே. 1. ப்ரமாணங்களுமாகிய பூர்வோக்த ஸப்த நரகத்திலும்

ஆவாஸங்களின் உயரம்

பாஹுல்யம்[11] ப்ரதம நரகத்து இந்தரகங்கள் ஏகைக க்ரோசம் (1) ச்ரேடிகள் த்ரிபாக அதிக க்ரோசம் (1 1/3) ப்ரகீர்ணசுங்கள் த்ரி பாக அதிக க்ரோச த்வயம் (2 1/3) இது முதல் அர்த்தம உத்தர மாகப் பெருகும்.

நரகம்	வாய்பாடு			இ	சே	பி
				குரோடம்		
1	6,8,14+	0,0,0	6,8,14 / 6	1	1 1/3	2 1/3
2	6,8,14+	3,4,7	9,12,21/6	1 1/2	2	3 1/2
3	9,12,21+	3,4,7	12,16,28/6	2	2 2/3	4 2/3
4	12,16,28+	3,4,7	15,20,35/6	2 1/2	3 1/3	5 5/6
5	15,20,35+	3,4,7	18,24,42/6	3	4	7
6	18,24,42+	3,4,7	21,28,49/6	3 1/2	4 2/3	8 1/6
7	21,28,0+	3,4,0	24,32,0/6	4	5 1/3	-

இ- இந்திரகம், சே- சேணிபந்தம், பி- பிரகீர்ணகம்.

இதனைத்தான் அர்த்தம் உத்தரமாகப் பெருகும் என்றார் போலும் 3,4,7 எனும் பாதி ஒவ்வொன்றினோடும் கூட்டப்

---

11 பாஹுல்யம் - உயரம், கனம்; அர்த்தம் - அரை (1/2) உத்தரமாக- மேலும் மேலும் கூடுதலாக 'திரிலோக', ஸார' நூல் காதை 170 ல் இந்திரகம் சேணிபந்தம், பிரகீர்னக ஆவாஹங்களின் கனத்தைக் கணக்கிட வாய்பாடு கூறப்பட்டுள்ளது. 6,8,14 " என்பதனை 6 ல் வகுக்க முதல் நரக ஆவாஸங்களின் கனம் கிடைக்கும். அதாவது 6/6-1 குரோசம் இந்திரகத்தின் உயரம் 8/6 - 1 1/3 குரோசம், சேனிகளின் உயரம்; 14/6 - 2 1/3 குரோசம் - பிரகீர்கணகங்களின் உயரம். இரண்டாம் நரகம் முதலானவற்றில் உள்ள இந்திரக, சேணி, பிரகீர்ணகங்களின் உயரம் அறிய 6.8,14 என்பதன் பாதியை (3,4,7) க்கூட்டி, கூட்டி 6 ல் வகுக்க வேண்டும். அவ் அளவுகளை மேலே கூறியபடிப் பட்டியல் இடலாம்.

பட்டுள்ளதைக் காண்க. ப.ஸா.பக் 202 காண்க. இப்பகுதி அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது.

இந்திரக ஆவாஸம் 1/2 குரோச வீதத்திலும், சேணிபத்த ஆவாஸம் 2/3 குரோச வீதத்திலும் பெருகும் இவ்விரண்டின் கூட்டுத் தொகையை பிரகிர்கணங்களின் உயரமாகும் என்பது ஸ.தி. 57 ன் விளக்கம்.

நரகபூமி இயல்பு

க்ஷேத்ர ஸ்வபாவம்:

ஏழாம் நரகமும் ஆறாம் நரகமும் ஐந்தாம் நரகத்தில் சதுர்த்த (1/4) பாக பர்யந்தம் 1,75,000 ஆவாஸங்கள் சீத ஆவாஸமாகும். ஒழிந்த நரகத்தில் 82,25,000 ஆவாஸங்கள் உஷ்ண ஆவாஸமாகும்.[12]

இவ்விடத்தில் சீத உஷ்ண ஸ்வரூபம் எவ்வண்ண மெனில்:

மேரு சமானமாகிய இரும்பு குண்டு சீதமானது உஷ்ண ஆவாஸத்துப் போட மெழுகு போல கரையும். தத் சமானமான உஷ்ண பிண்டம் சீத ஆவாஸத்துப் போட லவணம் போல கரையும் என்று அறிவது.

அவ்வெல்லாம் அதிக கற்கசங்களும், அதிரூக்ஷங்களும், அதி நிரசங்களும், அதி துர்கந்தங்களும், அதி பீகரங்களும், அத்யந்தங்களும், அதி தாருண துஷ் கரங்களும் ஆகும்.

---

12 அடிக்குறிப்பு : க்ஷேத்ர ஸ்வபாவம் - பூமி இயல்பு 1,75,000 =5 (ஏழாம் நரகம்) + 99,995 (6ம் நரகம்) + 75,000 (5ம் நரகில் 1/4 பாகம்) ஆவாஸங்கள், சீதம் மிககுளிர், ஒழிந்த நரகம், ஒன்று முதல் ஐந்தாம் நரகின் முக்கால் பாகம் வரை; 30,00,000 + 2500000 + 15,00000 + 10,00000 + 225000 - 82,25,000, மேரு ஸமானமாகிய- அளவில் மேரு மலைக்கு ஒப்பான இரும்பு குண்டு சீதமானது - மிகக் குளிர்ந்த இரும்பு குண்டை; தத் ஸமானமான மேரு மலைக்கு ஒப்பான உஷ்ண பிண்டம் - வெப்பமுடைய உருவை. லவணம் - உப்பு 'மேரு நேர் இரும்பு வட்டை இட்ட அக்கணத்திலுள்ளே நீறென உருக்கும் சீத வெப்பங்கள் நின்ற கீழ்மேல் மே.பு. 945. அவ்வெல்லாம் - அந்த நரக ஆவாஸங்கள் எல்லாம், கற்கசம் - கடினத்தன்மை, ரூக்ஷம் - கரடு முரடான தன்மை நிரசம் சுவையற்ற தன்மை துர்கந்தம் - தீய நாற்றம் அதி- மிகுந்த பீகரம் - அச்சம் தரும் தன்மை அத்யந்தம் எப்போதும் அவ்வியல்பு உடையதாய் இருத்தல்; தாருண- மிகவும்; துஷ்கரம் - இழிந்த நிந்திக்கத் தக்கன; பார்க்க ப.ஸா.ப. 202. அப்பகுதி இங்கே எடுத்தாளப்பட்டுள்ளது.

நரகமண்ணின் இயல்பு

இவ்விடத்தில் திருஷ்டாந்தம்:[13]

நரக பூமியை ஸ்பரிசித்தால் இந்த மனுஷ்ய க்ஷேத்திரத்தில் மனுஷ்யர்க்கு ஆயிரம் தேள்கொட்டின பாதைக்கு சமானமாகும். மற்றும் ப்ரதம நரகத்து ப்ரதம ப்ரஸ்தாரத்து ஒரு ஜீவன்பக்ஷிக்கிற விஷ ம்ருத்திகையை இந்த மனுஷ்ய க்ஷேத்ரத்தில் கொண்டுவந்து இட்டால் நாலு திக்கிலும் அரைக்காதம் அரைக்காதத்திற்குட்பட்ட ஜீவன்கள் மரணம் அடையும். இவ்வண்ணம் ப்ரஸ்தாரம் ப்ரஸ்தாரந்தோறும் அரைக்காதம் அரைக்காதம் பெருகிப் பெருகி ஸப்தம (7 ம்) நரகத்து ஏக (ஒரு) ஜீவன் ப்க்ஷிக்கிற விஷ ம்ருத்திகைக்கு 24 1/2 காதம் திக்கிலுள்ள ஜீவன்களுக்கு மரணமாகும் என்று அறிவது.

நரகபூமிகளின் பருமன்

இவ்வண்ணம் அநேக ப்ரகாரமாகி, துஸ்ஸகமாகிய நரக ஆவாஸங்கள் நிலவரை போல சிலாந்தபூத மாகிய அஸமதளமாகி, அதி[14] நிஸிதமான ஆயுதங்களையும் முட்டுக்கீழாகப் பதித்து வைத்தாற்

---

13 திருஷ்டாந்தம் - எடுத்துக்காட்டு; ஸ்பரிஸித்தால்- தொட்டால், பாதை- நோய், துன்பம், பக்ஷிக்கிற - உண்ணுகின்ற, விஷமிருத்திகை- நச்சு மண், (நரகர் மண்ணை உண்ணுகின்றனர் என்பதாம்) மனுஷ்ய க்ஷேத்ரம் - மனிதர் வாழும் பூமி , அரைக்காதம் - அரைகோசம், தி.சா.193 அரை கோசம் என்று குறிப்பிடுவதால் காதம் என்பதற்கு கோசம் என்று பொருள் கொள்ளப்பட்டது. ஆனால் தி.ப.கா. 2/349 ல் முதல் நரகத்து மண்ணை இங்குக் கொண்டுவந்து இட்டால் 1 கோசம் அளவும், 2 ம் நரக மண்ணால் 1 1/2 கோச அளவும், 3 ம் நரக மண்ணால் 2 கோச அளவும், 4 ம் நரக மண்ணால் 2 1/2 கோச அளவும், 5 ம் நரக மண்ணால் 3 கோச அளவும், 6ம் நரக மண்ணால் 3 1/2 கோச அளவும் 7 ம் நரக மண்ணால் 4 கோச அளவும் உள்ள உயிர்கள் இறந்துபடும் என்று கூறப்பட்டுள்ளது. நரக மண்ணில் நாற்றத்தைப் பொறுக்க முடியாமல் உயிர்கள் இறந்துபடும் என்பது கருத்து 'நாறினும் உய்யா பிற உயிர் ஒசனைக் கண்ணே' சூ. 1946 (பார்க்க அட்டவணை 1)

14 துஸ்ஸகமாகி - பொறுக்க இயலாததாகி, சிலாந்த பூதமாகி - கற்குகை போலாகி; நிஸிதமான - இரும்பு போன்ற; பூதலம் - பூமி , சால் - வயலுக்கு நீர் இறைக்க பயன்படும் பானை போன்ற வடிவமுடைய கலம், நரகர் பிடிக்கும், இட வடிவுக்கு உவமை; மதுஜாலம் - தேனடை; துர்கந்தி - தீய நாற்றமுடைய; ஜனன க்ஷேத்ரம் - பிறப்பு இடம், உபபாத ஸ்தானம் - நரகர் பிறக்கும் இடம்; மனிதர் போல நரகர் கருவில் பிறப்பவர் அல்லர், பார்க்க பக் 20, அதிஷ்டானமாகிய - இடமாகிய, நாளிகை திரச நாளிகை; ஒத்த அகலம் - ஒரு கயிறு அகலம், கொழப்பமுமாகி - கொழுப்பாகி,

ஒத்த பூதலத்தை உடைத்தாகி, வாய் கீழாய் பதித்து வைத்த சால் போன்ற ஆகார ஸம்ஸ்தானத்தை உடைத்தாகி மது ஜாலம்[1] போல துர் வர்ணத்ததாகி துர் கந்தியாகிய நரகரது ஜனன க்ஷேத்ரமாகிய உபபாத ஸ்தானத்தை உடைய இந்த நரக ஆவாஸங்கட்டு அதிஷ்டான மாகிய ரத்னா ப்ரபை முதலான ஏழு நரகந் தோறும் படலமான சிலைகள் நாளிகையோடொத்த அகலம் உடைத்தாகி விட்டமிட்டாற் போல[2] ஒவ்வொன்றுக்கும் எண்ணாயிரம் (8,000), பதினாறாயிரம் (16,000) இருபதினாயிரம் (20,000) இருபத்தி நாலாயிரம் (24,000), இருபத்தெண்ணாயிரம் (28,000), முப்பத்திராயிரம் (32,000) நூற்றெண்பதினாயிரம் (1,80,000) ஆகிய யோஜனைகள் கொழப்பமுமாகி[3] அந்தர வெளியை யுடைத்தாகியது; கீழினின்றும் கொள்க.

படல அமைப்பு:

இப்பால் படலம் இருக்கிறகு ஸ்தான ஸ்வரூபம் சொல்லும்:[15] பவண லோகத்துக்குக் கீழ் 80,000 யோஜனையுள் முதல் நரகம் கர்மை; அதில் 13 புரை இருக்கும். அது எவ்வண்ணம் எனில், மேலாயிரம் கீழாயிரம் யோஜனை தள்ளி நின்ற 78,000 யோஜனையுள் 13 புரைக்கும் 12 அந்தரமும் 6500 யோஜனைக்கு ஒவ்வொன்றாக இருக்கும்.

இரண்டாம் நரகம் 32,000 யோஜனையுள் முன் சொன்னபடி மேலாயிரம் கீழாயிரம் யோஜனை தள்ளி நின்ற 30,000 யோஜனையுள் 11 புரைக்கும் 10 அந்தரமும் 3000 யோஜனைக்கு ஒவ்வொன்றாக இருக்கும்.

கனமாகி, 'எண் புகைக் கொழுப்பாய்' (மே.பு 1319) ஆட்சி காண்க; 8000 - முதலான அளவுகள் நரக பூமி களின் கனமாகும்; அந்தரம் - இடைவெளி; வெளி - ஆகாயப் பிரதேசம்; கீழினின்றும் கொள்க என்றதனால் கூறப்பட்டுள்ள அளவுகளை முறையே ஏழாம் நரகம் முதலாகக் கொள்க. பா.வே.1 மதுஜலம், 2 வட்டமிட்டாற் போல 3.கொழுப்பமுமாகிய

15 முதல் நரகம் - ரத்னா ப்ரபை என்பது 1,80,000 யோஜனை அதில் கரபாகம் 16,000 யோஜனை, பங்க பாகம் 84,000, அப்பஹுல பாகம் 80,000 யோஜனை அப்பகுள பாகத்தில் தான் முதல் நரகம் இருக்கிறது. மேலாயிரம் கீழாயிரம் - நரகங்கள் பூமியில் மேலே 1000 யோஜனையும் கீழே 1000 யோஜனையும் ஆவாஸங்கள் இன்றி இருக்கின்றன. மீதி பகுதியில் படலங்கள் உள்ளன. புரை - படலம், அந்தரம் - இடைப்பகுதி.

மூன்றாம் நரகம் 28,000 யோஜனையுள் முன் சொன்னபடி மேலாயிரம் கீழாயிரம் யோஜனை தள்ளி நின்ற 26,000 யோஜனையுள் 9 புரைக்கும் 8 அந்தரமும் 3250 யோஜனைக்கு ஒவ்வொன்றாக இருக்கும்.

நாலாம் நரகம் 24,000 யோஜனையுள் முன் சொன்னபடி மேலாயிரம் கீழாயிரம் யோஜனை தள்ளி நின்ற 22,000 யோஜனையுள் 7 புரைக்கும் 6 அந்தரமும் 3,666 யோஜனையும் ஒரு யோஜனையில் மூன்று பாகத்தில் இரண்டு பாகத்துக்கு (2/3) ஒவ்வொன்றாக இருக்கும்.

ஐந்தாம் நரகம் 20,000 யோஜனையுள் முன் சொன்னபடி மேலாயிரம் கீழாயிரம் யோசனை தள்ளி நின்ற 18,000 யோஜனையுள் ஐந்து புரைக்கும் 4 அந்தரமும் 4,500 யோஜனைக்கு ஒவ்வொன்றாக இருக்கும்.

ஆறாம் நரகம் 16,000 யோஜனையுள் முன்சொன்னபடி மேலாயிரம் கீழாயிரம் யோஜனை தள்ளி நின்ற 14,000 யோஜனையுள் மூன்று புரைக்கும் இரண்டு அந்தரமும் 7,000 யோஜனைக்கு ஒவ்வொன்றாக இருக்கும்.

ஏழாம் நரகம் பூமி கொழுப்பம்[1] 8000 யோஜனையுள் 4000 யோஜனைக்கு மேல் நடு மத்தியில் ஒரு புரை இருக்கும்.

ஆக, ஏழு நரகமும் பவண லோகமும் 3,08,000 யோஜனை ப்ரத்வீ கனம் குறைந்த ஏழு ரஜ்ஜூ ப்ரமாணமும்[2] ஆகாஸமாகும்.

பிலங்களுக்கு இடைவெளி:

இப்பால், ஆவாஸத்துக்கு ஆவாஸம் குறுக்கு அந்தரம் சொல்லுதும்;

ஸங்க்யாத யோஜனை விஸ்தாரமுள்ள ப்ரகீர்ணகங்களில் ஒன்றுக்கொன்று அந்தரங்கள் ஜகன்யம் ஒன்றரை (1 1/2) யோஜனை; உத்க்ருஷ்டம் மூன்று யோஜனை (3) நடுப்பட்டது நாநா விதமாகும்.

அஸங்க்யாத யோஜனை விஸ்தாரமுள்ள ஆவாஸங்களுக்கு அந்தரம் ஜகன்யம் ஏழாயிரம் யோஜனை, உத்க்ருஷ்டம் அஸங்க்யாத யோஜனை ஆகும். நடுப்பட்டது நாநா விதமாகும்.

பா.வே. 1. கொழப்பம், எண்புகை கொழுப்பாய் மே.பு. 1319 ஆட்சி

2. ஏழு ராஜ்ஜூ ப்ரமாணமாகும்.

பிலங்கள் வடிவம்

இந்த ஆவாஸங்களுக்குச் சுற்றில் ஸ்வரூபம் சொல்லுதும்:[16]

சில ஆவாஸங்கள் வட்டமும், சில ஆவாஸங்கள் மூன்று கோணமும், சில ஆவாஸங்கள் நாற் சதுரமும், சில ஆவாஸங்கள் நாநா விதங்களுமாய் சுற்றிலும் வஜ்ர மயமாகிய கனமாகிய சுவரை உடையதாய் முன் சொன்னபடி உன்னதங்கள் உடையதாய் நிலவரை போன்று இருக்கும்.

சேணிபத்தங்களின் பெயர்

இப்பால், அந்த ஆவாஸங்களில் நரகம் பிறக்கிற ஸ்தான ஸ்வரூபம் சொல்லுதும்:

முதல் நரகத்து ஆவாஸங்களில் கிழக்கே காங்க்ஷை தெற்கே பிபாஸை, மேற்கே அதிகாங்க்ஷை, வடக்கே அதிபிபாஸை என்னும் பெயராகும்.

இரண்டாம் நரகத்தில் ஆவாஸங்களில் கிழக்கே அநிச்சை, தெற்கே அவித்யை, மேற்கே மஹா அநிச்சை, வடக்கே மஹா அவித்யை என்னும் பெயராகும்.

மூன்றாம் நரகத்தில் ஆவாஸங்களில் கிழக்கே து:கா, தெற்கே வேதை, மேற்கே மஹாது:கா, வடக்கே மஹா வேதை என்னும் பெயராகும்.[17]

---

16 ப்ரத்வீ கனம் - பூமிகளின் பருமன் அவை (1 ம் நரகம்) 1,80,000 + (2ம் நரகம்) 32,000 + (3 ம் நரகம்) 28,000 + (4 ம் நரகம்) 24,000 + (5 ம் நரகம்) 20,000 + (6 ம் நரகம்) 16,000 + (7 ம் நரகம்) 8000 - 3,08,000 யோஜனை ஆக 7 ரஜ்ஜு (கயிறு) அளவில் 3,08,000 யோஜனை போக மீதிப் பகுதி எல்லாம் ஆகாயம் என்பதாம் ஆனால், 1 கயிறு நிகோதம் இந்த ஏழு கயிற்றில் அடங்குகிறது என்ப தனை நினைவில் கொள்ள வேண்டும். இது அல்லாது காற்று வலயங்கள் உள அளவையும் கணக்கில் கொள்ளப்பட வில்லை, குறுக்கு அந்தரம் - பக்க இடைவெளி, உன்னதம் -உயரம்;பார்க்கபக்.13

17 அந்த ஆவாஸங்களில் - இந்திரக, சேணிபத்த, பிரகீர்ணகங்களில் நரகர் பிறப்பிடங்கள் இயல்பு சொல்லத் தொடங்குமுன் இடையில், ஒவ்வொரு நரகத்து முதல் படலத்து இந்திரகத்தைச் சுற்றியுள்ள முதல் சேணி பத்தங்களின் பெயர்களைக் கூறுகிறார்.

பா.வே. 1

கிழக்கே உஷ்டிகா, தெற்கே ஆம்பி, மேற்கே ஆஸ்தளி, வடக்கே மோதளி, கிழக்கே கால, தெற்கே ரௌரவ, மேற்கே மஹாகால, வடக்கே

நாலாம் நரகத்தில் ஆவாஸங்களில் கிழக்கே நிஸ்ருஷ்டை, தெற்கே நிரோதை, மேற்கே மஹா நிஸ்ருஷ்டை, வடக்கே மஹா நிரோதை என்னும் பெயராகும்.

ஐந்தாம் நரகத்தில் ஆவாஸங்களில் கிழக்கே நிரோதை, தெற்கே விமர்தனை, மேற்கை அதிநிருத்தை வடக்கே மஹா விமர்தனை என்னும் பெயராகும்.

ஆறாம் நரகத்தில் ஆவாஸங்களில் கிழக்கே நீலை, தெற்கே பங்கை, மேற்கே மஹா நீலை, வடக்கே மஹாபங்கை என்னும் பெயராகும்.

ஏழாம் நரகத்தில் ஆவாஸங்களில் கிழக்கே[1] உஷ்டிரிகா, தெற்கே கும்பி, மேற்கே ஸ்தளி, வடக்கே மோதலி என்னும் பெயராகும்.
பிறப்பிட விஸ்தாரங்கள் முதலியன :

இவைகளுடைய விஸ்தாரங்கள் 1 1/4 யோஜனையும், 2 1/2 யோஜனையும் 3 3/4 யோஜனையும் 100 யோஜனைகளுமாகிய வ்யவஹார யோஜனையாகும்.[18]

இவைகளின் உயரம் தன்தான் விஸ்தாரத்துக்கு ஐந்து படியாகும்.

இவைகளுடைய ஆகாரம் ஏழு கோணமும், மூன்று கோணமும், இரண்டு கோணமும், ஒரு கோணமும், ஐந்து கோணமும் ஆகும்.

இவைகளுக்கு வாசல்கள் ஏழும் மூன்றும் இரண்டும் ஒன்றும் ஐந்தும் ஆகும்.

மஹாரௌரவ என்பது தி.ஸா.பாடம் உஷ்டிரிகா - ஒட்டகம், கும்பி - முதலை இவை எல்லாம் பிறப்பிட பிலங்களின் வடிவைச் சுட்டுவன. எனவே, இவை ஏடு எழுதுவரால் ஏற்பட்ட பாடப்பிழை எனலாம்.

18 அடிக்குறிப்பு : 1 1/4 யோஜனை - ஜகன்யம், 2 1/2 - 3 3/4. யோஜனை மத்திமம், 100 யோஜனை உத்க்ருஷ்டம் என்பது தி.ப. (கா. 2/310) தரும் விளக்கம் முதல் நரகம் முதல் ஏழாம் நரகம் வரை முறையே 1 குரோசம், 2 குரோசம், 3 குரோசம், 1 யோஜனை, 2 யோஜனை, 3 யோஜனை, 100 யோஜனை உத்க்ருஷ்ட விஸ்தாரம் என்று தி.ஸா கா. 180 கூறுகிறது. உயரம் (1 1/4 X 5) 6 1/4, (2 1/2X 5) 12 1/2, (3 3/4 X 5) 18 3/4, (100 X 5) 500 யோஜனையாகும்; ஐந்து படியாகும் என்றது இதனையே, அந்தரம் - பக்க இடைவெளி; ஜகன்யம் 1 1/2 யோஜனை, உத்க்ருஷ்டம் 3 யோஜனை என்று தி.ஸா.கா. 176 குறிப்பிடுகிறது. இங்கே ஜகன்யம் 6 யோஜனை உத்க்ருஷ்டம் 12 யோ. என்று கூறப்படுகிறது.

இவைகளில் இந்தரகங்களில் இருக்கிற ஜன்ம ஸ்தானங்களுக்கு மும்மூன்று கோணங்களும் மும்மூன்று வாசல்களும் ஆகும். மற்ற ச்ரேணிபத்த, ப்ரகீர்ணகங்களில் இருக்கிற ஜன்ம ஸ்தானங்களுக்கு முன் சொன்னபடி ஐந்து வகை கோணங்களும் வாசல்களும் ஆகும்.

இவைகளுக் கெல்லாம் துர் கந்தாதி ஸ்வரூபங்கள் முன் சொன்னபடி ஆகும்.

இவைகளுக்கு ஒன்றுக்கொண்று அந்தரம் ஸங்க்யாத விஸ்தாரமாகிய ஆவாஸங்களில் இருக்கிற ஜன்ம ஸ்தானங்களுக்கு ஜகன்யம் ஆறு யோஜனை உத்க்ருஷ்டம் பன்னிரண்டு யோஜனை; மத்யமம் நாநா விதமாகும். அஸங்க்யாத விஸ்தாரமாகிய ஆவாஸங்களில் இருக்கிற ஜன்ம ஸ்தானங்களுக்கு ஜகன்யம் 7000 யோஜனை; உத்க்ருஷ்டம் ஆஸங்க்யாத யோஜனை; மத்யமம் நாநா விதமாகும்.

யோனிகள் வடிவம்

இவ் வந்தரங்களில் வாயுக்களால் ஒன்றுக்கொன்றுழலை இட்டாற் போல தரிக்கப்படுவதாகிய ஆவாஸங்களில் உபரிம ஸ்தானங்களுள் தேனீராட்டும் ஒட்டக முகமும் போலும் யோனிகளுள் பிறந்து நிறைந்த ஆயுதங்களின் மேல் வீழ்வர்.

நரகில் யார் பிறப்பர்

அவ்வண்ணம் பிறப்பவர் யாரெனில் தேவதைக்குப் பலி என்றும், பித்ரு கார்ய மென்றும், மந்தரார்த்தம் என்றும், யகளும் என்றும், ஔஷத நிமித்தம் என்றும், மற்றும் தன்தான் வ்யஸனத்தினாலும், ராகத்வேஷ மோஹத்தினாலும், பிராணிகளிடத்து காருண்யமின்றி நிஷ்காரணத்திலும் கொல்லும் அவரும், வலைக்கட்டுவர், வேட்டையாடுமவர், அஸி, முஸல, கணய கம்பணாதி நாநா கட்கங்களினால் ஒருவன் எறிந்து ரௌத்ர தியானத்துடன் மரித்தவர்களும், மற்றும் பிறருடைய த்ரவ்யங்களைப் பொய் சொல்லியும் வஞ்சித்தும் திருடியும் மாறாடியும் வந்தியிட்டும் இவ்வண்ணம் அநேக ப்ரகாரத்தினால் கைக்கொள்ளுமவரும், மற்றும் யாதொன்றினை படைத்தும் தணிவில்லாதவரும்; ப்ரஜைகளை அன்யாயத்தினால் கவர்ந்து கொள்ளும் அவரும்; பராங்கணஸக் தராகியவரும், எனக்கொப்பார் இல்லை என்று இருக்கும் அவரும், ஜிஹ்வேந்த்ரிய விஷய விஹ்வலீபூதராகி மாம்ஸ பக்ஷணம் பண்ணும் அவரும், மது மத்ய பாந சேவிகளும், த்யூத வ்யஸனாபிபூதரும், மற்றும்

கற்பிளப்பு போன்ற அதி கோபிகளும், சிலா ஸ்தம்பம் போல ஒருவர்க்கும் வளையாத மான கஷாயிகளும், மூங்கில் முறடு போல வக்ரமாகிய மாயாவிகளும், க்ரமிராக கம்பளம் எவ்வண்ணம் சுட்டாலும் தனது சிவப்பு விடாதவாறு போல தீவ்ர லோபிகளும் எனும் இவர்கள் நரக ஆயுர் பந்தத்தினை அடைந்து,[19] க்ருஷ்ண நீல காபோத லேஸ்யா பரிணாமத்தோடும் அத்ய அசுப ரௌத்ர த்யானத்துடனும் மரித்து, நரகங்களில் மேலாக தேனீராட்டோடு ஒத்த ஸ்தானங்களையும், கழற்காய் போல வடிவையும், உஷ்ட்ரிகையும், கரோஷ்ட்ர சார்தூல ஸ்ரகால காகோலுக பீகர முகங்கள் ஒரு குழியின் கண் இட்டது போல துர்கந்தியாகி, அதி தீக்ஷணங்களாகிய ப்ரதேஸமுடைய உபபாத ப்ரதேஸத்துள், பீபித் குத்ஸித யோனி ஸ்தானங்களுள், தலைகீழாக நிலைகொண்டு, இரண்டு நாழிகையில் பூர்ண சரீராகி, விருபமும் துர்வர்ணமும் விகலாங்கமும், துஸ்பரிஸமும் துஸ்வரமும் துர்பகமும் விஷக்ஷாரமும் ஹூண்ட ஸம்ஸ்தானமுமாகி, அக்னி மயமாகிய பூமியுள் அவிரளமாய் கிடந்த ஆயுதங்களின் மேல், பின்ன பாண்டங்களைப் போல வீழ்ந்து, பூமி ஸந்தாபத்தால் பொரிந்து, பின்னமாய், கதி ஸ்வபாவத்தால் ஸர்வாங்கங்களும் தொக்கு, மேனோக்கி எழுந்து விழுகின்ற காலத்து, நரகர் அதி க்ரோதத்தோடு தொடர்ந்து சென்று அதி நிசிதமாகிய ஆயுதங்களால் ப்ரஹரிப்பாரும், இவர்களுக்கு ஆயுதம் எவ்வண்ணமெனில், நினைத்த மாத்ரத்தினாலே அங்கங்கள் ஆயுத ஸ்வரூப மாகும் என்று கொள்வது.[20]

---

19 உழலை இட்டாற்போல - குறுக்கே இட்டது போன்று, தேனீராட்டு - தேன்கூடு, அந்தரங்களில் - நரக பூமி இடைவெளிகளில், உபரிம ஸ்தானம் - (நரகர் பிறக்கும் இடம் நரக பூமியில் கீழே இல்லாமல்) உயரே உள்ள இடம், மித்ரு - தகப்பன், நிஷ்காரணம் - காரணம் இன்றி, அலி .... கட்கம் - வாள் முதலான கொலை கருவிகள், பராங்கனாஸக்தர் பிறபெண்டீர் வேட்கையர், ஜிஹ்வேந்த்ரியம் - நாக்கு, விஹ்வலீபூதர் - மிகு விருப்புடையவர், த்யூத - சூதாட்டம்.

20 உஷ்டரிகை- ஒட்டகம் ; கரோஷ்ட்ர - கழுதை, சார்தூல - புலி; ஸ்ரகால - நரி; காகோலுக - பன்றி ; பீகர - பயங்கர; ஒட்டகம் கழுதை நாய் பாம்பு வாசி ஊண் இட்டதோர் குழியின் மிக்கெழுந்து நாறிடும் (மே.பு 514; பீபத் குர்ஸித - அருவருக்கத் தக்க இழிந்த; விரூபம் - கொடிய வடிவம்; ஹூண்ட ஸம்ஸ்தானம் - ஒழுங்கற்ற உடல் அமைப்பு; ஒரு கோணியில் பல வடிவுடைய கற்களை கிட்டாற் போன்ற தோற்றம், அவிரளமாய் - நெருக்கமாக; பின்ன - உடைந்த; ஸந்தாபம் - சூடு, அதி நிசிதமாகிய - மிருகூர்மையாகிய, ப்ரஹரிப்பாரும் - தாக்குவாரும், வயிரம் - பகை; 'முன்னதின் செய்த வினையின் முறை பல, இன்னணம் எய்துமின் என்று இடர் செய்வார்' ; சூ. 1932. ஸ்வா - நாய்; தாம்ராதி - செப்பு முதலான; கொடிறு - குறடு ஆஸ்யங்களை - தாடைகளை, திலயந்த்ரம் -

நரகர் படும் துன்பம்

பூர்வ பவங்களிலுள்ள வயிரங்களை அறிவித்து தத் அநுரூபமாகிய தண்டங்களைப் பண்ணுவோரும், வஜ்ரம் போன்ற நக தந்தங்களையுடைய க்ருஷ்ண வர்ணத்ததாகிய ஸ்வாவினது வடிவு கொண்டு கவர்ந்து கொள்வோரும், தாம்ராதி லோகங்களை உருக்கி, கொடிறுகளால் ஆஸ்யங்களை அகற்றிப் புகப்பெய்வோரும், திலயந்த்ரங்களில் புகவிட்டு ஸர்வாங்கங்களையும் ஸகள மாக்கித் திரிப்போரும், எறி எறி, தறி தறி, சுடு சுடு, பிள பிள. என்று சூழப்படுவாரும், குத்துவாரும், அரிவாரும், சுடுவாரும், பிளப்பாரும், இப்படியே கடின க்ரூர நிஷ்டூர வசனரைக் கண்டபொழுது உண்டாகிய பயத்தினாலே விபங்க ஜ்ஞானம் உண்டாகும். இது நரக கதியாவதும் இவரெல்லாம் நரகர் என்றும் அறிந்து, நாம் இங்கு[21] வருவதற்குக் காரணம் ஏன்என்று? விசாரிக்க, ஜிநவசனம் நம்பாமல் ஜிந தர்மத்து சிரத்தைப் பண்ணாமலும், பஞ்ச மஹா பாதகத்தின் ஆனந்தத்தினாலும் ஆகியது' என்று அறிந்து மீண்டும் அறிவு கெட்டு, ஒருத்தொருக்கொருத்தர் வர்மங்களை அன்யோன்ய வைர பந்தகளையும் மூதலித்து 'மாம்சத்தில் இவன் கடு வயஸனி' என்று அவன் அங்கங்களைக் குறைத்து அவனையே தின்பிப்பாரும்; 'பரஸ்த்ரீயை ஆலிங்கனம் பண்ணினவன்' என்று காய்ந்த செப்புப் பாவையைத் தழுவிவிப்போரும்,' 'பொய்யில் ப்ரியன் என்று நாக்கைப் பிடுங்குவோரும்,' 'மது மத்ய வ்யஸனி' என்று காய்ந்த லோஹங்களைப் புகட்டுவோரும்'; 'களவு பாதகன்' என்று உயிர் கழுவில் ஏற்றுவோரும், அக்னி மயமாகிய அதி நிஸிதமான கண்டக இலவங்களில் ஏற்றி ஈர்ப்போரும்; அக்னி மயமாகிய சயனங்களில் கிடத்தி தகிப்போரும், அதிக உஷ்ண பாதையால் ஓடிப் பானம் பண்ணப்புக ஜலங்கள் விஷ க்ஷார மயமாய் பரிணமித்தாலும் அவ்விடத்தில் நரகர் விக்ரியா ரூபமாகிய ஜலசரபாதையாலும் ஸந்தாபத்தை எய்துவோரும் ; உத்துங்கமாகிய பர்வதாக்ரங்களில் ஏற்றி அதோ முகமாக தூக்குவோரும்; சுத்திகளால் அடிப்போரும் ; பார முனையை நட்டுப் பனை என பிளப்போரும்; கூடாரங்கழுநர் போல

செக்கு; ஸகளம் - பிண்ணாக்கு (போல)

21 பஞ்ச மஹா பாதகம் - கொலை பொய், களவு, மிகுபொருள் விருப்பு, பிறர் பெண்டிர் நயத்தலால் விளைந்தவை,, மூதலித்து - நிறுவி ; காய்ந்த லோஹம் - சுட்ட இரும்புக் குழம்பு; கண்டகம் - முள்; சயனம் - படுக்கை; க்ஷார - உப்பு ஜலசரம் - நீர்வாழ் உயிர்கள், உத்துங்கம் - உயர்ந்த; நரகர் அடையும் துன்பம் பற்றி சூ. 1929 முதல் 1945 விரிவாகப் பேசுகிறது. அங்கே காண்க.

குறுந்தடியால் புடைப்போரும்; ஆயுதங்களால் அழிந்த ஸர்வ அங்கங்கட்கு விஷ மயமாகிய க்ஷாரங்களைப் புகப் பெய்வோரும் இப்படி அநேக ப்ரகாரமாகிய விகுர்வனைகளால் துக்கங்களைப் பண்ணுவர்.

அது எவ்வண்ணம் எனில் :

அதி த்ருஷ்ணையினால் வைதரணி என்னும் காய்ந்த லோஹத்தினால் நிறைந்த துறையை ஜலம் என்னும் ஆசையினால் புக்கு அஸஹ்ய ஜ்வலந ஜ்வலிதராகி அதனின்றும் புறப்பட்டோடும் அவரைக் கூடஸால்மலிகளில் ஏற்றி ஏறவும் இழியவும் ஈர்த்து பிளந்த சரீரராகிப் போகி, வன நிவாஸம் என அஸிபத்ர வனம் புக்கு நித்திரை பண்ணுவோம் என்னும் ஆசையினால் இருந்தவர் மேல் நாநாவித ஸஸ்த்ர ஆகாரமாக பத்ர பலாதிகள் சொரிய சரீரம் உடைந்து நரலும்.

நாநாவித ஸங்க்லிஷ்ட பரிணாமமுடைய நாரகரை அசுரகுமாரர் சென்று தமக்குத் தோன்றின விபங்க ஜ்ஞானத்தால் அறிந்து, 'நீ பர தார அபிலாஷி', 'நீ ம்ரக வ்யஸனாபி பூதன்,' 'நீ த்யூத தூஷிதன்', 'நீ மத்யபாயி' 'நீ மாம்ஸாஸி', 'நீ பர தன அபஹாரி', 'நீ பைசூன்ய வாதி', 'நீ தர்ம துரோகி', 'நீ அநியாய தன உபார்ஜகன்', 'நீ குதர்ம ப்ரவ்ரத்திகன்' என இவ்வண்ணம் அநேக ப்ரகாரத்தினால் மூதலிப்பர். பராங்கநா ஸத்தராகியவரை காய்ந்த இருப்புப் பாவையினைப் புல்லுவிப்பர்.[22]

இவ்வண்ணம் மூதலித்து தததுரூபமாக தண்டிப்பவரும், அசுபதர விக்ரிய உபேதர் ஆகையினால் பலாக்காக, உலுக ஸ்ருகால,

---

22 தருஷ்ணை - தாகம்; அஸஹ்ய - பொறுக்க இயலாத; ஜ்வலந ஜ்வலிதராகி - சூட்டினால் எரிச்சல் அடைந்தவராகி; அஸிபத்ர - வாள் போல அமைந்த இலை; ஸஸ்த்ர - கொலைக் கருவிகள் ; பத்ர பலாதிகள் - இலை பழங்கள் முதலானவடிவில்; நரலும் - கத்துவர்; அபிலாஷி- வேட்கையன், ம்ருக- வேட்டை; த்யூத- சூதாட்டம் ; மத்ய-கள்; பரதன - பிறர்பொருள்; பைசூன்ய வாதி - கோள் சொல்லுவோன்; தன உபார்ஜகன் - பொருள் ஈட்டுவோன்; ப்ரவ்ரத்திகன் - ஒழுகுபவன்; உபேதர் - கூடியவர்; பலாக - கொக்கு காக - காக்கை; உலூக - ஆந்தை; ஸ்ருகால - நரி; மார்ஜார - பூனை; சார்தூல - புலி; கோலாங்குல - ஒருவகை குரங்கு; ஸாரமேய - நாய்; சூகர- பன்றி பார்க்க ப.ஸா பக் 202 - 205 அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது.

மார்ஜ்ஜார, சார்தூல, கோலாங்குல, ஸாரமேய பீகர சூகர ஆகாரங்களைக் கைக்கொண்டு அநேக ப்ரகாரங்களினால் ஒருவருக் கொருவர் நாயும் நாயும் போல, மத்ஸயமும் மத்ஸயமும் போல பாதிப்பர். மற்றும் தாவாக்னியை ஜ்வலிப்புக்கும் மஹா வாயு போல நாநாவித துர் ஆகமஉக்தத்தினால் பூர்வஜன்மத்து நம்பி நடந்த துராசாரங்களைச் சொல்லி மூதலித்தும் தண்டிப்பர்.

முன்னம் ஒவ்வொருகால் விநோதமாகக் கேட்ட ஜைன ஆகமோக்திகளை விபங்க ஜஞானத்தால் நினைந்து ஸகல ஆகம திலகமாகிய ஜைன ஆகமம் ஜீவ ஹிம்ஸையினால் துர் கதியாம் என்று சொல்லும் ஜிந வாக்யம் த்ருஷ்டம் என்பது இங்கே கண்டோம் என்பவரும், ஜைன ஆகமத்தில் நம்பிக்கை கொண்டால் இந்தத் துன்பப்படோம் என்று சிந்தித்தும் கதி ஸ்வபாவத்தினால் அசுப லேஸ்யைகளினால் மிகவும் முனிவாகி இருப்பர்.

துன்பமில்லா நேரம்

'ஸஹஜ சாரீர மானஸ க்ஷேத்ரஜ பரஸ்பரோ தீரித ததநுஜோ தீரித' மென்னும் அநேகவித துக்கங்களினால் ஆயுஷ்யாவசானத் தளவும் அஹோராத்ரம் துன்பப்படுவது அல்லது ஸம்யக்தவ க்ரகண கால மொழிந்து சுகமில்லை.

தீர்தங்கர நாம ஸத்வமுள்ள ஜீவனுக்குக் கடையில் ஆறு மாஸ ஆயுஷ்யம் இருக்க தேவர்கள் வந்து உபஸர்கத்தினை நிவாரிப்பர்.

நாரகர் மரணம்

நாரகரது ஆயுஷ்ய அவஸான காலத்தில் வாத ஸ்பரிசத்தினால் மேக விநாசமாவது போல சரீர விநாசம் ஆகும் என்று அறிவது.[23]

---

23 ஆகமோக்திகளை - ஆகமத்தில் சொல்லப்பட்டவை களை ; விபங்க ஞானம் - திய அவதி ஞானம்; ஸம்யக்த்வ க்ரகண காலம் - ஸம்யக்த்வம் பெறும் காலம்; நாம ஸத்வமுள்ள - நாம வினை கட்டியுள்ள ; கடையில் - ஆயுள் முடிவில்; உபஸர்கம்- துன்பம் ; அவஸானம் - முடிவு ; வாத-காற்று; தத தீரித - அது காரணமான; உத்சேதம் - உயரம் ; ஆயுஷ்யம் -ஆயுள் ; (பார்க்க : அட்டவணை 2,3)
பாவே. 1 நிரய என்பது தி.ஸா மூலம்; 2 முப்பத்து மூன்று மாகும்;

மூன்றாவது நரகத்துக்குக் கீழ் அசுரர்கள் செல்வதில்லை. ஆகையினால் அவ்விடத்து தத் தீரீத துக்கம் இல்லை.

நரகர் ஆயுள்:

மற்றும் அந்த நரகர்க்கு ஆயுஷ்யமும் சரீர உத்தேசமும் அவதி க்ஷேத்ரமும் லேஸ்யையும் முதலாக உடையது சொல்லுதும். ஆயுஷ்யம் ஸீமந்தேந்திரகத்து ஜகன்யம் தஸ வருஷ ஸகஸ்ரம் (10,000); உத்க்ருஷ்டம் நவதி ஸகஸ்ர வருஷம் (90,000). நரகேந்திரகத்துக்கு[1] உத்க்ருஷ்டம் நவதி லக்ஷம் (9,00,000); இத்யாதி அறியப்படும். யதாக்ரமம் ஒன்றும் மூன்றும் ஏழும் பத்தும் பதினேழும் இருபத்திரண்டும் முப்பத்து மூன்றும் கடலாகும்.[2]

நரகர் உடல் உயரம் :

மற்றும், சரீரோத்ஸேதம் எங்ஙனம் எனில் :

ப்ரதம படல சீமந்தேந்திரகத்தில் மூன்று முழம் ஆகும். அதன்மேல் பெருகிப் போகத் தன்தான் நரகத்து அந்திய படலம் அளவும் ஏறிச் சென்று முதல் நரகத்து அந்திய படலத்து ஏழு வில்லும் மூன்று ஹஸ்தமும் ஆறு அங்குலமும் ஆகும். இதனை இரட்டித்துப் போக அந்தியத்தில் பஞ்சசத தநு வாகும்.

ஆயுளும் உயரமும் :

அது எவ்வண்ண மெனில் :[24]

ப்ரதம ஸீமந்தேந்த்ரகத்தில் ஜகன்ய ஆயுஷ்யம் பதினாயிரம் (10,000) வருஷம்,[1] உத்க்ருஷ்டம் தொண்ணூறாயிரம் (90,000). வருஷம் உத்ஸேதம் மூன்று முழம். இதன்மேல் படலம் படலம் தோறும்

---

24 ஸீமந்தேந்திரகம் - முதல் நரகத்து முதல் படலத்து இந்திரகம், நரகேந்திரகம் - முதல் நரகத்து இரண்டாம் படலத்து இந்திரகம்; இத்யாதி- இப்படியாக; யதாக்ரம் - வரிசையாக; ஒன்றும் . . . கடலாகும் - வரிசையாக ஏழு நரகங்களின் உத்க்ருஷ்ட ஆயுளாகும்; உத்ஸேதம் - உயரம்; ஹஸ்தம் - முழம்; பஞ்ச சத தநு - 500 வில்; 24 அங்குலம் ஒரு முழம்; 4 முழம்; ஒரு வில்; பெருக்க - கூட்ட; ஸமயாதிக - ஒரு ஸமயம் அதிகமாக - அதாவது முன் படலத்து உத்க்ருஷ்ட ஆயுளோடு ஒரு சமய காலம் கூட்டினால் அடுத்த படலத்து ஜகன்ய மாகும்.

பாவே. 3 ஸ்ம்வத்ஸரம்.

இரண்டு முழம் 8 1/2 அங்குலம் பெருக்க த்விதீய நரகேந்திரகத்துக்கு ஜகன்யம் ஸமயாதிக நவதி ஸஹஸ்ரம் (90,000); உத்க்ருஷ்டம் தொண்ணூறு லக்ஷம் (90,000,00); அதில் ஒரு வில்லும் ஒரு முழமும் எட்டரை அங்குலமும் ஆகும். வி. 1, மு. 1, அங் 8 1/2. த்ரிதிய (மூன்றாம்) ரோருகேந்திரத்துக்கு ஜகன்யம் ஸமயாதிக தொண்ணூறு லக்ஷம் (90,00,000); உத்க்ருஷ்டம் அஸங்கியாத பூர்வ கோடி வருஷம்; அதில் ஒரு வில்லும் மூன்று முழமும் 17 அங்குலமும் ஆகும்-வி.1,மு.3,அங்.17.

சதுர்த்த (4-ம்) ப்ராதேந்திரகத்து ஜகன்யம் ஸமயாதிக அஸங்கியாத பூர்வ கோடி வருஷம்; உத்க்ருஷ்டம் ஸாகரோபமத்து பத்தாம் பாகம் (1/10 கடல்); உத்ஸேதம் இரண்டு வில்லும் இரண்டு ஹஸ்தமும் ஒண்ணரை அங்குலமும் ஆகும். வி.2, மு.2, அங்.1/2.

பஞ்மத்தில் (5-ம்) உத்ப்ராதேந்திரகத்து ஜகன்யம் ஸமயாதிக ஸாகரோகபம தஸ பாகம்-1/10; உத்க்ருஷ்டம் ஸாகரோபம த்வீதஸ-2/10 பாகம்; உத்சேதம் மூன்று வில்லும் பத்து அங்குலமும் ஆகும். -வி.3, அங்.10.

ஷஷ்டம (6-ம்) ஸம்ப்ராதேந்திரகத்து ஜகன்ய ஆயுஷ்யம் ஸமயாதிக ஸாகரோபம த்வீதஸ பாகம் 2/10; உத்க்ருஷ்டம் ஸாகரோகபம த்ரீதச பாகம் 3/10; அதில் உத்ஸேதம் மூன்று வில்லும் இரண்டு முழமும் பதினெட்டரை அங்குலமும் ஆகும். வி.3, மு.2, அங்.18 1/2.

இவ்வண்ணம் எல்லாபடலத்திலும் மேல் படலத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஸமயாதிகமாக கீழ் படலத்து ஜகன்யம் என்று கொள்வது. இனி உத்க்ருஷ்ட ஆயுஷ்யமே சொல்லப்படுகின்றது.

ஸப்தம (7-ம்) அஸம்ப்ராந்தேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் சதுர்தஸ பாகம் 4/10. உத்ஸேதம் நான்கு வில்லும் ஒரு முழமும் மூன்று அங்குலமும் ஆகும். வி.4, மு.1, அங்.3.

அஷ்டம (8-ம்) த்ரஸ்தேந்திரகத்து[1] உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் அர்த்த (1/2) ஸாகரோபம மாகும். உத்ஸேதம் நாலு வில்லும் மூன்று முழமும் பதினொன்றரை அங்குலமும் ஆகும். -வி.4, மு.3, அங்.11 1/2.

பாவே: 1. விப்ராந்த என்பது தி.ஸா., தி.ப. பாடம், 2. த்ரஸ்த என்பது தி.ஸா. பாடம் 3. த்ரிஸித என்பது தி.ஸா. பாடம்

நவம (9-ம்) த்ரஸீதேந்திரகத்து[2] உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஷட்தஸ பாகம் 6/10; உத்ஸேதம் ஐந்து வில்லும் ஒரு முழமும் இருபது அங்குலமும் ஆகும். -வி.5, மு.1, அங்.20.

தஸம (10-ம்) தப்தேந்திரகத்து[3] உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஸப்த தஸ பாகமாகும் 7/10. உத்சேதம் ஆறு வில்லும் நாலரை அங்குலமும் ஆகும். -வி.6, அங்.4 1/2.

ஏகாதஸ(11-ம்) வக்ராந்தேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் அஷ்ட தஸ பாகம் 8/10, உத்ஸேதம் ஆறு வில்லும் இரண்டு முழமும் பதின்மூன்று அங்குலம் ஆகும். - வி. 6, மு.2, அங் 13. த்வாதஸ(12-ம்) அவக்ராந்தேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் நவ தஸ பாகம் 9/10, உத்ஸேதம் ஏழு வில்லும் இருபத்தொன்றரை அங்குலமும் ஆகும். - வி. 7, அங்.21 1/2.

த்ரயோதஸ (13-ம்) விக்ராந்தேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஒரு ஸாகரோப மாகும். ஸா.1, உத்ஸேதம் ஏழு வில்லும் மூன்று முழமும் ஆறு அங்குலமும் ஆகும். வி.7, மு.3, அங்.6 ஆயுஷ்யமும் சரீர உத்ஸேதமும் ச்ரேணிபந்தங்களிலும் ப்ரகீர்ணகங்களிலும் இவ்வண்ணமாகும்.

இரண்டாம் நரகம்

த்விதீய (2-ம்) நரகத்து ஜகன்ய ஆயுஷ்யம் ஸமயாதிக ஸாகரோபமும் உத்க்ருஷ்டம் மூன்று ஸாகரோபமும் ஸரீர உத்ஸேதம் பதினைந்து வில்லும் இரண்டு முழமும் பன்னிரண்டு அங்குலமும் ஆகும்.

அது எவ்வண்ணம் எனில்,

படலம் படலம்தோறும் ஸாகரோபமத்தை பதினோரு பாகம் பண்ணி அதில் இரண்டு பாகமும் (2/11) பெருக்கிக் கொள்க ஸரீரோத்ஸேதமும் ப்ரதம நரகத்து உத்க்ருஷ்டத்து மேல் இரண்டு முழமும் இருபது அங்குலமும் அங்குலத்தைப் பதினோரு பாகம் பண்ணி அதில் இரண்டு பாகமும் பெருக்கிக் கொள்க;

இவ் வண்ணம் ப்ரதம படல ஸ்ததகேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தை பதினோரு பாகம் பண்ணி அதில் இரண்டு பாகமும் - ஸா 1 2/11; சரீர உத்ஸேதம் எட்டு

பாவே: 1. த்ரிஸித என்பது தி.ஸா., பாடம்

வில்லும் இரண்டு முழமும் இரண்டு அங்குலமும் ஒரு அங்குலத்தைப் பதினோரு பாகம் பண்ணி அதில் இரண்டு பாகமும் ஆகும். வி. 8, மு. 2, அங் 2 2/11.

த்விதீய (2.ம்) படல ஸ்தநகேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தை பதினோரு பாகம் பண்ணி அதில் நாலு பாகமும் ஸா - 1 4/11, ஸரீர உத்ஸேதம் ஒன்பது வில்லும் இருபத்திரண்டு அங்குலமும் ஒரு அங்குலத்தை பதினோரு பாகம் பண்ணி அதில் நாலு பாகமும் ஆகும். - வி. 9, அங். 22 4/11.

த்ரிதீய (3-ம்) வனகேந்திரகத்துக்கு உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தை பதினோரு பாகம் பண்ணி அதில் ஆறு பாகமும் ஸா. 1 6/11; ஸரீர உத்ஸேதம் ஒன்பது வில்லும் மூன்று முழமும் பதினெட்டு அங்குலமும் ஒரு அங்குலத்தை பதினோரு பாகத்தில் ஆறு பாகமும் - வி. 9, மு. 3, அங் 18 6/11.

சதுர்த்த (4-ம்) மநகேந்திரகத்துக்கு உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தை பதினோரு பாகத்தில் எட்டு பாகமும் ஸா 1 8/11, ஸரீர உத்ஸேதம் பத்து வில்லும் இரண்டு முழமும் பதினாலங்குலமும் ஒரு அங்குலத்தை பதினோரு பாகத்தில் எட்டு பாகமும் ஆகும். வி. 10, மு. 2, அங் 14 8/11.

பஞ்சம (5-ம்) காடகேந்திரகத்தில்[1] உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் பதினோரு பாகத்தில் பத்து பாகமும் ஆகும். ஸா 1 10/11,. ஸரீர உத்ஸேதம் பதினோரு வில்லும் ஒரு முழமும் பத்து அங்குலமும் ஒரங்குலம் பதினோரு பாகத்தில் பத்து பாகமும் ஆகும். வி. 11, மு. 1, அங் 10 10/11.

ஷஷ்டம (6-ம்) ஸங்காடகேந்திரகத்து[2] உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் இரண்டு ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் பதினோரு பாகத்தில் ஒரு பாகமும் ஸா 2 1/11, ஸரீர உத்ஸேதம் பன்னிரண்டு வில்லும் ஏழு அங்குலமும் ஒரங்குலத்தை பதினோரு பாகத்தில் ஒரு பாகமமும் ஆகும். வி. 12, அங் 7 1/11.

ஸப்தம (7-ம்) ஜிஹ்வேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் இரண்டு ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தை பதினோரு பாகத்தில் மூன்று பாகமும் ஸா 2 3/11, ஸரீர உத்ஸேதம் பன்னிரண்டு வில்லும் மூன்று முழமும் மூன்று அங்குலமும் ஒரங்குலத்தில் பதினோரு பாகத்தில் மூன்று பாகமும் ஆகும். - வி. 12, மு.3, அங் 3 3/11.

அஷ்டம (8-ம்) ஜிஹ்விகா இந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் இரண்டு ஸாகரோபமும் ஒரு ஸாகரோபமத்தில் பதினோரு பாகத்தில் ஐந்து பாகமும் - ஸா 2 5/11. ஸரீர உத்ஸேதம் பதிமூன்று வில்லும் ஒரு முழமும் இருபத்து மூன்று அங்குலமும் ஒரு அங்குலத்தில் பதினோரு பாகத்தில் ஐந்து பாகமும் ஆகும். வி.13, மு. 1, அங் 23 5/11.

பா.வே. 1 கடேந்திரகம் தி.ஸா மூலம் 2. கடிகேந்திரகம் தி.ஸா மூலம்

நவம லோலகேந்திரகத்து[1] உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் இரண்டு ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் பதினோரு பாகத்திலே ஏழு பாகமும் - ஸா 2 7/11, ஸரீர உத்ஸேதம் பதினாலு வில்லும் பத்தொன்பது அங்குலமும் ஒரு அங்குலத்தில் பதினோரு பாகத்தில் ஏழு பாகமும் ஆகும். வி. 14, அங் 19 7/11.[25]

தஸம (10-ம்) [26] லோலுபகேந்திரகத்து[2] உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் இரண்டு ஸாகரோபமமும் ஒரு ஸாகபோரமத்தில் பதினோரு பாகத்தில் ஒன்பது பாகமும் - ஸா 2 9/11. ஸரீர உத்ஸேதம் பதினாலு வில்லும் மூன்று முழமும் பதினைந்து அங்குலமும் ஓரங்குலத்தில் பதினோரு பாகத்தில் ஒன்பது பாகமும் ஆகும். - வி. 14, மு. 3, அங் 159/11.

ஏகாதஸ (11-ம்) ஸ்தான லோலகேந்திரகத்து[3] உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் மூன்று ஸாகரோபமமும்-ஸா.3; ஸரீர உத்ஸேதம் பதினைந்து வில்லும் இரண்டு முழமும் பன்னிரண்டு அங்குலமும் ஆகும். வி.15, மு. 2, அங் - 12.

இவைகளில் ச்ரேணிபந்தங்களிலும் ப்ரகீர்ணகங்களிலும் இ வண்ணமாகும்.

மூன்றாம் நரகம் :

த்ரதீய (3-ம்) நரத்தில் ஆயுஷ்யம் ஜகன்யம் ஸமயாதிக த்ரீ(3) ஸாகரோபமம், உத்க்ருஷ்டம் ஸப்த(7) ஸாகரோபமமும் ஸரீர உத்ஸேதம் முப்பத்தோரு வில்லும் ஒரு முழமும் ஆகும்.

அதெவ்வண்ண மெனில், படலம் படலந்தோறும் ஆயுஷ்யத்துக்கு ஒரு ஸாகரோபமம் ஒன்பது பாகத்தில் நாலு பாகமும் (4/9) ஸரீர உத்ஸேதம் ஒரு வில்லும் இரண்டு முழமும் இருபத்திரண்டு அங்குலமும் ஓரங்குலத்தில் மூன்று பாகத்தில் இரண்டு பாகமும் பெருக்கிப் போக ப்ரதம தப்தேகதீரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் த்ரீ ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஒன்பது பாகத்தில் நாலு பாகும் ஸா - 3 4/9, ஸரீர உத்ஸேதம் பதினேழு வில்லும் ஒரு முழமும் பத்தங்குலமும் ஒரு அங்குலத்தில் மூன்று பாகத்தில் இரண்டு பாகமும் ஆகும். வி - 17. மு. 1, அங் 10 2/3.

---

25 பா.வே : 1 லோலிகேந்திரகம் தி. ஸா மூலம்.
26 பா. வே.: 2.லோல வத்த தி.ஸா.மூலம், லோலய தி.ப.மூலம்;
3 ஸ்தனலோலா தி.ஸா. மூலம், ஸ்தனலோலுக தி.ப.மூலம்.

த்விதிய (2-ம்) தமிதேந்த்ரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் த்ரீ ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஒன்பது பாகத்தில் எட்டு பாகமும் - ஸா - 3 8/9 ஸரீர உத்ஸேதம் பத்தொன்பது வில்லும் ஒன்பது அங்குலமும் ஓரங்குலத்தில் மூன்று பாகத்தில் ஒரு பாகமும் ஆகும் - வி. 19, அங் 9 1/3.

த்ரிதீய (3-ம்) தபநேந்த்ரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் சது: ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஒன்பது பாகத்தில் மூன்று பாகமும் ஸா - 4 3/9; ஸரீர உத்ஸேதம் இருபது வில்லும் மூன்று முழமும் எட்டு அங்குலமும் ஆகும். வி.20, மு.3, அங்-8.

சதுர்த்த (4-ம்) தாபநேந் உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் சது; ஸாகரோபமமும். ஒரு ஸாகரோகமத்தில் ஒன்பது பாகத்தில் ஏழு பாகமும் –4 7/9, ஸரீர உத்ஸேதம் இருபத்திரண்டு வில்லும் இரண்டு முழமும் ஆறங்குலமும் ஓரங்குலத்தில் மூன்று பாகத்தில் இரண்டு பாகமும் ஆகும். வி. 22, மு. 2, அங். 6 2/3.

பஞ்சம (5-ம்) நிதாகேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் பஞ்ச ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஒன்பது பாகத்தில் இரண்டு பாகமும் ஸா - 5 2/9; ஸரீர உத்ஸேதம் இருபத்திநாலு வில்லும் ஒரு முழமும் ஐந்து அங்குலமும் ஒரு அங்குலத்தில் மூன்று பாகத்தில் ஒரு பாகமும் ஆகும். வி.24, மு.1, அங் 5 1/3.

ஷஷ்டம (6-ம்) ப்ரஜ்வலித இந்த்ரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் பஞ்ச ஸாகரோபமமும் ஒரு ஸாகரோப மத்தில் ஒன்பது பாகத்தில் ஆறு பாகமும் - ஸா - 5 6/9; ஸரீர உத்ஸேதம் இருபத்தாறு வில்லும் நாலங்குலமும் ஆகும். வி.26, அங் - 4.

ஸப்தம (7-ம்) உஜ்வலித இந்த்ரக்தது உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஷட் ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஒன்பது பாகத்தில் ஒரு பாகமும் - ஸா 6 1/9, ஸரீர உத்ஸேதம் இருபத்தேழு வில்லும் மூன்று முழமும் இரண்டு அங்குலமும் ஒரு அங்குலத்தில் மூன்று பாகத்தில் இரண்டு பாகமும் ஆகும். வி. 27, மு. 3, அங் 2- 2/3.

அஷ்டம (8-ம்) ஸஜ்வலித இந்த்ரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஷட் ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஒன்பது பாகத்தில் ஐந்து பாகமும் - ஸா. 6 5/9; ஸரீர உத்ஸேதம் இருபத்தொன்பது வில்லும் இரண்டு முழமும் ஓரங்குலமும் ஓரங்குலத்தில் மூன்று பாகத்தில் ஒரு பாகமும் ஆகும். வி. 29, மு.2. அங். 1 1/3.

நவம (9-ம்) ஸம்பரஜ்வலித இந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஸப்த ஸாகரோபமமும் - ஸா - 7, ஸரீர உத்ஸேதம் முப்பத்தோரு வில்லும் ஒரு முழமும் ஆகும். வி. 31, மு. 1.

இவைகளில் ச்ரேணிபந்தங்களிலும் ப்ரகீர்ணகங்களிலும் இவ் வண்ணமாகும்.

நான்காம் நரகம் :

சதுர்த்த (4-ம்) நரகத்தில் ஆயுஷ்யம் ஜகன்யம் ஸமயாதிக ஸப்த ஸாகரோபமமும் உத்க்ருஷ்டம் தஸ ஸாகரோபமும் ஸரீர உத்ஸேதம் அறுபத்திரண்டரை வில்லுமாகும்.

அது எவ்வண்ண மெனில்,

ஆயுஷ்யம் முன் சொன்னதற்கு மேல் படலம் படலந்தோறும் ஒரு ஸாகரோபமத்தை ஏழு பாகம் பண்ணி அதில் மூன்று பாகமும் பெருக்கிக்கொள்க; ஸரீர உத்ஸேதம் நாலு வில்லும் ஒரு முழமும் இருபது அங்குலமும் ஓரங்குலத்தை ஏழு பாகம் பண்ணி அதில் நாலு பாகமும் பெருக்கிக் கொள்க.

ப்ரதம ஆரேந்த்ரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஸப்த ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஏழு பாகத்தில் மூன்று பாகமும் - ஸா. 7 3/7; ஸரீர உத்ஸேதம் முப்பத்தைந்து வில்லும் இரண்டு முழமும் இருபது அங்குலமும் ஓரங்குலத்தில் ஏழு பாகத்தில் நாலு பாகமும் ஆகும். வி.35, மு. 2, அங் 20 4/7.

த்விதீய (2-ம்) மாரேந்த்ரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யும் ஸப்த ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஏழு பாகத்தில் ஆறு பாகமும் ஸா 7 6/7; ஸரீர உத்ஸேதம் நாற்பது வில்லும் பதினேழு அங்குலமும் ஒரு அங்குலத்தில் ஏழு பாகத்தில் ஒரு பாகமும் ஆகும். வி. 40, அங். 171/7.

த்ரிதீய (3-ம்) தாரேந்த்ரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் அஷ்ட ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஏழு பாகத்தில் இரண்டு பாகமும் - ஸா 8 2/7; ஸரீர உத்ஸேதம் நாற்பத்தி நாலு வில்லும் இரண்டு முழமும் பதிமூன்றங்குலமும் ஓரங்குலத்தில் ஏழு பாகத்தில் ஐந்து பாகமும் ஆகும். வி.44, மு.2, அங்.13 5/7.

சதுர்த்த (4-ம்) ஸச்சேந்த்ரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் அஷ்ட ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஏழு பாகத்தில் ஐந்து பாகமும் ஸா-8 5/7; ஸரீர உத்ஸேதம் நாற்பத்தொன்பது வில்லும் பத்தங்குலமும்

ஒரு அங்குலத்தில் ஏழு பாகத்தில் ஆறு பாகமும் ஆகும். வி. 53, மு.2 அங். 6 6/7

ஷஷ்டம காடேந்திரகத்துக்கு உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் நவ ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஏழு பாகத்தில் நாலு பாகமும் ஸா– 9 4/7; ஸரீர உத்ஸேதம் ஐம்பத்தெட்டு வில்லும் மூன்றங்குலமும் ஒரு அங்குலத்தில் ஏழு பாகத்தில் மூன்று பாகமும் ஆகும். வி. 58, அங். 3 3/7.

ஸப்தம (7-ம்) கடாகடேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் தஸ ஸாகரோபமம் - ஸா.10; ஸரீர உத்ஸேதம் அறுபத்திரண்டு வில்லும் இரண்டு முழமும் ஆகும். வி.62, மு. 2.

ஆயுஷ்யமும் ஸரீர உத்ஸேதமும் ச்ரேணி பந்தங்களிலும் ப்ரகீர்ணகங்களிலும் இவ் வண்ணமாகும்.

ஐந்தாம் நரகம்

பஞ்சம (5-ம்) நரகத்து ஜகன்ய ஆயுஷ்யம் ஸமயாதிக தஸ ஸாகரோபமமும் உத்க்ருஷ்டம் ஸப்த தஸ ஸாகரோபமமும் ஸரீர உத்ஸேதம் நூற்றிருபத்தைந்து வில்லுமாகும்.

அது எவ்வண்ணம் எனில், ஆயுஷ்யம் முன் சொன்னதுக்கு மேல் படலம் படலந்தோறும் ஒரு ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஐந்து பாகம் பண்ணி அதில் இரண்டு பாகமும் பெருக்கிக் கொள்க. ஸரீர உத்ஸேதமும் பன்னிரெண்டு வில்லும் இரண்டு முழமும் பெருக்கிக் கொள்க.

ப்ரதம தமகேந்த்ரகத்து உத்க்ருஷ்டம் ஆயுஷ்யம் ஏகாதஸ ஸாகரோபமும் ஒரு ஸாகரோமத்தில் ஐந்து பாகத்தில் இரண்டு பாகமும் - ஸா 11 2/5; ஸரீர உத்ஸேதம் எழுபத்தைந்து வில்லுமாகும். வி.75.

த்விதிய (2 ம்) ப்ரமகேந்திரகத்து உத்க்ருஷ்டம் ஆயுஷ்யம் த்வாதஸ ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஐந்து பாகத்தில் நாலு பாகமும் - ஸா 12 4/5; ஸரீர உத்ஸேதம் என்பதேழு வில்லும் இரண்டு முழமும் ஆகும். வி. 87, மு.2

த்ரதிய (3 ம்) ஜஷகேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் சதுர்தஸ ஸாகரோபமும் ஒரு ஸாகரோபமத்தில் ஐந்து பாகத்தில் ஒரு பாகமும் - ஸா 14 1/5; ஸரீர உத்ஸேதம் நூறு வில்லுமாகும். வி. 100.

சதுர்த்த (4-ம்) அந்தகேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் பஞ்சதஸ ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமத்தில் ஐந்து பாகத்தில் மூன்று பாகமும் - ஸா 15 3/5; ஸரீர உத்ஸேதம் நூற்றி ஒருபத்திரண்டு வில்லும் இரண்டு முழமும் ஆகும் வி. 112, மு.2

பஞ்சம (5-ம்) தமிஸ்ரகேந்திரகத்து[1] உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஸப்ததஸ ஸாகரோபமம் ஸா 17 ஸரீர உத்ஸேதம் நூற்றிருபத்தைந்து வில்லாகும். வி. 125

ச்ரேணிபந்தங்களியம் ப்ரகீர்ணகங்களிலும் இவ் வண்ணமாகும்.

ஆறாம் நரகம்

ஷஷ்டம நரகத்து ஜகன்ய ஆயுஷ்யம் ஸமயாதிக ஸப்ததஸ ஸாகரோபமம்; உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் த்வாவிம்ஸதி ஸாகரோபமமும் ஸரீர உத்ஸேதம் 250 வில்லுமாகும்.

அது எவ்வண்ண மெனில், (முன்சொன்ன) ஆயுஷ்யத்துக்கு மேல் ஒரு ஸாகரோபமும் ஒரு ஸாகரோபம த்வித்ரி (2/3) பாகமும் பெருக்கிக் கொள்க. ஸரீர உத்ஸேதம் முன் சொன்னதுக்கு மேல் நூற்பத்தொரு வில்லும் இரண்டு முழமும் பதினாறு அங்குலமும் பெருக்கிக் கொள்க.

ப்ரதம ஹிமகேந்திரகத்து ஜகன்ய ஆயுஷ்யம் ஸமயாதிக ஸப்ததஸ (17) ஸாகரோபமமும் உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் அஷ்டாதஸ ஸாகரோபமும் ஒரு ஸாகரோபமம் மூன்று பாகத்தில் இரண்டு பாகமும் - ஸா 18 2/3; ஸரீர உத்ஸேதம் நூற்றி அறுபத்தாறு வில்லும் இரண்டு முழமும் பதினாறு அங்குலமாகும். வி. 166, மு.2, அங். 16.

த்விதிய (2-ம்) தர்தலகேந்திரகத்து[1] உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் விம்ஸதி ஸாகரோபமமும் ஒரு ஸாகரோபமம் மூன்று பாகத்தில் ஒரு பாகமும் ஸா 20 1/3 ஸரீர உத்ஸேதம் இரு நூற்றெட்டு வில்லும், ஒரு முழமும் எட்டங்குலமும் ஆகும். வி. 208, மு.1 அங்.8.

த்ரதிய (3- ம்) லல்லகேந்திரகத்து உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் த்வாவிம்ஸதி ஸாகரோபமமும் - ஸா 22; ஸரீர உத்ஸேதம் இருநூற்றம்பது வில்லுமாகும். வி. 250

பாவே : 1 திமிஸ்ர - தி.ஸா. மூலம்

ஏழாம் நரகம்:

ஸப்தம (7-ம்) நரகத்து ஜகன்ய ஆயுஷ்யம் ஸமயாதிக த்வாவிம்ஸதி (22) ஸாகரோபமமும் உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் த்ரயத்ரிம்ஸத் ஸாகரோபமமும்-ஸா 33; சரீர உத்ஸேதம் பஞ்சஸத தனுவும் ஆகும். வி.500.

ச்ரேணி பந்தங்களிலும் இவ்வண்ணமாகும்.

நரகர் துள்ளி விழுதல்

மற்றும் நரகர் எழுந்து விழுகிறது.

ப்ரதம நரகத்தில் எழுந்து விழுகிறது ஏழே முக்காலே மாகாணி[1] யோஜனையாகும் 7 13/16;

த்விதிய நரகத்தில் எழுந்து விழுகிறது பதினைந்தரையை அரைக்கால் யோஜனையாகும் - 15 10/16;

த்ரீதிய நரகத்தில் எழுந்து விழுகிறது முப்பத்தொன்றே கால் யோஜனையாகும் 31 1/4;

சதுர்த்த நரகத்தில் எழுந்து விழுகிறது அறுபத்திரண்டரை யோஜனையாகும். 62 1/2;

பஞ்சம நரகத்தில் எழுந்து விழுகிறது நூற்றி இருபத்தைந்து யோஜனை யாகும். 125;

ஷஷ்டம நரகத்தில் எழுந்து விழுகிறது இரு நூற்றைம்பது யோஜனை யாகும். 250;

ஸப்தம நரகத்தில் எழுந்து விழுகிறது ஐநூறு யோஜனை யாகும் 500[27]

---

27 7 13/16 ஏழு யோஜனையும் 3 1/4 கோசமும், 15 10/16 பதினைந்து யோஜனையும் 2 1/2 கோசமும்; 31 1/4 - 31 யோஜனையும்; 1 கோசமும் 62 1/2 யோஜனையும் 2 கோசமும்; நரகர் பீறப்பிடத்திலிருந்து கீழே ஆயுதங்களின் மேல் விழுந்து துள்ளி எழும் உயரம் இங்கே கூறப்பட்டுள்ளது.

பா.வே. 1. பா.வே. 1 ஏழே முக்காலே வீதம் (பார்க்க மேபு. 940,

நரகர் அவதி ஞான அளவு

அவதி க்ஷேத்ர ப்ரமாணம்:

ப்ரதம நரகத்தில் நாலு குரோச மாகும் - 4

த்விதீய நரகத்தில் மூணரை குரோச மாகும் 3 1/2

த்ரிதீய நரகத்தில் மூன்று குரோச மாகும் 3

சதுர்த்த நரகத்தில் இரண்டரை குரோச மாகும் 2 1/2

பஞ்சம நரகத்தில் இரண்டு குரோச மாகும் 2

ஷஷ்டம நரகத்தில் ஒண்ணரை குரோசமாகும் 1 1/2

ஸப்தம நரகத்தில் ஒரு குரோச மாகும் 1

லேஸ்யை

லேஸ்யைகள் ஏழு நரகங்களிலும் ஸரீர வர்ணம் க்ருஷ்ண லேஸ்யை ஆகும்.

பாவ லேஸ்யை ப்ரதம, த்விதீய த்ரிதிய (1,2,3) நரகங்களில் க்ரமத்னால் காபோத லேஸ்யையின் ஜகன்யம் மத்யமம் உத்க்ரஷ்டமும் த்ரீ சது பஞ்சம (3.4,5) நரகங்களில் நீல லேஸ்யையின் ஜகன்ய மத்யம உத்க்ருஷ்டங்களும், பஞ்ச ஷஷ்ட ஸப்தம (5,6,7) நரகங்களில் க்ருஷ்ண லேஸ்யை பரிணாமத்து ஜகன்ய மத்யம உத்க்ருஷ்டங்களும் ஆகும்.

கீழ் கீழ் பலங்களும் ஜீவ குலமும் அவதியும் குறைந்து ஆயுஷ்யம் சங்க்லேஸம் சரீரம் துக்கம் அதிகமும் ஆகும்.[28]

பிறப்பு இறப்பு இல்லாக் காலம்

மற்றும் அந்த நரகங்களில் ஜனன மரணம் இல்லாதது ப்ரதமே(1) 24 முகூர்த்தம், த்வித்யே (2 ம்) திவஸம் 7, தரதீயே (3 ம்) பக்ஷம்

---

28 குரோசம் - கோசம்; க்ருஷ்ண லேஸ்யை - கருப்பு நிறம்; காபோத நீல க்ருஷ்ண மூன்றும் அசுப லேஸ்யைகள் பார்க்க ப.ஸா ப.210 இப்பகுதி அதிலிருந்து அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது.

1. சதுர்த்தே (4 ம்) மாஸம் 1 பஞ்சமே (5 ம்) மாஸம் 2, ஷஷ்டே (6 ம்) மாஸம் 4, ஸப்தமே (7ம்) மாஸம் 6 ஆகும் என்று அறிவது.

நரகில் பிறக்கும் எண்ணிக்கை :

நிரந்தரம் எத்தனை ப்காரம் பிறப்பர் எனில், ப்ரதம நரகம் தொடங்கி யதாக்ரமம் 8ம், 7ம், 6ம், 5ம் 4 ம், 3 ம் 2 ம் ப்ரகாரம் பிறப்பர்.[29]

நாரகர் எங்கு பிறப்பார் ?

அவ்வண்ணம் பிறந்து வழுவின நாரகர் நாரகரும் தேவரும் போகபூமிஜரு மாகிப் பிறவார். கர்மபூமியில் கர்பஜங்களான மனுஷ்யரும் திர்யக்கும் ஸம்ஜியும் பர்யாப்திகருமாகிப் பிறப்பர்.

மஹாதம ப்ரபையின் குண ப்ரதபந்தர்க்கு மரணமில்லை. பிரதியானவர் மித்யாத்வத்தினை அடைகுவர் அந்த நரகத்தினின்றும் வந்தவர்கள் மனுஷ்ய கதியினை அடையார், திர்யக் கதியினையே அடைகுவர். அவர்கள் எங்கேனும் ஸம்யக்தவம் கைக் கொண்டாராகிலும் அணுவிரதத்தனை அடையார்.

ஷஷ்டம (6 ம்) நரகத்தினின்றும் போந்தவர் அணு வரதம் தரித்தாலும் மஹா வரதம் தரியார்.

---

29 அடிக்குறிப்பு : ஜனன மரணம் - பிறப்பு இறப்பு, ஒவ்வொரு நரகத்திலும் உயிர்கள் ஸமயந்தோறும் பிறந்து கொண்டும் இறந்து கொண்டும் இருக்கின்றன. என்றாலும் பிறப்பு இறப்பு இல்லாமை நேருமானால் ஒவ்வொரு நரகத்திலும் எத்தனை காலம் அப்படி உயிர்கள் பிறக்காமலும் இறக்காமலும் இருக்க முடியும் என்று இங்கே கூறப்பட்டுள்ளது, திவசம் - நாள் ; பக்ஷம் - 15 நாள்;
நிரந்தரம் - தொடர்ந்து ; ஒரு உயிர் நரகத்தில் மீண்டும் மீண்டும் தொடர்ந்து பிறந்தால் எத்தனை முறை பிறக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது. முதல் நரகில் 8 முறை பிறக்க முடியும் 2 ல் 7 முறையும் 3 ல் 6 முறையும் 4 ல் 5 முறையும் 5 ல் 4 முறையும் 6 ல் 3 முறையும் 7 ல் 2 முறையும் பிறக்க முடியும்.
ஒரு முறை நரகில் பிறந்த ஓர் உயிர் ஆயுள் முடிந்து இறந்த பிறகு மீண்டும் நரகப் பிறவியில் பிறக்காது விலங்குப் பிறவியிலோ மனிதப் பிறவியிலோதான் பிறக்கும். ஒரு மனம் உள்ள உயிராக இறந்து முதல் நரகில் பிறக்கிறது. அங்கு இறந்து மன உயிராகப் பிறக்கிறது; அங்கு இறந்து மனமில்லா உயிராக பிறக்கிறது பிறகு இறந்து முதல் நரகில் பிறக்கிறது. ஒரு முறை ஆயிற்று; இதுபோல எட்டு முறை பிறக்க முடியும் இடையே இடையே எடுக்கும் ஒரு பிறவியைக் கணக்கிடாமலே இந்தப் பிறவி எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது என்று அறிதல் வேண்டும் மற்ற நரகங்களுக்கும் இது போலக் கொள்க.

பஞ்சம (5 ம்) நரகத்தினின்றும் போந்தவர் மஹா வ்ரதம் தரித்தாலும் சரம தேஹதவ மாகார்.

சதுர்த்த (4ம்) நரகத்தினின்றும் போந்தவர் சரம தேஹராகிலும் தீர்த்தங்கரர் ஆகார்.[30]

ஒழிந்த மூன்று நரகத்தினின்றும் போந்தவர் தீர்த்தங்கரரும் ஆகுவர். எங்ஙனம் எனில் முன்னம் மனுஷ்ய பவத்து த்யாத்வ அனந்தானுபந்தி கஷாய பரிணாமங்களினால் நரக ஆயுஷ்யத்தினைக் கட்டிப் பின்பு ஸம்யக்த்வத்தினைக் கைக் கொண்டு அனேக ஸஹகாரி காரணங்களினால் தீர்த்தங்கர நாம புண்ய கர்ம பந்த யோக்ய பரிணாமங்களினால் பத்தாயுஷ்யர்[1] ஆகையினால் நரகத்தில் பிறந்து முன்னங் கட்டினது முன்னம் அனுபவித்து கழிந்து, பின்பு கட்டினபடியினால் அங்கு நின்றும் வந்து தீர்த்தங்கரத்வத்தினை அனுபவிப்பர். அந்த புண்ய ப்ரகிருதிக்கு ஸம்யக்த்வமே முக்கிய காரணம். ஆகையால், சாரித்ர முண்டாகிறதில்லை யாகிலும் ஆகும்.

மற்றும் நரகத்தினின்றும் வந்தவர்க்கு சக்ரவர்த்தித்வமும் பல தேவத்வமும் வாசுதேவத்வபம் ஆகாது. தத் பதவிகளுக்கு சாரித்ரம் முக்யமாகையினால் துர்தரமாகிய காய க்லேஸங்களினால் வைமானிக தேவராகிப் பிறந்து தத் பதவியினை எய்துவர். இவ்வண்ணம் நரக கதி ஸ்வரூபம் ஸம்க்ஷேபத்தினால் சொல்லப்பட்டது.

சக்ரவர்த்தித்வமும் —— ஆகாது - சக்கரவத்த்தி , பலதேவர், வாசுதேவர் ஆகார்; துர்தரமாகிய - மிகவும் கடினமான; காய் க்லேஸங்களினால் - உடலைத் துன்புறச் செய்வதால்; தத் - அந்த; ஸம்க்ஷேபத்தினால் -

---

30 போகபூமிஜர் - போகபூமியர்; கர்பஜங்கள் - கருவில் தோன்றுவன; ஸம்ஜி - மனமுடையன; மஹாதம.... மரணமில்லை - பொருள் விளங்கவில்லை ; ம்ரதியானவர் - இறந்தவர் ; சரம தேஹர் - கடைசி உடலையுடையவர் ; ஸஹகாரி காரணங்கள் - நிமித்த காரணங்கள்; பத்தாயுஷ்யர் - ஆயுளைக் கட்டிக்கொண்டவர்; பார்க்க ப.ஸா.பக் 210 - 211; அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது.

பா.வே: 1. தத் ப்ரக்ருதியினை பந்தித்து பத்தாயுஷ்யர்.

2. பவண லோகம்

இனி, பவணலோகம் சொல்லுதும்:

காதை

"பவணேஸு ஸத்தகோடி பாஹத்தரிலக்க ஹோந்தி ஜிநகேஹா/
பவணாமரிந்த மஹியா பவணஸமா தாணி வந்தாமி//

பவண லோகத்திலே ஏழு கோடி எழுபத்திரண்டு லக்ஷம் ஜிநபவனத்தில் இருக்கிற அக்ருத்ரிம சைத்யாலயங்களை நமஸ்காரம் பண்ணி பவண லோக ஸ்வரூபம் சொல்லுதும்[1]"

பவணர் வகை

பவணர் தஸ(10) விதம்: அஸுர குமாரர், நாக குமாரர், ஸ்வர்ண குமாரர், த்வீப குமாரர், உததி குமாரர், வித்யுத் குமாரர், ஸ்தனித குமாரர், திக் குமாரர், அக்நி குமாரர், வாத குமாரர், என.

இவர்கள் குமார வயஸ்ஸரும் குமார பூஷாவேஷாயு தாதிகளும் உடையர். ஆகையினால் குமாரர் என்று சொல்லப்படுகின்றனர்.

இந்திரர் பெயர்கள் :

ஒவ்வொரு குலத்துக்கு இரண்டு இரண்டு இந்த்ரர் ஆகும். சமர - வைரோசன, பூதானந்த - தரணானந்த, வேணு - வேணுதாரி, பூர்ண - வசிஷ்ட, ஜலபிரப - ஜலகாந்த, கோஷ-மஹா கோஷ, ஹரிஷேண - ஹரிகாந்த, அமிதகதி - அமித வாஹன, அக்நிசிகிமி- அக்நிவாஹன, வேலம்ப - ப்ரபஞ்ஜனர் என இந்திரர் பதின்மர்.

---

1 காதை - திரிலோக ஸார நூல்காதை 208, தச விதம் - பத்து குலப் பிரிவினர்த் அசுரர் நாகரம் பொன்னர் தீவர் எண், திசையர் தீயவர் உதகர் வாயுவர், விசையின் மின்னவர் மேகரர் ஆகும். அத், தச நிகாயமாம் பவணர் தாங்களே' மே.பு.1222; ஸ்தனித - மேகம்; குலத்துக்கு - பிரிவுக்கு ; குமார வயஸ்ஸரும் - இளைய வயதினர் உருவுடையர்; பூஷா அணிகள் அணிந்த; வேஷ - புனைவு ; ஆயுத - படைக்கலன்.

மகுட அடையாளங்கள்

இந்த தச(10) வித குலத்தார்க்கும் அடையாளம் நிரைநிரையே சொல்லுதும்.[2]

சூடாமணி, பணி, கருட, கஜ, மகர, வர்தமானக, வஜ்ர ஹரி, கலசம், அஸ்வங்கள் என இந்தப் பத்து அடையாளங்கள் மகுடத்தில் ஆகும். மற்றும் அடையாளங்கள் சைத்ய வ்ரக்ஷங்களும் துவஜங்களும் ஆகும்.

சைத்ய விருக்ஷம்

சைத்ய வ்ரக்ஷ பேதம் நிரைநிரையே சொல்லுதும்:

அஸ்வத்ய, ஸ்ப்தச்சதமி, சால்மலி, ஜம்பூ, வேதஸ, கதம்ப, ப்ரியங்கு, சிரீஷ, பலாச, ராஜவ்ருக்ஷம் என நாநாவித ரத்நமய மாகும். இந்த வ்ரக்ஷங்களில் அர்ஹத் பிம்பங்கள் இருக்கையினால் சைத்ய வ்ரக்ஷ மென்று அன்வர்த்த நாமமாயிற்று.

அது எப்படி எனில், சைத்ய வ்ரக்ஷ மூலத்தில் ப்ரத்யேகம் ப்ரதி திசை ப்ராதிஹார்ய ஸமன்விதங்களும் ப்ரயங்க ஸ்திதங்களும் ஸுரார்ச்சிதங்களுமாகிய ஜிந ப்ரதிமைகள் ஐந்தைந்தாகும்.

இந்த சைத்ய வ்ரக்ஷங்கள் ஜம்பூ வ்ரக்ஷத்து அர்த்த ப்ரமாண மாகும். இந்தப் பத்து வ்ரக்ஷத்திலும் ஜிந ப்ரதிமைகள் இருநூறாகும். இந்த ப்ரதிமைகள் அக்ரத்தில் ஒவ்வொரு மான ஸ்தம்பமாக இருநூறு பிம்பங்களுக்கும் இருநூறு மான ஸ்தம்ப மாகும். ஒவ்வொரு மான ஸ்தம்பத்தின் அக்ரத்தில் திசை ஒன்றுக்கு ஏழு ஜிந பிம்பங்களாக மான ஸ்தம்பங்களில் இருநூற்றுக்கும் நாலு திசையிலும் ஐயாயிரத்து அறுநூறு - *5600* ஜிந பிம்பங்கள் என்று கொள்க.

---

2 பணி - பாம்பு கஜ - யானை ; மகர - மீன்; வர்தமானக - ஸ்வஸ்திகம் ஹரி- சிங்கம்; அன்வம் - குதிரை ; வ்ருக்ஷம் - மரம்; என்றாலும் தாவரம் அன்று; மண் வடிவமானது (மண்ணுடலி) ; துவஜம் - கொடி; அஸ்வத்ய - அரசு; ஸப்தச்சத - ஏழிலை ; ஜம்பூ - நாவல் ; ஸால்மலி - இலவமரம் ; வேதஸ - எலுமிச்சை; கதம்ப - கடப்பம்; ப்ரியங்கு - பேரரச மரம் ; சிரிஷ - சீமைவாகை, பலாச - முருக்கு ; அன்வர்த்த நாமம் - காரணப் பெயர்; ஸமன்விதம் - கூடியது ப்ரயங்க ஸ்திதம் - அமர்ந்த நிலை ; ஸுரார்ச்சிதம் - தேவர் அர்ச்சிக்கின்ற ; அர்த்த - அரை ; அக்ரத்தில் - எதிரில்;

பவனங்கள் எண்ணிக்கை

பவணேந்த்ரர் இருபதின்மர்க்கும் பவன ஸங்க்யைச் சொல்லுதும்

தக்ஷிண சமரேந்தரர்க்கு 34,00,000 ; பூதாநேத்ரர்க்கு 44,00,000; வேணு தேவேந்த்ரர்க்கு 38,00.000; பூர்ணேந்த்ரர்க்கு 40,00,000; ஜல ப்ரப இந்த்ரர்க்கு 40,00,000; கோஷேந்த்ரர்க்கு 40,00,000 ஹரிஷேண இந்த்ரர்க்கு 40,00,000; அமிதகத்யேந்த்ரர்க்கு 40,00,000; அக்னிசிகேந்த்ரர்க்கு 40,00,000 ; வேலம்ப இந்த்ரர்க்கு 50,00,000.

உத்தர வைரோசன இந்தரர்க்கு 30,00,000; தரணானந்தேந்த்ரர்க்கு 40,00,000 ; வேணுதாரி இந்த்ரர்க்கு 34,00,000; வசிஷ்டேந்திரர்க்கு 36,00,000 ; ஜலகாந்தேந்த்ரர்க்கு 36,00,000 ; மஹா கோஷேந்த்ரர்க்கு 36,00,000; ஹரிகாந்தேந்திரர்க்கு 36,00,000; அமித வாஹனேந்ரர்க்கு 36,00,000; அக்னி வாஹனேந்த்ரர்க்கு 36,00,000 ப்ரபஞ்சனேந்த்ரர்க்கு 46,00,000 மாக இருபதின்மருக்கும் ஏழு கோட்டிக்கு மேல் எழுபத்திரண்டு நூறாயிரம் ஜிந பவனங்கள் ஆகும்.

பவனங்கள் தன்மை

இந்த பவனங்கள் எல்லாம் நல்ல சுகந்த புஷ்ப ஸோபித ரத்ன தரங்களும் ரத்ன பித்திகளும் நித்ய ப்ரகாசமும் ஸர்வேந்த்ரிய ஸுக காரணங்களும் ஸ்ரீகண்டாதி வஸ்து நிறைந்தது மாகக் கொள்க.[3]

அதில் தேவர்கள் ஐஸ்வர்யமும் அணிமாத்யஷ்ட குண ரித்தி விசிஷ்டர்களும் நாநா பூஷணங்களால் தீப்த சரீரரும் தங்களுக்கு இஷ்டமான போகங்கள் எல்லாம் அனுபவிக்கிற பேருமாவார்கள்.

இவர்கள் பூர்வ பவத்தில் பண்ணின தபஸினால் வந்த ஸாதா வேதனீய உதயம் என்று கொள்க.

---

3 : தரங்களும் - பூமிகளும் ; பித்திகளும் - சுவர்களும் ; ஸ்ரீகண்டாதி - சந்தன மணம் முதலான ; அணிமாத்யஷ்ட - அணிமா முதலான எட்டு ; அவை அணிமா, லகிமா பிராப்தி, பிராகாம்ய, ஈசித்வ, வசித்வ, காமரூபித்வ; விசிஷ்டர் - சிறப்புடையர்; பூஷணங்கள் - அணிவகைகள் ; தீப்த - ஒளியுடைய;

பவனங்கள் அமைப்பு :

இந்த பவனங்கள் ஸ்வரூபமும் பூமிக்குள்ளே இருக்கிற நிலவறை ஸமாநங்களும் ஸங்க்யாத கோடி யோஜனை ஜகந்யத்திலும் உத்க்ரஷ்டத்தில் அஸங்க்யாத கோடி யோஜனைகளுமாகிய சமசதுர விஸ்தாரமும் முந்நூறு யோஜனை உயரமுமாகும். அதில் ப்ரத்யேகம் மத்யத்தில் நூறு யோஜனை உயரமாகிய கூடங்களின் சிகரத்தில் சைத்தியாலங்களும் ஆகும்.

அந்த பவனங்கள் இருக்கும் இடம் சித்ரை[4] என்னும் இந்நிலத்தின் கீழ் 1,80,000 யோஜனை பாகுல்யத்தினால் வஜ்ர மென்னும் ப்ருத்வி இருக்கும். அது 16,000 யோஜனை கரபாகம், 84,000 யோஜனை பங்க பாகம், 80,000 யோஜனை அப்பஹுள மென்னும் மூன்று விதமாகும்.

அவற்றில், சித்தை என்னும் பூமிக்குக் கீழ வஜ்ர என்னும் ப்ரத்வியல் கர பாக, பங்க பாகமாகிய 1,00,000 யோஜனை பர்யந்தம் பூத ரென்றும் வ்யந்தார் பவநம் ஸகஸ்ர (1000) யோஜனை அளவாகும். பவந வாஸிகள் அல்பர்திகர் பவனங்கள் இரண்டாயிரம் யோஜனை அளவாகும். மகர்த்திகர் பவனங்கள் நாற்பத்திரண்டாயிரம் யோஜனை அளவாகும். மத்திம மகர்த்திகர் பவனம் ஒரு லக்ஷம் யோஜனை அளவாகும். அதன் கீழ் ஆயிரம் யோஜனைக்கு அப்பால் ஆதியாக நரக வாச மென்று கொள்க.

அசுர குமாரர் பவனங்கள் ரத்னா ப்ரபை கர பாகத்துக் கீழிருந்த பங்க பாகத்தளவாகும். பூத குலத்து வ்யந்தரரிலும் ஒழிந்த ஒன்பது குலத்துக்கும் பவனங்கள் கர பாகத்திலாகும்

பவணர் உட்பிரிவு

இதில் இருக்கும் இந்த்ராதி பேதமும் எப்படி எனில், இந்த்ரர் ப்ரதீந்தரர், லோகபாலர், த்ராயஸ்த்ரிம்சர், ஸாமாநிகர்,[1] அந்தர்[2] மத்ய பாஹ்ய பேத பரிஷத், பதாத்யாதி ஸப்தாநீகர், ப்ரகீர்ணாபியோக்யர், கில்விஷிகர் என தேவர்கள் ஆகுவர்.

---

4 நிலவறை - பூமிக்குள் அமைக்கப்படும் அறை ; சித்ரை - சித்ராபூமி
பா.வே. ஸாமாநிகர், ஆத்மரக்ஷகர் என்று இருத்தல் வேண்டும். 2. அதம
3. வந்தித்து

அவர்கள் இவ்விடத்து யார் போல்வர் எனில், அதிராஜனைப் போல்வர் அணிமாத்யஷ்ட குணைச்வர்யாதிகளினால் உத்க்ருஷ்டராகிய இந்த்ரர்; யுவராஜனைப் போல்வர் ப்ரதீந்தரர்; தந்த்ரபால ஸமானர் லோகபாலர்; ப்ரதானரும் புத்ரரும் போல்வர் த்ராயஸ்த்ரிம்சர் ; மந்த்ரி மஹத்தரர் பித்ரு குரு புரோஹிதாதி பந்து வர்கமும், களத்ரமும் போலும் ஸாமானிகர்; அங்க ரக்ஷகர் ஸமானர் ஆத்ம ரக்ஷகர்; வீட்டுக்கு வேலி போல ஸமீப வர்த்திகளாகி வர்தித்து[3] ஸேவிப்பர் பாரிஷ த்ரயர்; ஸேனை போல்வர் அநீகர்; புரஜனங்கள் போலும் ப்ரகீர்ணகர்; தாஸர் போலும் பலவும் வாஹனாதி கர்மங்களில் நிகழும் அபியோகயர்; புலையர் ஸமானர் கில்விஷர் ;

இந்த விகல்பம் பவனத்தும் கல்பத்தும் உள.

வ்யந்தரரிலும் ஜ்யோதிஷ்கரிலும் த்ராயத்ரிம்ச லோகபாலர் ஒழிந்த எண்வகை நிகாயங்கள் ஆகும்.[5]

தேவர்கள் எண்ணிக்கை :

இவர்கள் ஸங்க்யையும் இந்த்ரர் ஸமானம் ப்ரதீந்த்ரர் இருபதின்மர். ஒவ்வொரு இந்திரர்க்கும் பூர்வாதியாக சோமயம வருண குபேரர் என நால்வர் லோகபாலர்; த்ராய- த்ரிம்சர் முப்பத்து மூவர்.

ஸாமானிகர் சமரேந்த்ரனுக்கு *64,000* ; வைரோசனனுக்கு *60,000* ; பூதாநேந்தீரனுக்கு *56,000* ; ஒழிந்த இந்திரர் *17* பேருக்கும் தனித்தனி *50,000, 50,000* ஆகும்.

அங்கரக்ஷகர் : சமரேந்த்ரனுக்கு *2,56,000*; வைரோசனனுக்கு *2,40,000*; பூதாநேந்த்ரர்க்கு *2,24,000* ; ஒழிந்த இந்திரர் பதினேழு பேருக்கும் தனித்தனி *2,00.000, 2,00,000* ஆகும்.

---

5 இதில் இருக்கும் - பவண வாசிகளில் இருக்கும் ; 'இந்திரர் சாமானீகர், தாயத்திங்கர், பாரிடதர்; கந்தபாலர், காப்பர், ஆனிகர், கிணர், கில்விழியர்; இந்திராதிகளிற் பத்தும் அரசர்கள் குரவர் அன்றி; மந்திரர் சூழ்ந்திருப்போர் காஞ்சுகி ஆதி போல்வார்' மே.பு.1318 அதிராஜன் - அரசன்; அணி மாத்யஷ்ட - அணிமா முதலான எட்டு ; யுவராஜன் இளவரசன்; தந்த்ர பாலர் - படைத்தளபதி ; பிரதானர் - முதன்மையானவர்; பித்ரு - தந்தை ; களத்ரம் - மனைவி அங்கரக்ஷகர் - மெய்காவலர்; சமீப வர்த்திகள் - அண்மையில் இருப்போர் ; புரஜனங்கள் - ஊர் மக்கள் ; தாஸர் - பணி ஆள், இந்த விகல்பம் - இந்தப் பத்துப் பிரிவும் ; நிகாயம் - கூட்டம்.

அப்யந்தர பரீஷர்: சமரேந்த்ரனுக்கு 28,000 வைரோசனனுக்கு 26,000 ; பூதாநேந்த்ரனுக்கு 6000 ஒழிந்த இந்திரர் 17 பேருக்கும் தனித்தனி 4000, 4000 ஆகும்.

மத்யம பரீஷர்: சமரேந்த்ரனுக்கு 30,000; வைரோசனனுக்கு 28,000; பூதானேந்த்ரனுக்கு 8000; ஒழிந்த இந்த்ரர் 17 பேருக்கும் தனித்தனி 6000, 6000 ஆகும்.

பாஹ்ய பரீஷர்: சமரேந்த்ரனுக்கு 32,000; வைரோசனனுக்கு 30,000; பூதாநேத்த்ரனுக்கு 10,000; ஒழிந்த இந்திரர் 17 பேருக்கும் தனித்தனி 8000, 8000 ஆகும்.

அனீகர்: ஏழு விதம். மஹிஷாநீகர், துரகா நீகர், ரதாநீகர், கஜாநீகர், பதாநீகர், கந்தர்வாநீகர்; ந்ரத்யாநீகர் என, இவர்கள் ஸங்க்யை ஒவ்வொருவகை 81,28,000 மாக ஏழு வகையும் கூடினது ஐந்து கோடிக்கு மேலே 68,96,000 - இது சமரேந்திரனுக்கு ஆகும்.

வைரோசனனுக்கு ஐந்து கோடிக்கு மேல் 33,40,000; பூதாநேத்ரனுக்கு நாலு கோடிக்கு மேலே 97,84,000; ஒழிந்த இந்திரர் பதினேழு பேருக்கும் நாலு கோடிக்கு மேலே 44,50,000 ஆகும்.

மறைந்து போனவை

ப்ரகீர்ணகர் ஆபியோக்யர் கில்விஷர் என மூவருக்கும் ஸங்கியை இந்த க்ஷேத்திரத்தில் இந்த காலத்திலிருந்த 'த்ரிலோக ஸாரத்தில்' உபதேசம் நஷ்டம். 'லோக விபாகி' எனப்பட்ட சாஸ்த்திரத்திலும் இப்படியே. 'த்ரிலோக ப்ரக்ஜப்தி' என்னப்பட்ட சாஸ்த்ரத்தில் பவன தேவர்கள் அஸங்க்யாத மானபடியினாலே இப்போது எண்ணிக்கை சொன்ன பேர் குறைய நின்ற ராசி எல்லாம்

6 பூர்வாதியாக கிழக்கு முதலாக; வைரோசனன் முதலானவருக்கு ஒவ்வொரு வகை ஆனிகர் முறையே 76.20,000, 71,12,000, 63,50,000 ஆகும். இவற்றை ஏழால் பெருக்கிக் கொள்ள மேலுள்ள தொகை வரும். (பார்க்க அட்டவணை - 5)

குறைந்த இந்த மூவகையாரும் அஸங்க்யாத மென்று சொல்லப்பட்டது.

தேவியர் எண்ணிக்கை:

இப்பால், தேவியர் ஸங்க்யை சொல்லுதும்: அசுர குமாரர்க்கு தேவியர் 56,000. இதில் வல்லபையர் 16,000 மும், பட்ட தேவிமார் ஐந்து கூட என்று கொள்க. பட்ட தேவியர் ஐவரும் மூல சரீரம் கூட எண்ணாயிரம் விகுர்வணை சக்தியுடையர்.

நாகருக்குத்; தேவியர் 50,000. இதில், வல்லபையர் பதினாயிரமும் (10,000) பட்ட தேவியர் ஐந்தும் கூட என்று கொள்க. இவர்கள் ஐவரும் முன் சொன்னபடி எண்ணாயிரம் (8000) விகுர்வனா சக்தியுடையவர்.

ஸ்வர்ணருக்கு தேவியர் 44,000. இதில் வல்லலபையர் 4000மும் பட்ட தேவியர் ஐந்தும் கூட என்று கொள்க. இவர்கள் ஐவரும் முன் சொன்னபடி எண்ணாயிரம் விகுர்வணா சக்தியுடையவர்.

சேஷ ஏழு குலங்களுக்கும் தேவியர் 32,000; வல்லபையர் 2000 மும் பட்ட தேவியர் ஐந்தும் கூட என்று கொள்க. இவர்கள் ஐவரும் முன் சொன்னபடி 6000 விகுர்வணை சக்தி உடையவர்.

இச் சொல்லப்பட்ட குலங்களில் இந்திரர், ப்ரதீந்தீரர், லோகபாலர், த்ராயத்ரிம்சர், ஸாமானிகர் இவர்கள் ஐந்து பேருக்கும் தேவிமார் முன் சொன்னபடி ஸமான ஸங்க்யை ஆகும்.

அங்க ரக்ஷகர்க்கு தேவியர் நூறாகும் (100)

பாரிஷ த்ரயர் தேவியர் சொல்லுதும்:

அசுர குலத்துள் சமரனுக்கு அந்தபரீஷர்க்கு தேவியர் 250, மத்யம பரீஷர்க்கு 200, பாஹ்ய பரீஷர்க்கு 150 ம் ஆகும்.[8]

---

7 'த்ரிலோக ப்ரக்ஞப்தி' - இந்நூலிலும் உபதேசம் நஷ்டமாகி விட்டது என்றே வருகிறது. பார்க்க காதை 3/89; பட்ட தேவியர் இவர்கள் ஒவ்வொருவருக்கும் 8000 பரிவார தேவியர் உள்ளனர். இவர்கள் எண்ணிக்கையையும் உட்கொண்டே இங்கே கூட்டுத் தொகை சொல்லப்படுகிறது. விகுர்வணை - வேண்டிய உருவம் காட்டும்; ஆற்றல்; மூல உருவம் அழியாமலே இந்த வேற்றுருவம் காட்டப்படும்; 8000 வேற்றுருவம் காட்டக்கூடிய ஆற்றல் உடையவர்கள் இப்பட்ட தேவியர் ஒவ்வொருவரும்.

வைரோசனனுக்கு அந்த: பரீஷர்க்கு தேவியர் 300, மத்யம பரீஷர்க்கு 250 பாஹ்ய பரீஷர்க்கு 200 ம் ஆகும்.

நாக குலத்து இந்தரர்க்கு அந்த : பரீஷர்க்கு தேவியர் 200, மத்யம பரீஷர்க்கு தேவியர் 160, பாஹ்ய பரீஷர்க்கு 140 ம் ஆகும்.

ஸ்வர்ண குலத்து இந்த்ரர்க்கு அந்த: பரீஷர்க்கு தேவியர் 160, மத்யம பரீஷர்க்கு தேவியர் 140, பாஹ்ய பரீஷர்க்கு தேவியர் 120 ம் ஆகும்.

சேக்ஷ குலம் ஏழுக்கும் அந்த: பரீஷகர்க்கு தேவியர் 140, மத்ய பரீஷகர்க்கு தேவியர் 120, பாஹ்ய பரீஷகர்க்கு தேவியர் 100ம் ஆகும்.

சேநா மஹத்தர் ஸ்திரீயர் 100, சேநா தேவர்க்கு 50, ஸர்வ நிக்ருஷ்ட தேவர்களுக்கு 32 தேவியராகும்.

இந்த தேவியருடன் தேவர்கள் மனுஷ்யரைப் போல காய ப்ரவீசார சுகம் அனுபவிப்பர்.

பவணர் ஆயுள் காலம் :

இப்பால ஆயுஷ்ய க்ரமம் சொல்லுதும் :

பவணவாசியர்க்கும் முன் சொல்லப்பட்ட வ்யந்தரர்க்கும் ஸாமாந்யத்தில் ஜகன்ய உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் சொல்லுதும் : [9]

---

8 அந்த - மத்ய; பட்ட தேவியர் - இவர் ஒவ்வொருவருக்கும் பரிவார தேவியர் ஆயிரம் பேர் ஆகும்; ஸமான ஸங்கியை - ஒத்த எண்ணிக்கை ; சேநா மஹத்தர் ஏழு வகைப்பட்ட அனீக தேவர்களுள் முதன்மையான சேனைத் தலைவர் ; நிக்ருஷ்ட தேவர் - நீச்ச தேவர் ; காய ப்ரவீசாரம் - உடலுறவு; 'மேனிவைத் தீண்டல்' மேபு. 503.

9 உத்தர இந்திரர் - வடக்கு இந்திரர்; அவர்கள்; வைரோசனன், தரணானந்தன், வேணுதாரி, வசிஷ்டன், ஜலகாந்தன், மகாகோஷன், ஹரிகாந்தன், அமிதவாஹனன், அக்னிவாஹனன், ப்ரபஞ்சனன், தெற்கு இந்திரர்: சமரேந்திரன், பூதானந்தன், வேணு, பூர்ணன், ஜலப்ரபன், கோஷன், ஹரிஷேணன் அமிதகதி, அக்னிசிகி, வேலம்பன்; தெற்கு இந்திரரைவிட வடக்கு இந்திரர்க்கு ஆயுள் சற்று கூடுதல், ஸாத்ரஸ்ய விஸேஷனம் - காணப்படும் சிறப்புகள் ஒற்றுமை ; விக்ருதி - விகுர்வனை, ப்ரதீந்திராதி நால்வர் - பிரதி இந்திரன் உலோகபாலன், திராயதிரிம்சர், சாமானிகர், சத்ராதி - குடை முதலியன

அசுரர்க்கு உத்க்ரஷ்ட ஆயுஷ்யம் ஒரு கடல்; நாகர்க்கு மூன்று பல்லம்; ஸ்வர்ணர்க்கு இரண்டரை பல்லம்; த்வீபர்க்கு 'இரண்டு பல்லம்; ஸேஷ ஆறு குலத்தாருக்கும் ஒன்றரை ஒன்றரை பல்லமாகும்; வ்யந்தரர்க்கு ஒரு பல்லமாகும். இந்த ஆறு வகையாருக்கும் தனித்தனி ஜகன்ய ஆயுஷ்யம் 10,000 என்று கொள்க.

உத்தர இந்த்ரர்க்கு இப்போது சொல்லப்பட்ட ஆயுஷ்யத்தில் சற்று அதிகமாகக் கொள்க.

இந்த்ர, ப்ரதீந்த்ர, லோகபால, த்ராயத்ரிம்ச, ஸாமானீகர் என இவர்கள் ஐவருக்கும் சொல்லப்பட்ட ஆயுஷ்யம் சமான மென்று கொள்க.

வைபவ வேறுபாடுகள்

இந்த தேவர்களுக்கு ஸாத்ரஸ்ய விஸேஷனம் சொல்லுதும் : ஆயுஷ்யம், பரிவாரம், ரித்தி, விக்ருதி யாதி ப்ரதீந்த்ராதி நால்வருக்கும் தங்கள் தங்கள் இந்த்ரர்க்கு சமான மென்று கொள்க. சற்று விசேஷம் சத்ராதிகள் சற்று கொஞ்சங்களாகும்.

தேவியர் ஆயுள் :

அசுராதி இந்த்ர தேவியர்க்கு ஆயுஷ்ய ப்ரமாணம் சொல்லுதும்

அசுர குலத்து சமரேந்திரன் தேவியர்க்கு ஆயுஷ்யம் இரண்டரை பல்லம்; வைரோசனன் தேவியர்க்கு மூன்று பல்லம்; நாக தேவியர்க்கு பல்லத்தில் எட்டில் ஒரு பங்கு (ப 1/8) ஸ்வர்ண தேவியர்க்கு பூர்வ கோடி த்ரயம், ஸேஷ ஏழு குலத்தார் தேவியர்க்கும் வருஷ கோடி த்ரயம் ஆகும்.

பரிவார தேவர் ஆயுள்

அங்கரக்ஷர், ஸேநா மஹத்தர் ஆயுஷ்யம் சமரேந்திரனுக்கு ஒரு பல்லம்; வைரோசனனுக்கு ஸாதிக பல்லம்; நாகர்க்கு பூர்வ கோடி

---

10 பூர்வ கோடி த்ரயம் - மூன்று பூர்வகோடி; வருஷ கோடி த்ரயம் - மூன்று கோடி ஆண்டுகள், சமரேந்திரனுக்கு - சமரேந்திரனுக்கு உரியவர்கள்; பிறவற்றுக்கு இப்படியே பொருள் காண்க. (பார்க்க ப.ஸா. ப.89 - 89 பட்டியல்)

ஸ்வர்ணர்க்கு வருஷ கோடி; ஸேஷ குலத்தார் ஏழு வகைக்கும் ப்ரத்யேகம் வருஷம் லக்ஷம்.

அனீக வாஹன ஆபியோக்யா நாம தேவர்க்கு சமரேந்திரனுக்கு 1/2 பல்லம்; வைரோசனனுக்கு ஸாதிக 1/2 பல்லம்; நாகர்க்கு வருஷ கோடி; ஸ்வர்ணர்க்கு வருஷ லக்ஷம்; ஸேஷ ஏழு குலத்தாருக்கும் 50,000, 50,000 வருஷம் ஆகும்.

பரீஷ த்ரய தேவர் ஆயுஷ்யம் சமரனுக்கு அப்யந்தரருக்கு பல்லம் 2 1/2; மத்யமர்க்கு பல்லம் 2; பாஹ்யர்க்கு பல்லம் 1 1/2; வைரோசனனுக்கு அபயந்தர தேவர்கட்கு பல்லம் 3; மத்யமர்க்கு பல்லம் 2 1/2 ; பாஹ்யர்க்கு பல்லம் 2 ; நாகர்க்கு அபயந்தர தேவர்கட்கு பல்லத்தில் 1/8 ம் மத்யமர்க்கு பல்லத்தில் 1 /16; ம் பாஹ்யர்க்கு 1/32; பல்லமும்; ஸ்வர்ணருக்கு அப்யந்தர ; தேவர்க்கு பூர்வ கோடி 3, மத்யமர்க்கு பூர்வ கோடி 2, பாஹ்யர்க்கு பூர்வ கோடி 1; ஸேஷ ஏழு குலத்தார்க்கும் அப்யந்தர தேவர்க்கு வருஷ கோடி 3, மத்யமர்க்கு வருஷ கோடி 2, பாஹ்யர்க்கு வருஷ கோடி 1 (ஒன்றும்) ஆகும்.

உயிர்ப்பும் உணவும்:

உச்வாஸ க்ரமும் ஆஹார க்ரமும் சொல்லுதும்:

அஸுரர்க்கு 15 நாளைக்கு ஒருகால் உச்வாஸமும் ஆயிரம் வருஷத்துக்கு ஒருகால் ஆஹாரமும் நாககுமாரர் ஸ்வர்ணகுமாரர் த்வீபகுமாரர் இம் மூவர்க்கும் 12 1/2 முகூர்த்தத்துக்கு ஒருகால் உச்ஸ்வாஸமும் 12 1/2 நாளுக்கொருகால் ஆஹாரமும், உததிகுமார், வித்யுத் குமாரர், ஸ்தனித குமாரர் இம் மூவர்க்கும் பன்னிரண்டு முகூர்த்தத்திற்கு ஒருகால் உச்ஸ்வாஸமும், பன்னிரண்டு நாளைக்கு ஒருகால் ஆஹாரமும் ஆகும். திக்குமாரர் அக்னிகுமாரர் , வாதகுமாரர் இம் முவருக்கும் ஏழரை முகூர்த்தத்துக்கு ஒருகால் உச்வாஸமும் ஏழரை நாளைக்கொரு கால் ஆஹாரமும் ஆகும்.

உடல் அளவு

இனி சரீர உத்ஸேதம் சொல்லுதும்: அசுரர்க்கு 25 வில்லும், ஸேஷ ஒன்பது குலத்தார்க்கும் பத்து (10) வில்லுமாகும். வ்யந்தரர்க்கு பத்து வில்லும் ஜோதிஷ்கர்க்கு ஏழு வில்லுமாகும்.

மறு பிறவி

இவர்களுக்கு கத்யாகதிகளும் மனுஷ்ய கதியிலும் திர்யக் கதி பஞ்சேந்திரய ஜாதியிலும், ஏகேந்திரியத்தில் ப்ரதவி அப்பு

வனஸ்பதியுமாகிய காயங்களில் வந்து தோன்றுவர்.

இவ்வண்ணம் பவண லோகம் சம்க்ஷேபத்தினால் சொல்லப்பட்டது. அதோலோகம் முடிந்தது.

---

11 அடிக்குறிப்பு : உச்வாஸம் - மூச்சுவிடுதல் ; ஆஹாரம் - தேவர்களுக்கு மானஸ ஆஹாரம்; மனத்தில் எண்ணிய அளவில் அமிர்தமயமான ஆஹாரம் நெஞ்சில் கசியும் 'அமிர்து மனத்து உணர' மே.பு. 499 கத்யாகதி - எதிர்வரும் பிறப்பு;

3 மத்யம லோகம்

மத்யம லோக ஸ்வரூபம் சொல்லுதும்

மஹாமேரு மூலமே தொடங்கி அதன் சூளிகா அந்தமான நூறாயிரம் யோஜனை உத்ஸேத முடைத்தாகி, பூர்வாபரமும் தக்ஷிணோத்தரமும் ஸ்வயம்புரமண ஸமுத்ர பாஹ்ய வேதிகா வலய அவஸாநம் நின்ற ஏக (1) ரஜ்ஜு ப்ரமாணமும், ப்ராணிகளுக்கு வக்ர பரிணாமமும், ப்ரகடமான ஸன்னைகளும் முதலாகவுடைய நர த்ரியக் கதி காரணமும் அஸங்க்யாத த்வீப ஸமுத்திரங்களும் வ்யந்தர ஆவாஸங்களும் ஜ்யோதிர் விமானங்களும் முதலாக உடையது ஆகையினால் மத்யம லோகம் என்பது.

தீவுகளும் கடல்களும்

அந்த மத்யம லோகத்து நடுவாக நாபி போல் வ்ருத்தாகாரமும் ஸத குண ஸஹஸ்ர (1,00,000) யோஜனை விஷ்கம்பமும் உடைத்தாகி, ஆதித்ய பிம்ப ஆக்ருதி போல் இருந்தது ஜம்பூத்வீபம்.

இவ் வண்ணம் லக்ஷ யோஜனை விஸ்தாரமாகிய ஜம்பூ த்வீபமும் தத் த்விகுண விஸ்தாரமாகிய லவண ஸமுத்ரம், தாதகீஷண்ட த்வீபம், காளோதக ஸமுத்ரம், புஷ்கரவர த்வீபம், தத் சமுத்ரம், வாருணிவர த்வீபம், தத் ஸமுத்ரம், க்ஷீரவர த்வீபம் தத் ஸமுத்ரம், க்ருதவர த்வீபம், தத் ஸமுத்ரம், க்ஷௌரவர[1] க்ஷௌரவர சமுத்திரம்.த்வீபம் நந்தீஸ்வர த்வீபம், நந்தீஸ்வர ஸமுத்ரம், அருணவர த்வீபம், அருணவர ஸமுத்ரம், அருணபாஸ த்வீபம், அருணபாஸ ஸமுத்ரம், குண்டல வர த்வீபம், குண்டல வர சமுத்ரம், சங்கவர த்வீபம் தத் ஸமுத்ரம்; ருசகவர த்வீபம், தத் ஸமுத்ரம், புஜகர த்வீபம், தத் சமுத்ரம்; குசகவர த்வீபம், தத் சமத்ரம் க்ரௌஞ்சவர த்வீபம், தத் ஸமுத்ரம், என்னும் பதினாறு த்வீப ஸாகரங்களும் வலயாக்ரதியினால் சுற்றிவர இருந்தது.[13]

---

12 அடிக்குறிப்பு : சூளிகா - முடி, சிகரம்; பாஹ்ய வேதிகா - புற கரை; ஸன்னை - இச்சை; அவை நான்கு : ஆஹாரம் , பயம், மைதுனம், பரிக்ரஹம் ; வருத்தாசுரம் - வட்ட வடிவம்; விஷ்கம்பம் - விட்டம் ஆதித்ய சூரியன் ; ஆக்ருதி - வடிவு; த்விகுண - இருமடங்கு; தீவும் கடலும் தனக்கு முந்தைய தீவு கடலைவிட இருமடங்கு அதிக விஸ்தாரம் உடையது, புஷ்கரவரம் முதலாக தீவின் பெயரே கடலுக்கும் ஆகும், தத் - அதன்

13 அடிக்குறிப்பு : அந்த்யத்தில் - முடிவில், கடைசி 16 தீவு மற்றும் கடல்களின் பெயர்கள் இவை, தீவுக்குள்ள பெயரே அதனைச் சுற்றியுள்ள கடலுக்கும்

அதனுக்கு அப்பால், அஸங்க்யாத த்வீப ஸாகரங்களும் சென்று, அந்த்யத்தில் பதினாறு த்வீப ஸாகரங்கள் பெயர் சொல்லுதும்: மனசிலா, ஹரிதாளா, ஸிந்தூரரா, ச்யாமக,[1] அஞ்ஜன உங்குளிக[2], ரூப்யவர, ஸ்வர்ணவர, வஜ்ரவர, வைடூர்யவர, நாக வர, பூதவர, யக்ஷவர, தேவவர, அஹிந்த்ரவர, ஸ்வயம்பூரமணம் என இவை த்வீபங்களுக்கும் ஸமுத்ரங்களுக்கும் பெயராகும்.

இந்த அஸங்க்யாத த்வீப ஸாகரங்களுக்கு கணனையாவது தனித்தனி இருபத்தைந்து கோடாகோடி உத்தார பல்யோபம ரோமாணம் ப்ரமாணம் ஆகும்.

இந்த த்வீப ஸமுத்ரங்களுக்கு விஸ்தாரமும் இருக்கும் ஸ்வரூபமும் சொல்லுதும்:

அவற்றுள், மத்யம மாகியது ஜம்பூ த்வீபம் என்பது வ்ருத்த ஆகாரமாகி, மஹாமேரு பர்வதத்தை தனக்கு நாபியாக வுடைத்தாகி, நூறாயிரம் யோஜனையாகிய ஆயாம வ்யாயாம வ்யாஸத்தை யுடைத்தாகி, சுற்று, பரிதி, 3,16,227 யோஜனையும் மூன்று காதமும் நூற்றிருபத்தெட்டு தண்டமும் சற்று அதிகமான பதின்மூன்றரை அங்குலமுமாகிய பரிதியுடைத்தாகிய ஜம்பூ த்வீபம்.

இப் ப்ரமாணமாகிய கண்டங்கள் லவண ஸமுத்ரத்தில் வலய கண்டங்கள் இருபத்து நாலு (24) தாதகீ ஷண்டத்தில் வலய கண்டங்கள் 144, காளோதக சமுத்ரத்தில் வலய கண்டங்கள் 672; புஷ்கரார்த்தத்தில் வளைய கண்டங்கள் 1184 - மாக மானுஷோத்ர பர்வதத்துக்குட்பட்ட

ஆகும். கடைசியில் இருப்பது ஸ்வயம்பூரமண கடலாகும். கணனை - எண்ணிக்கை; 'விமானத்தின் கணனை வேண்டின்' - மே.பு.1315; தனித்தனி - திவுக்கும் கடலுக்கும் தனித்தனியாக; ரோமணம் - ரோமம், மயிர், கோடாகோடி, கோடி மடங்கு கோடி, பத்து கோடாகோடி உத்தார பல்யம் ஒரு உத்தார கடல் ; அப்படி இரண்டரை கடலுக்கு எத்தனை ரோமம் கணக்கிடப்படுமோ அத்தனை தீவுகள் அத்தனை கடல்கள் உள்ளன என்பது கருத்து நாபியாக - நடுவாக, ஆயாம வ்யாயாம - நீள அகலம், காதம் - கோசம் ; தண்டம் வில்; 'மந்தர நடுவதாக' - மே.பு.224 'இருபத்தைந்து கோடாகோடி யாம் உத்தார பல்லங்கட்கு, உரிய ரோமம் எண்ணவாம் தெரியும் தீபம் சாகரம்' மே.பு.1248 தீவுகளும் கடல்களும் சேர்ந்து இந்த எண்ணிக்கை; ஆனால் இந்நூலாசிரியர் தனித்தனி என்கிறார்.

பா.வே.1 1. ச்யாமவர 2. ஹிங்குலிகவர தி.ஸா.மூலம்.

இரண்டரை த்வீபத்திலும் இரண்டு சமுத்ரத்திலும் ஜம்பூ த்வீப சமானமான கண்டங்கள் 2025 என்று அறிவது.

இவ்வண்ணம் ஒழிந்த த்வீபங்களுக்கும் சமுத்ரங் களுக்கும் ஸ்வயம்பூரமண சமுத்ர பர்யந்தம் ஜம்பூத்வீப சமான கண்டங்கள் ஸங்கியை அறிந்து கொள்வது.
அது எவ்வண்ணம் எனில், அறியும் வகை சொல்லுதும்.

ஜம்பூ த்வீபம் ஒரு லக்ஷத்திற்கு ஒரு லக்ஷம் ஒவ்வொன்று என்று அறிவது. லவண சமுத்ரத்திற்கு இரட்டிப்பு இரண்டு லக்ஷமாக இரு பார்ஸ்வத்திற்கும் நாலு லக்ஷமும் நடுவு நின்ற ஜம்பூத்வீபம் ஒன்றும் கூட 5; ஐந்துக்கு ஐந்து மாற 25 (5X5); இதில் ஜம்பூத்வீபம் ஒன்று போக நின்றது லவண சமுத்திரத்துக்கு 24.

தாதகீஷண்டம் பர்ரஸ்வம் ஒன்றுக்கு நாலாக இரு பார்ஸ்வத்துக்கும் 8. முன் சொன்ன ஐந்தும் கூட 13 க்கு 13 மாற 169. ஜம்பூர்த்வீபம் லவண ஸமுத்ரம் 25 போக நின்ற தாதகீஷண்டம் 144.[14]

காளோதக ஸமுத்ரம் பார்ஸ்வம் ஒன்றுக்கு 8 ஆக இரு பார்ஸவத்துக்கும் 16. முன் சொன்ன 13 ம் கூட 29 க்கு 29 மாற 841 க்கு முன் சொன்ன மூன்று வகைக்கு 169 போக காளோதக சமுத்ரத்திறகு நின்ற கண்டம் 672.

புஷ்கரவர த்வீபத்திற்கு பார்ஸ்வம் ஒன்றுக்கு 8 ஆக இரு பார்ஸ்வத்துக்கும் 16. முன் சொன்ன 29 ம் கூட 45க்கு 45 மாற 2025 க்கு முன் சொன்ன நாலு வகைக்கும் 841 போக புஷ்கரவர த்வீபத்திற்கு நின்ற கண்டங்கள் 1184 என்று அறிவது.

இவ்வண்ணம் ஒழிந்த த்வீப ஸமுத்ரங்களிலே எத்தை அபேக்ஷித்துச் சொல்ல வேணும் அதற்கு எல்லாம் அறிந்து கொள்ளவும்.

---

14 சமானமான கண்டங்கள் - ஜம்பூ தீவைச் சுற்றி இருக்கும் தீவு, கடல்களை ஜம்பூ தீவு விஸ்தார அளவுள்ள துண்டுகளாகப் பிரித்தால் ஒவ்வொன்றும் ஜம்பூ தீவு போல எத்தனை துண்டுகள் (மடங்குகள்) இருக்கும் என்று இங்கே கூறப்பட்டுள்ளது. ஒரு லாஷம் - ஒன்று என்று வைத்துக்கொண்டு கணக்கிடப்பட்டுள்ளதைக் காண்க. மாற - பெருக்க போக - கழிக்க பார்ஸவம் - பக்கம் புஷ்கரவர த்வீபத்திற்கு - மானுஷோத்ர மலை வரை கணக்கிடப்பட்டுள்ளது.

கடல்களின் நீர் சுவை:

இப்போ சொல்லப்பட்ட ஸமுத்ரங்களில் ரஸ ஸ்வாது ஸ்வரூபம் சொல்லுதும்.

லவண ஸமுத்ரம், வாருணிவர ஸமுத்ரம், க்ஷீரவர ஸமுத்ரம், க்ருதவர ஸமுத்ரம், க்ஷௌரவர[1] ஸமுத்ரம் இந்த ஸமுத்ரம் ஐந்தும் தன்தான் பேர் ஸ்வாதுக்களாகும்.

காளோதக ஸமுத்ரம் புஷ்கரவர ஸமுத்ரம், அந்திம ஸ்வயம்பூரமண ஸமுத்ரம் இந்த மூன்றும் ஜல ஸ்வாதுக்கள் ஆகும். ஒழிந்த அஸங்க்யாத ஸமுத்ரங்களும் இக்ஷுரஸ ஸ்வாதுக்கள் ஆகும்

உயிர்வாழும் கடல்கள்:

இப்பால் அந்த ஸமுத்ரங்களில் ஜீவன்கள் உள்ளதும் இல்லாததும் சொல்லுதும்.

லவண ஸமுத்ரத்திலும், காளோதக ஸமுத்திரத்திலும், அந்திம ஸ்வயம்பூரமண ஸமுத்ரத்திலும், கர்மபூமி கூடி இருக்கையினால், ஜல சர ஜீவன்கள் உண்டு. ஒழிந்த ஸமுத்ரங்களில் ஜலசர ஜீவன்கள் இல்லை என்று அறிவது.

கடல்வாழ் மீன்கள்

இந்த ஸமுத்ரம் மூன்றிலும் இருக்கப்பட்ட மத்ஸ்யங்கள் இருக்கிற ஸ்தானமும் சரீரம் இருக்கிற ப்ரமாணமும் சொல்லுதும்.

லவண ஸமுத்ரத்தில் நதி முகத்தில் இருக்கிற மத்ஸ்யங்களுக்கு நீளம் ஒன்பது யோஜனை, அகலம் நாலரை யோஜனை, உயரம் இரண்டேகால் யோஜனை.

---

15 பா.வே 1 க்ஷௌத்ரவர தி.ஸா.மூலம்.

அபேக்ஷித்து - குறித்து, விரும்பி; ரஸ ஸ்வாது - சுவை; லவணம் - உப்; வாருணி -கள்; க்ஷீர - பால் ; க்ருத - நெய் ; க்ஷௌத்ர தேன்; 'உவரி தண்ணீர் தேன் சுரைத்து இவருபாநெய் இக்குவின், சுவையநீரின் வாரிகள் ஆவையும் ஏழதாகுமே' மே.பு. 1249; லவணம் முதலாகக் கூறப்பட்டுள்ள நான்குதான் தன் பேர் கொண்ட சுவையுடையன என தி.ஸா. (கா. 319) கூறுகிறது. தி.ப. (கா 5/29-30) யும் இதனையே கூறுகிறது. ஆனால் புஷ்கர வர கடல் நீர் தேன் சுவை உடையது என்று குறிப்பிடுகிறது. மே.பு. ஏழு சுவைகள் என்று குறிப்பிடுகிறது. க்ஷௌத்ரவர கடல் குறித்து இருநூல்களும் குறிப்பிடவில்லை. இக்ஷு -கரும்பு; ஜல சர ஜீவன்கள் - நீர்வாழ் உயிர்கள்; மத்ஸ்யம் பெருமீன்.

தத் ஸமுத்ர மத்யத்தில் இருக்கிற மத்ஸ்யங்களுக்கு நீளம் பதினெட்டு யோஜனை, அகலம் ஒன்பது யோஜனை, உயரம் நாலரை யோஜனை.

காளோதக ஸமுத்ர நதி முகத்தில் இருக்கிற மத்ஸ்யங்களுக்கு நீளம் பதினெட்டு யோஜனை, அகலம் ஒன்பது யோஜனை, உயரம் நாலரை யோஜனை.

தத் ஸமுத்ர மத்யத்தில் இருக்கிற மத்ஸ்யங்களுக்கு நீளம் 36 யோஜனை, அகலம் 18 யோஜனை, உயரம் 9 யோஜனை

ஸ்வயம்பூரமண ஸமுத்ரத்தில் இருக்கிற நதி முகத்தில் இருக்கும் மத்ஸ்யங்களுக்கு நீளம் 500 யோஜனை; அகலம் 250 யோஜனை, உயரம் 125 யோஜனை.

தத் ஸமுத்ர மத்யத்தில் இருக்கிற மத்ஸ்யங்களுக்கு நீளம் 1000 யோஜனை அகலம் 500 யோஜனை, உயரம் 250 யோஜனை ஆகும்.

நிலங்கள் பாகுபாடு:

இப்பால், மநுஷ்ய க்ஷேத்ர விபாகமும், கர்ம பூமி விபாகமும், போகபூமி விபாகமும், நியதமாகிய பர்வத ஸ்வரூபமும் சொல்லுதும்.

மாநுஷோத்ரமலை:

புஷ்கரார்த்தத்தில் மாநுஷோத்தர பர்வதம் வலய ஆகாரமாய், இதுக்குள் பட்ட த்வீப ஸமுத்ரங்களைச் சுற்றி இருந்தது. இந்த பர்வதம். மநுஷ்யர் கடக்கிறதுக்கு சக்ய[1] மல்லாத படியினாலே மாநுஷோத்தரம் என்கிற பெயராயிற்று.[17]

16 தத் - அந்த; ஒரு யோஜனை - 8 மைல் என்பது தி.ஸா இந்தி உரை; விபாகம் - பிரிவு, நியதம் - நிலையான; புஷ்கரார்த்தத்தில் புஷ்கரவர தீவின் பாதியில்; இதுக்குள் பட்ட த்வீப ஸமுத்ரங்களை- ஜம்பூ தீவு, லவண ஸமுத்ரம், தாதகீகண்டம், காளோதம் புஷ்கரதீவில் பாதி - இவைகளைச் சுற்றி என்பது பொருள்

17 த்வீபார்த்தத்தில் - தீவின் பாதியில்; பாஹ்யம் - வெளியே ; அபயந்தரம் - உள்ளே; பர்வதம் நாலும் - மானுஷோத்ரம், ஸ்வயம்ப்ராபா, குண்டலம், ருசகவரம் - இம் மலைகள் நான்கும்; இவை தனக்கு உள்ளேஉள்ள அத்தனை தீவு கடல்களையும் உள்ளடக்கிச் சுற்றிக்கொண்டுள்ளன காதை - திரிலோகஸார நூல் காதை 561 34 விஜயார்த்தமலை 16 வக்ஷாரமலை 4 கஜந்தமலை 6 குலாசலம், ஜம்புசால்மலி 2, மேருவனத்தில் 16 ஆக 78 இடங்கள்; 5 மேருவுக்குச் 390 இடங்கள்; இஷ்வாகாரம் 4 மாநுஷோத்தரம்

பிற மலைகள்

ஸ்வயம்பூரமண த்வீபார்த்தத்தில் ஸ்வயம்ப்ரபாச சலம் சுற்றி இருந்தது. இந்த பர்வதத்துக்கு பாஹ்யம் திர்யக் கர்மபூமியும்[2] அப்யந்தரம் மானுஷோத்ர பர்வத பர்யந்தம் ஜகந்ய திர்யக் போகபூமியும் என்று கொள்க.

குண்டல த்வீப மத்யத்தில் குண்டல பர்வதம் சுற்றி இருந்தது. ருசகவர த்வீப மத்யத்தில் ருசகவர பர்வதம் சுற்றி இருந்தது. இந்த பர்வதம் நாலும் தன்தான் அப்யந்தரத்தில் இருந்த த்வீப சமுத்ரங்கள் எல்லாம் சுற்றி இருக்கும் என்று அறிவது.

இவ்வண்ணம் சமான்யத்தில் த்வீப சமுத்ர ஸ்வரூபம் சொல்லி, இப்பால் மனுஷ்ய லோகமும் திர்யக் லோகமும் சொல்லுகையில் இந்த இரண்டு லோகத்தில் இருக்கிற அக்ருத்ரிம சைத்யாலய ஸ்துதி பூர்வகம் சொல்லுதும் .

இயற்கை ஜிநாலயங்கள்

(காதை)

ணமஹ ணரலோயஜினகர சத்தாரி ஸயாணி தோவிஹீணாணி!
பாவண்ணம் சவு சவுரோ ணந்தீஸர குண்டலே ருசகே!!

என்பது மனுஷ்ய லோகத்திலே 398 ஜிந க்ரஹங்கள், திர்யக் லோக ஸம்பந்தி நந்தீஸ்வர த்வீபத்திலே 52, குண்டல வர த்வீபத்திலே 4, ருசகவர த்வீபத்திலே 4 ஆக 458 சைத்யாலயங்கட்கும் நமஸ்காரம் பண்ணி அந்த சைத்யாலயங்கள் இருக்கிற ஸ்தானமும் சொல்லுதும்.

இயற்கை ஜிநாலயங்கள் இருக்கும் இடங்கள்:

மந்தரங்கள் ஐந்திலும் 80ம், குல பர்வதங்கள் முப்பதிலும் 30ம், வக்ஷார பர்வதங்கள் நூறிலும் 100-ம், இக்ஷ்வாகாரங்கள் நான்கிலும் 4-ம், மானுஷோத்திரத்தில் 4-ம், வெள்ளியம் பெருமலை நூற்றி எழுபதிலும் 170-ம், ஜம்பூ வ்ருக்ஷம் ஐந்திலும் 5-ம், ஸால்மலி வருக்ஷம் ஐந்திலும் 5-ம், திர்யக் லோகத்தில் 60 ஆக 458 சைத்யாலயம் என்று அறிவது.

---

4 ஆக 398 இடங்களில் உள்ள இயற்கை ஜிநாயங்கள் மனுஷ்ய லோகத்தில் உள்ளவை.
பா.வே. 2 பாஹ்யம் கர்மபூமியும். பா.வே 1 சாத்ய.

மேரு மலைகள்:

இப்பால், முன் சொன்ன மந்தரங்களுக்கு இருக்கிற ஸ்தானம் சொல்லுதும்:

பரதாதி தேசங்களின் மத்தியத்தில் ஜம்பூத்வீபத்திலே 1, இக்ஷுவாகார பர்வதத்தால் கூறுபட்ட (வில்லு) சாபாகாரமாயிருந்த தாதகிஷண்ட பூர்வபாக மத்யத்திலே 1, அபரபாக மத்யத்தில் 1, புஷ்கரார்த்தத்தில் பூர்வபாக மத்யத்தில் 1, அபரபாக மத்யத்தில் 1 மாக ஐந்து மந்தரம் என்று கொள்க.

ஜம்பூ தீவு

இப்பால், ஜம்பூ த்வீப ஸ்வரூபம் சொல்லுதும்:

மந்தர உபய பார்ஸ்வத்திலும் இருக்கிற க்ஷேத்திரங்கள் பெயர் தக்ஷிண முதலாக பரத, ஹைமவத, ஹரிவருஷ, விதேக, ரம்யக, ஹைரண்யவத, ஹைராவதம் என ஏழும் ஹிமவதாதி குல பர்வதங்களால் வேறுபட்டது என்று அறிவது.

குலமலைகள்

அந்த பர்வதங்களுடைய பெயரும் ஹிமவான், மஹா ஹிமவான், நிஷதம், நீலி, ருக்மி, சிகரி என ஆறு (6)

அடியும் தலையும் சமான வ்யாசமாய், மணி மய பார்ஸ்வங்களுமாய், கிழக்கு மேற்கு ஸமுத்ரத்தை ஸ்பரிசித்து இருக்கும் என்று அறிவது.

மற்றும் அந்த பர்வதங்களுக்கு வர்ணமும் உயரமும் சொல்லுதும்:

ஹிமவானுக்கு பொன் வர்ணம், உயரம் 100 யோஜனை; மஹா ஹிமவானுக்கு வெள்ளி வர்ணம், உயரம் 200 யோஜனை; நிஷதம்

---

18 மந்தரங்கள் - மேரு மலைகள், திர்யக் - விலங்கு; பூர்வ - கிழக்கு; அபர -மேற்கு; உபய பார்ஸ்வத்திலும் - இரண்டு பக்கங்களிலும்: தக்ஷிண - தெற்கே, பரத, ஹைமவத, ஹரி வருஷம் மூன்றும் தெற்கே உள்ளவை ரம்யக, ஹைரண்யவத, ஹைராவதம் மூன்றும் வடக்கே உள்ளவை; விதேகம் கிழக்கிலும் மேற்கிலும் உள்ளது. 'மந்தர நடுவதாக குலமலை ஆறின் வந்த, அந்தரத்து ஏழு நாடாம்' (மே.பு 224); 'இமையம், மாவிமையமும் நிடதம் நீலியும், சீமைய நல்லுருக்கியும் சிகரியாமலை; (மே.பு 1229)

ஜம்புத் தீவு



கோழிச்சுடர் போன்ற பொன் வர்ணம், உயரம் 400 யோஜனை; நீலி மயிலினிட கழுத்தில் ப்ரகாசம் போன்ற வைடூர்ய வர்ணம், உயரம் 400 யோஜனை; ருக்மி, வெள்ளி வர்ணம், உயரம் 200 யோஜனை சிகரி பொன் வர்ணம், உயரம், 100 யோஜனை என்று அறிவது.

பொய்கைகள்:

இந்த ஹிமவதாதி குல பர்வதங்களுடைய சிகரத்திலே இருக்கிற பொய்கைகளுடைய பெயர் சொல்லுதும்

ஹிமவானில் பத்மை, மஹா ஹிமவானில் மஹாபத்மை, நிஷதத்தில் திகிஞ்சை, நீலியில் கேசரி, ருக்மியில் மஹாபுண்டரீகை, சிகரியில் புண்டரீகை என இந்த ஆறு பொய்கையும் பர்வதத்தின் மேலே நீள இருந்தது என்று அறிவது.

பொய்கைகளின் அளவு

அந்த பொய்கைகளுடைய அகலம், நீளம், ஆழம், அதில் இருக்கிற தாமரைகளின் ஸ்வரூபம் சொல்லுதும்.

ஹிமவானிலிருக்கிற பத்மைக்கு நீளம் ஆயிரம் (1000) யோஜனை, அகலம் ஐநூறு (500) யோஜனை, ஆழம் பத்து (10) யோஜனை. மஹா ஹிமவானிலிருக்கிற மகாபத்மைக்கு நீளம் (2000) இரண்டாயிரம் யோஜனை, அகலம் ஆயிரம் (1000) யோஜனை ஆழம் இருபது (20) யோஜனை. நிஷதத்திலிருக்கிற திகிஞ்சைக்கு நீளம் நாலாயிரம் (4000) யோஜனை, அகலம் இரண்டாயிரம் (2000) யோஜனை ஆழம் நாற்பது (40) யோஜனை.

---

19 அடிக்குறிப்பு : பொய்கை தடம்; 'சுந்தர தடங்கள் ஆறின்' மே.பு. (224)

அடிக்குறிப்பு : பொய்கைகளின் அளவுகள்

குலமலை	பொய்கை	நீளம்	அகலம்	ஆழம்
1. இமவான்	பத்மை	1000 .யோ	500 .யோ	10 யோ
2. மகா இமவான்	மகாபத்மை	2000 .யோ	1000 .யோ	20 யோ
3. நிஷதம்	திகிஞ்சை	4000 .யோ	2000 .யோ	40 யோ
4. நீலம்	கேஸரி	4000 .யோ	2000 .யோ	40 யோ
5. ருக்மி	மஹாபுண்டரீகை	2000 .யோ	1000 .யோ	20 யோ
6. சிகரி	புண்டரீகை	1000 .யோ	500 .யோ	10 யோ

நீலியிலிருக்கிற கேஸரிக்கு நீளம் நாலாயிரம் யோஜனை (4000) அகலம் இரண்டாயிரம் (2000) யோஜனை, ஆழம் நாற்பது (40) யோஜனை. ருக்மியிலுருக்கிற மஹாபுண்டரீகைக்கு நீளம் இரண்டாயிரம் (2000) யோஜனை, அகலம் ஆயிரம் (1000) யோஜனை ஆழம் இருபது (20) யோஜனை. சிகரியிலிருக்கிற புண்டரீகைக்கு நீளம் ஆயிரம் (1000) யோஜனை அகலம் ஐநூறு யோஜனை (500) ஆழம் பத்து (10) யோஜனையும் ஆகும்.

தாமரைகள் அளவு :

தாமரை ஸ்வரூபமும், பத்மையிலிருக்கிற தாமரை பொய்கை மத்யத்தில் நீருக்குள்ளே தண்டு பத்து (10) யோஜனை; நீருக்கு மேலே அரை யோஜனை (1/2); அதன் மேலே புஷ்பம் ஒரு (1) யோஜனை; புஷ்ப விஸ்தாரமும் ஒரு (1) யோஜனை; அதன் மத்யத்திலிருக்கிற கர்ணிகை உயரம் க்ரோசம், விஸ்தாரம் க்ரோச நீளம்; இதழ் ஆயிரத்து பதினொன்று; தண்டு வ்யாஸம் ஒரு க்ரோசமாகும்.

அந்த புஷ்பமும் இவ்விடத்தில் இருக்கிற தாமரை புஷ்பம் போல் ஆகாரமும், வாஸனையும், வர்ணமும், நவமாய் மலர்ந்த புஷ்ப ஸ்வரூபமும், இதழ் பத்மராக மணிமய வர்ணமும், தண்டு உத்க்ருஷ்ட வைடூர்ய மயமும் ப்ருத்வி ஸாரமு மாகும்.

அடிக்குறிப்பு : இரட்டி இரட்டி - இரண்டு மடங்காக; விவரம்: வருமாறு

பவனங்களின் அளவு மற்றும் பரிவார தாமரைகள்

வ.எ.	தேவ குமாரி	பவனம்			சாமானிகர்	தனு ரக்ஷகா	பாரீஷகர்		பாஹ்யம்	சேனாபதி (அனீகர்	மஹத்தர்	மொத்தம்
		நீளம்	அகலம்	உயரம்			அப்யெந்தரம்	மத்திமம்				
		குரோசம்										
1	ஸ்ரீ	1	1/2	3/4	4000	16000	32000	40000	48000	7	108	140115
2	ஹ்ரீ	2	1	1 1/2	8000	32000	64000	80000	96000	14	216	280230
3	த்ருதி	4	2	3	16000	64000	128000	160000	192000	28	432	560460
4	கீர்த்தி	4	2	3	16000	64000	128000	160000	192000	28	432	560460
5	புத்தி	2	1	1 1/2	8000	32000	64000	80000	96000	14	216	280230
6	லக்ஷமி	1	1/2	3/4	4000	16000	32000	40000	48000	7	108	140115

தாமரையில் வாழும் தேவியர் :

அந்த தாமரைகளில் இருக்கிற தேவியருடைய பெயரும், அவர்களுடைய பரிவார பத்ம ப்ரமாணமும் சொல்லுதும்:

பத்மையில் ஸ்ரீதேவி, மஹாபத்மையில் ஹ்ரீதேவி, திகிஞ்சையில் த்ருதி தேவி, கேஸரியில் கீர்த்தி தேவி, மஹா புண்டரிகையில் புத்தி தேவி, புண்டரிகையில் லக்ஷ்மி தேவி.

இவர்களுக்கு ஆயுஷ்யம் ஒரு பல்லம்

ஸ்ரீதேவிக்கு பரிவார பத்மமும் லக்ஷத்து நாற்பதினாயிரத்து ஒரு நூற்றொருபத்தைந்து ஆகும். (1,40,115)

இதற்கு வ்யாஸாதி ப்ரமாணங்களும் நாயக பத்மத்தில் பாதி பாதி என்று கொள்க.

தேவிகளுக்குரிய தேவர்கள்

ஸ்ரீ, ஹ்ரீ, த்ருதி இம் மூவரும் ஸௌதர்ம இந்திரன் தேவியர் கீர்த்தி, புத்தி, லக்ஷ்மிதேவி இம்மூவரும் ஈசான இந்திரன் தேவியர் என்று அறிவது.

தேவியர் பவனங்கள்

இந்த பத்மை கர்ணிகையில் இருக்கிற தேவியருடைய க்ரஹமும் நாயக பத்மத்தில் இருக்கிற க்ரஹமும் நீளம் ஒரு வ்யவஹார க்ரோசம், அகலம் அரை க்ரோசம், உயரம் முக்கால் க்ரோசம்.

இதில் பாதிபாதி பரிவார தேவ க்ரஹமாகும்.

பரிவார தாமரைகள்

அந்த ஸ்ரீ தேவியரது பரிவாரதேவ ப்ரமாணம் நாயக பத்மத்தைச் சூழ மஹத்தர்க்கு பத்மம் 108. இவையிற்றைச் சூழ சாமானிகர்க்கு பத்மம் 4000. ஆத்மரக்ஷகர்க்கு பதினாறாயிரம் (16000) அப்யந்த்ர பரீஷகர்க்கு 32000. மத்யம பரீஷகர்க்கு 40,000. பாஹ்ய பரீஷகர்க்கு 48000. சேனாபதி கட்கு 7 ஆக 1,40,115 ஆகும்.

இவ்வண்ணம் மஹாபத்மை திகிஞ்சையில் தாமரை யினுடைய அளவு ப்ரமாணங்களும் கணனைகளும் இரட்டி இரட்டி ஆகும். கேசரியிலிருக்கிற தாமரை திகிஞ்சையில் இருக்கிற தாமரைக்கு ஸமானம். அதில் பாதி மஹாபுண்டரீகையில் இருக்கிற தாமரை. அதில் பாதி புண்டரீகையில் இருக்கிற தாமரைகள் ஆகும்.

நதிகளின் உற்பத்தி விவரம்

இப்பால், முன் சொல்லப்பட்ட பொய்கைகளில் உத்பன்ன (மாகும்) மகா நதிகளும் ஸ்வரூபமும் சொல்லுதும்:

பத்மை என்னும் பொய்கையில் கங்கையும் சிந்தும் ரோஹிதாஸ்யாவும் ஆகும். மகாபத்மையில் உத்பன்னம் ரோகி நதியும் ஹரிகாந்தயும் ஆகும். திகிஞ்சையில் உத்பன்னம் ஹரியும் ஸீதோதையும் ஆகும். . கேசரியில் உத்பன்னம் ஸீதையும் நரகாந்தையும் ஆகும். மகாபுண்டரிக்கையில் உத்பன்னம் நாரி நதியும் ரூப்ய நதியுமாகும். புண்டரீகையில் உத்பன்னம் ஸ்வர்ணகூலாவும் ரக்தா, ரக்தோதா என்னும் மூன்று நதியும் ஆகும்.

இச் சொல்லப்பட்ட பதினான்கு நதிகளில் கங்கா சிந்துவும் ரக்தா ரக்தோதாவும் புறம்பாக பத்திலும் ரோகித் நதியும், ஹரியும், ஸீதையும், நாரியும், ஸ்வர்ண நதியும் இவ் வைந்தும் நாபி கிரியை அரை யோஜனை இடைவிட்டு ப்ரதக்ஷிணமாக கிழக்கு முகமாகச் சென்று சமுத்ர ப்ரவேசம் என்று அறிவது.

ரோகிதாஸ்யையும் ஹரிகாந்தையும் சிதோதையும், நரகாந்தையும், ரூப்யகூலையும் இவை ஐந்தும் முன் சொன்ன நாபி கிரியை அரை யோஜனை இடைவிட்டு ப்ரதக்ஷிணமாக மேற்கு நோக்கி ஸமுத்ர ப்ரவேசமாகும்.

பத்மையில் கங்கை கிழக்கும் ஸிந்து மேற்குமாகும். புண்டரீகையில் ரக்தா கிழக்கும் ரக்தோதா மேற்குமாகும்.

நதிக்கரை மரங்கள்:

இச் சொல்லப்பட்ட நதிகளின் இரு பார்ஸ்வ ஸ்வரூபம் சொல்லுதும்:

புன்னாக, நாககேஸர, பூகி, கங்கலி, தமால, கதளி, தாம்பூலி, லவலி, லவங்க இது முதலான வ்ருக்ஷங்கள் ஸகல நதிகளுக்கும் இரு பார்ஸவ தடங்களில் உண்டு.

---

20 புறம்பாக நீக்கி; பரத ஐராவதங்களில் நாபிகிரி இன்மையால் புறம்பாக என்றார், பூகி - பாக்குமரம், கங்கலி (கங்கேல்ல) அசோகம். தமால-பனை, கதளி - வாழை, தாம்பூலி - வெற்றிலை.

கங்கை போகும் வழி

இப்பால் அந்த நதிகளுள், கங்கை உத்பத்தியும், கமன ப்ரகாரமும், சொல்லுதும்:

பத்மை ஸரோவரத்தில் பூர்வ வேதிகையில் வஜ்ர முக த்வாரத்தினின்றும் புறப்பட்டு ஹிமவத் பர்வதத்து மத்யத்தில் ஐந்நூறு யோஜனை கிழக்கே முகமாக கங்கா கூடத்துக்கு அரை யோஜனை பர்யந்தம் சென்று; தெற்கே முகமாகி திரும்பி, ஐந்நூற்றிருபத்து மூன்று யோஜனையும் சற்று அதிகமாகிய அரை க்ரோசமும் பர்வதத்தின் மேலே சென்று; அப்புறம் இரண்டு க்ரோச நீளமும், அவ்வளவு கனமும் ஆறேகால் யோஜனை அகலமும், முகமும் நாக்கும் காதும் கண்ணும், ஸிம்ஹத்துக்கு ஸமானமாகிய, சிரசும் புருவம் முதலானவை வ்ருஷபத்துக்கு ஸமானமாய் இருக்கையினால் வ்ருஷப ஆகாரம் என்று சொல்லப்பட்டது. அந்த ஆகாரம் ஹிமவத் பர்வதத்து சிகரத்தில் தெற்கே ஞ்சி இருக்கும் என்று அறிவது. அந்த ஆகாரத்தின் நடுவே வந்து பரத க்ஷேத்ரத்தில் குதிக்கும் என்று கொள்வது.

இப்பால் பரத க்ஷேத்திரத்தில் குதிக்கிற ஸ்தான ஸ்வரூபம் சொல்லுதும்

ஹிமவத் பர்வதத்துக்கு இருபத்தைந்து யோஜனைக்கு அப்பால் அறுபது யோஜனை விஸ்தாரமும் மத்யத்தில் பர்வதத்துக்கு அருகு பத்து யோஜனை ஆழமும் உள்ள உதகபங்கம் என்னும் குண்டம் உண்டு. அதன் மத்யத்தில் ஜலத்தின்மேல் அரை யோஜனை உத்ஸேதமும் எட்டு யோஜனை வ்யாஸமும் வ்ருத்தமுமாகிய த்வீபம் உண்டு. அதன் மத்யத்தில் அடியில் நாலு யோஜனை அகலமும் மத்யத்தில் இரண்டு யோஜனை அகலமும் அக்ரத்தில் ஒரு யோஜனை அகலமும் பத்து யோஜனை உயரமும் வஜ்ர மயமாகிய பர்வதம் உண்டு.

---

21 கமன ப்ரகாரம் - போகும் முறை; இமவான் மலையின் அகலம் 1052 12/19 யோஜனை; கங்கை நடு மலையில் வருகிறது. நதியின் அகலம் 6 1/4 யோ. இதனைக் கழித்து (1052 12/11 - 6 1/4) இரண்டால் வகுக்க 523 29/152 யோ. இத்துணை தூரம் கங்கை மலையின்மேல் தெற்கே நோக்கி கடக்க வேண்டும், மலையிலிருந்து இறங்குவதற்கு சற்று அதிகமாகிய அரை க்ரோசம் என்றது 29/152 யோ ஆகும். வ்ருஷபம் - காளை, கங்கை விழும் இடம் காளையின் முகம் போல இருப்பதால் அதனை வ்ருஷப ஆகாரம் என்றனர், கோ முகம் என்றும் குறிப்பர்.

ஸ்ரீதேவியின் இருப்பிடம்

அந்த பர்வத சிகரத்தில், அடியில் மூவாயிரம் வில் விஸ்தாரமும் மத்யத்தில் இரண்டாயிரம் வில் விஸ்தாரமும் அக்ரத்தில் ஆயிரம் வில் விஸ்தாரமும் இரண்டாயிரம் வில் உயரமும் உள் அகலம் எழுநூற்றைம்பது வில்லும் ஆகிய ஸ்ரீதேவியினுடைய க்ருஹம் இருக்கும். அந்த க்ருஹத்திற்கு வாசல் நாற்பது வில் அகலமும் எண்பது வில் உயரமும் கபாடம் வஜ்ர மயமுமாகும்.

ஸர்வத்ர ஸ்ரீ க்ருஹ ப்ரமாணங்கள் வில்லு ப்ரமாணம் என்று அறிவது.

அந்த ஸ்ரீ க்ருஹ சிகரத்தில் இருந்த தாமரை கர்ணீகா ஸிம்மாஸனத்தில் ஜட மகுடத்துடன் இருந்த ஜினனுக்கு ஜன்மாபிஷேகம் பண்ணுவது போல ஜினேஸ்வரன் மஸ்தகத்திலே கங்கை காஹளோபமான பத்து யோஜனை பருமத்தில் கங்கா ஜல தாரை விழும் என்று அறிவது.

இப்பால், குண்டத்தினின்றும் புறப்பட்டு நடக்கிற ஸ்வரூபம் சொல்லுதும்:

குண்டத்தினின்றும் எட்டு யோஜனை விஸ்தாரத்தில் புறப்பட்டு தக்ஷிணாபி முகமாய்ச் சென்று வெள்ளியம் பெருமலையில் கண்டப்ரபாதம் என்னும் குகையை அடைந்தது.

அந்த குகையினுடைய லக்ஷணமும் மத்யத்திலே 'உன்மக்ன' 'நிமக்ன' நதியினுடைய ஸ்வரூபம் சொல்லுதும்:

குகை உயரம் எட்டு யோஜனை; அகலம் பன்னிரண்டு யோஜனை; நீளம் ஐம்பது யோஜனை. இரு பார்ஸ்வத்திலும் வஜ்ர கபாட உயரம் எட்டு யோஜனை அகலம்; ஆறு யோஜனை.

உன்மக்ன - நிமக்ன நதிகள்

நடு மத்யத்தில் கிழக்கே இருக்கிற உன்மக்ன நதியும் மேற்கே இருக்கிற நிமக்ன நதியும் பர்வதத்துக்குள்ளே இருக்கிற குண்டலத்தில்

---

22 அடிக்குறிப்பு : அக்ரத்தில் - உச்சியில்; காஹளோபமான காஹளா +உபமான - காஹளா - பெரிய மத்தளம், நீர் விழும் திரட்சிக்கு உவமை.

உற்பத்தியாகி புறப்பட்டு இரண்டு யோஜனை சென்று இரண்டு நதியும் கங்கா நதியுடனே கூடும் என்று அறிவது.

உன்மக்ன நிமக்ன நதி ஸ்வரூபம்: ஜலத்தில் அமுழ்த்தப்பட்ட த்ரவியங்கள் மேலே மிதக்குகிற குணம் உன் மக்னம் என்றும், ஜலத்தின் மேலே மிதக்கிற த்ரவ்யம் தாழ அமுழ்ந்துகிறது நிமக்ன நதியும் என்று அறிவது

இப்பால் குகையினின்றும் புறப்பட்டு தக்ஷிண பரதத்தில் பாதி நூற்றொருபத்தொன்பது யோஜனையும் ஒன்றரை கலையும் சென்று அயோத்தி புரிக்கு கிழக்கே ஐஞ்ஞூறு யோஜனை பர்யந்தமாக உள்ளே வளைந்து வந்து கிழக்கு முகமாகத் திரும்பி மாகத வ்யந்தரர் துவாரத்தினின்றும் புறப்பட்டு லவணஸமுத்தரத்தில் பிரவேசமாகும்.

கங்கையின் அகலம்

இந்த நதிக்கு பத்மையினின்றும் புறப்படுகிற இடத்தில் ஆறேகால் *(6 1/4)* யோஜனை அகலமும் அரைக்கால் யோஜனை *(1/8)* ஆழமும் சமுத்ர பிரவேசத்தில் அறுபத்திரண்டரை யோஜனை *(62 1/2)* அகலமும் ஒன்றேகால் *(1 1/4)* யோஜனை ஆழமும் ஆம்.

ஸிந்து நதி செலவு

இப்பால் ஸிந்து நதி ஸ்வரூபம் சொல்லுதும்:

கங்கா நதிக்கு எந்த வர்ணனை சொல்லப்பட்டதோ அந்த வர்ணனையே ஸமானம். விஷேச ஸ்வரூபம் சொல்லுதும்.

---

23 உன்மக்ன - மேலே கொண்டு வருதல், நீரில் விழும் பொருள் எவ்வளவு கனமான பொருளாக இருந்தாலும் இந்த நதி அப்பொருளை உள்ளே போகவிடாமல் கரையில் ஒதுக்கிவிடும்; அதனால் இப்பெயர்; நிமக்ன - மூழ்கச்செய்தல் நீரில் விழும் பொருள் எவ்வளவு இலேசான பொருளாக இருந்தாலும் இந்த நதி அப்பொருளை நீருக்கு அடியில் இழுத்துச் செல்லுவதால் இப்பெயராம், **தக்ஷிண பரதத்தில் பாதி - பரதக்ஷேத்ரம் *526 6/19* யோஜனை விஸ்தாரம்; இதில் விஜயார்த்த மலையின் அகலமான *50* யோஜனையைக் கழிக்க *476 6/19* யோஜனை ஆகும். இதனை இருபாகமாக்க *238 3/19* யோஜனை தக்ஷிண பரத க்ஷேத்ர விஸ்தாரமாகும். இதில் பாதி *119 3/38* யோஜனை; அதாவது கங்கை இவ்வளவு தூரம் வந்து கிழக்கே திரும்புகிறதாம். *1/4* யோஜனை- *1* கோசம்; அரைக்கால் - அரை கோசம்**

மேற்கு முகமாகச் சென்று ஸிந்து கூடத்திற்கு முன்னாகத் திரும்பி தமிஸ்ர[1] குகையை அடைந்து அதனின்றும் புறப்பட்டு அயோத்திபுரிக்கு மேற்கே ஐந்நூறு யோஜனை இடைவிட்டு உள்ளே வளைந்து வந்து மேற்கு முகமாகத் திரும்பி ப்ரபாஸ நாம த்வாரத்தில் சென்று மேற்கு ஸமுத்ரத்தை அடைந்தது; ஸேஷ வர்ணனை எல்லாம் கங்கைக்குச் சொன்னபடி ஆகும்.

பிற நதிகள்

இந்த இரண்டு நதிக்கும் சொல்லப்பட்ட வர்ணனையே ரக்தா ரக்தோதைக்கும் ஸமானமாகும்.

இப்பால், சேஷ ரோகித் நதி ஆதியாக ருப்யகூலா நதி பர்யந்தம் ஸ்வரூபம் சொல்லுதும்

ரோஹிதாஸ்யாநதி பத்மையில் உத்தர வேதிகையில் மத்யத்தில் நின்றும் பன்னிரண்டரை யோஜனை அகலமும் கால் யோஜனைஆழத்திலும் புறப்பட்டு வடக்கு அபிமுகமாக 276 யோஜனையும் ஆறு கலையும் பர்வதத்து மேலே சென்று கங்கைக்குச் சொன்ன வ்ருஷப ஆகாரங்கள் குண்டங்கள் ப்ரமாணத்தில் இரட்டித்த லக்ஷணமாயுள்ள ஜகன்ய போக பூமியில் குதித்து வடக்கே சென்று மத்யத்திலிருக்கிற நாபிகிரிக்கு அரையோஜனை இடைவிட்டு மேறகு அபிமுகமாகச் சென்று ப்ரவேசத்தில் 125 யோஜனை அகலமும் 2 1/2 யோஜனை ஆழமுமாகி லவண ஸமுத்ரத்தை ப்ரவேசிக்கும் என்று அறிவது.

ரோஹித் நதியும் மகாபத்மையில் தக்ஷிண வேதிகையிலும் மத்யத்தில் முன் சொன்னபடி 12 1/2 யோஜனை அகலமும் கால் யோஜனை ஆழ்த்திலும் தக்ஷிணாபிமுகமாகப் புறப்பட்டு மஹா ஹிமவத் பர்வதத்து மேலே 1605 யோஜனையும் ஐந்து கலையும் சென்று ரோகிதாஸ்யா நதிக்குச் சொன்னபடி வ்ருஷப ஆகாரத்தில் குண்டத்தில் குதித்து தெற்கு முகமாகச்சென்று முன் சொன்னபடி நாபி கிரியை ப்ரதக்ஷிணமாக கிழக்கு முகமாகச் சென்று அந்தியத்தில் 125 யோஜனை அகலமும் 2 1/2 யோஜனை ஆழத்திலும் சமுத்ர ப்ரவேசமாகும்.

---

24 :6 கலை 6/19 யோஜனை ; 5 கலை 5/19 யோஜனை

பா.வே. 1 திமிஸ்ர தி. ஸா. மூலம்

ஹரிகாந்தா நதியும் தத் பர்வதத்தில் உத்தரவேதியை மத்யத்தில் இருபத்தைந்து யோஜனை அகலமும் அரையோஜனை ஆழத்திலும் புறப்பட்டு உத்தராபி முகமாக பர்வதத்து மேலே 1605 யோஜனையும் ஐந்து கலையும் (5/19), கங்கைக்குச் சொன்னபடி நான்மடி வ்ரஷபாகாரத்திலும் சென்று மத்யம போக பூமியில் குண்டாதி ப்ரமாணங்களும் நான்மடி லக்ஷணத்தில் குதித்து மத்யத்திலிருக்கிற நாபி கிரிக்கு அரை யோஜனை பர்யந்தம் வடக்கே சென்று மேற்கே அபிமுகமாக அந்தியத்தில் 250 யோஜனையும் அகலமும் ஐந்து யோஜனை ஆழத்திலும் மேற்கு சமுத்ர ப்ரவேசமாகும்.

ஹரி நதியும் திகிஞ்சையில் தக்ஷிண வேதிகை மத்யத்தில் 25 யோஜனை அகலமும் 1/2 யோஜனை ஆழத்திலும் புறப்பட்டு தக்ஷிணாபிமுகமாக நிஷத பர்வதத்து மேலே 7421 யோஜனையும் ஒரு கலையும் (1/19) வருஷபாகாரத்தில் 8 க்ரோசமும் சென்று, கங்கைக்குச் சொன்னபடி குண்டாதி ப்ரமாணங்கள் நான்கு மடங்கு லக்ஷணத்திலும் மத்யம போக பூமியில் குதித்து தக்ஷிணாபிமுகமாக நாபிகிரிக்கு அரை யோஜனை பர்யந்தம் சென்று பூர்வாபிமுகமாக அந்தியத்தில் 250 யோஜனை அகலமும் ஐந்து யோஜனை ஆழத்திலும் ஸமுத்ர பிரவேசமாகும்.

ஸீதோதா நதியும் திகிஞ்சையில் உத்தர வேதிகை மத்யத்தில் 50 யோஜனை அகலமும் ஒரு யோஜனை ஆழத்திலும் புறப்பட்டு தத் பர்வதத்தில் 7421 யோஜனையும் ஒரு கலையும் 1/19 வ்ருஷபாகாரத்தில் 16 குரோசமும் சென்று கங்கைக்குச் சொன்னபடி குண்டாதி ப்ரமாணத்தில் எட்டு மடங்கு லக்ஷணத்தில் தேவகுரு உத்தம போக பூமியில் குதித்து நிஷதத்துக்கும் பத்ராசலவன வேதிகைக்கும் 11592 யோஜனையும் இரண்டு கலையுமுள்ள (2/19) ப்ரமாணம் வடக்குமுகமாகச் சென்று வேதிகா த்வாரத்தில் புகுந்து பத்ராசால வனத்திலும் மகாமேருவுக்கு அரை யோஜனை பர்யந்தம் 249 1/2 யோஜனை சென்று மேற்கு முகமாகத் திரும்பி வித்யுத்பரப வக்ஷார பர்வதத்தில் வித்யுத்ப்ரபை[1] என்னும் குஹா துவாரத்திலும் புறப்பட்டு முன்னே சொன்னபடி மேருவினுக்கு அரை யோஜனை அந்த்ரத்து பஸச்சிம பத்ராசால வனத்து மத்ய பர்யந்தம் சென்று மேற்கு விதேஹத்து மேற்கு முகமாக திரும்பி விதேஹ மத்யத்திற் சென்று அந்த்யத்தில் ஐந்நூறு யோஜனை அகலமும் பத்து யோஜனை ஆழத்திலும் சமுத்ர ப்ரவேஸமாகும்.

ஸீதா நதியும் கேசரியில் தக்ஷிண வேதிகை மத்தியத்தில் ஐம்பது யோஜனை அகலத்திலும் ஒரு யோஜனை ஆழத்தலும்

புறப்பட்டு நீலி பர்வதத்தில் 7421 யோஜனையும் ஒரு கலையும் (1/19) வ்ரஷபாகாரத்தில் 16 க்ரோசமும் சென்று, கங்கைக்குச் சொன்னபடி குண்டாதி ப்ரமாணங்கள் எண் மடங்கு லக்ஷணத்திலும் உத்தர குருவில் குதித்து, நீலிக்கும் பத்ராஸால வன வேதிகைக்கும் 11592 யோஜனையும் 2 கலையுமுள்ள (2/19) ப்ரமாணம் தெற்கு முகமாகச் சென்று வேதிகா த்வாரத்தில் புகுந்து பத்ராஸால வனத்திலும் மகாமேருவுக்கு 1/2 யோஜனை பர்யந்தம் 249 1/2 யோஜனைச் சென்று, கிழக்கு முகமாகத் திரும்பி மால்யவான் வக்ஷார பர்வதத்தில் மால்யவதம் என்னும் குஹா த்வாரத்தில் புறப்பட்டு முன் சொன்னபடியே கிழக்கு விதேஹ மத்யத்தில் சென்று அந்தியத்தில் ஐந்நூறு யோசனை அகலமும் பத்து யோசனை ஆழத்திலும் ஸமுத்ர ப்ரவேஸமாகும்.

நரகாந்தா நதியும் கேசரியில் உத்தர வேதிகை மத்யத்தில் 25 யோஜனை அகலமும் 1/2 யோஜனை ஆழத்திலும் புறப்பட்டு உத்தராபிமுகமாக நீலி பர்வதத்து மேலே 7421 யோஜனையும் ஒரு கலையும் (1/19) வ்ரஷபாகாரத்தில் 8 க்ரோசமும் சென்று, கங்கைக்குச் சொன்னபடி குண்டாதி ப்ரமாணங்கள் 4 மடங்கு லக்ஷணத்திலும் மத்யம போக பூமியில் குதித்து உத்தராபிமுகமாக நாபிகிரிக்கு 1/2 யோஜனை பர்யந்தம் சென்று பஸ்ச்சிமாபிமுகமாக அந்தயத்தில் 250 யோஜனை அகலமும் 5 யோஜனை ஆழத்திலும் சமுத்ர பிரவேஸமாகும்.

நாரி நதியும் மகாபுண்டரீகை தக்ஷிண வேதிகை மத்யத்தில் 25 யோஜனை அகலமும் 1/2 யோஜனை ஆழத்திலும் புறப்பட்டு தக்ஷிணாபிமுகமாக ருக்மி பர்வதத்து மேலே 1605 யோஜனையும் 5 கலையும் (5/19) கங்கைக்குச் சொன்னபடி நான்மடி வ்ரஷபா காரத்திலும் சென்று மத்யம போக பூமியில் குண்டாதி ப்ரமாணங்களும் நான் மடி லக்ஷணத்தில் குதித்து, மத்யத்தில் இருக்கிற நாபி கிரிக்கு 1/2 யோஜனை பர்யந்தம் சென்று, கிழக்கு முகமாகத் திரும்பி அந்த்யத்தில் 250 யோஜனை அகலமும் 5 யோஜனை ஆழத்திலும் சமுத்ர ப்ரவேஸ மாகும்.

---

25 பா.வே. வித்யுத பிரப்னம் என்றும் குபா துவாரத்தில் புறப்பட்டு முன்னே சொன்னபடியே மேற்கு விதேஹ மத்யத்தில் சென்று அந்தியத்தில். பஸ்ச்சிம - மேற்கு, குண்டாதி - குண்டம் முதலானவை; குஹா - குகை,

ரூப்யகூலா நதியும் மஹாபுண்டரீகை உத்தர வேதிகை மத்யத்தில் 12 1/2 யோஜனை அகலமும் கால் 1/4 யோஜனை ஆழத்திலும் புறப்பட்டு உத்தராபி முகமாக தத் பர்வதத்து மேலே 1605 யோஜனையும் ஐந்து கலையும் (5/19) வ்ரஷ பாகாரத்தில் நாலு க்ரோசமும் சென்று கங்கைக்குச் சொன்னபடி குண்டாதி ப்ரமாணங்கள் இருமடி லக்ஷணமுள்ள ஜகன்ய போக பூமியில் குதித்து நாபி கிரிக்கு 1/2 யோஜனை பர்யந்தம் சென்று மேற்கு முகமாகத் திரும்பி அந்தியத்தில் 125 யோஜனை அகலமும் 2 1/2 யோஜனை ஆழத்திலும் ஸமுத்ர ப்ரவேமாகும்.

ஸ்வர்ணகூலா நதியும் புண்டரீகையில் தக்ஷிண வேதிகைக்கு மத்யத்தில் 12 1/2 யோஜனை அகலமும் கால் 1/4 யோஜனை ஆழத்திலும் புறப்பட்டு தக்ஷிணாபிமுகமாக சிகரி பர்வதத்தில் 276 யோஜனையும் 6 கலையும் (6/19) வ்ரஷபாகாரத்தில் 4 க்ரோசமும் சென்று, கங்கைக்குச் சொன்னபடி இருமடி லக்ஷணமுள்ள குண்டங்களில் முன் சொன்ன க்ஷேத்திரத்தில் குதித்து நாபி கிரிக்கு 1/2 யோஜனை பர்யந்தம் சென்று கிழக்கு முகமாகத் திரும்பி அந்த்யத்தில் 125 யோஜனை அகலமும் 2 1/2 யோஜனை ஆழத்திலும் சமுத்ர ப்ரவேசமாகும்.

ரக்தா, ரக்தோதை என்கிற இரண்டு நதியும் ஐராவத க்ஷேத்திரத்தில் முன் சொன்னபடி கங்கா - சிந்து ப்ரமாணம் எனக் கொள்க.

தோரண வாயில் :

அந்த நதிகளுக்கு தோரண த்வார ஸ்வரூபம் சொல்லுதும்:

அந்த நதிகள் புறப்படுகிற இடத்திலும், சமுத்ர ப்ரவேசத்திலும், குண்டங்களிலும், மற்றும் யதா ஸ்தானங்களிலும் தோரண த்வாரங்கள் உண்டு என்று அறிவது.

அந்த தோரண த்வாரங்களும் சிகரத்தில் ஜிந பிம்பங்களும் திக் கன்யர் ஆவாஸங்களும் ஆகும். அந்த தோரண விஸ்தாரங்களும் உத்ஸேதங்களும் அந்தந்த அளவு - புறப்படுகிற இடத்தில் நதி அகலம் உள்ளபடி அகலமும், சமுத்ர ப்ரவேசத்தில் நதிக்குள்ள அகலப்படி அகலமும் மத்யத்தில் யதா ஸம்பவம் தன்தான் அகலப்படி அகலமும், எங்கும் உயரம் அகலத்துடனே அரைவாசி கூட்டி ஒன்னரை

---

26 நான்மடி - நான்கு மடங்கு; தத் பர்வதத்து- ருக்மி மலையில்; இரு மடி இரண்டு மடங்கு, முன் சொன்ன க்ஷேத்ரம் - ஹைரண்யவத க்ஷேத்ரம்.

பிரமாணமாகும். சகல தோரண த்வாரங்களுக்கும் பூமிக்குள்ளே அரை அரை யோஜனை ஆழமாகும்.

அதில் கங்கா ஸிந்து இரண்டுக்கும் சொல்லுதும்:

புறப்படுகிற இடத்தில் தோரண த்வார விஸ்தாரம் ஆறேகால் 6 1/4 யோஜனை; உத்ஸேதம் ஒன்பதே காலேரைக்கால் 9 3/8 யோஜனை; ஆழம் 1/2 யோஜனை; ஸமுத்ர ப்ரவேஸத்தில் விஸ்தாரம் 62 1/2 யோஜனை; உயரம் 93 3/4 யோஜனை; ஆழம் 1/2 யோஜனை. தன்தான் மத்யத்தில் அந்தந்த விஸ்தாரமும், அரைவாசி கூடின உயரமும் அரை யோஜனை ஆழங்களுமாகும்.

சேஷ நதிகளுக்கு இந்தப்படி ப்ரமாணம் என்று அறிவது.

நாடு, மலைகளின் அளவு

முன் சொல்லப்பட்ட பரதாதி நாடுகளுக்கும், ஹிமவத் ஆதி பர்வதங்களுக்கும் விஸ்தாரம் சொல்லுதும்:

ஜம்பூ தீவு :

ஜம்பூ த்வீபம் லக்ஷ யோஜனை விஸ்தாரத்தை நூற்று தொண்ணூறு பாகம் பண்ணினதில் பரத க்ஷேத்ரம் ஒரு (1) பாகம்; ஹிமவத் பர்வதம் இரண்டு (2) பாகம்; ஜகன்ய போகபூமி யாகிய ஹைமவதம் நாலு(4) பாகம்; மஹா ஹிமவான் எட்டு(8) பாகம்; மத்யம போகபூமியாகிய ஹரிவர்ஷம் பதினாறு(16) பாகம்; நிஷதம் முப்பத்திரண்டு பாகம்(32); விதேஹம் அறுபத்து நாலு (64) பாகம்; நீலி முப்பத்திரண்டு பாகம்(32) மத்யம போகபூமியாகிய ரம்யகம் பதினாறு(16); பாகம்; ருக்மி எட்டு(8) பாகம்; ஜகன்ய போகபூமியாகிய ஹைரண்யவதம் நாலு(4) பாகம்; சிகரி இரண்டு(2) பாகம்; ஐராவதம் ஒரு (1) பாகம்; ஆக நூற்று தொண்ணூறு பாகமாகும் (190).

பரதம் அளவு :

இவையிற்றின் ப்ரமாணங்களும், பரதம் பாகம் ஒன்றுக்கு ஐஞ்னூற்றிருபத்தாறு யோஜனையும் ஒரு யோஜனையைப் பத்தொன்பது பாகம் பண்ணி அதில் ஆறு பாகமும் ஆகும் 526 6/19. இதன் மத்யத்தில் நின்ற வெள்ளியம் பெருமலைக்கு தெற்கு வடக்கு அகலம் ஐம்பது யோஜனை(50); பூர்வாபரம் பதினாயிரம் (10000) யோஜனைக்கு மேல் சின்ன மாகும்.

---

27 ரக்தா - ரக்தோதை - நதிகளின் அளவு கங்கை ஸிந்து நதிகளின் அளவேயாகும்; யதா ஸ்தானம் - உரிய இடம்

28 190 = 1+2+4+8+16+32+64+32+16+8+4+2+1; 100000 / 190 = 526 6/19;

பரதம்



இமவான் மலை :

ஹிமவத் பர்வதம் இரண்டு பாகத்துக்கு ஆயிரத்தைம் பத்திரண்டு யோஜனையும் ஒரு யோஜனையைப் பத்தொன்பது பாகம் பண்ணி அதில் பன்னிரண்டு பாகமும் ஆகும். *1052 12/19.* வட விளிம்பில் கிழக்கு மேற்கு ஜ்யா இருபத்து நாலாயிரத்து தொளாயிரத்து முப்பத்திரண்டு யோஜனையும் ஐந்து கலையும் ஆகும். *24,932 5/9.*

ஹைமவதம் நாடு :

ஹைமவத மாகிய ஜகன்ய போகபூமி பாகம் நாலுக்கு இரண்டாயிரத்து ஒரு நூறறைந்து யோஜனையும் ஐந்து கலையு மாகும். *2105 5/19.* வட விளிம்பில் கிழக்கு மேற்கு ஜ்யா முப்பத்தேழாயிரத்து அறுநூற்றெண்பத்து நாலு யோஜனையும் பதினைந்து கலையு மாகும். *37, 684 15/19.*

மகா இமவான் மலை:

மஹா ஹிமவான் பாகம் எட்டுக்கு நாலாயிரத்திருநூற்று ஒருபது யோஜனையும் பத்து கலையு மாகும் - *4210 10/19,* வட விளிம்பில் ஜ்யா கிழக்கு மேற்கு ஐம்பத்து மூவாயிரத்து முப்பத்தொரு யோஜனையாகும் *53031.*

ஹரிவர்ஷம் :

ஹரிவர்ஷமாகிய மத்யம போகபூமி பாகம் பதினாறுக்கு எண்ணாயிரத்து நானூற்றிருபத்தொரு யோஜனையும் ஒரு கலையுமாகும். *8421 1/19;* வட விளிம்பில் கிழக்கு - மேற்கு ஜ்யா எழுபத்து மூவாயிரத்து தொளாயிரத்தொரு யோஜனையாகும். *73901.*

நிஷத மலை:

நிஷதம் பாகம் முப்பத்திரண்டுக்கு பதினாறாயிரத்து எண்ணூற்று நாற்பத்திரண்டு யோஜனையும் இரண்டு கலையுமாகும். *16842 2/19.* வட விளிம்பில் கிழக்கு-மேற்கு ஜ்யா தொண்ணூற்று நாலாயிரத்து ஒரு நூற்றைம்பத்தாறு யோஜனையாகும். - *94156.*

சின்னமாகும் — கொஞ்ச மாகும்; ஜ்யா — வட்டத்தின் நாண்; *24932 5/19* என்பது *324932 37684 1/19* என்றும் *37684 15/19* என்பது *16/19* என்றும் தி.ஸா.மூலம்.

29 கலை — பத்தொன்பதில் ஒரு பாகம்; கூறு; *53031* என்பது *53931 6/19* என்றும், *73901* என்பது *73901 17/19* என்றும், *94156* என்பது *94156 2/19* என்றும் தி.ஸா.மூலத்தில் காணப்படுகிறது.

விதேஹ நாடு :

விதேஹம் பாகம் அறுபத்துநாலுக்கு முப்பத்து மூவாயிரத்து அறுநூற்றெண்பத்து நாலு யோஜனையும் நாலு கலையு மாகும் 33684 4/19. மத்யத்தில் கிழக்கு மேற்கு ஜ்யா லஷம் யோஜனை யாகும் - 100000.

நீலி மலை :

நீலி பாகம் முப்பத்திரண்டுக்கு பதினாறாயிரத்து எண்ணூற்று நாற்பத்திரண்டு யோஜனையும் இரண்டு கலையுமாகும். 16842 2/19. தென் விளிம்பில் கிழக்கு மேற்கு ஜ்யா தொண்ணூற்று நாலாயிரத்து ஒரு நூற்றைம்பத்தாறு யோஜனை யாகும் - 94156.

ரம்யக நாடு :

ரம்யக மாகிய மத்யம போகபூமி பாகம் பதினாறுக்கு எண்ணாயிரத்து நானூற்றிருபத்தொரு யோஜனையும் ஒரு கலையுமாகும் 8421 1/19. தென் விளிம்பில் கிழக்கு மேற்கு ஜ்யா எழுபத்து மூவாயிரத்து தொளாயிரத்தொரு யோஜனை யாகும் - 73901.

ருக்மி மலை :

ருக்மி பாகம் எட்டுக்கு நாலாயிரத்திருநூற்று ஒருபது யோஜனையும் பத்து கலையு மாகும் 4210 10/19. தென் விளிம்பில் கிழக்கு மேற்கு ஜ்யா ஐம்பத்து மூவாயிரத்து முப்பத்தொரு யோஜனை யாகும்.

ஹைரண்யவத நாடு :

ஹைரண்யவதம் பாகம் நாலுக்கு இரண்டாயிரத்து ஒருநூற்றைந்து யோஜனையும் ஐந்து கலையு மாகும் 2105 5/19. தென் விளிம்பில் கிழக்கு மேற்கு ஜ்யா முப்தேழாயிரத்து அறுநூற்றெண்பத்து நாலு யோஜனையும் பதினைந்து கலையு மாகும் - 37, 684 15/19.

சிகரி மலை :

சிகரி பாகம் இரண்டுக்கு ஆயிரத்தைம்பத்திரண்டு யோஜனையும் பன்னிரண்டு கலையு மாகும். 1052 12/19. தென் விளிம்பில் கிழக்கு மேற்கு ஜயா இருபத்துநாலாயிரத்துத் தொளாயிரத்து முப்பத்திரண்டு யோஜனையும் ஐந்து கலையு மாகும் - 24932 5/19.

ஐராவதம் நாடு :

ஐராவதம் பாகம் ஒன்றுக்கு ஐஞ்நூற்றிருபத்தாறு யோஜனையும் ஒரு யோஜனையைப் பத்தொன்பது பாகம் பண்ணி அதில் ஆறு பாகமும் ஆகும் 526 6/19. இதன் மத்யத்தில் நின்ற

வெள்ளியம் பெருமலைக்கு தென்-வட நீளம் ஐம்பது (50) யோஜனை. பூர்வாபரம் பதினாராயிரம் யோஜனைக்கு மேல் சின்ன மாகும் (10000).

இவையிற்றில், ப்ரமாணங்களும் கிழக்கு மேற்கு ஜ்யா ப்ரமாணங்களும் சுற்று தனு ப்ரமாணங்களும் சொல்லுதும் :

தக்ஷிண பரதம் தெற்கு வடக்கு பாணம் இருநூற்று முப்பத்தெட்டு யோஜனையும் ஒரு யோஜனை பத்தொன்பது பாகத்தில் மூன்று பாகமும் - 238 3/19, கிழக்கு மேற்கு வட விளிம்பில் ஜ்யா 9748 யோஜனையும் 12 கலையும், சுற்று தனு 9766 யோஜனையும். ஒரு கலையுமாகும். (1/19)

வெள்ளியம் பெருமலை கூட தெற்கு வடக்கு 288 யோஜனையும் 3 கலையும் வட விளிம்பில் ஜ்யா 10720 யோஜனையும் 11 கலையும் சுற்று தனு 10743 யோஜனையும் 15 கலையு மாகும்.

உத்தர பரதம் கூட தெற்கு வடக்கு 526 யோஜனையும் ஆறு கலையும் வட விளிம்பில் ஜ்யா 14471 யோஜனையும் ஐந்து கலையும் சுற்று தனு 14528 யோஜனையும் 11 கலையு மாகும்.

ஹிமவத் பர்வதம் கூட[1] 1578 யோஜனையும் 18 கலையும் வட விளிம்பில் ஜ்யா 24,932 யோஜனையும் சுற்று குறைய ஒரு கலையும் சுற்று தனு 25,230 யோஜனையும் 4 கலையுமாகும்.

ஹைமவதம் கூட தெற்கு வடக்கு 3684 யோஜனையும் 4 கலையும் வட விளிம்பில் ஜ்யா 37,674 யோஜனையும் சற்று குறைய 16 கலையும், சுற்று தனு 38,740 யோஜனையும் சிறிது அதிகமான 10 கலையுமாகும்.

மஹா ஹிமவத் பர்வதம் கூட தெற்கு வடக்கு 7894 யோஜனையும் 14 கலையும், வட விளிம்பில் ஜ்யா 53,931 யோஜனையும் 6 கலையும் சுற்று தனு 57,293 யோஜனையும் 10 கலையுமாகும்.

ஹரிவர்ஷம் கூட தெற்கு வடக்கு 16,315 யோஜனையும், 15 கலையும் வட விளிம்பில் ஜ்யா 73,901 யோஜனையும் 17கலையும் சுற்று தனு 84016 யோஜனையும் 4 கலையும் ஆகும்.

நிஷதபர்வதம் கூட தெற்கு வடக்கு 33157 யோஜனையும் 17 கலையும் வட விளிம்பில் ஜ்யா 94156 யோஜனையும் 2 கலையும் சுற்று

பா.வே. 1. கூட தெற்கு வடக்கு

தனு ஒரு லக்ஷத்திருபத்து நாலாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு யோஜனையும் 9 கலையும் ஆகும்.

விதேஹத்தில் பாதி கூட தெற்கு வடக்கு 50,000 யோஜனையும் மத்யத்தில் ஜ்யா லக்ஷம் யோஜனையும், சுற்று தனு ஒரு லக்ஷத்து ஐம்பத்தெண்ணாயிரத்து ஒருபத்து நாலு யோஜனை சிறிது குறைய ஆகும்.

இவ் வண்ணம் வடக்கு ஐராவதம் முதலாக விதேஹ மத்திய பர்யந்தம் முன் சொன்னபடி ஆகும்.

சுதர்சன மேருமலை :

அநந்தரம் மந்தர ஸ்வரூபம் சொல்லுதும் :

விதேஹ மத்ய ப்ரதேசத்தில் சுதர்ஸன மேரு இருக்கிறது. அந்த மேருவும் பூக்குள்ளே சித்தையில் ஆயிரம் யோஜனை ஆழமும் பூமிக்கு மேலே தொண்ணூத்தி ஒன்பதினாயிரம் யோஜனை உயரமும் ஆக லக்ஷ(100000) யோஜனை ஆகும். அதன் மேலே சூளிகை யாகும். அடியில் மூலம் தொடங்கி சூளிகாக்ர பர்யந்தம் வருத்தமாகும்.

அகலமும் பூமிக்குள்ளே சித்தை அடியில் அடி அகலம் பதினாயிரத்து தொண்ணூறு யோஜனையும் ஒரு யோஜனையை பதினோரு பாகம் பண்ணி அதில் பத்து பாகமும் ஆகும். 10090 10/11. இவை க்ரமத்தால் ஒரு யோஜனைக்கு ஒரு யோஜனையைப் பதினோரு பாகம் பண்ணினதில் ஒரு பாகம் விழுக்காடு சுருங்கி வந்து பூமிக்கு மேலே அடிஅகலம் பதினாயிரம் (10,000) யோஜனை ஆகும். இவை முன்புபோல க்ரமத்தால் சுருங்கி ஐஞ்ஞூறு யோஜனை உயரம் சென்றவிடத்து தலையகலம் ஒன்பதினாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்து நாலு யோஜனையும், ஒரு யோஜனை பதினோரு பாகம் பண்ணி அதில் ஆறு பாகம் ஆகும். - 9954 6/11.

---

30 கூட - சேர; பார்க்க அட்டவணை 9; பா.வே 1. 158114 என்பது தி.ஸா.மூலம். இதுவே சரி.

31 அநந்தரம் - பிறகு, இனி; மந்தர - மேருமலை; சித்தை - சித்ரா பூமி; சூளிகை - மலை முகடு; விழுக்காடு சுருங்கி - 1/11 யோஜனை வீதத்தில் சுருங்கி; பூமிக்குக் கீழே 1000 யோஜனை உள்ளது. எனவே **1/11X 1000 = 90 10/11** யோஜனை சுருங்கி (1090 10/11 - 90 10/11) 1000 யோஜனை ஆகும்;

சுமேரு மலை



அதன்மேலே ஐஞ்ஞூறு ஐஞ்ஞூறு யோஜனை எப்பக்கமும் சுருங்கின விடத்தில் அகலம் எண்பத்தொன்பதாயிரத்து ஐம்பத்திநாலு யோஜனையும் ஒரு யோஜனை பதினொரு பாகம் பண்ணி அதில் ஆறு பாகம் ஆகும். 8954 6/11. இவ் வளவு குறையாமல் பதினோராயிரம் யோஜனை உயரம் சென்ற பிறகு முன் சொன்னபடி க்ரமத்தால் சுருங்கி; ஐம்பத்தோராயிரத்து ஐஞ்ஞூறு யோஜனை உயரம் சென்ற இடத்தில் தலை அகலம் நாலாயிரத்து இருநூத்தி எழுபத்திரண்டு யோஜனையும் ஒரு யோஜனனயை பதினொரு பாகம் பண்ணி அிதல் எட்டு பாகமும் ஆகும் - 4272 8/11.

அதன் மேலே முன் சொன்னபடி இரண்டாம் மேகலை ஐஞ்ஞூறு யோஜனை எப்பக்கமும் சுருங்கின இடத்து அகலம் மூவாயிரத்து இருநூத்தி எழுபத்திரண்டு யோஜனையும் ஒரு யோஜனை பதிொரு பாகம் பண்ணி அதில் எட்டு பாகமும் ஆகும் - 3272 8/11.

இவ் வளவு குறையாமல் பதினோராயிரம் யோஜனை உயரம் சென்ற பிறகு முன்பு போல க்ரமத்தால் சுருங்கி இருபத்தையாயிரம் யோஜனை உயரம் சென்ற இடத்தில் தலையகலம் ஆயிரம் யோஜனை யாகும்.

அதன்மேல் மத்யத்தில் பன்னிரண்டு யோஜனை அகலமும் நாற்பது யோஜனை உயரமும் தலையகலம் நாலு யோஜனையு மாகிய சூளிகை ஆகும்.

மேருமலை காடுகள் :

மந்தரத்தில் சூழ்ந்திருக்கிற வன சதுஷ்டய ஸ்வரூபம் சொல்லுதும் :

பத்ராசால வனம் பூமியில் மேருவுக்கு கிழக்கு மேற்கு இருப்த்திராயிரம் இருபத்திராயிரம் யோஜனையும் இவை எண்பத்து

இது போல பிறவற்றையும் கணக்கிடுக; ஆயிரம் யோஜனை ஆழ்ந்தது, ஓங்கியது ஆயிரம் இலாத நூறாயிரம் புகை; ஆயிரம் பத்தடி அகலமாயது, மேய நால் வநத்தது மேரு என்பது மே.பு.1309.

32 வன சதுஷ்டய - நான்கு வனங்கள்; பத்ராசால வனம் - கிழக்கே 22000 யோ.யும் மேற்கே 22000 யோஜனையும் அகலமுடையது. இதில் 88ல் ஒரு பங்கு (22000 / 88) அதாவது 250 யோ. வடக்கிலும், தெற்கிலும் அகலமாகும்.

எட்டு பாகம் பண்ணினதில் ஒரு பாகப்ரமாணமுமாகி (22,000 88) தெற்கு வடக்கு இருநூத்தி ஐம்பது இருநூத்தி ஐம்பது யோஜனை யாகும்.

ப்ரதம மேகலையில் **நந்தன வனம்** அகலம் ஐஞ்ஞூறு யோஜனை. இரண்டாம் மேகலையில் **ஸொமனஸ வனம்** அகலம் ஐஞ்ஞூறு யோஜனை. மூன்றாம் மேகலையில் **பாண்டுக வனம்** சூளிகை நீங்கலாக நானூத்திதொண்ணூத்தி நாலு (494) யோஜனை யாகும்.

இடைவெளி அளவு :

அந்தர உயரமும் பத்ராசால வனத்துக்கும் நந்தன வனத்துக்கும் ஐஞ்ஞூறு யோஜனை; நந்தன வனத்துக்கும் ஸௌமனஸ வனத்துக்கும் அந்தரம் அறுபத்தீராயிரத்து ஐந்நூறு யோஜனை; ஸௌமனஸ வனத்துக்கும் பாண்டுக வனத்துக்கும் அந்தரம் முப்பாதாறாயிரம் யோஜனையாகும்.

காட்டு மரங்கள் :

அந்த வனங்களில் இருக்கிற விருக்ஷ ஸ்வரூபம் சொல்லுதும்;
மந்தார, சூத, சம்பக, சந்தன, கனசார, மோச, சோசை :[1]
தாம்பூளி, பூக ஜாதி முதலான ஸுரதருபி : க்ருதசோபானி தாநிவநாநி

பிற மேரு மலைகள் :

அனந்தரம், க்ஷுல்லக மந்தரம் நாலுக்கும் ஸ்வரூபம் சொல்லுதும்:

பூமிக்குள்ளே சித்தையில் ஆழம் ஆயிரம் யோஜனை; பூமிக்கு மேலே எண்பத்துநாலாயிர மாக எண்பத்தையாயிரம் (85000) யோஜனையும் அதன் மேலே சூளிகையும் ஆகும். இவைகளும் மூல அக்ர பர்யந்தம் என்று அறிக.

---

33 அந்தரம் - இடைவெளி; மந்தார - மந்தாரை; சூத - மா; கனஸார - கற்பூரம் ; மோச - வாழை; சோசை - தென்னை; பூக - பாக்கு; க்ஷுல்லக மந்தரம் - சிறிய மேரு மலைகள்;

பா.வே 1. மந்தார சூத சம்பக சந்தன கனஸார மோச சோசை:
தாம்பூளீ, பூக ஜாதி ப்ரப்ருதி : க்ருதசோபானி
என்பது தி.ஸா. பாகத காதை 608 ன் சமஸ்கிருத வடிவமாகும்.

அகலமும் சித்தை அடியில் ஒன்பதினாயிரத்து ஐஞ்ஞூறு (9500) யோஜனை ஆகும். அதன் மேல் ஒரு யோஜனைக்கு ஒரு யோஜனையைப் பத்து பாகம் பண்ணி அதில் ஒரு ஒவ்வொரு பாகம் (1/10) க்ரமத்தால் குறைந்து பூமிக்கு மேலே அடி அகலம் ஒன்பதினாயிரத்து நானூறு (9400) யோஜனை யாகும்.

அதன் மேல் முன் சொன்னபடி க்ரமத்தால் சுருங்கி ஐஞ்ஞூறு யோஜனை உயரம் சென்றவிடத்து தலையகலம் ஒன்பதினாயிரத்து முந்நூற்று ஐம்பது (9350) யோஜனை யாகும்.

அதன் மேல் எப்பக்கமும் ஐஞ்ஞூறு, ஐஞ்ஞூறு யோஜனை சுருங்கினவிடத்தில் அகலம் எண்ணாயிரத்து முந்நூற்று ஐம்பது (8350) யோஜனை ஆகும்.

அவ்வளவு அகலம் குறையாமல் பதினாயிரம் யோஜனை உயரம் சென்ற பிறகு முன் போல க்ரமத்தால் சுருங்கி நாற்பத்தையாயிரத்து ஐஞ்ஞூறு (45,500) யோஜனை உயரம் சென்ற இடத்து தலையகலம் மூவாயிரத்து எண்ணூறு (3800) யோஜனை ஆகும்.

அதன்மேல் இரண்டாம் மேகலை எப்பக்கமும் ஐஞ்ஞூறு யோஜனை சுருங்கினவிடத்து அகலம் இரண்டாயிரத்து எண்ணூறு (2800) யோஜனை ஆகும்.

அவ் வளவு அகலம் குறையாமல் பதினாயிரம் யோஜனை உயரம் சென்று பிறகு முன்பு போல க்ரமத்தால் சுருங்கி பதினெட்டாயிரம் (18,000) யோஜனை உயரம் சென்ற விடத்தில் தலையகலம் ஆயிரம் (1000) யோஜனை ஆகும்.

அதன் மத்யத்தில் பன்னிரண்டு யோஜனை அகலமும் நாற்பது யோஜனை உயரமும் தலையகலம் நாலு யோஜனையுமாகிய சூளிகை ஆகும்.

அதன் வர்ணம் வைடூர்ய வர்ணமாகும்.

---

34 9400 = (9500 — 1000 x 1/10); 9350 = (9400-500 x 1/10); 8350 - நந்தன வனத்தில் இரண்டு பக்கத்திலும் (500 + 500) 1000 யோ. குறைகிறது. எனவே 9350 _ 1000 = 8350; 3800 = (8350 _ 45,500 x 1/10); 1000 = (2800 _ 1800 x 1/10);

காடுகளின் அளவு :

இம் மந்தரங்களின் வன சதுஷ்டய ஸ்வரூபம் சொல்லுவதும்:

தாதகீஷண்டத்தில் இருக்கிற இரண்டு மந்தரத்துக்கும் பூர்வாபர பத்ராஸால வனம் அகலம் ஒரு லக்ஷத்து ஏழாயிரத்து எண்ணூற்றெழுபத்தொன்பது யோஜனை ப்ரத்யேக மாகும் - *1,07,879.*

இவை எண்பத்துஎட்டு பாகம் பண்ணி *(1,07,879/88)* அதில் ஒரு பாகம் ஆயிரத்து இருநூற்று இருபத்தைந்து யோஜனையும் ஒரு யோஜனை எண்பத்து எட்டு பாகம் பண்ணி அதில் எழுபத்தி ஒன்பது பாகம் தக்ஷிணோத்தர பத்ராசால வனத்துக்கும் ப்ரத்யேகமாகும் - *1225 79/88.*

புஷ்கரார்த்தத்தில் இருக்கிற இரண்டு மந்தரத்துக்கும் பூர்வாபர பத்ராஸால வனம் இரண்டு லக்ஷத்து ஒரு பத்தையாயிரத்து எழுநூற்று ஐம்பதெட்டு யோஜனை ப்ரத்யேக மாகும் - *2,15,758.*

இவை எண்பத்தெட்டு பாகம் பண்ணி *(2,15,755/88)* அதில் ஒரு பாகம் இரண்டாயிரத்து நானூற்று ஐம்பத்தொரு யோஜனையும் ஒரு யோஜனையை நாற்பத்துநாலு பாகம் பண்ணி அதில் முப்பத்தைந்து பாகம் தக்ஷிணோத்தர பத்ராஸால வனத்துக்கும் ப்ரத்யேக மாகும் - *2451 35/44.*

ஸேஷ மூன்று வனங்களும் நாலு மந்தரத்துக்கும் முன் சொன்னபடி நந்தன வனம் ஐஞ்ஞூறு யோஜனையும் ஸௌமனஸ வனம் ஐஞ்ஞூறு யோஜனையும் பாண்டுக வனம் நானூத்தி தொண்ணூத்தி நாலு *(494)* யோஜனையுமே யாகும்.

சைத்தியாலயம் : அந்த வனங்களில் இருக்கிற சைத்யாலய ப்ரமாணம் ஒவ்வொரு வனத்துக்கு திக்குகளிலே ஒவ்வொரு சைத்யைலயமாக நாலு சைத்யாலயம் வனம் நாலுக்கும் பதினாறு பதினாறாக ஐந்து மேருவுக்கும் எண்பது சைத்யாலயமாகும்.

அந்த சைத்யாலய வர்ண்ணையும் மேலே நந்தீஸ்வர சைத்யாலய வர்ணனையும் சொல்லுமிடத்தில் சொல்லுதும்.

---

35 உபய பார்ஸ்வத்தில் — இரண்டு பக்கத்தில்; மஹா கண்டாஜால— பெரிய மணிகளின் கூட்டம்; க்ஷுல்லக கண்டா - சிறிய மணிகள்; யுத கூடிய; பக - பல; த்வாரம் - வழி; பூர்வாதி - கிழக்கு முதலாக ; கிழக்கே

வேதிகை அளவு

அந்த வனங்களில் உபய பார்ச்வத்தில் இருக்கிற வேதிகை ஸ்வரூபம் சொல்லுதும்:

பத்ராஸாலாதி வனங்களில் உபய பார்ச்வத்தில் ஒரு யோஜனை உயரத்திலும் அரை யோஜனை அகலத்திலும் கால் யோஜனை ஆழத்திலும் ஆகிய வேதிகை பொன்மயமாகி மஹா கண்டா ஜாலாலங்க்ரதங்களும் க்ஷுல்லக கண்டா ஜாலாலங்க்ரதங்களும் சுதோரண யுத பகு த்வாரங்களுமாகி யிருக்கும்.

மேரு நிறம்

அந்த மேருவினையுடைய வர்ண விசேஷ ஸ்வரூபம் சொல்லுதும்:

சுதர்ஸன மேரு பூமி தொடங்கி 61,000 யோஜனை பர்யந்தம் நாநா ரத்ன வர்ணமும் அதன்மேல் 38,000 யோஜனை பர்யந்தம் ஸ்வர்ண வர்ண மாகும்.

பவனங்கள் பெயர்

இப்பால், நந்தனாதி வனங்களில் நிலவரை போல் இருக்கிற பவனங்களுக்கு நாமம் முதலானது சொல்லுதும்.

நந்தன வனத்தில் பவனங்கள் மானி, சாரண, கந்தர்வ சித்ர என்னும் பேராய் வருத்தமாய் பூர்வாதியாய் நாலு திக்கிலும் இருந்தது. அதுகள் உயரம் ஐம்பது யோஜனையும் விஸ்தாரம் முப்பது யோஜனையும் ஆகும்.

ஸௌமனஸ வனத்தில் வஜ்ர, வஜ்ர ப்ரப, ஸ்வர்ண, ஸ்வர்ணப்ரப என்னும் பெயருடைய பவனங்கள் பூர்வாதியாக நாலு திக்கிலும் இருந்தது. அதுகள் இருபத்தைந்து யோஜனை உயரமும் பதினைந்து யோஜனை அகலமும் ஆகும்.

பாண்டுக வனத்தில் லோஹிதா, அஞ்சன ஹரித்ரா, பாண்டுர என்னும் பெயருடைய பவனங்கள் பூர்வாதியாக நாலு திக்கிலும்

மானி, தெற்கே சாரண, மேற்கே கந்தர்வ, வடக்கே சித்ர ; பிறவும் இது போல கொள்க;

இருந்தது. அதுகள் பன்னிரண்டரை யோஜனை உயரமும் ஏழரை யோஜனை அகலமும் ஆகும்.

பவன தேவர்கள் :

அந்த பவனங்களுக்கு அதிபதியும் ஸௌதர் மேந்த்ரனுடைய லோகபாலர்கள் ஸோம யம வருண குபேரர் என்னும் நால்வரும் பூர்வாதியாக தனித்தனி மூன்றரை கோடி சிரி கன்யருடன் இருப்பர்.

அவர்களுடைய ஆயுஷ்யமும் வர்ணாலங்க்ரதங்களும்: ஸோமனுக்கு இரண்டரை பல்லம் ஆயுஷ்யமும் ரக்த வர்ணமும் ; யமனுக்கு இரண்டரை பல்லம் ஆயுஷ்யமும் க்ருஷ்ண வர்ணமும்; வருணனுக்கு சிறிது குறைய மூன்று பல்லம் ஆயுஷ்யமும் பொன் வர்ணமும்; குபேரனுக்கு சிறிது குறைய மூன்று பல்லம் ஆயுஷ்யமும் வெள்ளை வர்ண அலங்க்ரதங்களுமாகும்.

அவர்களுக்கு கல்பத்தில் விமான சம்பந்தம் சொல்லுதும் ஸௌதர்ம கல்பத்தில் ஸோமனுக்கு ஸ்வயம் ப்ரப விமானமும், யமனுக்கு அரிஷ்ட விமானமும், வருணனுக்கு ஜலப்ரப விமானமும் குபேரனுக்கு வல்கு ப்ரப விமானமும் இருப்பிடமாகும். அவர்கள் ஒவ்வொருத்தர் தனித்தனி ஆறு லக்ஷத்து அறுபத்தாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு (6,66,666) விமானங்களுக்கு அதிபதியாகும்.

வியந்தர தேவர்கள்

இப்பால், நந்தன வனத்தில் வ்யந்தரர் இருக்கும் கூட ஸ்வரூபம் சொல்லுதும்:

மேரு ப்ரவதத்துக்கு ஈசானத்தில் பலபத்ர நாமம் என்னும் கூட உயரம் நூறு யோஜனை; அடி அகலம் நூறு யோஜனை ; தலையகலம் ஐம்பது யோஜனையாகும். அதன் மேலே பலபத்ர நாமம் என்னும் வ்யந்தரர்க்கு வஸதி ஆகும்.

அந்த நந்தன வனத்திலிருந்த வஸதிகளுக்கு உபய பார்ஸ்வத்தில் இருக்கிற கூட முதலானது சொல்லுதும்:

---

36 ஸோமன் - கிழக்கு; யமன் - தெற்குக்கு ; வருணன் - மேற்குக்கு ; குபேரன் வடக்குக்கு ; சிரி கன்யர் - வியந்தர தேவியர் ரக்த சிகப்பு; க்ருஷ்ண-கருப்பு ; கூட கூடம் ; ஈசானம் - வடகிழக்கு

நந்தன, மந்தர, நிஷத, ஹிமவான், ரஜத, ருசக, ஸாகர, வஜ்ர என்னும் இந்த கூடங்கள் க்ரமத்தில் நந்தன வனத்தில் வஸதியிலும் உபய பார்ச்வத்தில் ஆகும். அந்த கூடங்கள் பொன் மயமும் ஐந்நூறு யோஜனை உயரமும் அடி அகலம் ஐந்நூறு யோஜனையும் தலை அகலம் இருநூத்தி ஐம்பது யோஜனையுமாகிய அதன் சிகரங்கள் திக் கன்யர் வஸதி ஆகும். அவர்களுடைய பெயரும் க்ரமத்தால் மேகங்கரா, மேகவதி, சுமேகா, மேகமாலினி, ஸ்தோதந்தரா, விசித்ரா, புஷ்பமாலா, அநந்திதா என ஆகும்.

நீர் நிலைகள் பெயர்

நந்தன வனத்தில் இருக்கிற வாபிகள் ஸ்வரூபம் சொல்லுவதும்

அக்னி திசை முதலாக நாலு நாலு வாபிகள் ஆகும். அதன் பெயர்களும் உத்பலகுல்மா, நளினி, உத்பலா, உத்பலோஜ்வாலா, ப்ரங்கா, ப்ரங்கநிடா, கஞ்சலா, கஞ்சலா ப்ரபா, ஜீபூதா, ஸ்ரீகாந்தா, ஸ்ரீமஹிதா, ஸ்ரீநிலயா, நளினி, நளினிகுல், குமுதா, குமதப்ரபா என பதினாறு வாபிகள் மணிதோரண ரத்னோத்பவ ஸோபாநங்களும் ஹம்ஸ மயூர யந்தர யுதங்களும் ஐம்பது யோஜனை நீளமும் இருபத்தைந்து யோஜனை அகலமும் பத்து யோஜனை ஆழங்களும் ஆகும்.

பிரசாதங்கள்

அந்த வாபிகள் மத்யத்தில் இருக்கிஹ ப்ரஸாத ஸ்வரூபம் சொல்லுதும் :

அக்னி நைருதி திசையிலிருந்த எட்டு வாபிகளிலும் இருக்கின்ற ப்ரஸாதங்கள் ஸௌதர்மேந்திரனது ஆகும். வாயு திசையிலும் ஈசான திசையிலும் இருந்த எட்டு வாபி மத்யத்தில் ஈசானேந்திரன் ப்ரஸாதங்களாகும். இந்த ப்ரஸாதங்களும் அறுபத்திரண்டரை *(62 1/2)*

---

37 நந்தன - மந்தரம் மானி பவனத்து பக்கங்களிலும், நிஷித - ஹிமவான் சாரண பவனத்து பக்கங்களிலும் , ரஜத - ருசக கந்தர்வ பவனத்தும், ஸாகர-வஜ்ர சித்ர பவனத்தும் உள்ளன; வாபி - குளம் ; அக்னிதிசை - தென் கிழக்கு ; உத்பலகுல்மா முதலான நான்கும் தென் கிழக்கிலும், ப்ரங்கா முதலான நான்கும் தென் மேற்கிலும், ஸ்ரீபூதா முதலான நான்கும் வட மேற்கிலும், நளினி முதலான நான்கும் வடகிழக்கிலும் உள்ளன; ஸோபாநம் -படிகள் ; யந்த்ரயுதம் - பொறி (அ) கருவிகளோடு கூடியும்.

யோஜனை உயரமும் முப்பத்தொன்னேகால் (31 1/4) யோஜனை அகலமும் அரை (1/2) யோஜனை ஆழமும் சதுரஸ்ரங்களாகும். இந்த ப்ரஸாதங்களில் ஸௌதர்ம கல்பத்தில் கொலுச் சாவடி ஸீதர்ம ஸபை போல அவர் இருக்கிற உசித ஸ்தானத்துடன் இந்திரன் இருப்பிடமாகும்.

ஸௌமனஸ வனத்திலும் இவ் அளவே ஆகும். விசேஷமாவது பலபத்ர கூடத்துக்கு அகலம் நீளம் முதலானது நந்தன வனத்திற்குச் சொன்னபடியே ஆகும். ஸேஷ கூடங்களும் வாபிகளும் ப்ரஸாதங்களும் அகலம் நீளம் முதலானது நந்தன வனத்திற் சொன்னபடிக்கு அர்த்த (அரை) க்ரமமாகும்.

பாண்டுசிலை

அனந்தரம், மேரு சிகர ஸ்தித பாண்டுக சிலாதலங்களுக்கு நாமம், இருக்கிற ஸ்வரூபம் சொல்லுதும்:

மேரு சூளிகைக்கு ஈசான்யத்தில் பாண்டு சிலை காஞ்சன வர்ணமாகும். இவை கிழக்கு மேற்கு நீளம் நூறு யோஜனை; தெற்கு வடக்கு அகலம் ஐம்பது யோஜனை; உயரம் எட்டு யோஜனை.

அக்னி மூலையில் பாண்டுகம்பலை அர்ஜுன வர்ணம்; தெற்கு வடக்கு நீளம் நூறு யோஜனை; கிழக்கு மேற்கு ஐம்பது யோஜனை; உயரம் எட்டு யோஜனை.

நைருதி மூலையில் ரக்தை என்னும் சிலை தமனீய வர்ணம் மாகும். கிழக்கு மேற்கு நீளம் நூறு யோஜனை ; தெற்கு வடக்கு அகலம் ஐம்பது யோஜனை; உயரம் எட்டு யோஜனை.[1]

வாயு மூலையில் ரக்தகம்பலை என்னும் சிலை ரக்த வர்ண மாகும் தெற்கு வடக்கு நீளம் நூறு யோஜனை; கிழக்கு மேற்கு அகலம் ஐம்பது யோஜனை; உயரம் எட்டு யோஜனையும் ஆகி நாலு சிலையும் அர்த்த சந்தர ஆகாரமும் ஆகி பாண்டுக வனத்தில் ஆகும்.

---

38 ப்ரஸாதம் - வாழிடம்; அர்த்த - பாதி அளவு ; சூளிகை - மலை முகடு; அர்ஜ்ஜுன வர்ணம் - வெள்ளை நிறம்;

சிலையும் க்ஷேத்ரமும்

பாண்டுக சிலை பரத க்ஷேத்திரத்துக்கு அபிமுகமும், பாண்டுகம்பலை அபர விதேஹத்துக்கு அபிமுகமும், ரக்தை ஐராவதத்துக்கு அபிமுகமும், ரக்தகம்பலை பூர்வ விதேஹத்துக்கு அபிமுகமாகவும் இருக்கும்.[39]

இந்த நாலு சிலையிலும் ஸ்வாமியை எழுந்தருளப்பண்ணி ஜன்மாபிஷேகம் பண்ணுகிறது கிழக்கே முகம் என்று அறிவது.

மூன்று இருக்கைகள்

இவையிற்றில் உச்சியில் தீர்த்தகர பரம தேவர்களை அபிஷேகம் பண்ணுவிக்கைக்கு மஹா தனுவினால் ஐந்நூறு (500) வில் உயரமும், அடி அகலம் ஐந்நூறு (500) வில்லும் தலை அகலம் இருநூற்றைம்பது (250) வில்லுமாய் வருத்தமாய மத்யத்தில் ஸிம்ஹாஸனமும், தெற்கு வடக்கு இரு பார்ச்வத்திலும் பத்ராஸனமும் பூர்வ அபிமுக மாகிய பீட த்ரய மாகும்.

அவையிற்றில், பரத க்ஷேத்திரத்தில் தீர்த்தகர பரம தேவர்களுக்கு ஈசான்யமும், அபர விதேஹத்தில் தீர்த்தகர பரம தேவர்களுக்கு அக்னி மூலையும் ஐராவத க்ஷேத்ரத்தின் தீர்த்தங்கர பரம தேவர்களுக்கு நைருதி மூலையும், பூர்வ விதேகத்தின் தீர்த்தங்கர பரம தேவர்களுக்கு வாயு மூலையும் இருக்கிற மத்ய ஸிம்மாஸன பீடமாகும். மூலையிலும் இருக்கிற தக்ஷிண பீடம் நாலும் ஸௌதர்மேந்த்ரன் அபிஷேகம் பண்ணுகிற பத்ராசனமாகும். ஒழிந்த உத்தர பீடம் ஈசானேந்திரன் நின்று அபிஷேகம் பண்ணுகிற பத்ராசன மாகும். ஒழிந்த உத்தர பீடம் நாலும் ஈசானேந்த்ரன் நின்று அபிஷேகம் பண்ணுகிற பத்ராசன மாகும்.

இப்படிச் சொல்லப்பட்ட பர்வதங்களும், வாபிகளும், கூடங்களும், பாண்டுக ஆதியாகிய சிலைகளும் ஸர்வமும் நாநா மணி நிர்மிதங்களும்[1] வனங்களும் வேதிகைகளும் தோரண த்வாரங்களு மாகி இருக்கும் என்று அறிவது.

---

39 அடிக்குறிப்பு : தமனீய - சுட்ட பொன்; அபிமுகமும் - நோக்கி தனு-வில்; வ்ருத்தம் - வட்டம்; பத்ராசனம் - தேவந்திரன் இருக்கை.
பா.பே. 1 தெற்கு — ரக்த வர்ணமாகும். இப்பகுதி மூலத்தில் விடுபட்டுள்ளது; சேர்க்கப்பட்டது

ஜம்பூ மரம்

அனந்தரம், ஜம்பூத் வ்ருக்ஷம் இருக்கிற ஸ்தான முதலானதும் பரிவார வ்ருக்ஷங்களும் ஸ்தானங்கள்து ஸ்வரூபம் சொல்லுதும்:

நீலி பர்வதத்துக்கு சமீபத்திலே ஸீதா நதிக்கு பூர்வ தடத்திலே மந்தர பர்வதத்துக்கு ஈஸான்ய திசையிலே உத்தர குருவிலே ஐஞ்னூறு யோஜனை அகலம் நீளத்திலே வ்ருத்தமாய் ஜம்பூ வருக்ஷம் இருக்கிற ஸ்தலமாகும். அந்த ஸ்தலம் பாஹ்யத்திலே அரை யோஜனை உயரமாய் க்ரமத்தால் பெருகி வந்து மத்தியிலே எட்டு யோஜனை உயரமாய் பொன் மயமாய் இருக்கும்.

அதன் மத்யத்திலே எட்டு யோஜனை உயரமும் பன்னிரண்டு யோஜனை அடி அகலம் தலையகலம் நாலு யோஜனையு மாகிய பீட மாகும். அந்த பீட மத்தியத்தில் ஜம்பூ வ்ருக்ஷம் அரை யோஜனை ஆழமும்[2] அரை யோஜனை அகலமு மாகி மரகத மயமாய் புதைய நின்ற பீடத்தின் மேலே இரண்டு யோஜனை உயரம் செவ்வைக்கு போய் அதன் மேலே அரை யோஜனை அகலமும் எட்டு யோஜனை நீளமுமாய் வஜ்ர மயமாகிய சாகை நாலு திக்கிலும் நாலு ஆகும்.

அந்த வ்ருக்ஷத்க்கு நாநா ரத்ன மயமாகிய உப சாகைகளும், இலைகள், தளிருகள், புஷ்பங்கள், மத்தளம் போன்ற பலங்களும், இவ்விடத்தில் நாவல் மரத்துக்குள்ள ஆகாரமாய் ப்ரத்வீ மயமாய் முன் சொன்ன நாலு சாகைக்கும் மேலே எட்டு யோஜனை உயரமாய் மத்தியத்திலே ஆறு யோஜனை அகலமும் தலையிலே நாலு யோஜனை அகலமுமாய் இருக்கும்.[40]

கிளையில் ஆலயம்

முன் சொன்ன சாகையில் நீலகிரியைப் பார்த்தாற் போல உத்த்ர சாகையில் ஜிந சைத்யாலய மாகும்.

---

40 சாகை - கிளை; பலங்களும்- பழங்களும்; ப்ரத்வீ மயமாய் - இம் மரங்கள் மண்ணுடலி (தாவரம் அல்ல என்று அறிக) ப்ரவேஷ்டித்து - சுற்றி இருந்து; அரைக்கால் யோஜனை - 1/16 யோஜனை - அரை யோஜனையில் அரைக்கால் யோஜனை என்பது தி.ஸா.மூலம் காதை 641. பா.வே. 1 நிஜதங்கரும் 2 - 1/4 யோஜனை என்பது தி.ஸா. மூலம்

கிளையில் வியந்தரர்

சேஷ சாகா த்ரயத்திலே யக்ஷகுல உத்பவ ஆதாரர் அநாதாரர் என்னும் வ்யந்தார் ஆவாஸ மாகும்.

வேதிகை

இந்த வ்ருக்ஷம் நிற்கிற பீடத்தின் புறம்பு ஸ்தலம் அந்த்ய பர்யந்தம் வலயம் வலயமாக ப்ரவேஷ்டித்திருந்து அரை யோஜனை உயரத்திலும் அரைக்கால் யோஜனை அகலமுமாய் நாநா ரத்ன ஸங்கீர்னங்களு மாகிய அம்புஜ வேதிகை பன்னிரண்டு என்று அறிவது.

துணை மரங்கள்

அந்த ப்ராகாரங்கள் பன்னிரெண்டுக்கும் நாலு திக்கிலும் ஒவ்வொரு ப்ராகாரத்துக்கு நாலு நாலு கோபுர வாசல்களுமாகி அந்த வேதிகைக்குள் ப்ராகாரம் பன்னிரண்டிலும் இருக்கிற பரிவார வ்ருக்ஷ ப்ரமாணமும் ஸ்வரூபமும் சொல்லுதும் பன்னிரண்டாம் ப்ராகாரமும் பதினோராம் ப்ராகாரமும் வருக்ஷ சூந்யம்.

பத்தாம் ப்ராகாரத்தில் திக்குகளில் பதினாலும் பதினாலும் விதிக்குகளில் பதிமூன்று பதிமூன்றுமாகி நூத்திஎட்டு விருக்ஷ்ம் சுரோத்தமருக்கு இருப்பிடமாகும்.

ஒன்பதாம் ப்ராகாரத்தில் பூர்வ திக்கில் தேவியர் வருக்ஷம் நாலாகும்.

எட்டாம் ப்ராகாரத்தில் வனங்களும் வ்ரத்தமும் சதுரஸ்ர முதலாகிய வாபிகளும் ஆகும்.

ஏழாம் ப்ராகாரத்தில் விருக்ஷ்ம் சூன்யமாகும்.

ஆறாம் ப்ராகாரத்தில் நாலு திக்கிலும் கூட அங்க ரக்ஷகர்க்கு பதினாறாயிரம் (16,000) வ்ருக்ஷ மாகும்.

ஐந்தாம் ப்ராகாரத்தில் ஈஸான்யத்திலும் உத்தர திசையிலும் வாயு திசையிலும் நாலாயிரம் வ்ருக்ஷம் ஸாமாநிகர்க்கு ஆகும்.

நாலாம் ப்ராகாரத்தில் அக்னி திசையில் அப்யந்தர பரீஷர்க்கு முப்பத்திராயிரம் (32,000) வ்ருக்ஷ மாகும்.

மூன்றாம் ப்ராகாரத்தில் யம திசையில் மத்யம பரீஷர்க்கு நாற்பதினாயிரம் (40,000) வ்ருக்ஷ மாகும்.

இரண்டாம் ப்ராகாரத்தில் நைருதி திசையில் பாஹ்ய பரீஷர்க்கு நாற்பத்தெண்ணாயிரம் *(48,000)* வ்ருக்ஷ மாகும்.

ப்ரதம ப்ராகாரத்தில் மஹா வ்ருக்ஷம் நிற்கிற பீடத்துக்கு பச்சிம திசையில் ஸேநா மஹத்தர்க்கு ஏழு வ்ருக்ஷ மாகும்.

ஆக, பரிவார வ்ருக்ஷம் லக்ஷத்து நாற்பதினாயிரத்து ஒரு நூற்று ஒருபத்தொன்பது - *1,40,119*[41] ஜம்பூ வ்ருக்ஷ ப்ரமாணத்தில் அர்த்த ப்ரமாணமும் ப்ரத்யேக மாகும்

இந்த வ்ருக்ஷங்களில் ஆதார அநாதார தேவர்கள் பரிவாரர்களுக்கு ஆவாஸம் ஆகும்.

ஆக, முக்ய வ்ருக்ஷம் கூட லக்ஷத்து நாற்பதினாயிரத்து ஒரு நூற்று இருபது *1,40,120.*

சால்மலி மரம்

அத, ஸால்மலி வ்ருக்ஷ ஸ்வரூபம் சொல்லுதும்: ஸீதோதா நதிக்கு அபர தடத்தில் நிஷத பர்வத ஸமீபத்தில் மஹா மேரு பர்வதத்துக்கு நைருதி திசையில் தேவகுரு க்ஷேத்திரத்தில் மனோஹர மாகிய ரூப்யு ஸ்தலத்தில் பரிவார வ்ருஷங்கள் கூட ஸால்மலி வ்ருஷம் இருந்ததற்கு வர்ணனைகள் ஜம்பூ வ்ருக்ஷத்துக்குச் சொன்ன வர்ணனைகளே வர்ணனை ஆகும்.

விசேஷமாவது தக்ஷிண சாகையில் ஜிந சைத்யாலயமும் ஸேஷ த்ரய சாகையில் பவந வாஸிக பேத ஸ்வர்ண குலத்தில் கருடபதி வேணு - வேணுதாரினர் க்ரஹ மாகும்.

போக - கர்ம பூமிகள்

அநந்தரம், போக பூமிகள், கர்ம பூமிகள் விபாகம் சொல்லுதும்:

---

41 சூன்யம் - ஒன்றுமில்லை; வர்த்தம் - வட்டம் ; சதுரஸ்ர - நாற்கோணம்; *16,000 - 4 x 4000;* அர்த்த ப்ரமாணம் - ஜம்பூவுக்கு சொல்லப்பட்ட அளவுகளில் பாதி அளவுடையான பரிவார விருக்ஷங்கள்; ஜம்பூ - நாவல் 108 + 4 + 16000 + 4000 + 32000 + 40000 + 48000 + 7 = 1 40 119 இதனுடன் மூல விருட்சத்தைக் கூட்ட *1,40,120* ஆகும்; அர்த்த ப்ரமாணம் - பாதி அளவு;

உத்தரகுரு தேவகுரு



தேவகுரு உத்தரகுரு க்ஷேத்ரம் இரண்டும் உத்தம போக பூமி ஹரிவருஷ ரம்யக க்ஷேத்ரம் இரண்டும் மத்யம போக பூமி ஹைமவத ஹைரண்யவத க்ஷேத்திரம் இரண்டும் ஜகன்ய போக பூமி.

இவைகளுக்கு ஸேஷங்கள் ஸர்வமும் கர்ம பூமிகளே, ஆகும்.

யமகிரி

அத, யமக கிரி ஸ்வரூபம் சொல்லுவதும்

நீலி பர்வதத்துக்கு தெற்காக ஆயிரம் யோஜனை இடைவிட்டு ஸீதா நதிக்கு உபய தடத்திலும் ஐஞ்ஞூறு யோஜனை நடு இடைவிட்டு கிழக்கே சித்ர கூடமும் மேற்கே விசித்ர கூட மென்றும் பர்வதம் இரண்டு.

நிஷத பர்வதத்துக்கு வடக்காக ஆயிரம் யோஜனை இடைவிட்டு ஸீதோதா நதிக்கு உபய தடத்திலும் ஐஞ்ஞூறு யோஜனை நடு இடைவிட்டு கிழக்கே யமககூடமும் மேற்கே மேக கூடமும் என்னும் பர்வதம் இரண்டாக, நாலும் யமககிரி என்னும் பர்வதம் வ்ரத்தமாய் ஆயிரம் யோஜனை உயரமும் அடி அகலம் ஆயிரம் யோஜனையும் மத்யத்தில் அகலம் எழுநூத்தி ஐம்பது யோஜனையும் தலையகலம் ஐஞ்ஞூறு யோஜனையும் ப்ரத்யேக மாகும்.

அதன் சிகரத்தில் இருக்கிற தேவர்களுக்கு அந்த அந்த பர்வதத்துக்குச் சொன்ன பெயர்தானே அந்த அந்த பர்வதங்களில் நிற்கிற தேவர்களுக்கும் பெயராகும்.

பொய்கைகள்

இப்பால், மேரு பர்வதத்துக்கு பூர்வ அபர தக்ஷிண உத்தரத்தில் இருக்கிற பொய்கை ப்ரமாணங்களும், ஒவ்வொரு பொய்கையிலும் உபய தடத்திலிருக்கிற ஆஞ்சன கிரி ஸங்க்யைகளும், அதன் உத்ஸேதாதிகளும், சொல்லுதும்:

---

42 ஆவாஸம் - இருப்பிடம், கூட - சேர்க்க அத -இனி ஸால்மலி - இலவமரம் அபரதடம் - மேற்கு கரையில்; ரூப்ய - அழகிய ; ஸேஷ த்ரய சாகை - மீதி மூன்று கிளை; ஸால்மலி மரமும் தன் பரிவார மரங்களுடன் 1,40,120 என்று அறிக; போகபூமி - 'உத்தர தெக்கண குரவம் உத்தமம், மத்திமம் அரிவருடம் இரம்மியம், அத்தகம் ஐவதம் ஐரண்ணியம் இவை, நித்தமாய்ப் போகங்கள் நின்ற பூமியே' மே.பு. 1235

முன்சொன்ன நீலி பர்வதத்துக்கு தெற்கு உத்தர குருவில் சித்ர விசித்ர பர்வதத்துக்கு ஐஞ்ஞூறு யோஜநாநந்தரம் விட்டு நீல, உத்தரகுரு, சந்த்ர ஐராவத, மால்யவான் என்னும் பெயருடைய பொய்கைகள் ஐந்து. இந்து பொய்கைகள் ஐந்தும் ஒவ்வொன்றுக்கு நீளம் ஆயிரம் யோஜனை, அகலம் ஐஞ்ஞூறு யோஜனை ஆழம் பத்து யோஜனை உடையதாய் ஒன்றுக்கொன்று அந்தரம் ஐஞ்ஞூறு யோஜனை உடையதாய் ஸீதாநதி நடுவே போறத்துக்கு (போவதற்கு) இரு பார்ச்சவங்களும் வேதிகை த்வாரங்களை உடையதாய், ஒவ்வொரு பொய்கைக்கு ஹிமவத் பர்வதத்திலே இருக்கிற பத்மை என்னும் பொய்கைக்குச் சொன்ன ப்ரமாண லக்ஷத்து நாற்பதினாயிரத்து ஒருநூற்று ஒரு பத்தாறு 1,40,116 தாமரைப் பூவை உடைய தத் கர்ணிகையில் நாக கமாரிக்கு ஆவாஸங்களும் உடையதாய் இருக்கும்.

இவ்வண்ணம் பூர்வ பத்ராசால வனத்திலும் முன் சொன்ன பெயரை உடையதாய், அளவு ப்ரமாணம் முதலானதும் முன் சொன்னபடியே உடையதாய் ஸீதா நதியை நடுவே உட் கொண்டு இருக்கும் என்று அறிவது.

இவ்வண்ணம் நிஷத பர்வத்துக்கு வடக்கு தேவகுருவில் யமக மேகம் என்னும் பர்வதத்துக்கு ஐநூறு யோஜநானந்தரம் விட்டு நிஷத, தேவகுரு, சூர, சுலஸ, வித்யுத் என்னும் ஐந்து பொய்கை முன் சொன்னபடியே அகல நீள முதலானதும் தேவர்கள் ஆவாஸங்களும் உடையதாய் இருக்கும்.

இவ் வண்ணம் பச்சிம பத்ராசால வனத்திலும் முன் சொன்ன நிஷதாதி பெயரை உடையதாய் அளவு ப்ரமாண முதலானதும் முன் சொன்னபடியே உடையதாய் ஸூதோதா நதியை நடுவே உட்கொண்டு இருக்கும் என்று அறிவது.

---

43 பத்மை - பார்க்க ப..55; பொய்கை இருபதிலும்- தேவகுரு, உத்தரகுரு, கிழக்கு பத்ராஸாலம், மேற்கு பத்ராஸாலம் ஆகிய நான்கு இடங்களிலும் ஐந்து ஐந்து பொய்கைகளாக இருபது பொய்கைகள் இங்கே கூறப்பட்டுள்ளன. 28,02,320 =, 1,40,116 x 20; தில்லோய பண்ணத்தி' யில் பத்து பொய்கைகளே கூறப்படுகின்றன; பார்க்க காதை 4/2116, 4/2154

பா.வே. 1. சீதோதா நதி என்று இருத்தல் வேண்டும்

2. அஞ்சன கூடம் என்பது தி.ஸா.மூலம்

தாமரைகள் எண்ணிக்கை

இவை நாலு திக்கிலும் பொய்கை இருபதிலும் இருக்கிற தாமரை இருபத்தெட்டு லக்ஷத்து இரண்டாயிரத்து முன்னூற்றிருபதிலும் *28,02,320* நாக குமாரியர் ஆவாஸமாகும்.

காஞ்சன மலைகள்

இந்த பொய்கைகளில் ஒவ்வொன்றுக்கும் இரு பார்ச்வத்திலும் ஐந்து ஐந்து காஞ்சன கிரியாக இருநூறு காஞ்சன கிரி ப்ரத்யேகம் உயரம் நூறு யோஜனை, அடி அகலம் நூறு யோஜனை, மத்யத்தில் அகலம் எழுபத்தைந்து யோஜனை, தலையகலம் ஐம்பது யோஜனை உடையதாய் ஸ்வர்ண வர்ணமும் ஆகும்.

அந்த அந்த பர்வதங்களில் இருக்கிற தேவர்களுடைய நாமமும் அந்தஅந்த பர்வத்தினுடைய பெயர் என்று அறிவது.

திக் கஜ மலைகள் :

இப்பால், திக் கஜ பர்வதங்கள் ஸ்வரூபம் சொல்லுதும்

மேருவுக்கு கிழக்கு[1] ஸீதா நதி வடதடத்தில் பத்மோத்தரம் என்னும் கூடம்; தக்ஷிண தடத்தில் நீலவத் கூடம்; மேருவுக்கு தெற்கு சீதா நதிக்கு பூர்வ தடத்தில் ஸ்வஸ்திக் கூடம் ; அபர தடத்தில் அஷத[2] கூடம் ; மேருவுக்கு மேற்கு ஸிதோதா நதிக்கு தக்ஷிண தடத்தில் குமுதம் என்னும் கூடம்; உத்தர தடத்தில் பலாசம் என்னும் கூடம் ; மேருவுக்கு வடக்கு ஸீதா நதிக்[illegible]ர தடத்தில் அவதம்ஸ கூடம்; பூர்வ தடத்தில் ரோசனம் என்னும கூடமாக எட்டும் உயரம் நூறு யோஜனை, அடிஅகலம் நூறு யோஜனை, தலையகலம் ஐம்பது யோஜனை ஆகும்.

இதன் சிகரத்தில் திக் கஜேந்த்ர தேவர்கள் ஆவாஸ மாகும். இவர்கள் ஆவாஸம் ஆகையினால் பழைய பேரும் இருக்க திக் கஜ பர்வதம் என்னும் பெயராயிற்று.

யானை தந்தம் மலைகள்

இப்பால், கஜ தந்த பர்வதங்களுக்கு நாமம் முதலானது சொல்லுதும்:

மேருவுக்கு ஈஸான்யத்தில் மால்யவான் என்னும் பர்வதம் வைடூர்ய மயமாய் யானை கொம்பு போல மேரு பர்வத்தையும் நீலி பர்வத்தையும் முட்டி இருந்தது. அக்னி திசையில் மஹாஸௌமனஸம் என்னும் பர்வதம் ரூப்ய மயமாய் யானைக் கொம்பு போல மேருவையும் நிஷதத்தையும் முட்டி இருந்தது. நைருதி திசையில் வித்யுத் ப்ரபம்

என்னும் பர்வதம் தமனீய மயமாய் யானை கொம்பு போல மேருவையும் நிஷத்தையும் முட்டி இருந்தது. வாயு திசையில் கந்தமாதனம் என்னும் பர்வதம் ஹேம மயமாய் யானை கொம்பு போல மேருவையும் நீலி பர்வதத்தையும் முட்டி விடுகிறது.

இவை நாலுக்கும் அளவு ப்ரமாணங்கள் பிறகே சொல்லுதும்:

விதேஹம்

இப்பால் விதேஹ தேஸங்களுக்கு விபாகம் சொல்லுதும்: நீலி கிரிக்கு தெற்கு ஸீதா நதிக்கு வடக்கு, நிஷதத்துக்கு வடக்கு ஸீதா நதிக்கு தெற்கு, நிஷதத்துக்கு வடக்கு ஸீதோதா நதிக்கு தெற்கு, ஸீதோதா நதிக்கு வடக்கு நீலிக்கு தெற்கு என்னும் இந்த நாலு வகையும், பூதாரண்ய தேவாரண்ய வேதிகைக்கும் பூர்வாபர பத்ராஸால வன வேதிகைக்கு நடுவாக மத்யத்தில் இருக்கிற விபங்க நதி மூன்று மூன்றுகளாலும் வக்ஷார பர்வதம் நாலு நாலுகளாலும் வேறுபட்டு விதேஹம் என்னும் தேஸம் முப்பத்திரண்டு நாடாகும்.

இப்பால், தேஸங்களுக்கும் வக்ஷார பர்வதங்களுக்கும் விபங்க நதிகளுக்கும் நாமம் முதலானது சொல்லுதும்:

கிழக்கு விதேஹ நாடுகள்

ஸீதா நதிக்கு வடக்கு பத்ராஸால வன வேதிகைக்குக் கிழக்கு நாடு(1) கச்சா. அதன் கிழக்கு சித்ர கூட வக்ஷார பர்வதம். அதன் கிழக்கு (2) ஸுகச்சா நாடு அதன் கிழக்கு கெந்தவதி என்னும் விபங்க நதி. அதன் கிழக்கு (3) மஹா கச்சா நாடு, அதன் கிழக்கு பத்மகூட வக்ஷார பர்வதம். அதன் கிழக்கு (4) கச்சாவதி நாடு. அதன் கிழக்கு த்ரஹவதி நதி. அதன் கிழக்கு (5) ஆவர்த்தா நாடு அதன் கிழக்கு நளின கூட வக்ஷார பர்வதம் அதன் கிழக்கு (6) லாங்கலாவர்த்தா நாடு. அதன் கிழக்கு பங்கவதி நதி. அதன் கிழக்கு (7) புஷ்கலா நாடு. அதன் கிழக்கு ஏகசைல வக்ஷார பர்வதம் அதன் கிழக்கு (8) புஷ்கலாவதி நாடு. அதன் கிழக்கு தேவாரண்ய வேதிகை

ஆக வடகரையில் நாடு எட்டு, வக்ஷார பர்வதம் நாலு, விபங்க நதி மூன்று மாகும்.

ஸீதைக்கு தெந் கரையில் தேவாரண்ய வன வேதிகைக்கு மேற்கு (9) வஸ்தா என்னும் நாடு. அதன் மேற்கு த்ரிகூடம் என்னும் வக்ஷார பர்வதம். அதன் மேற்கு (10) ஸுவத்ஸா நாடு. அதன் மேற்கு தப்தஜலா நதி. அதன் மேற்கு (11) மஹாவத்ஸா நாடு. அதன் மேற்கு வைஸ்ரவன வக்ஷார பர்வதம். அதன் மேற்கு (12) வத்ஸகாவதி நாடு.

அதன் மேற்கு மத்தஜலா நதி. அதன் மேற்கு (13) ரம்யா நாடு. அதன் மேற்கு அஞ்சன வக்ஷார பர்வதம். அதன் மேற்கு (14) ஸௌரம்யா நாடு. அதன் மேற்கு உன்மத்தஜலா நதி. அதன் மேற்கு (15) ரமணீய நாடு அதன் மேற்கு அஞ்சன வக்ஷார பர்வதம். அதன் மேற்கு (16) மங்களாவதி நாடு அதன் மேற்கு பத்ராஸால வன வேதிகை என நாடு எட்டு, வக்ஷார பர்வதம் நாலு விபங்க நதி மூன்று மாகும்.

மேற்கு விதேஹ நாடுகள்

மேற்கு விதேஹம் ஸீதோதா நதிக்கு தென் கரையில் பத்ராஸால வன வேதிகைக்கு மேற்கு (17) பத்மா நாடு. அதன் மேற்கு ஸ்ரத்தாவான் வக்ஷார பர்வதம்அதன் மேற்கு (18) ஸௌபத்மா நாடு. அதன் மேற்கு க்ஷீரரோதா நதி. அதன் மேற்கு (19) மஹா பத்மா நாடு. அதன் மேற்கு விகடவான் பர்வதம். அதன் மேற்கு (20) பத்மகாவதி நாடு அதன் மேற்கு க்ஷீரோதா நதி. அதன் மேற்கு(21) ஸங்கா நாடு. அதன் மேற்கு ஆஸீவிஷ பர்வதம். அதன் மேற்கு (22) நளினா நாடு. அதன் மேற்கு ஸ்ரோதோந்தர் வாஹினி நதி. அதன் மேற்கு (23) குமுதா நாடு. அதன் மேற்கு ஸுகாவத் பர்வதம் அதன் மேற்கு (24) ஸரிதா நாடு. அதன் மேற்கு பூதாரண்ய வன வேதிகை என நாடு எட்டு, வக்ஷார பர்வதம் நாலு விபங்க நதி மூன்றுமாகும். ஸீதோதா நதிக்கு வட கரையில் பூதாரண்ய வன வேதிகைக்கு கிழக்கு (25) வப்ரா நாடு. அதன் கிழக்கு சந்திரமாலா பர்வதம். அதன் கிழக்கு (26) ஸுவப்ரபா நாடு அதன் கிழக்கு கம்பீரமாலினி நதி. அதன் கிழக்கு (27) மஹாவப்ரா நாடு அதன் கிழக்கு சூர்யை மாலா பர்வதம் அதன் கிழக்கு (28) வப்ராகவதி நாடு அதன் கிழக்கு பேநமாலினி நதி. அதன் கிழக்கு (29) கந்தா நாடு. அதன் கிழக்கு நாக மாலா பர்வதம் அதன் கிழக்கு (30) ஸௌகந்தா நாடு அதன் கிழக்கு கிழக்கு ஊர்மிமாலினி நதி. அதன் கிழக்கு (31) கந்தீலா நாடு. அதன் கிழக்கு தேவமாலா பர்வதம். அதன் கிழக்கு (32) கந்தமாலினி நாடு. அதன் கிழக்கு பத்ராசால வன வேதிகை என நாடு எட்டு வக்ஷார பர்வதம் நாலு விபங்க நதி மூன்றுமாகும். ஆக விதேகத்தில் நாடு முப்பத்திரண்டு வக்ஷார பர்வதம் பதினாறும் விபங்க நதி பண்ணிரன்டும் ஆகும். இந்த வக்ஷார பர்வதம் பதினாறும் ஹேம மயம் என்று அறிவது.

---

44 நாடு - மே.பு. 1238 முதல் 1241 வரையான பாடல்கள் நாட்டுப்பெயர்களை கூறும் : நாலுமுன் நதியிலும் நாலுநால் வரையிலும், நாலுநால் இரட்டியாய் விதேக நாடு நின்றவே மே.பு.1242.

விபங்க நதிகள் :

விபங்க நதி பன்னிரெண்டும் ரோஹித நதிக்குச் சொன்னபடி ஒவ்வொன்றுக்கும் புறப்படுகிற இடத்தில் பன்னிரெண்டரை *(12 1/2)* யோஜனை அகலமும் மஹா நதி ப்ரவேஸத்தில் நூத்தி இருபத்தைந்து யோஜனை அகலமும் பரிவார நதிகள் இருபத்தெண்ணாயிரமும் ஆகும். *28000*

தோரண த்வாரமும் புறப்படுகிற இடத்தில் பதினெட்டே முக்கால் யோஜனை *(18 3/4)* யோஜனை உயரமும் ஸீதா ஸீதோதா நதி பிரவேசத்தில் நூத்தி எண்பத்தேழரை*(1871/2)*. யோஜனை உயரமாகும் அந்த தோரண த்வாரம் எல்லாவற்றிலும் சிகரத்தில் திக்கன்யர் ஆவாசமாகும்.

தேவர்கள் இருப்பிடம்:

கஜ தந்த பர்வத கூடம் *(4)* வக்ஷார பர்வதத்திலும் *(16)* அந்த அந்த பர்வதத்துக்கு பெயரை உடையதான தேவர் இருப்பிடமாகும். *20*

அந்த பர்வதங்கள் எல்லாம் தனித்தனி காஞ்சன வேதிகைகளும் வனங்களுடனும் கூடி இருக்கும்.

தேவாரண்யம் - பூதாரண்யம்

இப்பால், தேவராண்யம் பூதாரண்யம் இருக்கிற ஸ்வரூபம் சொல்லுதும்:

பூர்வ விதேஹத்துக்கு கடைசியில் ஸீதா நதி இரு பார்ச்வத்திலும் தேவாரண்ய வனம் இரண்டாகும். அந்த வன வேதிகையும் பத்ராஸால வன வேதிகை எப்டி நிஷத நீலி பர்வதத்தை முட்டி இருந்தது அப்படியே லவண ஸமுத்ரத்து அண்டையிலே நிஷத நீலி பர்வதத்தை முட்டி இருந்த நடு மத்யத்திலேதோரண த்வாரத்தை உடைத்தாய் தேவாரண்ய வன வேதிகை இருக்கும்.

இவ்வண்ணம் அபர விதேஹத்துக்குக் கடைசியில் ஸீதோதா நதிக்கு இரு பார்ச்வத்திலும் பூதாரண்ய வனம் இரண்டும் முன் தேவாரண்யத்துக்குச் சொன்னபடியே இருந்தது.

பா.வே; சீதோதா - திஸா- மூலம்

மரங்கள் பெயர்:

அந்த வனம் நாலிலும் வ்ருக்ஷங்கள் ஜம்பீர ஜம்பூ கதலி அசோகம் (கங்கேல்லி) மல்லி முதலாகிய விருக்ஷங்களும் பகு பேத தேவ ஸரோவரங்களும் வாபிகளும் ப்ராஸாத க்ரஹங்களும் கூடி இருக்கும் என்று அறிவது.

ததநந்தரம் மேருவுக்கு பூர்வாபர வனங்களுக்கும் விதேஹ நாடுகளுக்கும் வக்ஷார பர்வதங்களுக்கும் விபங்க நதிகளுக்கும் ப்ரமாணம் சொல்லுதும்.

மஹா மேரு பர்வதம் பதினாயிரம் *(10000)* யோஜனை, பூர்வ விதேஹ பத்ராசால வனம் இருபத்திராயிரம் *(22000)*, அபர பத்ராசால வனம் இருபத்திராயிரம் *(22000)*, ஆக நாற்பது நாலாயிரம் *(44000)* யோஜனை கச்சா ஆதி தேஸங்கள் தேஸமொன்றுக்கு இரண்டாயிரத்து இருநூற்று ஒரு பத்திரண்டே முக்காலரைக்கால யோஜனையாக கிழக்கே நாடு எட்டு மேற்கே நாடு எட்டு ஆக நாடு பதினாறுக்கும் முப்பத்தையாயிரத்து நானூற்று ஆறு *(35,406)* யோஜனை. வக்ஷார பர்வதம் பர்வதம் ஒன்றுக்கு ஐஞ்ஞூறு யோஜனையாக கிழக்கே பர்வதம் நாலு மேற்கே பர்வதம் நாலு ஆக பர்வதம் எட்டுக்கு நாலாயிரம் *(4000)* யோஜனை. விபங்க நதி ஒன்றுக்கு நூத்தி இருபத்தைந்து யோஜனையாக கிழக்கே நதி மூன்று மேற்கே நதி மூன்று ஆக நதி ஆறுகளுக்கு எழுநூற்றைம்பது யோஜனை. கிழக்கு தேவாரண்யம் இரண்டாயிரத்து தொளாயிரத்து இருபத்திரண்டு *(2922)* யோஜனை. மேற்கு பூதாரண்யம் இரண்டாயிரத்து தொளாயிரத்து இருபத்திரண்டு *(2922)* யோஜனை. ஆக லக்ஷம் *(100000)* யோஜனை ஆகும்.

இவை நடு மத்தியில் ஸீதா-ஸீதோதா நதி இரு பார்ச்வத்திலும் இப் பிரமானம் என்று அறிக. நடு மத்தியத்திலும் குலகிரி பார்ச்வத்திலும் விபங்க நதிகளுக்கும் தேசங்களுக்கும் சற்று ஹீநாதிகம் உண்டு என அறிவது.

---

45 அடிக்குறிப்பு: ஜம்பீர- நாரத்தைமரம்; கங்கேல்லி -அசோகம் பகு-பல; **10000+44000+35406 + 4000+ 750+ 2922+ 2922 =100000** ஜம்பூ தீவின் கிழக்கு மேற்கு விஸ்தாரத்தில் அடங்கியவை இவை; *335406 2212 7/8 16*

விதேக ஊர்கள்:

இப்பால், விதேஹ தேசங்களுக்கு க்ராமாதி லக்ஷணம் சொல்லுவதும்:

விதேஹ தேசத்தில் இருக்கிற முப்பத்திரண்டு நாட்டுக்கும் தனிதனி சுற்றிலும் வேலி சூழுழப்பட்ட கிராமங்கள் தொண்ணூற்றாறு கோடி-96,00,00,000; மதிலும் நாலு கோபுரங்களும் உடைத்தான நகரங்கள் இருபத்தாறாயிரம்-26,000; நதியினாலும் கிரியினாலும் வேஷ்டனம் கேடங்கள் பதினாறாயிரம் 16000; பர்வத வேஷ்டனம் கர்வடங்கள் இருபத்து நாலாயிரம் (24000) ஐந்நூறு கிராமங்கள் கூடிய மடம்பங்கள் நாலாயிரம் 4000; ரத்னங்ககளுக்குஸ்தானம் பத்தனங்கள் நாற்பத்தெண்ணாயிரம். (48000) நதியினால் வேஷ்டனம் த்ரோணங்கள் தொண்ணூற்றொன் பதினாயிரம் 99000; ஸமுத்திரத்தால் சூழப்பட்ட ஸம்வாஹனங்கள் பதினாலாயிரம் 14000 பர்வத்தின் மேலே இருக்கிற துர்க்க மாடவிகள் இருபத்தெண்ணாயிரம் 28000

விதேஹ—மனிதர்

இந்த தேசங்களிலே இருக்கிற மனுஷ்யர்க்கு ஸகலர்க்கும் சரீரோத்ஸேதம் ஐஞ்னூறு *500* வில்; ஆயுஷ்யம் ஜகன்யம் அந்தர்முகூர்த்தம்; உத்க்ரஷ்ட ஆயுஷ்யம் பூர்வ கோடி வருஷமாகும்.

விதேஹ உள் தீவுகள்

இப்பால் விதேஹ தேசத்தில் இருக்கிற உப சமுத்திரங்களில் அந்தர த்வீப ரூப முதலானது சொல்லுதும்

ஒவ்வொரு தேசத்துக்கும் அந்த்ர த்வீபம் ஐம்பத்தாறு. ரத்னாகரங்களில் இருபத்தாறாயிரம் *(26000)*. ரத்னங்கள் க்ரய விக்ரயஸ்தான பூத குக்ஷி வாஸங்கள் எழுநூறு.

வியந்தரர் தீவு :

இப்பால் அந்த தேசத்தில் மாகத, வரதநு, ப்ரபாஸகர் என்னும் வ்யந்தரர் மூவர் இருக்கிற ஸ்தானமும் ஸீதா-ஸீதோதா நதி வேதிகைக்கு சமீபத்திலே ஜலத்துக்குள்ளே கிழக்கு மேற்காக மாகத வரதநு ப்ரபாசகர் என்னும் வயந்தர அமரர் இருக்கும் த்வீபம் மூன்று மூன்றாகும்.

விதேகச் சிறப்பு :

அந்த க்ஷேத்ரங்களில் மழை முதலான ஸ்வரூபம் சொல்லுதும்:

காளமேகம் என்னும் மேகம் வருஷா காலத்தில் ஒவ்வொரு நாளாக நாற்பத்தொன்பது நாள் வர்ஷிக்கும். தவள வர்ண துரோண மேகம் [illegible]ரண்டு நாளாக எண்பத்து நாலு நாள் வர்ஷிக்கும். துர்பிக்ஷமும் இல்லை; அதி வ்ருஷ்டியும் அநா வ்ருஷ்டியுமில்லை.

---

1 ஹீநாதிகம் - குறைவு, கூடுதல், வேலியால் சூழப்படுவது கிராமம் ; மதிலும் கோபுரமும் உடையது நகரம்; நதி மலைகளால் சூழப்படுவது கேடம்; மலையால் சூழப்படுவது கர்வடம் (குறிஞ்சி நிலம்); ரத்னம் முதலியன கிடைப்பன பத்தனம்; நதியால் சூழப்படுவது த்ரோணம் (மருத நிலம்) கடலால் சூழப்படுவது ஸம்வாஹனம் (நெய்தல் நிலம்) வேஷ்டனம் -சூழப்படுதல் ; துர்க்க மாடவி- அடர்காடு; சரீர உத்ஸேசம் - உடல் உயரம் ; 'செவ்வில் ஐந்து நூறுயர்ந்து புவ்வகோடி ஆயுகம், இவ்வகைய நாட்டுள் என்றும் வெவ்வினைகள் தீர்ப்பது' மே.பு.*1245*.

மூஷிகம், சலப சுக பாதையு மில்லை ஸ்வ சக்ர பர சக்ர பாதையுமில்லை.[2] கோமாரி ஆதி மாரிகளு மில்லை

பிற தெய்வங்கள் இல்லை

குதேவதைகளும், அந்ய லிங்கிகளும், அன்ய மதங்களு மில்லை. ஸதா காலமும் கேவலிகளும் ஸலாக புருஷர்களும், ரித்தி ஸம்பன்ன ஸாதுக்களும் முதலான பேரும் உண்டு என்று அறிவது.

இப்பால் ஐந்து மந்தரத்திலும் சூழ்ந்த நாட்டில் தீர்த்தகரரும், சகல சக்ரவர்த்திகளும் வர்த்திக்கிற ஜகன்ய உத்க்ரஷ்ட ஸங்க்யை சொல்லுதும்.

உத்க்ரஷ்டத்தினால் நூற்றருபது (160) ஜகன்யத்தில் ஸீதா - ஸீதோதை நதிக்கு இரு பார்ச்வத்திலும் மந்தரத்து அண்டை நாலு நாட்டிலும் நாலு பேராக ஐந்து மந்தரத்துக்கு இருபதாகும். ஐந்து பரதத்திலும் ஐந்து ஐராவதத்திலும் கூடி உத்கரஷ்டம் நூற்று எழுபதாகும். மஹா சக்ரவர்த்திகளும் அவ்வளவே ஆகும்.

அரசர் வைபவங்கள்

இப்பால், அந்த நாட்டில் சக்ரவர்த்திகள் ஸம்பத்தினுடைய ஸ்வரூபம் சொல்லுவதும்.

---

2 அந்தரத்வீபம் - ஒவ்வொரு விதேஹ நாட்டு ஆர்ய கண்டத்தில் ஒவ்வொரு உப ஸமுத்ரம் உண்டு. அதன் நடுவில் ஒரு தீவு; அத்தீவுக்கு இடையில் உள் தீவுகள் உள்ளன; அவை 56 ஆகும்; ரத்னாகரங்கள் - ரத்ன சுரங்கங்கள் ; க்ரய விக்ரய - வாங்குதலும் விற்றலும்; வர்ஷிக்கும் - பெய்யும்; மழை காலத்தில் 133 நாள்கள் அளவோடு மழை பொய்யும் என்பதாம்; துர்பிக்ஷம் - வறுமை; அதி வ்ருஷ்டி அதிக மழை; அநா வ்ருஷ்டி - காலம் தப்பிய மழை; மூஷிகம் - எலி; சலப - வெட்டுக்கிளி; சுக கிளி; சக்ர - அரசு ; மிகுந்த மழை, மழை இன்மை, எலி, விட்டில் கிளி, அரசண்மை என இவ்வாறினாலும் நாட்டுக்கு வரும் கேடு அங்கு இல்லை என்பதாம், இதனை 'ஈதி' என்பர்.

3 கோமாரி - மாடுகளுக்கு வரும் நோய்வகை, மாரி - நோய்; சாவு; அந்ய லிங்கி - வேறு மதத்தினர் ; 'இடையறாத அறிவொளி இரவி அங்கு எழுதலால் கடையிலா அறிவு இறைவன் ஆலயங்கள் அல்லது, படரொளி விமானத்தோடு பாயிருளத்தின்மை போல, விடையுலாலி ஆதியாய வேற்றுலிங்க இல்லையே மே.பு. 24; ஸலாக புருஷர் - தீர்த்தங்கரர் 24 பேர், சக்கரவர்த்திகள் 12 பேர், வாசுதேவர்கள் 9, பிரதிவாசுதேவர்கள் 9, பலதேவர் 9, என 63 மகாபுருஷர்கள் ; ஐந்து மந்தரத்திலும் ஐந்து

ஆனை எண்பத்து நான்கு நூறாயிரம் 84,00,000; ரதங்கள் எண்பத்து நான்கு நூறாயிரம் 84,00,000; குதிரைகள் பதினெட்டு கோடி 18,00,00,000; காலாள் எண்பத்து நாலு கோடி 84,00,00,000 ; காள மஹாகாள, பாண்டுக, மாணவக சங்க, நைஸர்ப்ப, பத்ம, பிங்கல, நாநா ரத்னம் என்னும் நவநிதிகளும், சதுர்தச ரத்னங்கள் பதினாலும் ஸ்தீரியர் தொண்ணூற்றாறாயிரம் 96,000 இது முதலான ஐஸ்வர்மும் ஆகும்.

அரசர் வகைப்பாடு

அதன் பிறகு ராஜா ஆதிராஜன் முதலான பேருக்கு லக்ஷணம் சொல்லுதும்.

அஷ்டாதஸ(18) ச்ரேணிக்கு அதிபதியும் மகுட்தரனுமாய் இருக்கிறவன் ராஜா, அஷ்டாதஸ ச்ரேணியாவன: ஸேநாபதி, கணகபதி , வணிகபதி, ஸேநா நாயக (தண்டபதி), மந்திரி(பஞ்சாங்க குசல மந்திரி) குல வ்ரத்தன், தளவரன், க்ஷத்ரியாதி சாதுர் வர்ணம் 4, சாதுரங்க ஸேநா 4, ப்ரோஹிதன், தேசாதிகாரி, ஸர்வாதிகாரி எனவாம்

இப்படி அஷ்டாதஸ ச்ரேணிக்கு அதிபதி ராஜா. அந்த ராஜா ஐநூறு பேருக்கு அதிபதி அதிராஜன், ஆயிரம் பேருக்கு அதிபதி மஹாராஜன்; இரண்டாயிரம் பேருக்கு அதிபதி அர்த்த மண்டலீகன்; நாலாயிரம் பேருக்கு அதிபதி மண்டலீகன்; எண்ணாயிரம் பேருக்கு

[illegible] 160 - ஒரு மேருவுக்கு 32 விதேக நாடுகள்; மேருவுக்கு 160 (32X 5) நாடுகள் ஆகின்றன. தீர்த்தங்கரர், சக்கரவர்த்தி, அர்த்த சக்கரவர்த்தி ஒரே சமயத்தில் தனித்தனியாக 160 பேர் இருக்க முடியும், விதேக நாட்டில், குறைந்தளவு ஒரு மேருவுக்கு நாலு பேராக 5 மேருவுக்கு 20 பேர் தனித்தனியாக இருக்க முடியும்; மந்தரத்து அண்டை மேருவுக்கு அண்மையில்; ஐந்து பரதம், ஐந்து ஐராவத க்ஷேத்திரங்களைக் கூட்டினால் ஒரே சமயத்தில் 170 தீர்த்தங்கரர், 170 சக்கரவர்த்திகள், 170 அர்த்த சக்கரவர்த்திகள் இருக்க முடியும், உயர்ந்த அளவு.

4 நவ நிதிகளும் - ஒன்பது நிதிகளும் ; ‘ சாலி முதலாகிய ... அருளும் என்ப நவநிதி எல்லா நன்கொடு சிறந்தே’ எனவரும் ஜீ.ஸ. அகவல் நவ நிதியால் பெறப்படுவனவற்றைப் பட்டியலிட்டுக் காட்டும் (பக். 112) ; ‘மாவானை ... வாளென்னும் ரத்தினமும் ’ எனப் பதினான்கு ரத்தினங்கள் பயன் சொல்லும் ஜீஸ.(ப. 113-117,) 96,000 ஆர்ய கண்ட அரச கன்னியர் 32,000 வித்யாதர அரச கன்னியர் 32,000 மிலேச்ச அரச கன்னியர் 32,000; ச்ரேணி - குழு கூட்டம்; கணகபதி - படைப்பிரிவு தலைவர்;

அதிபதி மஹா மண்டலீகன்; பதினாறாயிரம் பேருக்கு அதிபதி த்ரிகண்ட பதி; முப்பத்திராயிரம் பேருக்கு அதிபதி ஷட்கண்ட பதி.

ஆறு கண்டங்கள் அமைப்பு

இந்த தேசங்களுக்கு ஷட் (6) கண்ட ஸ்வரூபம் சொல்லுதும்.

ஒவ்வொரு தேஸத்துக்கு நடு மத்தியிலே கிழக்கு மேற்காக தேசம் உள்ள அளவும் ஒவ்வொரு வெள்ளியம் பெருமலையும், கங்கா ஸிந்து ஸமானமான இரண்டு இரண்டு நதிகளாலும் முப்பத்திரண்டு தேஸங்களும் ப்ரத்யேகம் ஷட்(6) கண்டங்களாகும்.

ஒவ்வொரு வெள்ளியம் பெருமலைக்கு இரண்டு இரண்டு குகைகள் பரத க்ஷேத்ரத்தில் வெள்ளியம் பெருமலைக்குச் சொன்னபடி ஆகும்.

நீல பர்வதத்து அண்டையில் நாடுகளுக்கு கங்கா ஸிந்து என்னும் பெயரையுடைத்தான இரண்டு இரண்டு நதிகள் பர்வத மூலத்தில் இருக்கிற இரண்டு இரண்டு குண்டங்களினின்றும் புறப்பட்டு அந்த அந்த வெள்ளியம் பெருமலை குகைக்குள் புகுந்து ஸீதா ஸாதோதா நதியை ப்ரவேஸிக்கும்.

ரக்தா - ரக்தோதை என்னும் இரண்டு இரண்டு நதிகள் நிஷத பர்வதத்தின் மூலத்திலிருக்கிற இரண்டு இரண்டு குண்டங் களினின்றும் புறப்பட்டு முன் சொன்னபடி வெள்ளியம் பெருமலை குகையுள் புகுந்து ஸீதா-ஸீதோதகையை ப்ரவேஸிக்கும் என்று அறிவது.

இந்த முப்பத்திரண்டு நாட்டுக்கு அறுபத்து நாலு நதியும் பரத க்ஷேத்ரத்தில் கங்கா சிந்துக்குச் சொன்ன வர்ணனையேயாகும்.

வெள்ளியம் பெருமலை :

வெள்ளியம் பெருமலைகளும் நாட்டுக்குள்ள ப்ரமாண அளவு ஐம்பது யோஜனை அடி அகலமும் இருபத்தி ஐந்து யோஜனை உயரமுமாய் அடியிலே இருந்து பத்து யோஜனை ஏறி இரு பார்ச்சுவமும் பத்து பத்து யோஜனை சுருங்கினவிடத்து வித்யாதர லோகமும் அதன் மேலே பத்து யோஜனை ஏறி இரு பார்வமும் பத்து பத்து யோஜனை சுருங்கினவிடத்து ஸௌதர்மேந்திரன் வாஹன தேவர்களாகிய ஆபியோக்கிய தேவர்கள் இருக்கும் மணி விசித்ர புரங்கள் ஆகும். அதன் மேலே ஐந்து யோஜனை ஏறின இடத்து சிகரத்தில் பத்து யோஜனை அகலம் ஆகும். அதனில் ஸித்தாயதன் ஆதி ஒன்பது ஒன்பது

கூடங்களாகும். அதில் பூர்ணபத்ரை என்னும் பெயரையுடைய கூடத்தில் விஜயார்த்த குமாரர் என்னும் தேவர் இருக்கும் ஆவாஸ மாகும்

பட்டணங்கள் பெயர்

அந்த வெள்ளியம் பெருமலைக்குப் பட்டணங்கள் ஸங்க்யையும் அதன் நாமங்களும் சொல்லுதும்:

விதேஹத்தில் இருக்கிற விஜயார்த்த பர்வதங்களுக்கு உபய ச்ரேணியில் அம்பத்தைந்து அம்பத்தைந்து நகரங்களாகும். பரத ஐராவதத்தில் இருக்கிற விஜயார்த்த பர்வதத்துக்கு தக்ஷிண ச்ரேணியில் கால ஐம்பது உத்தர ஸ்ரேணியில் அறுபதும் ஆகும்.

அதில் தக்ஷிண ச்ரேணியில் பூர்வ ஆதியாக நாமங்கள்; கின்னாமிதம், கின்னரகீதம், நரகீதம், பஹுகேது, புண்டரீகம், ஸிம்ஹத்வஜம், ஸ்வேத த்வஜம், கருடத்வஜம், ஸ்ரீப்ரபம், ஸ்ரீதரம், லோஹார்களம், அரிஞ்சயம், வஜ்ரார்களம், வஜ்ராட்யபுரம், விமோசி, புரம், ஜயம், ஸகடமுகி, சதுர்முகி, பஹுமுகி, அரஜஸ்கா, விரஜஸ்கா, ரதநூபரம், மேகலாக்ரபுரம், க்ஷேமசரி, அபராஜிதம், காமபுஷ்பம், ககன சரீ, விநயசரீ, ஸுகாந்தா, ஸஞ்சயந்தி, ஜயந்தி, விஜயா, வைஜயந்தி, க்ஷேமங்கரம், சந்த்ராபம், ஸூர்யாபம், சித்ரகூடம், மஹாகூடம், ஹேமகூடம், த்ரிகூடம், மேககூடம், விசித்ர கூடம், வைச்ரவணகூடம், சூர்யபுரம், சந்த்ரபுரம், நித்யோத்யோதினி, விமுகி, நித்யவாஹினி, ஸுமுகி என ஐம்பதும் தக்ஷிண ச்ரேணி நகரங்களாகும்.

உத்தர ச்ரேணி பச்சிம முதலாகச் சொல்லுதும் ; அர்ஜ்ஜனி, அருணி, கைலாஸம், வாருணிபுரி, வித்யுத்ப்ரபம், கிலிகிலம், சூடாமணி, சசிப்ரபம், வம்சாலம், புஷ்பசூம், ஹம்ஸகர்பம், பலார்க்கம், சிவங்கரம், ஸ்ரீஸௌதம், சமரம், சிவமந்திரம், வசுமத்கம், வஸுமதி, ஸித்தார்த்தம்,

---

5 அடிக்குறிப்பு : 'நின்ற முப்பதும் பத்தேறி நெறியினால் சேடி யாகிச், சென்றன சக்கவாலர் வியோகர புரங்களாகும், அன்றிஅக்குன்றில் பத்தும் ஐந்துயர் சூளியாமேல், ஒன்றிநின்றொளிரும் கூடம் மகுடம் போல் ஒன்பதாமே - மே.பு. 574 ; 110 - 'மற்றிந்த மலைமிசை வடதென்சேடியில் கொற்றவர் உறைபதி கோடி ஊர்களால் சுற்றப்பட்டிருந்த அவை நூற்றொருபதிற்று ' மே.பு. 587; அட்டாலக சர்யை கோபுர வீதிகள் ; அஸி - படைக்கலம்; மஷி - வரைவு; க்ரஷி - உழவு; வித்யா - கலை; வாணிஜ்ய - வாணிகம்; சில்பம் - கைவினை, கைத்தொழில் ; புஜ்ஜா - பூஜை; வார்த்தா - மகா பாபம் இல்லாமல் உழவு முதலியன செய்தல் ; தத்தி - தானம்; ஸ்வாத்யாயம் - தக்க நூல் ஓதுதலும், ஓதுவித்தலும் ஸம்யமம் - அணுவிரதங்களைத் தரித்தல் ; தபம் - அநசனம் முதலான கைக்கொள்ளல் ; பார்க்க ஸ்ரீ பு.ப.133-134.

சத்ருஞ்ஜயம், த்வஜமாலம், வீரேந்த்ர காந்தம், சுகனநந்தம், அசோகம், விஜயகம், வீதசோகம், அளகம், திலகம், அம்பர திலகம், மந்தரம், குமுதம், குந்தம், சுகனவல்லபம், திவிதிலகம், பூமிதிலகம், கந்தர்வ நகரம், முக்தாஹாகம், நைமிஷம், அக்னிஜ்வாலம், மஹாஜ்வாலம், ஸ்ரீ நிகேதபுரம், ஜ்யாவஹம், ஸ்ரீவாஸம், மணிவஜ்ராக்யம், பத்ராச்வபுரம், தனஞ்ஜயம், கோக்ஷீரபேனம், அக்ஷோபம், கிரிசிகரம், தரணிபுரம், தாரணிபுரம், துர்கம், துர்தரநகரம், ஸுதர்சனம், மஹேந்த்ரபுரம், விஜயபுரம், சுகந்தி நகர், வஜ்ரார்த்ததரம், ரத்னாகாலம், ரத்னபுரம் என அறுபது ஆக நூற்றொருபது (110) பட்டணமும், ரத்னமய மாகிய ராஜதானியும் ப்ரகாரங்களும் கோபுரங்களும் அட்டாலக, சர்ஷைகளும், ஸரோவரங்களும், வனங்களும், விளங்கி இருக்கும்.

ஸாதித வித்தை, குல வித்தை, ஜாதி வித்தை என்னும் த்ரி (3) வித்தையிலும் கூடி, அஸி, மஷி, க்ரஷி, வித்யா, வாணிஜ்ய, சில்பம் என்னும் ஷட் (6) கர்ம ஜீவன உபாய வ்யாபாரங்களும், புஜ்ஜா, வார்த்தா, தத்தி, ஸ்வாத்யாயம், ஸம்யமம், தபம் என்னும் ஷட் (6) கர்மங்களுடன் கூடி வித்யாதரர் கர்ம பூமி வர்த்தனைகளாய் இருப்பர்.

விருஷப மலை

இப்பால், வ்ருஷப கிரி ஸ்வரூபம் சொல்லுதும்.

விஜயார்த்தத்திலும் நதி இரண்டிலும் கூறுபட்ட ஷட்(6) கண்டத்தில் மத்திய மிலேச்ச கண்ட மத்யத்துள் வ்ருஷப கிரி நின்றது. அவை கனக வர்ணமும், மணிமய அலங்க்ருத காஞ்சனங்களும் உயரம் நூறு யோஜனையும் அடி அகலம் நூறு யோஜனையும், தலையகலம் ஐம்பது யோஜனையுமாய், சித சக்ரிகள் பெயரினால் இடைவிடாமல் எழுதப்பட்டு, இரண்டரை த்வீபத்திலும் நூறறெழுபது (170) வருஷப கிரிகள் மத்யகத மிலேச்ச கண்ட பஹு மத்தியத்தில் இருந்தது என்று அறிவது.

படைக்கலம்; மஷி - வரைவு; க்ரஷி - உழவு; வித்யா - கலை; வாணிஜ்ய - வாணிகம்; சில்பம் - கைவினை, கைத்தொழில் ; புஜ்ஜா - பூஜை; வார்த்தா - மகா பாபம் இல்லாமல் உழவு முதலியன செய்தல் ; தத்தி - தானம்; ஸ்வாத்யாயம் - தக்க நூல் ஓதுதலும், ஓதுவித்தலும் ஸம்யமம் - அணுவிரதங்களைத் தரித்தல் ; தபம் - அநசனம் முதலான கைக்கொள்ளல் ; பார்க்க ஸ்ரீ பு.ப.133-134.

இப்பால், ஆர்ய கண்ட மத்தியத்தில் இருக்கிற ராஜதானிகளது அகல நீளம் முதலானது சொல்லுதும்.

உப சமுத்திரம் இருக்கிற ஆர்ய கண்ட மத்யத்தில் பன்னிரண்டு யோஜனை நீளமும் ஒன்பது யோஜனை அகலமுமாய் இரண்டரை த்வீபத்திலும் சக்ரவர்த்திகள் இருக்கிற பட்டணம் நூற்றெழுபது ஆகும்.

அந்தப் பட்டணங்களுக்கு நாமங்களும்: க்ஷேமா, க்ஷேமபுரி, அரிஷ்டா, அரிஷ்டபுரி, கட்கா, மஞ்சுஷா, ஒஷதி, புண்டரீகிணி, என எட்டு; ஸீஸிமா, குண்டலா, அபராஜிதா, ப்ரபங்கரா, அங்கவதி, ப்தமாவதி, சுப்ரபா,[1] ரத்னஸஞ்சயா என எட்டு; அஸ்வபுரி, ஸிம்ஹபுரி, மஹாபுரி, விஜயபுரி, அரசஜஸ்கா,[2] விரஜஸ்கா,[3] அசோகா, வீதசோகா என எட்டு, விஜயா, வைஜயந்தா, ஜயந்தா, அபராஜிதா, சக்ரபுரி, கட்கபுரி, அயோத்யா, ஆவண்யா,[4] என எட்டு ஆக முப்பத்திரண்டும் கச்ச விஷயம் முதலாக ப்ரதக்ஷிணமாக அறிவது.

ஸேஷ நாலு மந்தரங்களுக்கு இவ் வண்ணமே நாமங்கள் என்று அறிவது. பரத ஐராவதங்களுக்கு நகரங்கள் அநியதம் ஆகையால் நாமங்கள் சொல்லப்பட்டதில்லை என்று அறிவது.

பட்டணங்களின் சிறப்பு :

அந்த பட்டணங்களுக்கு ரத்னமய கவாடத்துடன் உத்க்ரஷ்ட ஸஹஸ்ர (1000) த்வாரங்களும், ஜகன்ய த்வாரங்களும் ஐஞ்ஞூறு, ஹேம மய ப்ராகாரங்களும், அப்யந்தரத்தில் பன்னீராயிரம் (12,000) வீதிகளும், சதுஷ்பதங்கள் ஆயிரமுமாயிருக்கும். நகரங்களுக்கு புறத்தில் சுற்றிலும் முந்நூற்று அறுபது (360) வனங்களாகும். பட்டணத்து மத்தியில் ஜிந பவனங்களும் நரபதி க்ரஹங்களும் ரத்ன மயங்களாய் சோபித்திருக்கும் என்று அறிவது.

---

7. விஜயார்த்தத்திலும் நதி இரண்டிலும் - விஜயார்த்தத்தாலும் நதி இரண்டாலும்; கத சக்ரிகள் - சென்று போன சக்ரவர்த்திகள் ; ஒரு மேருவுக்கு 32 விதேஹம், 1 பரதம், 1 ஐராவதம் என 34 க்ஷேத்ரம், ஐந்து மேருவுக்கு (34X 5) 170 க்ஷேத்திரம் எனவே 170 விருஷப கிரிகள்; கச்ச விஷயம் - கச்சா நாடு; கூறப்பட்ட தலை நகரங்கள் கச்சா நாடு முதலாக வைத்து அறிய வேண்டும்.

பா.வே. 1 சுபா; 2. அரஜா; 3. விரஜா 4. அவத்யா தி.ஸா. மூலம்.

நாபிகிரி

இப்பால், நாபிகிரிகள் இருக்கிற ஸ்தானம் முதலானது சொல்லுதும்.

ஸ்திர போக பூயாகிய மத்யம போகபூமி இரண்டிலும் ஜகன்ய போக பூமி இரண்டிலும் மத்திய ப்ரதேசத்தில் வ்ருத்தமாய் ஆயிரம் (1000) யோஜனை உத்ஸேதமும் அடி அகலமும் தலை அகலமும் ஆயிரம் ஆயிரம் (1000, 1000) யோஜனையால் சுக்ல வர்ணமாய் ஸ்ரத்தவான், விஜடாவான், ப்தமாவான், கந்தவான் என்னும் பெயரை உடைத்தாய் நாலு நாபிகிரி இருந்தது. இவ்வண்ணம் சேஷ மந்தர ஸம்பந்தகளுக்கும் ப்ரத்யேகம் நாலு நாலு நாபிகிரி முன்சொன்ன பெயர்களும் அளவு ப்ரமாணங்களுமாய் ஆக இருபது நாபிகிரி யாகும் - 20.

அந்த பர்வத சிகரங்களில் ஸௌதர்ம ஈசான இந்திர அநுசரர் ஸ்வாதி, சாரண, பத்ம, ப்ரபாஸர் என்னும் பெயரை உடைத்தாய் வ்யந்தர தேவர்கள் ஆவாஸங்கள் ஆகும்.

மலை கூடங்கள் பெயர்கள்:

இப்பால், ஹிமவதாதி குலகிரிகளிலும் விஜயார்த்த பர்வதங்களிலும் மேலே இருக்கிற கூடங்களுக்கு சங்கை சொல்லுதும்:

ஹிமவத் பர்வதத்தில் கூடம் பதினொன்று (11), மஹாஹிமவானில் கூடம் எட்டு (8), நிஷதத்தில் கூடம் ஒன்பது(9), நீலியில் கூடம் ஒன்பது(9), ருக்மியில் கூடம் எட்டு(8), சிகரியில் கூடம் பதினொன்று(11), விஜயார்த்த பர்வதங்களில் கூடம் ஒன்பதுஒன்பதாகும். இந்த கூடங்களின் கிழக்கே இருக்கிற கூடத்தில் ஜின சைத்தியாலயம் ஆகும். ஸர்வ கூடங்களும் விருத்தங்களும் ரத்ன மயங்களும் அந்த அந்த

---

8 அநியதம் - மாறுதலை உடையது; நாமங்கள் - பெயர்கள் ; கவாடம் - கதவு; ஹேம - பொன் ; சதுஷ்பத - நாற்சந்தி; நரபதி க்ரஹ - அரசன் இல்லம்; வ்ருத்தமாய் - வட்டமாய்; சுக்ல - வெள்ளை; நாலு நாபி கிரி - ஹைமவதம்; ஹரி, ரம்யகம்; ஹைரண்யவதம் - இவை நிரந்தரபோக பூமிகள்; இவற்றில் உள்ளவை. இவை ஒரு மேருவை சேர்ந்தவை; சேஷ மந்தரம் - மீதி நாலு மேருகள்; அநுசார் - வழிபடுவோர்.

பர்வதங்களின் உயரத்தில் நாலில் ஒன்று (1/4), உயரமும் அம்மாத்திரம் அடி அகலமும் அதில் பாதி தலை அகலமும் ஆகும்.

இச்சொன்ன கூடங்களுக்கு நாமம் முதலாகியது முதல் க்ரமத்தினால் சொல்லுதும்:

ஸித்தாயதனம், ஹிமவான், பரதம், இளா, கங்கா, ஸ்ரீகூடம், ரோகிதாஸ்யா, சிந்து, ஸுரா, ஹைமவதம், வைசரவனம் ஆக பதினொன்றும் ஹிமவத் பர்வதத்தில் பூர்வாதியாகும். ப்ரதமகூடத்தில் ஜினேந்திர க்ரகமும், ஸ்ரீகூடத்தில் வ்யந்திர தேவியர் ஆவாசமும் சேஷ கூடங்களில் அந்த அந்த கூடத்தின் பெயரையுடைத்தான வ்யந்தர தேவர்கள் ஆவாசமாகும்.

மஹா ஹிமவானின் ஸித்தாயதனம், மஹாஹிமவான், ஹைமவதம், ரோஹிதா, ஹ்ரிகூடம், ஹரிகாந்தா, ஹரிவருஷம், வைடுர்யம் என எட்டும் பூர்வாதியாகும்.

நிஷதத்தில், ஸித்தாயதனம், நிஷதம், ஹரிவருஷம், பூர்வ விதேஹம், ஹரிகூடம், த்ரதிகூடம், ஸீதோதா, அபரவிதேஹம், ருசகம் என ஒன்பதும் பூர்வாதியாகும்.

நீலியில் ஸித்தாயதனம், நீலம், பூர்வ விதேஹம் ஸீதா, கீர்த்தி, நரகாந்தா, அபர விதேஹம், ரம்யகம், அபதர்சனம் என ஒன்பதும் பூர்வாதி யாகும்.

ருக்மியில் ஸித்தாயதனம், ருக்மி, ரம்யகம், நாரி, புத்தி, ரூப்யகூலா, ஹைரண்யவத கூடம், மணி காஞ்சனம் என எட்டும் பூர்வாதி யாகும்.

ஸிகரியில், ஸித்தாயதனம், சிகரி, ஹைரண்யம், ரஸதேவி, ரக்தா, லக்ஷ்மி, ஸ்வர்ணா, ரக்தவதி, கந்தவதி, ஐராவதி, மணிகாஞ்சனம் எனப் பதினொன்றும் பூர்வாதியாகும்.

---

9 நாலில் ஒன்று - ஹிமவான் உயரம் 100 யோஜனை; கூடம் (100 x 1/4) = 25 யோஜனை அடிஅகலம் 25 யோஜனை; தலை அகலம் 12 1/2 யோஜனை; இதுபோல் பிறவற்றுக்கும் கொள்க. பார்க்க மே.பு. 621.
பா.வே. 1. ஸ்த்ரீலிங்க கூடம் என்பது தி.ஸா.மூலம்; இலா கங்கை, ஸ்ரீகூடம், ரோஹிதாஸ்யா, சிந்து, ஸுரா இவை பெண்பால் பெயர்க்கூடங்கள்

ஸர்வ பர்வதங்களுடைய மூலத்திலும் ஸிகரத்திலும், பொய்கைகளிலும் குண்டங்களிலும் நதிகளிலும் வனங்களும் வேதிகைகளும் ஆகும். அந்த வனங்களும் வேதிகைகளும் பர்வதங்கல் உள்ள நீளமெல்லாம் நீளமும் அரை யோஜனை அகலமும் ஆகும்.

வேதிகைகள் உயரம் இரண்டு க்ரோசம்; அகலம் ஐஞ்னூறு (500) வில் ஆகும்.

மலைகளின் எண்ணிக்கை :

அந்த பர்வதம் முதலான ப்ரமாணமும் ஜம்பூத்வீபத்தில் மந்தரம் ஒன்றுக்கு குலகிரி ஆறு (6) யமகிரி நாலு (4) காஞ்சன ப்ரவதம் இருநூறு (200) திக்கஜ ப்ரவதம் எட்டு(8) வக்ஷார பர்வதம் பதினாறு (16), கஜதந்த பர்வதம் நாலு (4), விஜயார்த்த பர்வதம் முப்பத்தி நாலு (34), வ்ருஷபகிரி முப்பத்தி நாலு (34), நாபிகிரி நாலு (4) ஆக முன்னூற்றொருபத்தோரு (311) பர்வத்திலும் முன் சொன்னபடி வனமும் மணிமய வேதிகைகளும் ஆகும்.

குண்டங்களின் எண்ணிக்கை

மஹாநதி குதிக்கிற குண்டம் பதினாலு (14) விபங்க நதி உத்பத்தி குண்டம் பன்னிரண்டு (12) கங்கா ஸிந்து ஸமானமான நதிகள் விதேஹத்திலும் உத்பவிக்கிற குண்டம் அறுபத்து நாலு (64) ஆக தொண்ணூறு(90) குண்டத்திலும் முன் சொன்னபடி வனமும் வேதிகைகளும் ஆகும்.

பொய்கைகள் எண்ணிக்கை

குலகிரியில் பொய்கை ஆறு (6), ஸீதா நதியில் பொய்கை பத்து (10), ஸீதோதா நதியில் பொய்கை பத்து (10) ஆக இருபத்தாறு (26) பொய்கை கரையிலும் முன் சொன்னபடி வனங்களும் வேதிகைகளும் ஆகும்.

நதிகள் எண்ணிக்கை

கங்கா, ஸிந்து நதி இரண்டு (2), ரக்தா ரக்தோதா நதி இரண்டு (2), தத் ஸமானமான நதி விதேஹத்தில் அறுபத்தி நாலு (64) ஆக அறுபத்தெட்டுக்கும் ப்ரத்யேகம் நதி ஒன்றுக்கு பரிவார நதி பதினாலாயிரம் (14000) ஆகக் கூடின நதி ஒன்பது லக்ஷத்து ஐம்பத்திராயிரம் (9,52,000)

ரோஹித், ரோஹிதாஸ்யா நதி இரண்டு (2), ஸ்வர்ணகூலா, ரூப்யகூலா நதி இரண்டு(3), விபங்க நதி பன்னிரண்டு (12) ஆக பதினாறுக்கும் (16) ப்ரத்யேகம் நதி ஒன்றுக்கு பரிவார நதி

இருபத்தெண்ணாயிரம் (28000) ஆக கூடின நதி நாலு லக்ஷத்து நாற்பத்தெண்ணாயிரம் ஆகும் *(4,48,000)*

ஹரித், ஹரிகாந்தா நதி இரண்டு (2) நாரி, நரகாந்தா நதி இரண்டு(2) ஆக நாலுக்கும் (4) ப்ரத்யேகம் நதி ஒன்றுக்கு ஐம்பத்தாறாயிரம் (56,000) ஆகக் கூடின நதி இரண்டு லக்ஷத்து இருபத்து நாலாயிரம் ஆகும் (2,24,000)

தேவகுருவில் ஸீதோதா நதிக்கு பரிவார நதி என்பத்து நாலாயிரம் (84,000) உத்தர குருவில் ஸீதா நதிக்கு பரிவார நதி எண்பத்து நாலாயிரம் ஆகும் (84,000)

ஆக, பரிவார நதிகள் பதினேழு லக்ஷத்து தொண்ணூற்றீராயிரம் (17,92,000) ஆகும். முக்கிய நதிகள் தொண்ணூறு ஆக பதினேழு லக்ஷத்து தொண்ணூற்று ஈராயிரத்து தொண்ணூற்றுக்கும் (17,92,090) இரு பராச்வத்திலும் மணிமயமாகிய வேதிகைகள் முப்பத்தைந்து லக்ஷத்து எண்பத்து நாலாயிரத்து ஒருநூற்றெண்பதாகும். (35,84,180)

இவ்வகை இரண்டரை த்வீபத்திலும் பஞ்ச(5) மந்தர அபேக்ஷயினால் கூடினது மஹா நதி நானூற்றைம்பது (450) பரிவார நதிகள் எண்பத்தொன்பது லக்ஷத்தறுபதினாயிரம் (89,60,000) ஆக நதி எண்பத்தொன்பது லக்ஷத்துறுபதினாயிரத்து நானூற்றைம்பது (89,60,450)[10]

இவைகளுக்கு வேதிகைகள் ஒரு கோடியும் எழுபத்தொன்பது லக்ஷத்து இருபதினாயிரத்து தொளாயிரம் ஆகும். (1,79,20,900)

கூடங்கள் பெயர் :

இப்பால், பரத ஐராவதத்தில் இருக்கிற கூடங்களுக்கு தேவர்களுக்கும் நாமங்கள் சொல்லுதும்

---

10 9,52,000+4,48,000+2,24,000+84,000+84,000 = 17,92,000 பரிவார நதிகள் 2+2+64+2+2+12+2+2+1+1=90 முக்கிய நதிகள் ; 17,92,090 x 2= 35,84,180 வேதிகைகள் இரு கரையிலும் உள்ளன.

பரத க்ஷேத்ர கூடங்கள்

பரத க்ஷேத்ர விஜயார்த்த பர்வதத்தில் ஸித்தாயன கூடம், தமிணார்த்த பரதம், கண்ட ப்ரபாதம், பூர்ண பத்ரம், விஜயார்த்த குமாரம், மாணிபத்ரம், தாமிஸ்ரகுஹம், உத்தர பரத கூடம், வைச்ரவனம் என ஒன்பதும் பூர்வாதியாகும்.

ஐராவத கூடங்கள்

ஐராவத விஜயார்த்த பர்வதத்தில் ஸித்தாயத கூடம், உத்தரார்த்தம் ஐராவதம், தமிஸ்ரகுஹம், மாணிபத்ரம், விஜயார்த்த குமாரம், பூர்ண பத்ரம், கண்ட ப்ரபாதம், தமிண ஐராவதார்த்தம், வைச்ரவனம் என ஒன்பதும் பூர்வாதி ஆகும்.[II]

தேவர்கள் பெயர்

ஆக பதினெட்டு கூடங்களும் காஞ்சன மயமாகும். அவைகளில் கண்டப்ரபாத கூடங்களில் ந்ருத்யமாலன் என்றும் பெயரையுடைய வ்யந்தர தேவர்க்கு ஆவாஸமாகும். தமிஸ்ர கூடங்களில் க்ருதமாலன் என்னும் பெயரையுடைய வ்யந்தர தேவர்க்கு ஆவாஸம் ஆகும். ஸேஷ கூடங்களில் இருக்கிற தேவர்களுக்கு அந்த அந்த கூட நாமமே அந்த அந்த தேவர்களுக்கு நாமம் ஆகும்.

ஜிநாலயங்கள் அளவுகள்

இச் சொல்லப்பட்ட விஜயார்த்தங்களில் இருக்கிற ஜிந சைதயாலயங்கலுக்கு உயரம் முதலானது ப்ரமாணம் சொல்லுதும்.

ஸித்தாயதன கூட சிகரத்தில் நீளம் இரண்டாயிரம் *(2000)* வில்லு; விஸ்தாரம் ஆயிரம் *(1000)* வில்லு; உயரம் ஆயிரத்தைநூறு *(1500)* வில்லுமாய் பூர்வ முகமாய் ரம்யமாய் ஜினசைத்யாலயம் இருக்கும் என்று அறிவது.

II அடிக்குறிப்பு : பஞ்ச மந்தரம் - ஐந்து மேருகள்; பரத க்ஷேத்ரத்தில் ஒரு மேரு, தாதகி கண்டத்தில் இரண்டு மேருகள், புஷ்கரார்த்தத்தில் இரண்டு மேருகள் ஆக இரண்டரை தீவில் ஐந்து மேருகள்.

90 x 5 = 450 ; 17,92,000 x 5 $ 89,60,000; 35,84,180 x 5 = 1,79,20,900.

கஜதந்த, வக்ஷார மலை கூடங்கள் :

இப்பால், கஜதந்த, வக்ஷார பர்வதங்களுக்கும் இதர வக்ஷார பர்வதங்களுக்கும் கூட ஸங்க்யையும் அதன் நாமங்கள் முதலானவைகளும் சொல்லுதும்

மேருவின் ஈசான்யத்தில் மால்யவான் பர்வதங்களுக்கு கூடம் ஒன்பது (9) அக்னி திசையில் ஸௌமனஸ பர்வதத்தில் கூடம் ஏழு (7) நைருதி திசையில் வித்யுத்ப்ரப பர்வதத்தில் கூடம் ஒன்பது (9) வாயு திசையில் கந்தமாதன பர்வதத்தில் கூடம் ஏழு(7); சேஷ பதினாறு வக்ஷார பர்வதத்தில் ப்ரத்யேகம் நாலு நாலு கூடங்களாகும்.

அவைகளுடைய பெயரும் க்ரமத்தினால் மால்யவான் பர்வத சிகரத்தில் ஸித்த கூடம், மால்யவான், உத்தர கௌரவம், கச்சம் , ஸாகரம், ரஜதம், பூர்ண பத்ரம், ஸீதா, ஹரிஸஹ கூடம், என ஒன்பதும் மேரு ஆதியாகும்.

ஸௌமனஸ பர்வத சிகரத்தில் ஸித்த கூடம், ஸௌமனஸ கூடம், தேவகுரு கூடம், மங்கலம், விமலம், காஞ்சனம், அவசிஷ்டம் என ஏழும் மேரு ஆதியாகும்.

வித்யுத் ப்ரப பர்வத சிகரத்தில் ஸித்த கூடம், வித்யுத் ப்ரபம், தேவகுரு, பத்மம், தபனம், ஸ்வஸ்திக கூடம், சதஜ்வாலம், ஸீதோதா, ஹரிகூடம் என ஒன்பதும் மேரு ஆதியாகும்.

கந்தமாதன பர்வத சிகரத்தில் ஸித்தகூடம், கந்தமாதனம், உத்தரகுரு, கந்தமாலினி, ரோஹிதாக்ஷம்,[1] ஸ்படிகம், ஆனந்தம் என ஏழும் மேரு ஆதி ஆகும்.

தேவியர் இருக்கை:

இவைகளில் மத்யத்தில் இருக்கிற ஸாகர கூடத்தில் சுபோகா என்னும் பெயரையுடைய தேவிக்கு ஆவாஸம் ஆகும். ரஜத் கூடத்தில் அபோகமாலினி[2] என்னும் பெயரையுடைய தேவிக்கு ஆவாஸம் ஆகும். விமல கூடத்தில் வத்ஸமித்ரா என்னும் பெயரையுடைய வ்யந்தர தேவி இருப்பாள். காஞ்சன கூடத்தில் சுமித்ரா என்னும் பெயரையுடைய வ்யந்தர தேவி இருப்பாள். தபன கூடத்தில் பாரிஷேணா தேவிக்கும் ஸ்வஸ்திக கூடத்தில் பலாதேவிக்கும் இருப்பிடமாகும். ஸ்படிக கூடத்தில் போகங்கரை, ரோஹித் கூடத்தில் போகவதி என்னும் பெயருடைய தேவிக்கு இருப்பிடமாகும்.

பா.வே. 1. லோஹிதாஷம்; 2. போகமாலினி என்பது தி.சா. மூலம்

வக்ஷார மலைகள் கூடங்கள்

தேஷ வக்ஷார கூடங்களும் க்ரமத்தினால் சித்ரகூட வக்ஷார பர்வதத்தில் நதி ஆரப்யமாக ஸித்தா யதன கூடம், வக்ஷார கூடம், கச்சா கூடம், சுகச்சா கூடம், என நாலு (4)

பத்மகூட வக்ஷார பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், மஹாகச்சா கூடம், கச்சாகாவதி கூடம் என நாலு (4)

நளின கூட வக்ஷார பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், ஆவர்த்தா கூடம் லாங்கலாவர்த்தா கூடம் என நாலு (4)

ஏகசைல வக்ஷார பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், புஷ்கலா கூடம், பிஷ்பலவதி கூடம் என நாலு(4)

த்ரிகூடம் என்னும் வக்ஷார பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், வத்ஸா கூடம், சுவத்ஸா கூடம் என நாலு (4)

வைச்ரவண வக்ஷார பர்வத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், மஹாவத்ஸா கூடம், வத்ஸகாவதி கூடம் என நாலு(4)

அஞ்சன வக்ஷார பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், ரம்யா கூடம், சுரம்யா கூடம் என நாலு (4)

ஆத்மாஞ்சன வக்ஷார பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், ரமணீயா கூடம், மங்கலாவதி கூடம் என நாலு (4)

ஸப்தாவான் வக்ஷார பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், பத்மா கூடம், சுபத்மா கூடம் என நாலு (4)[12]

விகடாவான் பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், மஹாபத்மா கூடம், பத்மகாவதி கூடம் என நாலு(4)

ஆஸிவிஷ பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், சங்கா கூடம், நளினா கூடம் என நாலு (4)

---

12 அஞ்சன வக்ஷார கூடம் - அந்த அந்த வக்ஷார மலையின் பெயரே கூடத்தின் பெயராக எடுத்துக்கொள்ள வேண்டும்; இங்கே அஞ்சன கூடம் என்பது வக்ஷார கூடமாகும். பார்க்க அட்டவணை 11

ஸுகாவத் பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், குமுதா கூடம், ஸரிதா கூடம் என நாலு (4)

சந்த்ரமாலா பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், வப்ரா கூடம், சுவப்ரா கூடம் என நாலு (4)

சூர்யமாலா பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், மஹாவப்ரா கூடம், வப்ரகாவதி கூடம் என நாலு (4)

நாகமாலா பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், கந்தா கூடம், சுகந்தா கூடம் என நாலு (4)

தேவமாலா பர்வதத்தில் ஸித்தாயதன கூடம், வக்ஷார கூடம், கந்திலா கூடம், கந்தமாலினி கூடம் என நாலாகும் (4)

கஜதந்த பர்வதம், வக்ஷார பர்வதம் இருபதிலும் ப்ரதம ஸித்யாதன கூடம் இருபதிலும் ஜினசைத்யாலயங்களாகும்.

அந்த்யத்தில் குலகிரி பார்ச்வத்தில் இருக்கிற இருபதிலும் திக் கன்னியர் ஆவாசமாகும். மத்யத்தில் இருக்கிற சேஷ கூடங்கள் எல்லா வற்றிலும் வ்யந்திர தேவர்களுக்கு ஆவாசமாகும்.

வக்ஷார பர்வதங்கள் இருக்கிற கூடங்களுக்கு ஒவ்வொருகூடத்துக்கு ஒவ்வொரு கூடம் அந்தர ப்ரமாணம் சொல்லுதும்:[13]

---

13 மால்யவான் - மேருவுக்கு ஈசான்ய (வடகிழக்கு) திசையில் இருக்கும் கஜதந்த பர்வதம். இதன் நீளம் 30209 6/19 யோஜனை. இதில் இருப்பன ஒன்பது கூடங்கள். இதன் நீளத்தை ஒன்பதிற்கும் பங்கிட 30209 6/19 / 9 ஒவ்வொரு கூடமும் 3356 101/171 யோஜனை இடைவெளியில் இருக்கும். இதே போன்று வித்யுத்ப்ரபம் மேருக்கு நைருதி (தென்மேற்கு) திசையில் இருக்கும் கஜதந்த பர்வதம் இதிலும் ஒன்பது கூடங்களே இருப்பதால் கூடங்களின் இடைவெளி 3356 101/171 யோஜனை ஆகும்.
லௌமனஸம் மேருவுக்கு அக்னி (தென்கிழக்கு) திசையில் இருக்கும் கஜதந்த பர்வதம். இதில் ஏழு கூடங்கள் இருக்கின்றன. எனவே ஒவ்வொரு கூடமும் 30209 6/19 / 7 = 4315 82/133 யோஜனை இடைவெளியில் இருக்கும். கந்தமாதனம் மேருவுக்கு வாயு (வடமேற்கு) திசையில் இருப்பது. இதிலும் ஏழு கூடங்களே உள்ளன. எனவே கூடங்களின் இடைவெளி 4315 82/133 யோஜனை ஆகும்.

கஜதந்த பர்வதம் முப்பதனாயிரத்து இருநூற்றுஒன்பது யோஜனையும் ஒரு யோஜனையை பத்தொன்பது பாகம் பண்ணி அதில் ஆறு பாகமும் ஆகும். *(30,209–6 1/19)* அதனை மால்யவான், வித்யுத் ப்ரபத்தில் இருக்கிற ஒன்பது கூட ப்ரகாரத்தில் பாகம் கொள்ள மூவாயிரத்து முன்னூற்று ஐம்பத்தாறு யோஜனையும் ஒரு யோஜனை நூற்றிஎழுபத்தோரு பாகம் பண்ணி அதில் நூற்றொரு பாகமும் ஆகும். *–(3356, 101/171)*

ஸௌமனஸ, கந்தமாதனத்தில் இருக்கிற ஏழு கூடப் ப்ரகாரத்தில் பாகம் கொள்ள ஒவ்வொரு கூட அந்தரம் நாலாயிரத்து முன்னூற்று ஒருபத்தைந்து யோஜனையும் யோஜனையை நூற்றுமுப்பத்திமூன்று பாகம் பண்ணி அதில் எண்பத்திரண்டு பாகமும் ஆகும்.*- 4315,82/133*

சேஷ வக்ஷார பர்வதம் பதினாறிலும் ஒவ்வொரு பர்வதத்துக்கு நாலு நாலு கூடங்களில் கூட அந்தரம் வக்ஷார பர்வத நீளம் பதினாறாயிரத்து ஐநூற்று தொண்ணூற்றிரண்டு யோஜனையும் ஒரு யோஜனையை பத்தொன்பது பாகம் பண்ணி அதில் இரண்டு பாகத்தையும்*–(16,592 2/19)* நாலில் பாகம் கொள்ள நாலாயிரத்து ஒருநூற்று நாற்பத்தெட்டு யோஜனையும் ஒரு யோஜனையை முப்த்தெட்டு பாகம் பண்ணி அதில் ஒரு பாகமும் ஆகும்*–(4148 1/38).*[14]

கீழை விதேஹத்தில் இருந்த ப்ரமாணம் நதி ஐநூறு யோஜனை விஸ்தாரமான இடத்திலிருக்கிற ஏக சைல வக்ஷார பர்வதத்துக்கும் த்ரிகூடம் எனும் வக்ஷார பர்வதத்துக்கும் மேலை வ்தேஹத்தில் இருக்கிற சுக வத் வக்ஷார பர்வதத்துக்கும் சந்த்ரமாலா எனும் வக்ஷார

---

14 சேஷ - மீதி; மீதி பதினாறு வக்ஷார பர்வதங்களும் விதேஹத்தில் இருப்பன. விதேகத்தின் அகலம் *33684 4/19* யோஜனையாகும் (பக் *68*) இங்கே சீதா-சீதோதா நதிகள் இடையே செல்கின்றன. நதியின் அகலம் *500* யோஜனை (கடல் முகத்தில்) இதனை கழிக்க *33684 4/19-500 = 33184 4/19* யோஜனை ஆகும். நதிக்கு இரண்டு பக்கமும் உள்ள மொத்த நீளம் இது. இதனை *2* ஆல் வகுக்க *33184 2/19 / 2 = 16592 2/19* ஒரு பக்கத்து வக்ஷார மலையின் நீளம் ஆகும். ஒவ்வொரு வக்ஷார பர்வதத்திலும் நான்கு கூடங்கள் என்பதால் ஒவ்வொரு கூடமும் *16592 /4 = 4148 1/38* யோஜனை இடைவெளியில் இருக்கும் என்பதாம். நதி அகலம் ஒரே அளவாக இல்லாமையால் கடல் முகத்துக்கு அருகில் உள்ள மலைகளுக்கே இந்த அளவாகும். பிற இடங்களில் கூடுதல் குறைவாக இருக்கும் என்றார்.

பர்வதத்துக்கும் ஆகும். சேஷ வக்ஷார பர்வதங்களுக்கு எல்லாம் சற்று ஹீனாதிகமாகும்.[15]

வக்ஷார கூடங்கள் அளவு:

அந்த வக்ஷார கூடங்களுக்கு உன்னத ப்ரமாணமும் அதில் சைத்யாலயம் இருக்கிற ஸ்தானமும் சொல்லுதும்:

பஞ்சமந்தரம் (5) அபேக்ஷையால் நூறு வக்ஷார பர்வதத்துக்கும் உயரம் குலகிரி பார்ச்வத்தில் நானூறு யோஜனை. க்ரமத்தால் உயர்ந்து சென்று மேரு பார்ச்வத்திலும் நதி பார்ச்வத்திலும் ஐநூறு யோஜனை (500) ஆகும். அந்த ஐநூறு யோஜனை உயர்ந்த இடத்தில் இருக்கிற ஸித்தாயதன கூடத்தில் ஜின சைத்யாலயம் ஆகும்.

அந்த வக்ஷார பர்வதங்களிர் இருக்கிற கூடங்களுக்கும் உயர ப்ரமாணம் சொல்லுதும்:

மால்யவான் பர்வதத்தில் ஸித்த கூடம் உயரம் நூற்றி இருபத்தைந்து (125) யோஜனை. மால்யவான் கூடம் உயரம் நூற்றி இருபத்தொண்ணேமுக்காலே அரைக்கால் யோஜனை. (121 7/8) உத்தர கௌரவம் உயரம் நூற்றுஒருபத்து எட்டேமுக்கால்-118 3/4. கச்சம் உயரம் நூற்றொருபத்து ஐந்தரையே அரைக்கால்-(115 5/8). சாகரம் நூற்றொருபத்து இரண்டரை-112 1/2. ரஜதம் உயரம் நூற்றொண்பதே காலே அரைக்கால்-109 3/8. பூர்ணபத்ரம் உயரம் நூற்று ஆறேகால்-106 1/4. ஸீதா உயரம் நூற்று முன்றே அரைக்கால்-103 1/8. ஹரிசக கூடம் நூறு யோஜனை உயரம் ஆகும்-100.

ஸௌமனஸ வக்ஷார பர்வதத்தில் ஸித்த கூடம் உயரம் நூற்றியிருபத்தைந்து யோஜனை-125. ஸௌமனஸ கூடம் உயரம் நூற்றிஇருபது யோஜனையும் ஒரு யோஜனையை ஆறு பாகம் பண்ணி அதில் ஐந்து பாகம் - 120 5/6. தேவகுரு கூடம் நூற்றொருபத்தாறு யோஜனையும் ஒரு யோஜனையை மூன்று பாகம் பண்ணி அதில் இரண்டு பாகம்- 116 2/3. மங்கல கூடம் நூற்றொருபத்திரண்டரை யோஜனை கூடம்-112 1/2. விமல கூடம் நூற்றெட்டு யோஜனையும்

---

15 நூறு - 5X 20; பார்சுவம் - பக்கம் ; நதி - சீதா நதியும் ஸீதோதா நதியும்;

ஒரு யோஜனையை மூன்று பாகம் பண்ணி அதில் ஒரு பாகம் - 108 1/3. காஞ்சன கூடம் நூற்று நாலு யோஜனையும் ஒரு யோஜனையை ஆறுபாகம் பண்ணி அதில் ஒரு பாகமும் - 104 1/6. அவிசிஷ்ட கூடம் நூறு யோஜனை உயரமாகும்-100.

வித்யுத்ப்ரப வக்ஷார பர்வதத்தில் ஸித்த கூடம் உயரம் நூற்றிருபத்தைந்து யோஜனை 125. வித்யுத்ப்ரப கூடம் உயரம் நூற்றிருபத்தொன்றே முக்காலே அரைக்கால் 121 7/8 யோஜனை. தேவகுரு கூடம் உயரம் நூற்றொருபத்தெட்டே முக்கால் யோஜனை 118 3/4 பத்ம கூடம் உயரம் நூற்றொருபத்தைஞ்சரையே அரைக்கால் 115 5/8. தபன கூடம் உயரம் நூற்றொருபத்திரண்டரை யோஜனை 112 1/2. ஸ்வஸ்திக கூடம் உயரம் நூற்றொன்பதேகாலே அரைக்கால் யோஜனை 109 3/8. சதஜ்வால வடம் உயரம் நூற்றாறேகால் யோஜனை 106 1/4. ஸீதோதா கூடம் உயரம் நூற்று மூன்றே அரைக்கால் யோஜனை 103 1/8. ஹரி கூடம் நூறு யோஜனை உயரம் ஆகும் 100.

கந்தமாதன வக்ஷார பர்வதத்தில் ஸித்தகூடம் உயரம் நூற்றிஇருபத்தைந்து யோஜனை -125. கந்தமாதன கூடம் உயரம் நூற்றிஇருபது யோஜனையும் ஒரு யோஜனையை ஆறுபாகம் பண்ணி அதில் ஐந்து பாகம் -120 5/6. உத்தரகுரு கூடம் உயரம் நூற்றிறொருபத்தாரு யோஜனையும் ஒரு யோஜனையை மூன்றுபாகம் பண்ணி அதில் இரண்டு பாகம் -116 2/3. கந்தமாலினி கூடம் உயரம் நூற்றிறொருபத்திரண்டரை யோஜனை-112 1/2. ரோஹிதாக்ஷ கூடம் உயரம் நூற்றிஎட்டு யோஜனையும் ஒரு யோஜனையை முன்றுபாகம் பண்ணி அதில் ஒரு பாகம் -108 1/3. ஸ்படிக கூடம் உயரம் நூற்றிநாலு யோஜனையும் ஒரு யோஜனையை ஆறுபாகம் பண்ணி அதில் ஒரு பாகம் -104 1/6. ஆனந்த கூடம் உயரம் நூறு யோஜனை ஆகும்.-100.

சேஷ வக்ஷார பர்வதங்கள் பதினாறிலும் இருக்கிற ஸித்த கூடம் உயரம் நூற்றிருபத்தைந்து யோஜனை-125. இரண்டாம் கூடங்கள் உயரம் நூற்றொருபத்தாறு யோஜனையும் ஒரு யோஜனையை மூன்று பாகம் பண்ணி அதில் பாகம் ஆகும்.-116 2/3. மூன்றாம் கூடங்கள் உயரம் நூற்றிஎட்டு யோஜனையும் ஒரு யோஜனையை மூன்றுபாகம் பண்ணி அதில் ஒரு பாகம் -108 1/3. நாலாம் கூடம் உயரம் நூறு யோஜனை ஆகும்-100.

நியத போகபூமி

மஹா மேருவுக்கு தெற்கு தேவகுரு, வடக்கு உத்தரகுருவு மாகியது உத்தம போக பூமியும், நிஷதத்துக்கு தெற்கும் நீலிக்கு வடக்கு

மாகியது மத்யம போகபூமியும், மஹாஹிமவானுக்கு தெற்கு ருக்மிக்கு வடக்கு மாகியது. ஜகன்ய போகபூமியும் ஆகும்.

போகபூமியர் ஆயுள்:

இந்த திரி (3) வித பூமியுள் பிறந்த ஆர்யர்க்கு ஆயுஷ்யம் முறையே மூன்றும் இரண்டும் ஒன்றுமான பல்யோ பங்களாகும் - 3,2,1.

போக பூமியர் உயரம்:

இவர்கள் சரீர உத்ஸேதம் முறையே ஆறாயிரம் (6000), நாலாயிரம் (4000), இரண்டாயிரமுமான (2000) விற்களாகும்.

இவர்கள் சரீர வர்ணமும் பவளமும் ஸங்கமும் மரகதமும் போன்று, முறையே கொள்க.

போகபூமியர் உணவு:

இவர்களுக்கு ஆஹாரமும் மூன்று, இரண்டு, ஒன்றுமான நாள் இடைவிட்டு கடலையும் நெல்லிக்கனியும் மரவட்டு (?) மான[1] ப்ரமாணத்து அம்ரத ஆஹாரம் பொஜிப்பர்.

போகபூமியர் வாழ்வு:

வஜ்ர போன்ற அஸ்தி பலத்தையும், சந்தரமான ஆகார முடைத்தாகிய சரீரமும் உடையராகி முடி, கடக, கேயூர ஹாராதி, ஸர்வ ஆபரண பூஷிதரராகி அகால மரணமும் நித்திரையும் சோம்பும் அநாசாரமும் கார்ப்பண்யமும் வ்யாதியும் இலராகிய அநேக விதமான கல்பக வ்ருக்ஷங்கள் போக ஸாதானங்களான வஸ்துகளைக் கொடுப்ப அனுபவித்து தம்தம் ஆயுஷ்ய அவஸானத்து ஆணும் பெண்ணுமான இரட்டைகளைப் பெற்று ருஜூ, மார்தவ குணங்களால் சுர லோகம் ப்ரவேசிப்பர். இவருள் ஸம்யக் தரிசனம் உடையார் ஸௌதர்ம ஈசான கல்பவாசியர் ஆவர். ஒழிந்த மித்யா த்ருஷ்டிகள் பவன வ்யந்தர ஜோதிஷ்கர் ஆவார்.[16]

---

16 :த்ரிவித பூமி - உத்தம மத்திம, ஜகன்ய போகபூமி; உத்தம போக பூமியர்க்கு ஆயுள் 3 பல்யம், உயரம் 6000வில் நிறம் பவளம் ஆஹாரம் மூன்று நாளுக்கு ஒரு முறை ஜகன்ய போகபூமியர்க்க ஆயுள் 1 பல்யம், உயரம் 2000வில், நிறம் மரகதம், ஆஹாரம் ஒரு நாள் விட்டு ஒரு நாள்; பொஜிப்பர்-உண்பர்; அம்ரத திவ்ய; அஸ்தி எலும்பு ; ஆகாரம் -வடிவம்; சோம்பும்-சோம்பல்; கார்ப்பண்யம-காப்பமும் அவஸானத்து- முடிவில் பா.வே. கடலையும் தாணிக்காயும் நெல்லிக்கனியும், இலந்தை, தான்றி, நெல்லி திஸா. படம்; பா.வே. 1. லோஹிதாஷம் என்பது தி.ஸா. மூலம்

2. போகமாலினி என்பது தி,ஸா. மூலம்

அந்த திர்யக் ஜாதியும் இப்படி ஜாதமாம்.

இவற்றின் விவரனம் அநியத கர்மபூமி ஸ்வரூபம் சொல்லுமிடத்தில் கண்டு கொள்க.

கால மாறுதல்:

அநியத கர்ம பூமியாகிய பரத ஐராவத க்ஷேத்ரத்தில் தர்ம கண்டத்தில் கால வர்த்தன ஸ்வரூபம் சொல்லுதும்.

பஞ்ச பரதங்களிலும் பஞ்ச (5) ஐராவதங்களிலும் அவலர்ப்பிணி உனத்ஸர்ப்பிணி காலத்வயம் (2) யுக பேதத்தால் ஷட் கர்ம வ்ரத்தி ஒரு படி நில்லாது, போகபூமி மரியாதையும் கரும பூமி மரியாதையுமாகி, ஒருபடி நில்லாது பரிவர்த்தித்து வருவது ஆகும்.

அந்த உத்ஸரப்பிணியாதி யுக பேதம் எப்பெற்றியது எனில் : - உத்ஸரப்பிணி காலமும் அவஸர்ப்பிணி காலமும் என த்விவிதம்(2). இக் காலம் இரண்டும் தனித்தனி பத்து கோடாகோடி கடற்கால ஸ்திதி உடைத்து.[17]

அவற்றுள் உத்ஸர்ப்பிணி காலம் என்பது பூர்வ பக்ஷத்து சந்த்ர கலை போல் ஜீவன்களுடைய சரீத உத்ஸேதமும் ஆயுஷ்யமும் வர்த்தித்து வருவ தாகும்.

அவஸர்ப்பிணி என்பது அபர பக்ஷத்து சந்த்ர கலை போல் ஜீவன்களடைய சரீர உத்ஸேதமும் ஆயுஷ்யமும் குறைந்து வருவதாகும்.

இவை இரண்டும் தனித்தனி ஆறு விகல்பமாம்.

---

17 ஜாதமாம்-அமைப்பாம்; ஷட் கர்ம - ஆறு தொழில்கள்; கோடாகோடி-கோடியை கோடியால் பெருக்கியது; பூர்வ பக்ஷம் - வளர்பிரை; அபர பக்ஷம்-தேய்பிறை; சமையம் ஆறடையவாம் பரத ரேவதம் மே.பு.1229; நன்மையும் நன்மையும் நன்மையாயதும், நன்மையில் தீமையும் தீமை நன்மையும், திண்ணிய தீமையும் தீமைதீமை என்று, எண்ணிய காலம் எற்றிழவை ஆக்குமே மே.பு. 1230 ஆழிகள் கோடா கோடி ஐயிரண்டினில், நாலு மூன்று இரண்டு ஒன்ற நாலு காலங்கள், ஈற்று ஆழியில் ஆண்டு நாற்பத்திராயிரம், மேலவை இரண்டிற்கும் விதிக்கப்பட்டவே மே.பு. 1232.

அந்த கால த்வய பேதங்களும் சுஷம சுஷம என்கிற நன்னற் காலமும், சுஷமை என்கிற நற்காலமும், சுஷமதுஷ்மை என்கிற நற்றீர் காலமும், துஷ்மசுஷமை என்கிற தீநற்காலமும், துஷ்ஷமை என்கிற தீக் காலமும், அதி துஷ்ஷமை என்கிற தீ தீக்காலமும் என ஆறு பேதம் முதல் அவஸர்ப்பிணி கால மாகும். இரண்டாவது உத்ஸர்ப்பிணி காலமும் முன் சொன்ன ஆறு காலத்தைக் கடைசி முதலாக அறிவது. இவை இரண்டும் சுக்ல க்ருஷ்ண பக்ஷத்து சந்த்ரன் போல அநாதியாகி பரிவர்த்தித்து வருவ தாகும்.

கால ஆண்டுகள் :

அந்த ஆறு காலத்துக்கும் ப்ரதம ஆதியாக கால ஸ்திதிகளும்[18].

முதற்காலம் நாலு கோடாகோடி கடற்காலமும் இரண்டாங்காலம் மூன்று கோடாகோடி கடற்காலமும், மூன்றாங் காலம் இரண்டு கோடாகோடி கடற்காலமும், நாலாங்காலம் நாற்பத்திராயிரம் *(42,000)* வருஷம் குறைந்த ஒரு கோடாகோடி கடற்காலமும், ஐந்தாங்காலம் இருபத்தோராயிரம் *(21000)* வருஷமும், ஆறாங் காலம் இருபத்தோராயிரம் *(21,000)* வருஷமு மாக அவஸர்ப்பிணி காலம் பத்து கோடாகோடி கடற்காலமாகும்.

ஆயுள் அளவு:

அந்த ஆறு காலங்களிலும் ஜீவன்களுக்கு ஆயுஷ்ய பரமாணமும். முதற்காலத்து ஆதியில் மூன்று பல்லம், அந்த்யத்தில் இரண்டு பல்லம்; இரண்டாங்காலத்து ஆதியில் இரண்டு பல்லம், அந்த்யத்தில் ஒரு பல்லம்; மூன்றாங்காலத்து ஆதியில் ஒரு பல்லம், அந்த்யத்தில் பூர்வ கோடி; நாலாங் காலத்து ஆதியில் பூர்வ கோடி, அந்த்யத்தில் நூற்றிருபது *(120)* வருஷம்; ஐந்தாம் காலத்து ஆதியில் நூற்றிருபது வருஷம் அந்த்யத்தில் இருபது *(20)* வருஷம்; ஆறாங்காலத்து ஆதியில் இருபது வருஷம், அந்த்யத்தில்பிதினைந்து வருஷமும் ஆகும்.

---

18 ஆயுஷ்ய ப்ரமாணம் - ஆயுள் அளவு; ஒரு முழம் பதினையாண்டு உந்தி உந்தி மேல், வருசிலை ஆறாயிரம்பல்லம் மூன்றெய்திப் பெருகிய பரிசினால் பின் சுருங்கிவந்து, ஒரு முழம் பதினை யாண்டுகும். ஓர் கற்பமாம் மே.பு 231.

உடல் உயரம்:

அந்த காலங்களில் மனுஷ்யர் சரீர உத்ஸேதம்: முதற்காலத்து ஆதிஅயில் ஆறாயிரம் (6000) வில்லு,அந்தயத்தில் நாலாயிரம் (4000) வில்லு; இரண்டாங் காலத்து ஆதியில் நாலாயிரம் (4000) வில்லு, அந்தயத்தில் இரண்டாயிரம் (2000) வில்லு, மூன்றாங் காலத்து ஆதியில் இரண்டாயிரம் (2000) வில்லு, அந்தயத்தில் ஐநூறு (500) வில்லு, நாலாங்காலத்து ஆதியில் ஐந்நூறுவில் அந்தயத்தில் ஏழு (7) முழம், ஐந்தாங்காலத்து ஆதியில் ஏழு முழம், அந்தயத்தில் இரண்டு (2) முழம் ; ஆறாங் காலத்து ஆதியில் இரண்டு முழம், அந்தயத்தில் ஒரு முழமாகும்.

உடல் நிறம்:

அந்த ஆறு காலங்களில் வர்த்திக்கின்ற மனுஷ்யருடைய சரீர வர்ணம்: முதற்காலத்து மனுஷ்யர் உதயமாகிற வேளையில் இருக்கிற சூரிய வர்ணம்; இரண்டாம் காலத்து மனுஷ்யர் பூர்ண சந்த்ர வர்ணம்; மூன்றாம் காலத்து மனுஷ்யர் பூர்ண சந்த்ர வர்ணம்; மூன்றாம் காலத்து மனுஷ்யர் ப்ரியங்கு ஷ்யாம வர்ணம்; நாலாம் காலத்து மனுஷ்யர் பஞ்ச வர்ணம்; ஐந்தாம் காலத்து மனுஷ்யர் காந்தி ஹீனமாய் இருக்கிற பஞ்ச(5) வர்ணம்; ஆறாம் காலத்து மனுஷ்யர் தூமச்யாம வர்ணம்.

உணவு முறை:

அவர்களுக்கு ஆஹார க்ரமங்களும்: முதல்காலத்து மனஷ்யர்க்கு மூன்று நாள் இடைவிட்டு நாலாம்நாள் கடலை ப்ரமாணமாகிய திவ்ய ஆஹாரம்; இரண்டாம் காலத்து மனுஷ்யர்க்கு இரண்டு நாள் இடைவிட்டு மூன்றாம் நாள் அக்ஷ பல ப்ரமாணமாகிய திவ்ய ஆஹாரம்; மூன்றாங் காலத்து மனஷ்யர்க்கு ஒரு நாள் இடைவிட்டு இரண்டாம் நாள் தாத்ரி பல ப்ரமாணமாகிய திவ்ய ஆஹாரம்; நாலாங்காலத்து மனஷ்யர்க்க ப்ரதி தினம் ஆஹாரம்; ஆஹாரம்; ஐந்தாம் காலத்து மனஷ்யர்க்கு பகுவார ஆஹாரம்; ஆறாங்கால மனுஷ்யர்க்கு ப்ரசுரவ்ரத்தி ஆஹாரமும் ஆகும்.

கல்ப தருக்கள்:

அந்த காலங்களில் கல்ப வ்ருக்ஷங்களும்: 'மத்யாங்கம்' என்னும் கல்பக தரு [19] திவ்ய ஸாரமாகிய நாநாவிதமாகிய பானங்களைக்

---

19 ப்ரதி தினம் ஆஹாரம்-நாளில் ஒரு முறை உண்பர் என்பது தி.ஸா. மூலம்

கொடுக்கும்; 'துர்யாங்கம்' என்பது நாநாவித வாத்தியங்களைக் கொடுக்கும்; 'பூஷாணங்கம்' என்பது அநேக விதமாகிய ஆபரணங்களைக் கொடுக்கும்; 'மால்யாங்கம்' என்பது நாநாவிதமாகிய புஷ்ப மாலைகளைக் கொடுக்கும்; 'தீபாங்கம்' என்பது ரத்ன தீபங்களைக் கொடுக்கும்; 'க்ரகாங்கம்' என்பது ப்ராஸாத மண்டபாதிகளைக் கொடுக்கும்; 'ஜோதிராங்கம்' என்பது சந்திராதித்யர் ஒளியினை அடக்கும் ஒளியினைக் கொடுக்கும்; இதனுடைய ஒளியினால் அக்காலத்து இரவு பகல் இல்லை; 'போஜநாங்கம்' என்பது நாநா வித ரஸத்தவாகிய உண்பன தின்பன நக்குவன பருகுவன என்னும் நான்கு வகைப்பட்ட உணவினைக் கொடுக்கும்; 'பாஜநாங்கம்' என்பது வேண்டிய கலங்களைக் கொடுக்கும்;[20] வஸ்த்ராங்கம் என்பது விசித்திரமாகிய வஸ்த்திரங்களைக் கொடுக்கும்.

இப் பத்து வகைப்பட்ட கல்ப தருக்கள் பாத்ர தானாதிகளினால் வந்த புண்ணிய பலத்தால் மனுஷ்யர்க்கு இந்த பலங்களை உபகரிக்கும்.

பிற இயல்புகள்:

மற்றும் ப்ரதம ஆதி ந்ரி (3) காலத்திலும் போக பூமி ஸ்வரூபமும் தேவ, உத்தர குரு முதலாகிய நித்ய போகபூமி போல் பால் போலவும், கருப்பம்பால் போலவும் தேன் போலவும், நெய் போலவும் ரச முண்டாகி நிறைந்திருந்த வாபிகளும் பொய்கைகளும், சதுர் (4) அங்குலமும், நல்ல ரஸமும், நல்ல கந்தமும், ம்ரதுவுமாகி இருக்கிற த்ரணங்களும், த்ர்ப்பண சமான பூமிகளும் இருக்கும்.

போகபூமியர் வளர்ச்சி:

அந்த பூமியில் பிறந்த மனுஷ்யரும் பிறந்த நாள் முதல் ஏழு நாள் அங்குலியினை ஆஹாரமாக உண்பர். அதன் பின் ஏழு நாள் தவழ்ந்து திரிவர்; அதன் பின் ஏழு நாள் தளர் நடை நடந்து திரிவர்;

தான்றி; தாத்ரி-நெல்லி;

20 கலங்கள் - பாத்திரங்கள் ; வஸரங்கள் -ஆடைகள்; துர்யாங்கம்; பாத்ராங்கம், பூஷணாங்கம், பானங்களும், ஆஹாராங்கம், புஷ்பாங்கம், ஜயோதிராங்கம், க்ருஹாங்கம், வஸத்ராங்கம், தீபாங்கம் தி.ஸா. தரும் பெயர்கள், வாபி - குளம்; த்ரணம் - புல் ; தர்ப்பணம் - கண்ணாடி;

அதன்பின் ஏழு நாள் தளர்வின்றி நடந்து திரிவர்; அதன் பின் ஏழு நாள் ஸகல கலா ஜ்ஞானமும் பயில்வர்; அதன் பின் ஏழு நாள் ஸம்பூர்ணயௌவனர் ஆவர். அதன் பின் ஏழு நாள் ஸம்யக்தவ க்ரஹண கால மாகும்.[21]

அந்த தம்பதிகளும் வஜ்ரவ்ரஷப நாராச ஸம்ஹனனமும் ஸமசதுரஸ்ர ஸம்ஸ்தானமும் உடைத்தாகி ஆர்யர் என்கிற நாமம் உடைத்தாய் பஞ்சேந்த்ரிய விஷயங்களும் சுலபத்திலே அனுபவித்து த்ருப்தி இன்றி இருப்பர்.

அவர்கள் தங்கள் ஆயுஷ்யம் உலர்ந்தபின் ஸ்திரீபுமான்கள் ஆணும் பெண்ணும் உடன் பெற்று அப்பொழுதே கொட்டாவிக்கொண்டுதான் தும்பித்தான் சரீரம் விட்டு ஸ்வபாவ மார்தவத்தால் தேவ லோகம் புகுவர்.

இவர்கள் சரீரம் மேக விநாசம் போல் மாய்ந்து போம்.

அவர்களில் மித்யா த்ருஷ்டி ஜீவன்கள் பவன த்ரயத்தில் பிறப்பார்கள்; ஸம்யக் த்ருஷ்டி ஜீவன்கள் ஸௌதர்ம கல்ப த்வயத்தில் பிறப்பார்கள் என்று அறிவது.

போகபூமி விலங்குகள் :

அக் காலத்து உள்ள விலங்குகளும் மணிமயமாகிய பூதலத்து எழுந்த அம்ருத ரஸத்தவாகிய த்ரணங்களை மேய்ந்து, ஸ்வச்ச மதுர ஜலங்களைப் பருகி, தம்தம்மில் செற்றம் இன்றி, சேர்ந்து திரியும். அவைகளுக்கும் கத்யாகதிகளும் முன் சொன்னபடி யாகும்.[22]

---

21 அங்குலியினை விரலை; ஆஹாரமாக உண்பர் - உறிஞ்சுவர்; விரல் ஹிஞ்சதல், தவழ்தல், தளிர்நடை, தளரா நடை, கலை பயில்தல், இளமை பெறுதல், நோக்கெதிர் கொள்ளுதல், என இப்வேழுக்கு ஏழு ஏழு நாள் கொள்வர் என்பது திஸா. மூலம் காதை 789; விரல் ஹிஞ்சுதல், உட்காருதல், தளிர் நடை, தளரா நடை, கலை பயில்தல், இளமை பெறுதல், நற்காட்சி தகதி பெறல் என இவ்வேழுக்கும் ஏழு ஏழு நாள் கொள்வர் என்பது தி.ப. கா. க /411-412; இது மூன்றாங்கால நிலைமை; ஸம்யக்தவ க்ரஹன காலத்தை ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பார்க்கும் காலமாக தி.ஸா(காதை 789) குறிப்பிடு கிறது; தும்பி-தும்மலிட்டு ஆணும் கொட்டாவிவிட்டு பெண்ணும் மரணம் அடைவர்; பவன த்ரயம் - பவண, வியந்தர, ஜோதிடர்; கல்ம த்வயம் - ஸௌதர்ம ஈசான கல்பங்களில்;

துன்பமில்லா வாழ்வு:

அக் காலத்துள்ளார்க்கு நித்ரையும், சோம்பும், கார்பண்யமும், அநாசாரமும், அகால மரணமும், மனோ துக்கங்களும், சீதோஷ்ணாதி பாதைகளும், இலராகி; முடி, கடக, கேயூர, ஹாராதி ஸர்வ ஆபரணராகி இருப்பர்.

மனுக்கள் வரலாறு:

இப்பால், இந்த பூமி கர்மபூமி ப்ரவேசமாகிற க்ரமமும் அந்த அந்த காலங்களில் மனுஷ்யருடைய ஸ்வரூபமும் சொல்லுதும்:

இம் மூன்றாங் காலத்து அந்த்யத்தில் ஒரு பல்லத்தை எட்டு கூறிட்டு சற்றுக் குறைய ஒரு கூறு ஒழிய ஏழு கூறும் சற்று அதிகமும் சென்றவிடத்து ப்ரதிஸ்ருதி என்னும் முதல் மனு தோன்றினான். அவன் ஆயுஷ்யம் பல்லத்தைப் பத்து கூறு இட்டதில் ஒரு கூறு. (1/10ப) அவனுக்கு சரீர உத்ஸேதம் ஆயிரத்து எண்ணூறு (1800)வில்லு.

அவன் காலத்து ஆடி மாஸத்து பூர்ணமாஸின் கண் அஸ்தமய காலத்து கிழக்கே பூர்ண சந்த்ர மண்டலமும் மேற்கே ரக்த மயமாகிய ஆதித்ய மண்டலமும் தோன்றிய விடத்து பண்டு கண்டறியாத இவ் விரண்டையும் கண்டு பீதராகிய போகபூமி மனுஷ்யர் பயத்தின் நீங்கி இருந்த ப்ரதிஸ்ருதியைக் கண்டு அடைந்து வணங்கி ஸ்வாமி! இத் தோன்றிய இவை என்? என்று வினவ, அவதி ஜ்ஞான ஸஹிதனாகிய அவனும் 'இவர்கள் சந்த்ர ஆதித்யர் என்பார். ஜோதிராங்கம் என்னும் கல்பக வருக்ஷங்களின் ஒளி பிழம்பினால் முன் உளராயினும் உங்கட்கு தோன்றிலர். இப்பொழுது கால இழிவினால் ஜோதிராங்கங்களில் ஒளி மழுங்குதலில் தோன்றினார்கள். எப்பொழுதும் மேருவை வலமாகத் திரிவர். இவர்களால் உங்கட்கு பயமில்லை' என்று பயத்தினைக் கெடுத்தான்.[23]

இந்த மனு ஆயுஷ்ய அவஸாநத்து ஸ்வர்க்கம் அடைந்தபின் மந்வந்தரம் ஒரு பல்லத்தை எண்பது (80) கூறிட்டதில் ஒரு பங்கு காலமெல்லாம் சென்றபிறகு முறையால் இழிந்து வாராநிற்ப ஸன்மதி

---

22 அடிக்குறிப்பு: பூதலத்து -பூமியில் ; ஸ்வச்ச - தூய ; செற்றம்-பகை; கத்யாகதி - பிறப்புகள்; பல்லம் - பல்யம்; பூர்னமாஸின் -பௌர்ணமி நாளன்று ; அஸ்தமய - மறையும் வேளை ; பீதராகி - அஞ்சி

23 அடிக்குறிப்பு: மன் வந்தரம்- ஒரு மன இறந்து அடுத்த மன தோன்றுதற்கு இடைப்பட்ட காலம்; அஹோராத்ர-பகலும் இரவும்;

என்னும் இரண்டாம் மனு தோன்றினான். அவனுக்கு ஆயுஷ்யம் பல்லத்தை நூறு கூறிட்டதில் ஒரு கூறு (1/100 ப.) சரீர உத்ஸேதம் ஆயிரத்து முந்நூறு (1300) வில்லு.

அவன் காலத்து ஜோதிரங்கம் என்னும் கல்பக தருக்கள் மிகவும் ஒளி மயங்குதலால் ஆகாச தலதது நிறைந்து எழுந்த தாரகைகளைக் கண்டு பயப்பட்ட மனுஷ்யரை பயத்தினைத் தீர்த்து அஹோராத்ர விபாகத்தினையும் பக்ஷமாஸ ஸங்கராந்தியினையும், ருது, விஷ்வயன ஸம்வத்ஸரங்களையும் க்ரஹணத்தினையும், நவ க்ரஹங்களின் ஸ்வரூபத்தினையும் அவற்றினது ஸம்யோக விபாகத்தாற் தோன்றும் பலங்களையும் உபதேசித்தான்.

இந்த மனு ஆயுஷ்ய அவஸானத்து ஸ்வர்க்கம் அடைந்த பின், மந்வந்தரம் ஒரு பல்லத்தை எண்ணூறு (800) கூறு செய்து ஒரு பங்கு கால மெல்லாம் முறையாக இழித்து வாராநிறப க்ஷேமங்கரன் என்னும் மூன்றாம் மனு தோன்றினான். அவனுக்கு ஆயுஷ்யம் ஒரு பல்லத்தை ஆயிரம் கூறு இட்டு அதில் ஒரு கூறு (1/1000 ப.) சரீர உத்ஸேதம் எண்ணூறு (800) வில்லு. அவனும் கால இழிவினால் நக தந்த ச்ருங்கமங்களால் பிளந்தும் கடித்தும் பாய்ந்தும் திரிகின்ற துஷ்ட்ட மிருகங்களைக் கண்டு பயப்பட்ட மனுஷ்யரை, நீங்கள் இவற்றின்பால் செல்லாது ஒழிமின் என்று சொல்லி பயம் தீர்த்தான்

இந்த மனு ஆயுஷ்ய அவஸானத்து ஸ்வர்க்கம் அயைந்தபின் மன்வந்தரம் ஒரு பல்லத்தை எண்ணாயிரம் (8000) கூறிட்டதில் ஒரு பங்கு கால மெல்லாம் முறையாக இழிந்து வாரா நிற்ப க்ஷேமந்தரன் என்னும் நாலாம் மநு தோன்றினான். அவன் ஆயுஷ்யம் பல்லத்தை பதினாயிரம் கூறிட்டதில் ஒரு கூறு(1/10000ப) சரீர உத்ஸேதம் எழுநூற்று எழுபத்தைந்து (775) வில்லு.

அவனும், கால இழிவினால், மிகவும் மேல் விழுந்து தொடராநின்ற துஷ்ட்ட மிருகங்களைக் கண்டு பயப்பட்ட மனுஷ்யரை கல்லும் தடியும் கொண்டு உங்களைப் பாதுகாத்து கொள்மின் என்று உபதேசித்தான்.

இந்த மனு ஆயுஷ்ய அவஸானத்து ஸ்வர்க்கம் அடைந்தபின் மன்வந்தரம் ஒரு பல்லத்தை எண்பதாயிரம் (80,000) கூறிட்டதில் ஒரு பங்கு கால மெல்லாம் முறையால் இழிந்து வார நிற்ப ஸீமங்கரன் என்னும் ஐந்தாம் மனு தோன்றினான். அவன் ஆயுஷ்யம் பல்லத்தை நூறாயிரம் கூறிட்டதில் ஒரு கூறு (1/1000 ப) சரீர உத்ஸேதம் எழுநூற்றைம்பது (750) வில்லு.

அவனும், கால இழிவினால் கல்ப வ்ருஷங்கள் சொல்பங்களாயின, பலங்களும் குறைந்தவிடத்து ஒருவர்க்கொருவர் கல்பகவ்ருஷங்களுக்குப் பிணங்கா நின்ற ஜனங்கட்டு, அவையிற்றை (அவற்றை) வசனத்தால் எல்லை குறித்துக் கொடுத்தான்.

இந்த [மனு] ஆயுஷ்ய அவஸான காலத்து ஸ்வர்க்கம் அடைந்தபின் மந்வந்தரம் [ஒரு] பல்லத்தை எண்ணூறாயிரம் (8,00,000) கூறிட்டதில் ஒரு பங்கு கால மெல்லாம் [முறையாக] இழிந்து[24] வாராநிற்ப ஸீமந்தரன் என்னும் ஆறாம் மறு தோன்றினான். [அவன்] ஆயுஷ்யம் ஒரு பல்லத்தை பத்து நூறாயிரம் கூறிட்டதில் ஒரு கூறு (1/10,[000],00) சரீர உத்சேதம் ஏழுநூற்றிருபத்தைந்து (725) வில்லு.

அவனும் கால இழிவினால் கல்பக வ்ருக்ஷங்கள் எங்கேனும் சில உளவாய் மிகவும் மந்த பலங்களானவிடத்து இவற்றின் பொருட்டு மெய்ப் பற்றி கலஹியாநின்ற மனுஷ்யர்க்கு மரங்களையும் புதர்களையும் எல்லை வரைந்து காட்டி கொடுத்தான்.

இந்த மனு ஆயுஷ்ய அவஸானத்து ஸ்வர்க்கம் அடைந்தபின் மந்வந்தரம் ஒரு பல்லத்தை எண்பது நூறாயிரம் (80,00000) கூறிட்டதில் ஒரு பங்கு கால மெல்லாம் முறையாக இழிந்து வாரா நிற்ப விமலவாஹனன் என்னும் ஏழாம் மனு தோன்றினான். அவன் ஆயுஷ்யம் பல்லத்தை ஒரு கோடி கூறிட்டதில் ஒரு கூறு (1/0000000ப) சரீர உத்ஸேதம் எழு நூறு (700) வில்லு.

அவனால் மனுஷ்யர்க்கு கரி துரகாதி வாஹனங்கள் ஏறும் பரிசும் அவை பண்ணும் பரிசும் காட்டப்பட்டது.

இந்த மனு ஆயுஷ்ய அவஸானத்து ஸ்வர்க்கம் அடைந்தபின் மன்வந்தரம் ஒரு பல்லத்தை எட்டு கோடி (8,0000000) கூறிட்டதில் ஒரு பங்கு கால மெல்லாம் முறையாக இழிந்து வாராநிற்ப சக்ஷுஷ்மான் என்னும் எட்டாம் மனு தோன்றினான். அவன் ஆயுஷ்யம் ஒரு பல்லத்தை பத்து கோடி கூறிட்டதில் ஒரு கூறு (1/10,0000000ப) சரீர உத்ஸேதம் அறுநூற்றெழுபத்தைந்து (675) வில்லு.

---

24 ச்ருங்கமங்கள்- கொம்புகள்; பலங்களும் பயன்களும்

அவனும் கால இழிவினால் ப்ரஜைகளைப் பெற்று சிறிது பொழுது உயர்த்திருந்து காணாது கண்ட மனுஷ்யர்க்கு அதனை உள்ள பரிசு சொல்லி பயம் தீர்த்தான்[25]

இந்த மனு ஆயுஷ்ய அவஸானத்து ஸ்வர்க்கமடைந்தபின் மந்வந்தரம் ஒரு பல்லத்தை எண்பது கோடி (80,0000000) கூறிட்டதில் ஒரு பங்கு கால மெல்லாம் முறையாக இழிந்து வாராநிற்ப யஸஸ்வான் என்னும் ஒன்பதாம் மனு தோன்றினான். அவன் ஆயுஷ்யம் ஒரு பல்லத்தை நூறுகோடி கூறிட்டதில் ஒரு கூறு(1/100,00,00,000ப)சரீர உத்சேதம் அறுநூற்றைம்பது (650) வில்லு. அவனும் புத்ரரைப் பெற்று சில நாள் இருத்தலால் பயப்பட்ட மனுஷ்யரை இது கால ஸ்வபாவம் என்று சொல்லி பயம் தீர்த்தான்

இந்த மனு ஆயுஷ்ய அவஸானத்து ஸ்வர்க்கம் அடைந்த பின் மந்வந்தரம் ஒரு பல்லத்தை எண்ணூரு கோடி (800,0000000) கூறிட்டதில் ஒரு பங்கு கால மெல்லாம் முறையாக இழிந்து வாரா நிற்ப அபிசந்திரன் என்னும் பத்தாம் மனு தோன்றினான். அவன் ஆயுஷ்யம் பல்லத்தை ஆயிரம் கோடி கூறிட்டதில் ஒரு கூறு (1/000,0000000) ஸரீர உத்ஸேதம் அறுநூற்றிருபத்தைந்து (625) வில்லு

அவனும் புத்ரரைப் பெற்றுச் சில நாள் இருந்து பயப்பட்ட மனுஷ்யரை பயம் தீர்த்தாள்.

இந்த மனு ஆயுஷ்ய அவஸானத்து ஸ்வர்க்கம் அடைந்தபின் மந்வந்தரம் ஒரு பல்லத்தை எண்ணாயிரம் கோடி (8000,0000000) கூறிட்டதில் ஒரு பங்கு கால மெல்லாம் முறையாக இழிந்து வாராநிற்ப சந்த்ராபன் என்றும் பதினோராம் மனு தோன்றினாள். அவன்

---

25 கலஹியாநின்ற பூசலிடுகின்ற; கரி-யானை, துரக குதிரை, ப்ரஜைகளை மக்களை; பரிசு - விதி; அடிக்குறிப்பு : எட்டாம் மனு பிள்ளைகள் முகத்தைப் பார்த்து அஞ்சினான் என்றும், ஒன்பதாம் மனு பிள்ளைகள் பிறந்து சிறிது அதிக பொழுது இருந்து அஞ்சினான் என்றும், பத்தாம் மனு பிள்ளைகள் பிறந்து சில நாள் இருத்தலால் அஞ்சினான் என்றும் தி.ஸா. உரை கூறுகிறது; ஒன்பதாம் மனு காலத்தில் பிள்ளை பிறந்தது சில நாள் இருந்தனர் என்று இங்குக் கூறப்பட்டுள்ளது.

ஆயுஷ்யம் ஒரு பல்லத்தை பதினாயிரம் கோடி கூறிட்டதில் ஒரு கூறு (1/10000, 0000000 ப.) சரீர உத்ஸேதம் அறுநூறு (600) வில்லு.

அவனும் நெடுநாள் பிள்ளைகளோடு கூடி ஜீவித்து பயப்பட்ட ஜனங்கட்கு பயம் தீர்த்தான்.

இந்த மனு ஆயுஷ்ய அவலானத்து ஸ்வர்க்கம் அடைந்தபின் மந்வந்தரம் ஒரு பல்லத்தை எண்பதினாயிரம் (80000, 00000000) கோடி கூறிட்டதில் ஒரு பங்கு காலமெல்லாம் முறையால் இழிந்து வாராநிற்ப மருதேவன் என்னும் பன்னிரெண்டாம் மனு தோன்றினான். அவன் ஆயுஷ்யம் பல்லத்தை நூறாயிரம் கோடி கூறிட்டதில் ஒரு கூறு (1/1000000000000 ப.) சரீர உத்ஸேதம் ஐந்நூற்றெபபத்தைந்து (575) வில்லு.

அவனும், பல ஆண்டும் ப்ரஜைகளுடன் உயிர்த்திருத்தலால் பயப்பட்ட ஜனங்களை பயம் தீர்த்தான். அவனால் ஜல துர்க்கங்களைக் கடக்கும் உபயமாகிய படகும் பணம்பும் ஓடம் முதலானவும், கிரி துர்க்கங்களை ஏறும் இடத்து படிகளும் வகுக்கப்பட்டு, அவனுடைய காலத்திலே உபஸமுத்ரமும் பல ஆறுகளும் மலைகளும் சில மேகங்களும் தோன்றிற்று.

இந்த மனு ஆயுஷ்ய அவஸானத்து ஸ்வர்க்கம் அடைந்தபின் மந்வந்தரம் ஒரு பல்லத்தை எண்ணூறாயிரம் கோடி (800000000000) கூறிட்டதில் ஒரு பங்கு காலமெல்லாம் முறையாக இழிந்து வாராநிற்ப ப்ரசேனஜித் என்பான் பதிமூன்றாம் மனு தோன்றினான் . அவன் ஆயுஷ்யம் பல்லத்தை பத்து நூறாயிரம் கோடி கூறிட்டதில் ஒரு கூறு (10000000000000ப.) சரீர உத்ஸேதம் ஐநூற்றைம்பது (550) வில்லு.[26]

அவனும், ஜராயு படலத்தால் மூடிப் பிறந்த பிள்ளைகளைக் கண்டு பயப்பட்ட ஜனங்கட்கு அதனை வாங்கிப் போக்கட்டும் உபாயத்தைக் காட்டினான் .

இந்த மனு ஆயுஷ்ய அவஸானத்து ஸ்வர்க்கம் அடைந்தபின் மந்வந்தரம் பல்லத்தை என்பது நூறாயிரம் கோடி (80000000000000) கூறிட்டதில் ஒரு பங்கு காலமெல்லாம் முறையாக இழிந்து வாராநிற்ப

---

26 துர்க்கங்கள்-போதற்கு அரிய இடங்கள்; பணம்பு-பாலம்; ஜராயு படலம் - கருப்பப்பை அடுக்கு; நாபி நாளம் - கொப்பூழ் (தொப்புள்)கொடி; மனக்களுடைய செயல்களாக இந்நூல் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ புராணத்திலிருந்து எடுத்து ஆளப்பட்டுள்ளன; பார்க்க ஸ்ரீ பு.பக். 13-18

நாபிமஹாராஜன் என்னும் பதினான்காம் மனு தோன்றினான். அவன் ஆயுஷ்யம் பூர்வ கோடி. சரீர உத்ஸேதம் ஐநூற்றிருபத்தைந்து (525) வில்லு.

அவன் காலத்து ப்ரஜைகள் நாபி நாளத்தோடும் கூடப்பிறந்தார். அதனைப் போக்கும் உபாயத்தினை உபதேசித்ததில் நாபி என்பது நாமம் ஆயிற்று. அவன் காலத்து மேகங்கள் எழுந்து மழை பொழிந்தன. எல்லா தான்யங்களும் உழுதுவித்தாமல் கால ஸ்வபாவத்தினால் தானே விளைந்தன. கல்பக வ்ருக்ஷங்கள் மறைந்தபின் நாநா விதமாகிய வ்ருக்ஷங்கள் தானே தோன்றி பலித்தன. அக் காலத்து ஜனங்கள் விளைந்தும் பழுத்துக்கிடந்த தான்யங்களையும் பலங்களையும் கண்டு அவை உபயோகிக்கப்படும் என்று உபயோகிக்கும் உபாயத்தினையும் அறியாது பசியால் வருந்தி வ்யாகுலராகி நாபி மஹாராஜனைச் சென்றடைந்து, நாதனே எங்களை ரமிக்கும் கல்பக வ்ருக்ஷங்கள் போனபின் பசியால் வருந்தி இருக்கின்ற எங்கட்கு ஜீவனோபாயமாவது யாது என்று அறிகின்றிலம்; அதற்கு உபாயங்களை உபதேசித்து அருள வேண்டும் என்று விக்ஞாபித்தபின்; நாபி மஹாராஜனும் கருணா பரவசனாகி உபதேசிப்பான்:[27]

தேங்கு மாவும் பலாவும் முதலாகிய வ்ருக்ஷங்களுடைய பலங்களையும் ஸாலி முதலாகிய தானியங்களையும், தினையும் சோளமும் முதலாகிய க்ஷுத்ர தானியங்களையும், தீங்கரும்பு முதலாயினவும், பூசனி முதலிய வல்லி விசேஷங்களையும், கருணை முதலாகிய கந்த விசேஷங்களையும், அவை உபயோகிக்குமிடத்து உபாயங்களையும் காட்டி, சுகந்த புஷ்ப சந்தனாதிகள் சூடவும் பூசவும் படுமென்றும், பருத்தி முதலாயினவற்றால் வஸ்த்ராதிகளை ஆக்கும் உபாயங்களையும், இப்பேற்பட்ட அனுபவ ஸாதன உபாயங்களையும் காட்டினான். இவன் இக்ஷு தண்டங்களை உபயோகிக்குமிடத்து உபாயத்தை உபதேசித்ததில் 'இக்ஷ்வாகு குலம்' என்னும் பெயருடையவன் ஆயினன்.

---

27 பலித்தன-பயன்தந்தன; பலங்கள் - பழங்கள் ; ஸாலி - நெல்; வல்லி - கொடி ; கந்த - கிழங்கு ; பூர்வ - முன் ; ஸத்பாத்ரம் - முனி , ஆர்யிகை முதலானோர்; மாதவர் கையிட்ட வல்சியால் நின்ற போக நிலம் பெற்றது ஒக்குமே மேபு. 237.

மனுக்கள் முற்பவம்:

இச் சொல்லப்பட்ட பதினால்வரும் பூர்வ பவத்தில் விதேஹ க்ஷேத்ரத்திலே ஸத் பாத்ரத்தினுக்குக் கொடுத்த பரிஸுத்த ஆஹார தான பலத்தால் போகபூமி ஆயுஷ்யத்தினைப் பெற்று, பின் க்ஷாயிக ஸம்யத்துவத்தை எய்தி, பரத க்ஷேத்ரக்தில் 'சுஷம துஷமை' என்னும் த்ரிதிய (3-ம்) காலந்தரத்து க்ஷத்ரிய வம்சத்து ஜனித்து, சிலர் அவதிஜ்ஞானத்தாலும் சிலர் ஜாதி ஸ்மரணத்தாலும் இப்பேற்பட்ட உபதேசத்தினைச் செய்து, மனுக்கள் என்றும், குலதரர் என்றும், ப்ரமாக்கள் என்றும் சொல்லப்படுகின்றனர்.[28]

வ்ரஷப ஸ்வாமி தீர்த்தங்கரர் என்றும் குலதரர் என்றும் சொல்லப்படுகின்றன.

தண்டனை முறை:

முதல் ஐவர் மனுக்கள் காலத்து அபராதம் செய்தோர்க்கு தண்டமாவது 'ஹா' என்பது. அதன் பின் ஐவர் மனுக்காலத்து தண்டமாவது 'ஹா' என்பதும் 'மா' என்பதும் ஆயிற்று. அதன்பின் ஐவர் மனுக்கள் காலத்து தண்டமாவது 'ஹா' என்பதும் 'மா' என்பதும், 'திக்' என்பதும் ஆயிற்று. பரதேஸ்வரன் காலத்து சரீர தண்டம் தோன்றிற்று.

மனுக்கள் கால அளவு:

இந்த பதினாலு மனுக்களுடைய ஆயுஷ்யம் எல்லாம் தொகை கூட்ட பல்லியத்தில் சற்றுக் குறைய நவாம்சத்தில் ஒன்று (1/9) த்ரயோதச (13) அந்தர காலமும் பல்யத்தை எழுபத்திரண்டு கூறிட்டதில் சற்று குறை ஒரு கூறாகும். (1/72). இவை இரண்டு வகையும் கூடி சற்று குறைய பல்யாஷ்டம (1/8ப) பாகமாகும்.

---

28 ஹா - ஆ! ஆ! தவறு செய்தாய்; ஹா-மா-ஆ! தவறு செய்தாய், இனி செய்யாதே; ஹா-மா-திக்-ஆ! செய்யாதே நீ ஒதுக்கப்படுகிறாய் இது போல சொல்லாவில் எச்சரிக்கும் தண்டனை இருந்தது என்பது; மூன்றாம் காலத்தில் பல்யத்தில் 1/8 அளவு காலம் இருக்கும் போது மனுக்கள் தோன்றினர் என்றார்-பார்க்க பக் 115. மனுக்கள் ஆயுளையும் இடைப்பட்ட காலத்தையும் கூட்டினால் அந்தக் கால அளவுதான் வரும் என்று இங்கே கூறுகிறார் - பல்யாஷ்டம பாகம் என்பதால்.

மனுக்கள் உடல் நிறம்

அவர்கள் சரீர வர்ணமும், சக்ஷுஷ்மானும் யஸஸ்வதியும் ஸ்யாம வர்ணம்; ப்ரசேனஜித், சந்த்ராபனும் தவள வர்ணம்; சேஷ பதின்மரும் கனக வர்ணமாகும்.

கர்ம பூமி தோற்றம்:

இதன் மேல் கர்ம பூமி வர்த்தனை யாகும்.

புரங்களும், க்ராமங்களும், பட்டண முதலானதுகளும், லௌகிக சாஸ்த்ரங்களும் லோக வ்யவ ஹராங்களும், தயாமூல தர்மங்களும் இதுமுதலாகிய விதேஹத்திற் சொன்னபடி ஆதீஸ்வரராலே நிர்மாபண மாகும்.

சலாகா புருஷர்கள்:

இப்பால், நாலாங்கால ஸ்வரூபமும் தத் காலத்தில் சலாகா புருஷருடைய ப்ரமாணமும் சொல்லுதும்:

சதுர்விம்சதி (24) தீர்த்தங்கரரும், த்வாதச(12) சக்ரதரரும், நவ(9) பலதேவரும், நவ(9) வாசுதேவரும், நவ(9) ப்ரதி வாசுதேவரும் என சலாகா புருஷர் அறுபத்து மூவர் ஆகும்.

தீர்த்தங்கரர்கள்:

அவர்கள் சரீர உத்ஸேதமும் வர்ணங்களும் ஆயுஷ்யங்களும் அவ்அவ் காலாந்தரங்களும் சொல்லுதும்:

வ்ரஷப தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் ஐந்நூறு (500) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் எண்பத்து நான்கு நூறாயிரம் பூர்வம். இவர் மூன்றாங் காலம் மூன்று வருஷமும் எட்டரை மாசமும் இருக்க ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின்;

ஐம்பது நூறாயிரம் கோடி ஸாகரோபமமும் மூன்று வருஷமும் எட்டரை மாசமும் ஆகிய அந்தர காலத்துள் உத்பவித்த அஜித தீர்த்தங்கரருக்கு சரீர உத்ஸேதம் நானூற்றைம்பது (450) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் எழுபத்து இரண்டு நூறாயிரம் பூர்வம்.

கோடி ஸாக ரோபமாளைய அந்தர காலத்து உத்பவித்த சம்ப தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் நானூறு (400) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் அறுபது நூறாயிரம் பூர்வம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் பத்து நூறாயிரம் கோடி

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் முப்பது நூறாயிரம் கோடி ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த சம்பவ தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் நானூறு(400) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் அறுபது நூறாயிரம் பூர்வம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் பத்து நூறாயிரம் கோடி ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த அபிநந்தன தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் முன்னூற்று ஐம்பது (350) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் ஐம்பது நூறாயிரம் பூர்வம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் ஒன்பது நூறாயிரம் கோடி ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த சுமதி தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் முன்னூறு(300) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் நாற்பது நூறாயிரம் பூர்வம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் தொண்ணூறாயிரம் கோடி ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த பத்மபிரப தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் இருநூற்று(250) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் முப்பது நூறாயிரம் பூர்வம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் ஒன்பதினாயிரம் கோடி ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த சுபார்சுவ தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் இருநூறு(400) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் இருபது நூறாயிரம் பூர்வம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் தொளாயிரம் கோடி ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த சந்திரப்ரப தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் நூற்றைம்பது(150) வில்லு; தவள வர்ணம், ஆயுஷ்யம் பத்து நூறாயிரம் பூர்வம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் தொண்ணூறு கோடி ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த புஷ்பதந்த தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் நூறு(100) வில்லு; தவள வர்ணம், ஆயுஷ்யம் இரண்டு நூறாயிரம் பூர்வம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் ஒன்பது கோடி ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த ஸீதள தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் தொண்ணூறு (90) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் நூறாயிரம் பூர்வம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் நூறு கடலும் அறுபத்தாறு லக்ஷத்து இருபத்தாறாயிரம் வருஷம் குறைந்த ஒரு கோடி ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த ச்ரேயம்ச தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் எண்பது (80) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் எண்பத்து நாலு நூறாயிரம் (84,00,000).

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் ஐம்பத்து நாலு ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த வாசுபூஜ்ய தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் எழுபது (70) வில்லு; பவள வர்ணம், ஆயுஷ்யம் எழுபத்திரண்டு நூறாயிரம் (7200000) வருஷம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் முப்பது ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த விமல தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் அறுபது (60) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் அறுபது நூறாயிரம் (6000000) வருஷம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் ஒன்பது ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த அனந்த தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் ஐம்பது (50) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் முப்பது நூறாயிரம் (3000000) வருஷம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் நாலு ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த தர்ம தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் நாற்பத்தைந்து (45) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் பத்து நூறாயிரம் (1000000) வருஷம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் முக்கால் (3/4) பல்லம் குறைந்த மூன்று ஸாக ரோபமாகிய அந்தர காலத்து உத்பவித்த சாந்தி தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் நாற்பது (40) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் நூறாயிரம் (100000) வருஷம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் அரை (1/2) பல்ல மாகிய அந்தர காலத்து உத்பவித்த குந்து தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் முப்பத்தைந்து (35) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் தொண்ணூற்றையாயிரம் (95000) வருஷம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் ஆயிரம் கோடி வருஷம் குறைந்த கால் பல்ல மாகிய அந்தர காலத்து உத்பவித்த அர தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் முப்பது (30) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் எண்பத்து நாலாயிரம் (84000) வருஷம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் ஆயிரம் கோடி வருஷமாகிய அந்தர காலத்து உத்பவித்த மல்லி தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் இருபத்தைந்து (25) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் ஐம்பத்தைந்தாயிரம் (55000) வருஷம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் ஐம்பத்து நாலு நூறாயிரம் (5400000) வருஷமாகிய அந்தர காலத்து உத்பவித்த முனிஸுவ்ரத தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் இருபது (20) வில்லு; கிருஷ்ண வர்ணம், ஆயுஷ்யம் முப்பதினாயிரம் (30000) வருஷம்.[1]

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் அறுநூறாயிரம் (600000) வருஷமாகிய அந்தர காலத்து உத்பவித்த நமி தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் பதினைந்து (15) வில்லு; கனக வர்ணம், ஆயுஷ்யம் பதினாறாயிரம் (10000) வருஷம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் ஐநூறாயிரம் (500000) வருஷமாகிய அந்தர காலத்து உத்பவித்த நேமி தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் பத்து (10) வில்லு; க்ரஷ்ண வர்ணம், ஆயுஷ்யும் ஆயிரம் (1000) வருஷம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் எண்பத்து மூவாயிரத்தெழு நூற்றைம்பது (83,750) வருஷமாகிய அந்தர காலத்து உத்பவித்த பார்ச்வ தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் ஒன்பது (9) முழம்; நீல வர்ணம், ஆயுஷ்யம் நூறு (100) வருஷம்.

இவர் ஸித்தி க்ஷேத்ரம் அடைந்தபின் இருநூற்று நாற்பத்தாறு வருஷமும் மூன்று மாஸமும் பதினைந்து நாளுமாகிய அந்தர காலத்து உத்பவித்த வர்த்தமான ஸ்வாமி தீர்த்தங்கரர் சரீர உத்ஸேதம் ஏழு முழம் (7); கனக வர்ணம், ஆயுஷ்யம் சற்றுக் குறைய எழுபத்திரண்டு (72) வருஷமாகும்.

---

1. அந்தர காலம்-ஒரு தீர்த்தங்கரர் முக்தி பெற்ற பின் அடுத்த தீர்த்தங்ககர் தோன்றும் நாள்வரை இடைப்பட்ட காலம் அந்தர காலம் எனப்படும். எடுத்துக் காட்டாக முதல் அந்தர காலம் 50 யோடி கடல் 3 ஆணடு 8 1/2 மாதம். இதில் அஜித நாதருடைய ஆயுளான 72 லக்ஷ பூர்வத்தைக் கழித்து விட்டால் மீதி இருப்பது முதல் தீர்த்தங்கரர் முக்தி பெற்ற சமயம் முதல் அஜித தீர்த்தங்கரர் பிறந்த நாள்வரையிலான இடைவெளிக் காலமாகும். இது போல பிறவற்றையும் அறிக.

இப்பால் வர்த்தமான ஸ்வாமி காலம் நாலாங்காலத்தில் மூன்று வருஷமும் எட்டு மாஸமும் பதினைந்து நாளும் குறை நாலு வருஷமும் ஐந்தாங் காலம் இருபத்தோராயிரம் வருஷமும் ஆறாங் காலம் இருபத்தோராயிர வருஷமும் அவஸர்ப்பிணி ஸமாப்த கால பர்யந்தமாகும்.

இச் சொல்லப்பட்ட அந்தரம் ஸர்வமும் தீர்த்தகரர் மோக்ஷ மோக்ஷாந்தரம் என்று அறிவது. அந்த அந்த தீர்த்ங்கரர்க்கு அந்தர காலம் என்று அறிவது.

பூர்வ, பூர்வ தீர்த்தங்கரர் காலத்திலே உத்தரோத்தர தீர்த்தங்கரர் ஆயுஷ்யம் உண்டு என்று அறிவது.

ஜிந தர்மம் இல்லாத காலம்:

அனந்தரம், தீர்த்ங்கரர் காலத்திலே உப தேச கர்த்தாக்களும் ச்ரோத்தாக்களும் சாரித்ரம் நடக்கிற பேரு மில்லாமல் ஸத்தர்ம நாஸ்தி காலம் சொல்லுதும்:

புஷ்பதந்த தீர்த்தங்கரர் அந்தர காலத்தில் கால் பல்லம், சீதள தீர்த்தங்கரர் அந்தர காலத்து அரைப் பல்லம், ச்ரேயாம்ஸ தீர்த்தங்கரர் அந்தர காலத்தில் முக்கால் பல்லம், வாசுபூஜ்ய தீர்த்தங்கரர் அந்தர காலத்தில் ஒரு பல்லம், விமல தீர்த்தங்கரர் அந்தர காலத்தில் முக்கால் (3/4) பல்லம், அனந்த தீர்த்தங்கரர் அந்தர காலத்தில் அரைப் பல்லம், தர்ம தீர்த்தங்கரர் அந்தர காலத்தில் கால் (1/4) பல்ல மாகும்.[2]

தீர்த்தங்கரர் வம்சம்:

இப்பால், தீத்தகரர் உத்பவித்த குலங்களும்: மஹாவீர தீர்த்தங்கரர் நாத குலம்; பார்சுவ தீர்த்தங்கரர் உக்ரவம்சம்; முனிசுவ்ரத தீர்த்தகரரும் நேமி தீர்த்த கரரும் ஹரி வம்சம்; தர்ம, குந்து, அர

---

2 வர்த்தமான சுவாமி காலம்--நாலாங் காலம் முடிய மூன்று ஆண்டு எட்டரை திங்கள் இருக்கும் போது அவர் முக்தி பெற்றார். அவர் முக்தி அடைந்த காலம் முதல் இங்கு கணக்கிடப்படுகிறது; மோக்ஷ மோக்ஷாந்தரம் -ஒரு தீர்த்தங்கார் மோக்ஷம் அடைந்தபின் அடுத்த தீர்த்தங்கள் மோக்ஷம் அடையும் வரையிலான இடைவெளிக் காலம்; பூர்வ — ஆயுஷ்யம் உண்டு- முன் தீர்த்தங்கரர் காலத்தில் பின் தீர்த்ங்கரர் ஆயுட் காலம் உள்ளடங்கும்; உபதேச கர் த்தா அளமுறைப்போர் ; ச்ரோத்தா- அறம் கேட்போர்; சாரித்ரம் நடக்கிற பேர் சாரித்ரம் உடையோர்; ஸத்தர்மம்- ஜிந தர்மம்;

தீர்த்தகரர் மூவரும் குரு வம்சம்; சேஷ பதினேழு தீர்த்தகரரும் இக்ஷ்வாகு வம்சம் என்று அறிவது.

இவருள் வாசு பூஜ்ய ஜிநர், மல்லி ஜிநர், நேமி ஜிநர், பார்சுவ ஜினர், வீர ஜினர் என ஐவரும் குமார ச்ரமண ராகும்.

சக்கரவர்த்திகள்:

இப்பால், சக்ரவத்திகளுடைய பெயர் சொல்லுதும்:

பரத, ஸகர மகவான், ஸநத் குமார, சாந்தி நாத[1] குந்து நாத அரநாத, சுபௌம, மஹா பத்ம, ஹரிஷேண ஜயஸேன, ப்ரம்மதத்த என பன்னிரண்டாகும்.

இவர்கள் ஷட்(6) கண்டமும் ஆண்ட காலமும் வ்ருஷப தீர்த்தங்கரர் காலத்தில் பரதன், அஜித தீர்த்தங்கரர் காலத்தில் ஸகரன், தர்ம தீர்த்தங்கரர் காலத்துக்கும் சாந்தி தீர்த்தங்கரர் காலத்துக்கும் மத்யத்தில் மகாவனும் ஸநத் குமாரனும், சாந்தி தீர்த்த சக்ரவர்த்தியும், குந்து தீர்த்த சக்ரவத்தியும், அர தீர்த்த சக்ரவர்த்தியும் இம் மூவரும் தன் தான் காலங்களிலே யாகும்; அர தீர்த்தகரர் காலத்துக்கும் மல்லி தீர்த்தகரர் காலத்துக்கும் மத்தியில் சுபௌமன்,மல்லி தீர்த்தகரர் காலத்துக்கும் முனிசுவ்ருத்த தீர்த்தகரர் காலத்துக்கும் மத்தியில் மஹா பத்மன், முனிசுவ்ருத்த-நமி தீர்த்தகர காலமத்தியில் ஹரி ஷேனணன், நமி-நேமி-தீர்த்தகரர் கால மத்தியில் ஜயசேனன், நேமி-பார்சுவ தீர்த்தகரர் கால மத்தியில் ப்ரம்மதத்தன் என வாகும்.[3]

அவர்களுடைய சரீர உத்ஸேதமும்ஆயுஸ்யமும் சொல்லுதும்:

ஸகல சக்ரவர்த்திகள் எல்லாரும் ஸ்வர்ண வர்ண மாகும்.

சக்ரவர்த்திகள் உயரமும் ஆயுளும்:

பரதேஸ்வரனுக்கு சரீர உத்ஸேதம் ஐந்நூறு (500) வில்லு; ஆயுஷ்யம் எண்பத்து நான்கு நூறாயிரம் (84,00000). சகரனுக்கு சரீர உத்ஸேதம் நானூற்றைம்பது (450) வில்லு; ஆயுஷ்யம் எழுபத்திரண்டு நூறாயிரம் (72,00,000) பூர்வம். மகவானுக்கு சரீர உத்ஸேதம் நாற்பத்திரண்டரை (42 1/2) வில்லு; ஆயுஷ்யம் ஐநூறாயிரம் (5,00,000)

---

3 குமார ச்ரமணர் இளமையில் துறவு கொண்டார்;
பா.வே: 1. சாந்தி ஜிந, அரஜிந

வருஷம். ஸனத்குமாரனுக்கு சரீர உத்ஸேதம் நாற்பத்தொன்றரை (41 1/2) வில்லு; ஆயுஷ்யம் மூன்று நூறாயிரம் (3,00,000) வருஷம். சாந்தி சக்ரவர்த்திக்கு சரீர உத்ஸேதம் நாற்பது (40) வில்லு; ஆயுஷ்யம் நூறாயிரம (1,00,000) வருஷம். குந்து சக்ரவர்த்திக்கு சரீர உத்ஸேதம் முப்பத்தைந்து (35) வில்லு; ஆயுஷ்யம் தொண்ணூற்றையாயிரம் (95,000) வருஷம். அர சக்ரவர்த்திக்கு சரீர உத்ஸேதம் முப்பது (30) வில்லு; ஆயுஷ்யம் எண்பத்து நாலாயிரம் (84,000) வருஷம். சுபௌமனுக்கு சரீர உத்ஸேதம் இருபத்தெட்டு (28) வில்லு; ஆயுஷ்யம் அறுபதினாயிரம் (60,000) வருஷம். மஹா பத்மனுக்கு சரீர உத்ஸேதம் இருபத்திரண்டு (22) வில்லு; ஆயுஷ்யம் (30,000) வருஷம்; ஹரிஷேணனுக்கு சரீர உத்ஸேதம் இருபது (20) வில்லு; ஆயுஷ்யம் பதினாயிரம் (10,000) வருஷம். ஜயஸேனனுக்கு சரீர உத்ஸேதம் பதினைந்து (15) வில்லு; ஆயுஷ்யம் மூவாயிரம் (3000) வருஷம். ப்ரம்மதத்தனுக்கு சரீர உத்ஸேதம் ஏழு (7) வில்லு; ஆயுஷ்யம் எழுநூறு (700) வருஷம்.

நவ நிதி:

இவர்கள் பன்னிருவருக்கும் நவ (9) நிதிகளும் சதுர்தஸ (14) ரத்னங்கள் முதலானதுகள் ஸமான மாகும்.[4]

பலதேவர் முதலானோர்:

அனந்தரம், பலதேவர் வாசு தேவர், பிரதி வாசுதேவர் நாமங்கள் சொல்லுதும்:

விஜயா, அசலா, சுதர்மா, சுப்ரபா, சுதர்சனா, நந்தி, நந்தி, நந்தி மித்ர, ராம பத்மன் என நவ (9) பலதேவர் ஆகும்.

த்ரிப்ரஷ்ட்ட, த்விப்ரஷ்ட்ட, ஸ்வயம்பு, புருஷோத்தும, புருஷஸிம்ஹ, புருஷபுண்டரீக, புருஷதத்த, நாராயண, க்ருஷ்ண என நவ(9) அர்த்த சக்ரவர்த்தி வாசு தேவர் ஆகும்.

அஸ்வக்ரீவ, தாரக, மேரக, நிசும்ப மது, கைடப[1], பலி, ராவண, ஜராஸந்தன் என நவ(9) ப்ரதி வாசுதேவர் ஆகும்.

இவர்களில் ஜராஸந்தன் பூசரனாகும்; சேஷ் எண்மரும் கேசரர் ஆகும்.

---

4 நவநிதி ஒன்பது நிதிகள்; சதுர்தஸ ரத்னங்கள் 14 ரத்னங்கள்; பார்க்க: பக்.97 பா.வே: பதுகைடப என்பது தி.ஸா, தி.ப. மூலம்; ப்ரஹரண், ஜராஸந்தன் என்பதும் அந்நூல் பாடம்.

பலதேவர் முதலானோர் காலம்:

இவர்கள் உத்பன்னமாய் நடந்த காலம் சொல்லுதும்:

ச்ரேயாம்ஸ தீர்த்தகரர் காலத்தில் விஜய பலதேவனும் த்ரிப்ரஷ்ட வாசுதேவனும் அஸ்வக்ரீவ ப்ரதி வாசுதேவனும்ஆகும்.[5]

வாசுபூஜ்ய தீர்த்தகரர் காலத்தில் அசல பல தேவனும் த்விப்ரஷ்ட வாசுதேவனும் தாரக ப்ரதி வாசுதேவனும் ஆகும்.

விமல தீர்த்தகரர் காலத்தில் சுதர்ம பலதேவனும் ஸ்யம்பு வாசுதேவனும் மேரக ப்ரதி வாசுதேவனும் ஆகும்.

அனந்த தீர்த்தகரர் காலத்தில் சுப்ரப பலதேவனும் புருஷோத்தும வாசுதேவனும் நிசும்ப ப்ரதிவாசுதேவனும் ஆகும்.

தர்ம தீர்த்தகரர் காலத்தில் சுதர்ஸன பலதேவனும் புருஷசிம்ஹ வாசுதேவனும் மது ப்ரதிவாசுதேவனும் ஆகும்.

அர மல்லி தீர்த்தகரர் மத்தியில் நந்தி பலதேவனும் புருஷ புண்டரீக வாசுதேவனும், கைடப ப்ரதிவாசுதேவனும் ஆகும்.

மல்லி-முனிசூவ்ரத தீர்த்தகர மத்தியில் நந்திமித்ர பலதேவனும், புருஷதத்த வாசுதேவனும், பலி ப்ரதிவாசுதேவனும் ஆகும்.

முனிசூவ்ரத நமி தீர்த்தகரர் ராம பலதேவனும், நாராயண வாசுதேவனும், ராவண ப்ரதிவாசுதேவனும் ஆகும்.

நேமி தீர்த்தகரர் காலத்தில் பதம பலதேவனும் க்ருஷ்ண வாசுதேவனும் ஜராஸந்த ப்ரதிவாசு தேவனும் என இவர்கள் உத்பன்னங்களாகும்.

உடல் உயரம்:

இவர்கள் சரீர உத்ஸேதமும் பலதேவாதி மூவர்க்கும் ஸமானமாக யதா ஸங்க்யம்:

---

5 பூசரன் பூமி அரசன்; கேசரர் வித்யாதரர்; உத்பன்னமாய் தோன்றி;

விஜய பலதேவாதி மூவர்க்கும் எண்பது (80) வில்லு; அசல பலதேவராதி மூவர்க்கும் எழுபது (70) வில்லு; சுதர்ம பலதேவராதி மூவர்க்கும் அறுபது(60) வில்லு; சுப்ரப பலதேவராதி மூவர்க்கும் ஐம்பது (50) வில்லு; சுதர்சன பல தேவராதி மூவர்க்கும் நாற்பத்தைந்து (45) வில்லு; நந்தி பலதேவராதி மூவர்க்கும் இருபத்தொண்பது (29) வில்லு; நந்திமித்ர பலதேவராகி மூவர்க்கும் இருபத்திரண்டு (22) வில்லு; ராம பலதேவராதி மூவர்க்கும் பதினாறு (16) வில்லு; பத்ம பலதேவராதி மூவர்க்கும் பத்து (10) வில்லு மாகும்.

ஆயுள்:

இவர்கள் ஆயுஷ்யமும் விஜய பலதேவனுக்கு எண்பத்தேழு நூறாயிரம் (8700000) வருஷம்; அசல பலதேவனுக்கு எழுபத்தேழு நூறாயிரம் (7700000) வருஷம்; சுதர்ம பலதேவனுக்கு அறுபத்தேழு நூறாயிரம் (6700000) வருஷம்; சுப்ரப பலதேவனுக்கு முப்பத்தே-ழு நூறாயிரம் (3700000) வருஷம்; சுதர்சன பலதேவனுக்கு பதினேழு நூறாயிரம் (1700000) வருஷம்; நந்தி பலதேவனுக்கு அறுபத்தேழாயிரம் (67000) வருஷம்; நந்தி மித்ர பலதேவனுக்கு முப்பத்தேழாயிரம் (37000) வருஷம்; ராம பலதேவனுக்கு பதினேழாயிரம் (17000) வருஷம்; பத்ம பலதேவனுக்கு ஆயிரத்து இரு நூறு (1200) வருஷம் ஆகும்.

வாசுதேவ ப்ரதிவாசுதேவனுக்கும் ஸமான ஆயுஸ்ய மாக த்ரிப்ரஷ்ட, அஸ்வக்ரீவனுக்கு எண்பத்து நாலு நூறாயிரம் (8400000) வருஷம்; த்வி ப்ரஷ்ட, தாரகர்க்கு எழுபத்திரண்டு நூறாயிரம் (7200000) வருஷம்; ஸ்வயம்பு, மேரகர்க்கு அறுபது நூறாயிரம் (6000000) வருஷம்; புருஷோத்தம, நிசும்பர்க்கு முப்பது நூறாயிரம் (3000000) வருஷம்; புருஷ ஸிம்ஹ, மதுவுக்கு பத்து நூறாயிரம் (1000000) வருஷம்; புருஷபுண்டரீக, கைடபனுக்கு அறுபத்தையாயிரம் (65000) வருஷம்; புருஷதத்த, பலிக்கு முப்பத்திராயிரம் (32000) வருஷம்; நாராயண, ராவணர்க்கு பன்னீராயிரம் (12000) வருஷம்; க்ருஷ்ண, ஜராசந்தனுக்கு ஆயிரம் (1000) வருஷம் ஆகும்.

நவ நாரதர்கள்:

நாரதர்களுக்கு நாமம் முதலானது சொல்லுதும்:

பீம, மகாபீம, ருத்ர, மஹாருத்ர, கால, மஹாகால, துர்முக, நரமுக, [1] அதோ முகர் என நவ(9) நாரதராகும். இவர்கள் அனைவரும் கலகப் பிரியரும் ஒரு ப்ரகாரம் தர்ம சந்தோஷிகளும் வாசுதேவ ஸமான காலரும் ஆகும். இவர்கள் அனைவரும் பவ்யரே. ஹிம்ஸாதி தோஷத்தினால் நரகம் புகுந்தனர் என்று அறிவது.

ருத்ரர்கள்:

அநந்தரம், ருத்ரர்களுக்கு நாமாதி ஸ்வரூபம் சொல்லுதும்:

பீமாவலி, ஜிதசத்ரு, ருத்ர, விசாலநயன, சுப்ரதிஷ்ட, அசல, புண்டரீக, அஜிதந்தர, ஜிதநாபி, பீட, ஸத்யகாத்மஜ என ஏகாதச (11) ருத்ரர் ஆகும்.

அவர்கள் உத்பன்ன காலமும் வ்ரஷப தீர்த்தகரர் காலத்தில் பீமாவலி, அஜித தீர்த்தகரர் காலத்தில் ஜிதசத்ரு, புஷ்பதந்த தீர்த்தகரர் காலத்தில் ருத்ர, சீதள தீர்த்தகரர் காலத்தில் விசாலநயன, ச்ரேயாம்ஸ தீர்த்தகரர் காலத்தில் சுப்ரதிஷ்ட, வாசுபூஜ்ய தீர்த்தகரர் காலத்தில் அசல, விமல தீர்த்தகரர் காலத்தில் புண்டரீக, அனந்த தீர்த்தகரர் காலத்தில் அஜிதந்தர, தர்ம தீர்த்தகரர் காலத்தில் ஜிதநாபி, சாந்தி தீர்த்தகர காலத்தில் பீட, வர் த்தமான தீர்த்தகரர் காலத்தில் ஸத்ய கிபுத்ர [2] னாகும்[6].

உயரமும் ஆயுளும்:

அவர்கள் சரீர உத்ஸேதமும் ஆயுஷ்யமும் யதா ஸங்க்யம்:

பீமாவலிக்கு சரீர உத்ஸேதம் ஐந்நூறு (500) வில்லு; ஆயுஷ்யம் எண்பத்து மூன்று நூறாயிரம் (83,00000) பூர்வம். ஜிதசத்ருவுக்கு சரீர உத்ஸேதம் நாநூற்றைம்பது (450) வில்லு; ஆயுஷ்யம் எழுபத்தோரு நூறாயிரம் (71,00000) பூர்வம் ருத்ரனுக்கு சரீர உத்ஸேதம் நூறு(100) வில்லு; ஆயுஷ்யம் இரண்டு நூறாயிரம் பூர்வம். விஸாலநயனுக்கு சரீர உத்ஸேதம் தொண்ணூறு (90) வில்லு; ஆயுஷ்யம் நூறாயிரம் (100000) பூர்வம். சுப்ரதிஷ்டனுக்கு சரீர உத்ஸேதம் எண்பது (80) வில்லு; ஆயுஷ்யம் எண்பத்து நாலு நூறாயிரம் (8400000) வருஷம்; அசலுனுக்கு சரீர உத்ஸேதம் எழுபது (70) வில்லு; ஆயுஷ்யம் அறுபது நூறாயிரம் (6000000) வருஷம். புண்டரீகனுக்கு சரீர உத்ஸேதம் அறுபது (60) வில்லு; ஆயுஷ்யம் ஐம்பது நூறாயிரம் (5000000) வருஷம். அஜிதந்தரனுக்கு சரீர உத்ஸேதம் ஐம்பது வில்லு(50) ஆயுஷ்யம் நாற்பது நூறாயிரம்(40,00,000) வருஷம். ஜிதநாபிக்கு சரீர உத்ஸேதம் இருபத்தெட்டு (28) வில்லு; ஆயுஷ்யம் இருபது நூறாயிரம் (2000000) வருஷம். பீடனுக்கு சரீர

---

6 பவ்யரே பரம்பரையில் மோக்ஷம் அடையக் கூடியவர்களே; பா.வே: 1 நரக முக என்பத தி.ஸா, தி.ப. பாடம். 2. ஸத்யகிஸுதா என்பது தி.ஸா. உரை

உத்ஸேதம் இருபத்து நாலு (24) வில்லு; ஆயுஷ்யம் நூறாயிரம் (100000) வருஷம் சத்யகிபுத்ரனுக்கு சரிர உத் ஸேதம் ஏழு (7) முழம்; ஆயுஷ்யம் அறுபத்தொன்பது வருஷ மாகும்.[7]

இவர்கள் அனைவரும் பவ்யரே. வித்யாநுவாத பரமாகம படனத்தினால் ஸம்யத்துவத்தையும் சம்யமத்தையும் விட்டுவிட்டு மரித்து, பீமாவலியும் ஜிதசத்ருவும் ஏழாம் நரகம் புகுந்தனர்; அதன் மேல் இவரும் ஆறாம் நரகம் புகுந்தனர்; அதன் மேல் ஒருவர் ஐந்தாம் நகரம் புகுந்தனர்; அதன்மேல் இருவர் நாலாம் நகரம் புகுந்தனர். அவர்கள் அனைவரும் கதிபய பவங்களில் ஸித்தி எய்துவர் என்று அறிவது.

கல்கிகள்:

அநந்தரம், கல்கிகள் உத்பத்தி ஸ்வருபம் சொல்லுதும்:

வர்த்தமான ஸ்வாமி மோக்ஷம் போன காலத்துக்குப் பிறகு அறுநூற்றைந்து (605) வருஷமும் ஐந்து மாஸமும் சென்ற பிறகு விக்ர மார்க்க சக ராஜன் உத்பன்ன மாகும். அதன் மேல் முந்நூற்று தோண்ணூற்று நாலு (394) வருஷமும் ஏழு மாஸமும் சென்ற பிறகு பாடலிபுர நகரத்து சிசுபால நரபதிக்கும் ப்ரத்வி சுந்தரி என்னும் தேவிக்கும் சதுர்முகன் என்பான் ஒரு கல்கி ராஜன் அவதரிக்கும். அவனுக்கு ஆயுஷ்யம் எழுபது (70) ஸம்வத்ஸரம். நாற்பது ஸம்வத்ஸரம் ராஜ்யம் பண்ணி தொண்ணூற்றாறு பாஷாண்டி சமயங்களையும் தனக்கு ஆஜ்ஞா விதேயமாகப் பண்ணி பின், ஆஜ்ஞாவிமுகராகிய பாஷண்டிகளும் உளரோ என்று வினவ, மந்திரிகள், 'பாஹ்யாப்யந்தர பரிக்ரஹ விரஹிதராகி அனவரதம் ஜ்ஞான த்யான பராயணராகி ஏக தினாத்வுபவஸாநந்தரம் க்ரஹஸ்தரால் கொடுக்கப்பட்ட பவித்ர ஆஹாரத்தினை பாணி பாத்ரத்தால் அமிர்து செய்து பர்வத குஹாதிகளில் வஸிப்பர் திகம்பர தபோதனர் உளர்' என; அவன் அதுகேட்டு க்ரோதாவிஷ்டனாகி, அவர்கள் போஜன காலத்து பாணி பாத்ரகத மாகிய அக்ர பிண்டத்தை திறையாக கொள்வன் என்று நியோகித்து, ராஜா தானே சென்று பறிப்பான் ஒருப்பட்ட பொழுது, விசுத்த ஸம்யக் த்ரஷ்டியாயினான் ஒரு அசுரன் அவனை ஹிம்ஸிக்க

---

7 வித்யாநுவாதம் - பதினான்கு பூர்வத்தில் பத்தாம் பூர்வம், படனத்தினால் - படித்தறிந்ததினால் ; இந்நூலைப் படித்துவிட்டு உலக போகங்களில் மூழ்கியதால் நரகம் சென்றனர் என்பது கருத்து
பா.வே.

அவனும் ப்ரதம நரகத்தை அடைந்து ஏக ஸாகரோபம காலம் துக்கம் அனுபவிப்பான்.[8]

அவன் புத்ரன் அஜிதஞ்ஜயன் என்பான் சாலனை[1] என்னும் தேவியுடன் வந்து அசுரனை சரணமாக அடைந்து ஸம்யக் தர்ஸனம் கைகொள்ளும். அசுரன் செய்த தர்ம ப்ரபாவத்தால் அன்று தொடங்கி அனேக காலம் பாஷண்டி சமயம் விஜ்ரம்பணம் இன்றி ஜிந தர்மமே விளங்கும்.

இவ் வண்ணம் ஆயிரம் ஸம்வத்ஸரம் தோறும் ஒவ்வொரு கல்கிளாக இருபது கல்கிகள் தோன்றி இறந்தபின் கால முடிவின்கண் ராஜாக்களுக்கு அந்தியன் ஜலமந்தன் என்பான், தபோதனர்க்கு அந்தியன் இந்தராங்கதர் சிஷ்யர் விராங்கதர், ஆர்யாங்கனைகளுக்கு அந்தியம் ஸர்வஷ்ரீ, சிராவகர்கட்கு அந்தியன் அக்ரிலன் 2 சிராவாகிகட்கு அந்தியம் பல்குஸேனை இவர்கள் அனைவரும் ஸாகேதபுரத் துள்ளார்.

ஐந்தாம் காலம் மூன்று ஸம்வத்ஸரமும் எட்டரை மாதமும் ஒழியச் சென்று அன்று கார்த்திகை மாத ஸ்வாதியுடன் கூடிய அமாவாஸ்யா பூர்வான்ஹ காலத்து ஸல்லேகனா விதியால் சரீரம் விட்டு வீராங்கதரும் அக்ரிலனும் ஸர்வஷ்ரீயும் பல்குஸேனையும் ஸௌதர்ம கல்பத்துத் தோன்றுவர். மத்யான்ஹத்து ராஜதம்சம், அபராந்ஹத்து பாக புக்தியும், ஷட் கர்ம வ்ரத்தியும், ஜாதி குலாசாரமும், தர்ம நியாயங்களும் முடியும்.

இருபத்தோராயிரம் ஸம்வத்ஸ ப்ரமாணத்தாகிய ஆறாங் காலத்து ஆதியின்கண் நீச மனுஷ்யர்கள் மும் முழம் வரை உத்ஸேதத்தினையும் ஸந்த தாஹாரத்தினையும் உடையார் சில காலம் வஸ்த்ராத்யாச் சாதனமின்றி தழையும் இலையும் உடையாகத் திரிந்து கால அவஸானத்து நக்ன ரூபத்ராகி யதேஷ்டம் சரிப்பர்கள்.[9]

---

8 சதுர்முகன் வர்த்தமானர் மோக்ஷம் அடைந்து 1000 ஆண்டுக்கு (605 5-397, 7) பிறகு தோன்றிய முதல் கல்கி; அஜ்நா விதேயமாக ஆணைக்கு அடங்கியவராக; ஆஜ்ஞா விமுக்க்ர் ஆணைக்கு புறம்பானவர்; பாணிபாத்ரம் கைகளே கலமாக; அக்ர பிண்டம் முதல் கவளம்; நியோகித்து செயல்பட்டு;

9 விஜ்ரம் பணம் இன்றி பரவுதல் இல்லாமல்; அந்தி கடைசி; பூர்வான்ஹ காலை; மத்யான்ஹ நடுப்பகல்; அபாரண்ஹ மாலையில்; பாகபுத்தி

அவர்கட்கு கதி ப்ரத்யாகதிகள் நரக திர்யக் கதிகளுக்குள்ளே ஆகின்றன.

ஆறாங் காலத்து இருபத்தோறாயிரம் ஸம்வத்ஸரமும் அதி அல்ப வ்ரஷ்டி யாகும். கால அவஸானத்து மனுஷ்யர்க்கு ஆயுஷ்யம் பதினாறு (16) ஸம்வத்ஸரம்; ஸரீர உத்ஸேதம் ஒரு முழம்; க்ருஷ்ண ரூக்ஷ வர்ண்மும் விரூபரும் ஆகுவர். ஜலங்களும் சுஷ்கமாகி, பூமியும் பிளந்து, வ்ருக்ஷங்களும் உலர்ந்த விடத்து ஜனங்கள் கங்கா ஸிந்துகளிடையவும் வெள்ளியம் பெருமலையிடையவும் வித்யாதரராலும் தேவர்களாலும் மிதுன மிதுனங்களாக அடைவிக்கப்பட்டு அடைந்து, நதியில் உண்டாகிய மீன் மண்கே கக்கடக கச்சபாதிகளையே பொஜித்து க்ஷுத்ர பலாதிகளை [1] அடைகுவர்.

காலாந்தரத்து ஸரஸமும் விரசமும் தீஸணமும் ரூஸணமும் உஷ்ணமும் விஷமும் விஷக்ஷாரமு மாகிய ஜலங்களை ப்ரத்யேகம் ஸப்த (7) ஸப்த தினம் வருஷிக்கும். அதனால் கால வசத்தினால் ஒழிந்த மனுஷ்யரும் பர்வ்தங்களும் வ்ருஸகங்களும் பூமி முதலானதுகளும் சூர்னங்களாகி வை ஹம்யம் ஒழிந்து சித்ரை சம பூமியாகும். அவ்வளவில் அவவஸர்ப்பிணி ஸமாப்தி ஆகும்.[10]

ஹுண்டா அவஸர்ப்பிணி:

ஹுண்டா அவஸர்ப்பிணி கால தோஷ ஸ்வரூபம் சொல்லுதும்:

விரும்பம் போல; ஸம்வத்ஸரம் ஆண்டு;
பா.வே: 1. சேலகா என்பது தி.ஸா. பாடம்; பாலனை ஸ்ரீ.பு.பாடம்.
2. அக்நிலன் ஸ்ரீ.பு.பாடம்; அக்கிலன் தி.ஸா. பாடம்.

10 கதி ப்ரத்யாகதி செல்லும் கதியும், வரும் கதியும்; அதாவது நகர விலங்கு கதிகளில் சென்று பிறப்பர்; நகர விலங்கு கதிகளில் இருந்தே வருவர் என்பதாம்; வ்ரஷ்டி மழை; மிதுனம்- தம்பதிகள்; மண்டுகம் தவளை; கக்கடக கர்க்கட நண்டு; கச்சபம் ஆமை; பொஜித்து புஜித்து உண்டு; பலாதி பிலாதி என்று இருத்தல் வேண்டும் க்ஷுத்ர பிலாதி சிறு குனக முதலியன; ரூக்ஷணம் கொடூரம்; விஷக்ஷாரம் விஷ உப்பு மயம்; பிரளய கால வருணனை இது; 49 நாள்களில் பெய்யும் மழைத் தன்மை கூறப்பட்டுள்ளது. சூர்னங்களாகி பொடியாகி; வைஷம்யம் வேறுபாடு; சித்ரை சித்ரா பூமி; கல்கிகள் வருணனைப் பகுதி தொடங்கி 'அவஸர்ப்பிணி ஸமாப்தி ஆகும்' வரை ஸ்ரீ. புராணத்திலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது பக். 561 63.
பா.வே: 1. பிலாதிகளை தி.ஸா. மூலம்; ஸ்ரீ.பு.வ.பாடம்;

பரத க்ஷேத்ரங்களிலும் ஐராவத க்ஷேத்ரங்களிலும் உத்ஸர்ப்பிணி அவஸர்ப்பிணி காலம் அநந்தாநந்தம் வாரம் வர்த்திக்கும். அவற்றுள் உத்ஸர்ப்பிணி அவஸர்ப்பிணி அஸங்க்யாதம் சென்றவிடத்து ஒரு ஹுண்டாவஸர்ப்பிணி காலம் வரும். அந்தக் காலத்து தோஷம் என்னவெனில், நாலாங்காலத்தில் உண்டாகிய ஸம்மந்தங்கள் மூன்றாங் காலம்ாகிய போகபூமி கடைசியிலேதானே மழைகளுண்டாகி விகலேந்திரிய ஜீவன்கள் உற்பத்தியாய், கல்பகவ்ரக்ஷங்களும் மறைந்து போய், ஷட்(6) கர்ம வ்யாபாரங்களும் உண்டாய், முதல் தீர்த்தங்கரரும் முந்தின சக்ரவர்த்தியும் அவதாரமாய், சக்ரவர்த்திக்கு திக் விஜயத்தில் விஜய பங்கமுமாய், மோக்ஷத்துக்குப் போகிற ஜீவன்கள் கொஞ்சமுமாய் சக்ரதரனாலே ப்ராம்மண சிருஷ்டியும் அந்த காலத்திலே தானே வம்சோத்பத்திகளும் ஆகி, நாலாங் காலத்தில் ஐம்பத்தெட்டு சலாக புருஷர்களும், ஒன்பதாம் தீர்த்தங்கரர் முதலாகப் பதினாலாம் தீர்த்தங்கரர் காலம் ஈறாக நடுவே ஏழு தீர்த்தங்கரர் காலத்து ஸத் தர்ம விச்சித்தியும், ஏகாதச (11) ருத்ரரும் நவ(9) நாரதரும் கலகப் பிரியருமாகி இருக்கிறதும்; ஏழாவது சுபார்சுவ தீர்த்தகரர்க்கும் இருபத்து மூன்றாவது பார்சுவ தீர்த்தகரர்க்கும் அந்தியத்தில் வர்த்தமான ஸ்வாமிகளுக்கும் உபஸர்க்கம் வந்ததும், மூன்றாம் காலத்திலும் நாலாம் காலத்திலும் ஐந்தாம் காலத்திலும் ஸத் தர்மங்களுக்கு சிறிது நாசங்களும் பல விதமாகிய மித்யா தேவதைகளும் மித்யா தபஸ்வீகளும் உண்டானதும், மஹா கஷ்ட பாபிஷ்டராகிய சாண்டாளர் வேடர் முதலாகிய பலவித குல உத்பத்திகளும், ஐந்தாம் காலத்தில் இருபத்தோரு கல்கிகளும் இருபத்தோரு உபகல்கிகளும் உற்பத்திகள் ஆகிறதும், அதி வ்ரஷ்டி, அநாவ்ரஷ்டியாகிய மழைகளும், பூமி வளருகிறதும், ஐந்தாம் காலத்திலேதானே ராஜ நீதியும் பாக புக்தியும் அக்நி இல்லாமல் போறது, க்ஷத்ரிய, வைச்ய, ஸூத்ர ஜாதிகள் ஒவ்வொன்றிலே அநேக பேதங்களும், இப்படிப்பட்ட நாநா வித விசித்ர தோஷங்களும் ஆகும்.[11]

இந்த தோஷங்கள் எல்லாம் ஹுண்டாவஸர்ப்பிணி கால தோஷம் என்று அறிவது. மற்ற அவஸர்ப்பிணி காலங்களுக்கு இந்த தோஷங்கள் இல்லை என்று அறிவது.

---

11 விஜய பங்கம் வெற்றிக்கு இடையூறு; ப்ராம்மண சிருஷ்டி பிராமணர் (அணு விரதி) எற்பாடு; இடையீடுபடுதல்; உபஸர்க்கம் தொல்லை, இடையூறு; அதி வ்ருஷ்டி அதிக மழை; அநா வ்ருஷ்டி மழை இன்மை;

உத்ஸர்ப்பிணி காலம்:

பின், உத்ஸர்ப்பிணி யாகிய அதி துஷ்ஷமையாகிய, பூர்வோக்த ப்ரமாணத்ததாகிய, முதற்காலம் வந்த விடத்து ஏழு நாள் க்ஷீர வர்ஷம் வர்ஷித்தலில் பூமியினுககு வர்ண கந்த ரஸ ஸ்பர்சங்கள் மநோஹர மாகும். அதன் பின் ஏழு நாள் அம்ருத வர்ஷம் வர்ஷித்தலில் வ்ருக்ஷ, த்ரண, குல்மாதிகள் உத்பவிக்கும். அதன் பின் ஏழு நாள் ஜல வர்ஷத்தால் ஜனங்கள் ஸந்தாபத்தின் நீங்குவர். ஷட் (6) ரஸங்களும் உத்பவிக்கும். பிலாதிகளில் இருந்த மனுஷ்யரும் புறப்படுவர்.

இவ் வண்ணம் தத் காலம் கடந்து சரீரச் சாயா சுப லக்ஷண பரிணாம ஸாது வ்ரத்தாதிகள் க்ரமத்தால் நாள் தோறும் வ்ரஷியினை அடையும்.

துஷ்ஷமை என்னும் இரண்டாம் காலத்து ஆதியின் கண் மனுஷ்யர்க்கு ஆயுஷ்யம் இருபது ஸம்வத்ஸரம் (20). சரீர உத்ஸேதமும் முழ வரை யாகும். அக் காலத்து அந்தய ஸஹஸ்ர வர்ஷத்தில் ஷோடச குதரர் தோன்றுவர். முதலவனுக்ககு சரீர உத்ஸேதம் சிறிது குறைய நால் முழம்; ஈற்றிலவனுக்கு ஏழு முழம்.

அவர்கள் நாமங்கள்:

எதிர்கால குலதரர்கள்:

கனக, கனகப்ரப, கனகராஜ, கனகத்வஜ, கனக புங்கவ, நளின, நளினப்ரப, நளினராஜ, நளின த்வஜ, நளினபுங்கவ, பத்ம, பத்மப்ரப, பத்மராஜ, பத்ம த்வஜ, பத்ம புங்கவ மஹா பத்மர் என.

மனுஷ்யரது சரீர உத்ஸேதம், ஆயுஷ்யம், சரீரச்சாயா, சுப பரிணமாதி குணங்களும், வனஸ்பத்தியாதி வீர்யங்களும் வ்ரத்தியை எய்தி துஷ்ம காலம் முடிந்தபின் துஷ்ம சுஷ்மை என்னும் மூன்றாங் காலத்து ஆதியின்கண் மனுஷ்யர்க்கு சரீர உத்ஸேதம் ஏழு முழம் ஆயுஷ்யம் நூற்றிருபது (120) ஸம்வத்ஸரம்.[12]

---

12 பூமி வளருகிறது பூகம்பம். . பாக புக்தி சமைத்த உணவு; பூர்வோக்த முன்னே சொன்ன; க்ஷீர வர்ஷம் பாலன்ன மழை; நீர் பால், நெய், அமிழ்து, ரசம் என ஒவ்வொன்றும் ஏழு நாள் பெய்யும் என்பது தி.ஸா. மூலம்; வ்ருக்ஷ மரம்; த்ரண புல்; குல்ம செடி வோடச பதினாறு; தி.ப. 14 குலதரர் பெயர்களையே தருகிறது;

எதிர்கால தீர்த்தங்கரர்கள்:

அக்காலத்து தீர்த்தகரர் அவதாரம் ஆகும். அவர்கள் நாமங்கள்:

மஹா பத்ம, சுரதேவ, சுபார்சுவ, ஸ்வயம்ப்ரப, ஸர்வாத்மபூத, தேவபுத்ர, குலபுத்ர உதங்க, ப்ரோஷ்டில, ஜய கீர்த்தி, முனிசூவ்ரத, அர, நிஷ்பாப, நிஷ்காஷாய, விபுல, நிர்மல, சித்ரகுப்த, ஸமாதிகுப்த, ஸ்வயம்பூ, அனிவ்ரத்தக, ஜய, விமல, தேவபால, அனந்த வீர்யர் என இருபத்து மூவரும் சதுர்த்த (4ம்) காலத்து ஆதியில் ஒருவரும் ஆகும். ஆக இருபத்து நால்வர்

ப்ரதம தீர்த்தகரர் சரீர உத்ஸேதம் ஏழு முழம்; ஆயுஷ்யம் நூற்றொருபத்தாறு (116). ஸம்வத்ஸரம். அந்திய தீர்த்தகரர் சரீர உத்ஸேதம் ஐநூறு வில்லு; ஆயுஷ்யம பூர்வ கோடி.

எதிர்கால சக்ரவர்த்திகள்:

தத் காலத்து சக்ரவர்த்திகள் பன்னிருவர் நாமங்கள்: பரத, தீர்க்கதந்த, லக்குவதந்த, 1 கூடதந்த, ஸ்ரீஷேண, ஸ்ரீபூதி, ஸ்ரீகாந்த, பத்ம, மஹாபத்ம, சித்ர வாஹன, விமல வாஹன, அரிஷ்டஸேனர் என.

எதிர்கால பலதேவர்கள்:

பலதேவர் ஒன்பதின்மர் நாமங்கள்: சந்த்ர, மஹா சந்த்ர, 2 சந்த்ரதர, ஹரிசந்த்ர, ஸிம்ஹசந்த்ர, வரசந்த்ர, பூர்ண சந்த்ர, சுசந்த்ர, ஸ்ரீசந்த்ரர் என

எதிர்கால வாசுதேவர்கள்:

வாசுதேவர் ஒன்பதின்மர் நாமங்கள்:

நந்தி, நந்திமித்ர, நந்திஷேண, நந்திபூதி, பல,3 மஹாபல, அதிபல, த்ரி ப்ரஷ்ட, த்விப்ரஷ்ட என

எதிர்கால ப்ரதிவாசுதேவர்

ப்ரதி வாசுதேவர் ஒன்பதின்மர் நாமங்கள்: ஸ்ரீகண்ட, ஹரிகண்ட, நீலகண்ட, அஸ்வகண்ட, சுகண்ட, சிவகண்ட[1], அஸ்வக்ரீவ, ஹயக்ரீவ, மயூரக்ரீவர் என.

பாவே: 1. முக்ததந்த என்பது தி.ஸா. மூலம் 2. சுபசந்த்ர என்பது தி.ஸா. மூலம். 3. அசல என்பது தி.ஸா. மூலம்

எதிர்கால ருத்ரர்:

ஏகாதஸ (11) ருத்ரர் நாமங்கள்:

ப்ரமத, சம்மத, ப்ரகாம, காமத, பவமார, பவஹர, மநோபவ, மார, காம, ருத்ர, அங்கஜர் என.

போகபூமிகள்:

தத்காலம் முடிந்து சுஷ்ம துஷ்ஷமை என்னும் நாலாங்காலத்து ஆதியில் மனுஷ்யர் சரீர உத்ஸேதம் ஐந்நூற்று சின்னம் வில்லு. ஆயுஷ்யம் பூர்வ கோடி. அதன் மேல் ஜகன்ய போக பூமி ஸமான ஸ்திதி யாகும்.

அதன் பின் ஐந்தாங் காலம் மத்யம போக பூமி ஸமானம்.

ஆறாங் காலம் உத்தம போகபூமி ஸமானம்.

இவ்வண்ணம் இரண்டரை த்வீபத்திலுள்ள பரத ஐராவத மாகிய பத்து அநியத கர்ம பூமிகள் இவ்வண்ணம் அவஸர்ப்பிணி, உத்ஸர்ப்பிணி காலங்கள் வர்த்தியாநின்றன. நியத கர்மபூமி யாகிய விதேஹங்களுள் மனுஷ்யருக்கு ஸரீர உத்ஸேதம் ஐந்நூறு (500) வில் அளவு, பூர்வ் கோடி ஆயுஷ்யம் வ்யவஸ்திதமே ஆகும்.

போக பூமிகளுள் மனுஷ்யர் உத்தம மனுஷ்யர். விதேஹமும் அநியத கர்மபூமியிலும் உள்ள மனுஷ்யர் ப்ரக்ரதி மனுஷ்யர். சரம தேஹதரரும் ரித்தி ப்ராப்த முனிகளும் வித்யாதரரும் சக்ரவர்த்திகளும் திவ்ய மனுஷ்யர். துஷ்ஷமையில் மனுஷ்யர் துர் மனுஷ்யர். அதி துஷ்ஷமையில் மனுஷ்யரும் அந்தர த்வீப வாஸிகளாகிய வராஹமுகாதி மிலேச்சரும் நீச மனுஷ்யர்.

ஸர்வ மிலேச்ச கண்டங்களிலும் விஜயார்த்தங்களிலும் தீர்த்தகரர் காலத்து கர்மபூமியில் வ்ரத்தி ஹாநியோடு ஒக்கும்.[13]

---

13 வ்யவஸ்திகம் ஏற்பாடு அமைப்பு; சரம தேஹதரர் கடைசி உடலுடையவர்;

பா.வே: 2. சிகிகண்ட, தி.ஸா. (க.லோகா.ப.138)

இவ் வண்ணம் பரத ஐராவத க்ஷேத்ரங்களுக்கு சொல்லப்பட்ட ஷட் (6) காலங்களுக்கும் த்ரஷ்டாந்த புரஸ்ஸரம் சொல்லுகின்றார்.[14]

ப்ரதம காலம் தேவ உத்தர குரு அவஸ்தித ஸ்வரூபம் ஆகும். த்விதிய காலம் ஹரிவருஷம் ரம்யகம் என்னும் மத்யம போகபூமி ஸ்வருபம் ஆகும். த்ரிதீய காலம் ஹைமவதம் ஹைரண்யவதம் என்னும் ஜகன்ய போகபூமி ஸ்வரூப மாகும். சதுர்த்த காலம் விதேஹ க்ஷேத்ர ஸ்வரூப மாகும். பஞ்சம காலம் ஸ்வயம்பூ ரமண த்வீபார்த்தத்திலும் தத் ஸமுத்ரத்திலும் உள்ள ஸ்வரூபமாகும். ஷஷ்டம நரக கதியில் வர்த்திக்கும்.

மற்றும் த்ரதிய காலம் குமானுஷ்ய போக பூமியில் வர்த்திக்கும். பஞ்சம காலம் ஸ்வயம்பூரமண த்வீபார்த்தத்திலும் தத் ஸமுத்ரத்திலும் வர்த்திக்கும்.

இவ் வண்ணம் ஜம்பூ த்வீப வர்ணனம் சொல்லப்பட்டது.

---

14 வராகம் பன்றி; வ்ரத்தி ஹாநி எற்றம், இழிவு; மிலேச்ச கண்டங்களிலும் தவிஜயார்த்த மலைகளிலும் கால மாறுபாடு என்பது தீர்த்தங்கரர் தோன்றும் கால மாறுபாட்டோடு ஒக்கும்; மற்ற கால மாறுபாடுகள இல்லை என்பதாம்; ஆறு கால மாறுபாடுகள் ஆர்ய கண்டத்தில் மட்டுமே நிகழ்வதாகும். ‘சமையம் ஆறுடைய வாம் பரதம் ரேவதம்’ மே.பு. 1229.

இலவண சமுத்திரம்

இப்பால் லவண சமுத்ர ஸ்வரூபம் சொல்லத் தொடங்கி, த்வீப சமுத்ர மத்ய ஸ்தித வேதிகா ஸ்வரூபமும் மற்றும் அஸங்க்யாத த்வீப ஸ்முத்ரங்களில் மத்ய ஸ்தித வேதிகா ஸ்வரூபமும் சொல்லுதும்:

வேதிகை அமைப்பு:

த்வீப சமுத்ர மத்யத்தில் அடியில் பன்னிரண்டு யோஜனை அகலமும் மத்யத்தில் எட்டு யோஜனை அகலமும் சிகரத்தில் நாலு யோஜனை அகலமும் உயரம் எட்டு யோஜனையும் உடைத்தாய் நாலு திக்கிலும் நாலு கோபுரம் உடையதாய் பூமிக்குள் இரண்டு க்ரோசம் ஆழ முடையதாய் அடியில் வஜ்ர மயமும் சிகரத்தில் வைடூர்ய மயமுமாய் நாநா ரத்னங்களுடைத்தாய் வலய ஆகாரமாய் சுற்றி இருக்கும்.

பத்ம வேதிகை:

அதன் சிகரத்தில் இருக்கிற பத்ம வேதிகா ஸ்வரூபம் சொல்லுதும்:

அஸங்க்யாத த்வீப சமுத்ர மத்ய ஸ்தித வேதிகா சிகரத்தில் மத்யத்தில் தனித்தனி இரண்டு க்ரோசம் உன்னதமும் மஹா தநுவில் ஐஞ்ஞுறுவில் அகலமும் கனக மயமுமாய் பத்ம வேதிகை திண்ணை போன்று இருக்கும்.

அந்த பத்ம வேதிகைகளுக்கு அந்த பார்ச்வத்திலும் பஹி: பார்ச்வத்திலும் இருக்கிற வனங்கள் முதலானது சொல்லுதும்.

பத்ம வேதிகைகளுக்கு த்வீப பாகத்திலும் சமுத்ர பாகத்திலும் ப்ராகார வேதிகா சிகரத்தில் கனக ஶிலா மயமாகிய பூமியில் ரம்ய மாகிய வனங்கள் ஆகும். அந்த வனங்களில் சித்ர வாபிகளும் ப்ராசாதங்களும் இருக்கும். அந்த ப்ராஸாதங்களுள் வான வயந்தரர் ஆவாசமாகும்.

அடிக்குறிப்பு : வேதிகா - மேடை போன்ற அமைப்பு. கோட்டை - மதில் போன்றது; அந்த; பார்சவம் - உள்பக்கம்; பஹு; பார்சுரம் - வெளிப்பக்கம்; ப்ரகாரம் - மதில்; ப்ரஸாதங்கள் - பவனங்கள்.

அந்த வாபிகளும் உத்க்ருஷ்ட மத்திம ஜகன்யம் என மூன்று விதமாகும். அவற்றுள் உத்க்ருஷ்ட வாபிகளுக்கு விஸ்தாரம் இருநூறு (200) வில்லும், அகாதம் இருபது வில்லும், மத்யம வாபிகளுக்கு விஸ்தாரம் நூற்றைம்பது (150) வில்லும் அகாதம் பதினைந்து (15) வில்லு மாகும். ஜகன்ய வாபிகளுக்கு விஸ்தாரம் நூறு (100) வில்லும் அகாதம் பத்து (10) வில்லுமாகும்.

பாஹ்ய விஸ்தாரம் இரண்டு லக்ஷத்து அறுபத்தொராயிரத்து எழுநூற்றெண்பத்து நாலு யோஜனையும் ஒரு யோஜனை இரு நூற்றொருபத்திரண்டு பாகத்தில் ஐம்பத்திரண்டு பாகமும் ஆகும். *(2,61,784 52/212).*

மேற்கு சிகரி மலை:

அதனுக்கப்பால், சிகரி பர்வதம் விஸ்தாரம் நாலாயிரத்து இருநூற்றொருபது யோஜனையும் ஒரு யோஜனை பத்தொன்பது பாகத்தில் பத்து பாகமும் எங்கும் ஸமானமாகும். *(4210 10/19)*

மேற்கு ஐராவதம்:

ஐராவத க்ஷேத்ரம் அப்யந்தரத்தில் விஸ்தாரம் நாற்பத்தொராயிரத்து ஐந்நூற்றெழுபத்தொன்பது யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் நூற்றெழுபத்து மூன்று பாகமும் ஆகும் *(41,579 173/212).*

மத்யத்தில் விஸ்தாரம் ஐம்பத்து மூவாயிரத்து ஐந்நூற்றொருபத்திரண்டு யோஜனையும் ஒரு யோஜனை இரு நூற்றொருபத்திரண்டு பாகத்தில் நூற்றுத் தொண்ணூற்றொன்பது பாகமும் ஆகும். *(53,512 199/212).*

பாஹ்யத்தில் விஸ்தாரம் அறுபத்தையாயிரத்து நானூற்று நாற்பத்தாறு யோஜனையும் ஒரு யோஜனை இரு நூற்றொருபத்திரண்டு பாகத்தில் பதின் மூன்று பாகமும் ஆகும். *(65,446 13/212).*

வடக்கு இஷ்வாகார மலை:

அதனுக்கு அப்பால், உத்தர இஷ்வாகார பர்வத விஸ்தாரம் ஆயிரம் யோஜனை எங்கும் ஸமானமாகும்.

கிழக்கு ஐராவதம்:

அதனுக்கப்பால், பூர்வ பாகத்து ஐராவதம் அப்யந்தர விஸ்தாரம் நாற்பத்தொராயிரத்து ஐந்நூற்றெழுபத்தொன்பது யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் நூற்றெழுபத்து மூன்று பாகமும் ஆகும். *(41,579 173/212).*

மத்யத்தில் விஸ்தாரம் ஐம்பத்து மூவாயிரத்து ஐந்நூற்றொருபத்திரண்டு யோஜனையும் ஒரு யோஜனை இரு நூற்றொருபத்திரண்டு பாகத்தில் நூற்றுத் தொண்ணூற்றொன்பது பாகமும் ஆகும் *(53,512 199/212).*

பாஹ்யத்தில் விஸ்தாரம் அறுபத்தையாயிரத்து நானூற்று நாற்பத்தாறு யோஜனையும் ஒரு யோஜனை இரு நூற்றொருபத்திரண்டு பாகத்தில் பதின்மூன்று பாகமும் ஆகும் *(65,446 13/212).*

கிழக்கு சிகரி மலை:

அதற்கப்பால், சிகரி பர்வத விஸ்தாரம் நாலாயிரத்து இருநூற்றொருபது யோஜனையும் ஒரு யோஜனை பத்தொன்பது பாகத்தில் பத்து பாகமும் எங்கும் ஸமான மாகும் *(4210 10/19).*

கிழக்கு ஐரண்யவதம்:

அதற்கப்பால், ஜகன்ய போகபூமியாகிய ஹைரண்யவத அப்யந்தரளத்தில் விஸ்தாரம் லக்ஷத்து அறுபத்தாறாயிரத்து முன்னூற்றொருபத்தொன்பது யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் ஐம்பத்தாறு பாகமும் ஆகும் *(1,66,319 56/212).*

மத்யத்தில் விஸ்தாரம் இரண்டு லக்ஷத்தொருபத்து நாலாயிரத்தைம்பத்தொரு யோஜனையும் ஒரு யோஜனை இரு நூற்றொருபத்திரண்டு பாகத்தில் நூற்றறுபது பாகமும் ஆகும் *(2,14,051 190/212).*

பாஹ்ய விஸ்தாரம் இரண்டு லக்ஷத்து அறுபத்தொராயிரத் தெழுநூற்றெண்பத்து நாலு யோஜனையும், ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் ஐம்பத்திரண்டு பாகமும் ஆகும். *(2,61,784 52/212).*

கிழக்கு ருக்மி மலை:

அதனுக்கப்பால், ருக்மி பர்வத விஸ்தாரம் பதினாறாயிரத்து எண்ணூற்று நாற்பத்திரண்டு யோஜனையும், ஒரு யோஜனை பத்தொன்பது பாளகத்தில் இரண்டு பாகமும் எங்கும் ஸமானமாகும். *(16,842 2/19).*

கிழக்கு ரம்யகம்:

அதனுக்கப்பால், மத்ய போகபூமியாகிய ரம்யகம் அப்யந்தர விஸ்தாரம் ஆறுலக்ஷத்து அறபத்தையாயிரத்து இருநூற்றெழுபத்தேழு யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் பன்னிரண்டு பாகமும் ஆகும். *(6,65,277 12/212).*

மத்யத்தில் விஸ்தாரம் எட்டு லக்ஷத்து ஐம்பத்தாறாயிரத்து இருநூற்றேழு யோஜனையும் ஒரு யோஜனை இரு நூற்றொருபத்திரண்டு பாகத்தில் நாலு பாகமும் ஆகும். *(8,56,207 4/212).*

பாஹ்ய விஸ்தாரம் பத்து லக்ஷத்து நாற்பத்தேழாயிரத்து ஒருநூற்று முப்பத்தாறு யோஜனையும் ஒரு யோஜனை

இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் இருநூற்றெட்டு பாகமும் ஆகும். (10,47,136 208/212).

கிழக்கு நீல மலை:

அதனுக்கப்பால், நீலி பர்வத விஸ்தாரம் அறுபத்தேழாயிரத்து முந்நூற்றறுபத்தெட்டு யோஜனையும் ஒரு யோஜனை பத்தொன்பது பாகத்தில் எட்டு பாகமும் எங்கும் ஸமானமாகும். (67,368 8/19).

கிழக்கு விதேஹம் :

அதற்கப்பால், விதேஹம் அப்யந்தரத்தில் விஸ்தாரம் இருபத்தாறு லக்ஷத்து அறுபத்தொராயிரத்தொரு நூற்றெட்டு யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் நாற்பத்தெட்டு பாகமும் ஆகும். (26,61,108 48/212).

மத்யத்தில் விஸ்தாரம் முப்பத்து நாலு லக்ஷத்து இருபத்து நாலாயிரத்து எண்ணூற்றிருபத்தெட்டு யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் பதினாறு பாகமும் (34,24,828 16/212).

பாஹ்ய விஸ்தாரம் நாற்பத்தொரு லக்ஷத்துதெண்பத் தெண்ணாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தேழு யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் நூற்றுத் தொண்ணூற்றாறு பாகமு மாகும் (41,88,547 196/212).

கிழக்கு நிஷத மலை:

அதற்கப்பால், நிஷத பர்வத விஸ்தாரம் அறுபத்தேழாயிரத்து முன்னூற்றறுபத்தெட்டு யோஜனையும் ஒரு யோஜனை பத்தொன்பது பாகத்தில் எட்டு பாகமும் எங்கும் ஸமான மாகும். (67,368 8/19).

கிழக்கு ஹரிவர்ஷம்:

அதனுக்கப்பால், மத்ய போகபூமி யாகிய ஹரி வர்ஷ அப்யந்தர விஸ்தாரம் ஆறு லக்ஷத்து அறுபத்தையாயிரத்து இருநூற்றெழுபத்தேழு யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் பன்னிரண்டு பாகமும் ஆகும். (6,65,277 12/212).

மத்யத்தில் விஸ்தாரம் எட்டு லக்ஷத்து ஐம்பத்தாறாயிரத்து இருநூற்றேழு யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் நாலு பாகமும் ஆகும். (8,56,207 4/212).

பாஹ்ய விஸ்தாரம் பத்து லக்ஷத்து நாற்பத்தேழாயிரத்து ஒருநூற்றுமுப்பத்தாறு யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொரு பத்திரண்டு பாகத்தில் இருநூற்றெட்டு பாகமும் ஆகும் *(10,47,136 208/212).*

கிழக்கு மகாஇமவான்மலை:

அதற்கப்பால், மஹாஹிமவான் விஸ்தாரம் பதினாறாயிரத்தெண்ணூற்று நாற்பத்திரண்டு யோஜனையும் ஒரு யோஜனை பத்தொன்பது பாகத்தில் இரண்டு பாகமும் எங்கும் ஸமான மாகும் *(16,842 2/19).*

கிழக்கு ஹைமவதம்:

அதற்கப்பால், ஜகன்ய போகபூமியாகிய ஹைமவதம் அப்யந்தர விஸ்தாரம் லக்ஷத்தறுபத்தாறாயிறத்து முந்நூற்றொருபத்தொன்பது யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் ஐம்பத்தாறு பாகமும் ஆகும் *(1,66,319 56/212).*

மத்யத்தில், விஸ்தாரம் இரண்டு லக்ஷத்து ஒரு பத்து நாலாயிரத்து ஐம்பத்தொரு யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் நூற்றறுபது பாகமும் ஆகும் *(2,14,051 160/212).*

பாஹ்ய விஸ்தாரம் இரண்டு லக்ஷத்து அறுபத்தொராயித்து எழுநூற்றெண்பத்து நாலு யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் ஐம்பத்திரண்டு பாகமும் ஆகும். *(2,61,784 52/212).*

கிழக்கு இமவான் மலை:

அதற்கப்பால், ஹிமவான் விஸ்தாரம் நாலாயிரத்து இருநூற்றொருபது யோஜனையும் ஒரு யோஜனை பத்தொன்பது பாகத்தில் பத்து பாகமும் எங்கும் ஸமான மாகும் *(4210 10/19).*

கிழக்கு பரதம்:

அதற்கப்பால், பரத க்ஷேத்ர அப்யந்தர விஸ்தாரம் நாற்பத்தொராயிரத்து ஐந்நூற்று எழுபத்தொன்பது யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் நூற்றெழுபத்து மூன்று பாகமும் ஆகும் *(41,579 173/212).*

மத்யத்தில் விஸ்தாரம் ஐம்பத்து மூவாயிரத்து ஐந்நூற்றொருபத்திரண்டு யோஜனையும் ஒரு யோஜனை

இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் நூற்றுத்தொண்ணூற்றொன்பது பாகமும் ஆகும் (53,512 199/212).

பாஹ்ய விஸ்தாரம் அறுபத்தையாயிரத்து நானூற்று நாற்பத்தாறு யோஜனையும் ஒரு யோஜனை இருநூற்றொருபத்திரண்டு பாகத்தில் பதின்மூன்று பாகமும் ஆகும் (65,446 13/212).

ஆக பர்வதங்களும் நாடுகளும் முன் சொன்னபடி அப்யந்தரத்தில் வலயம் தொண்ணூற்றொரு லக்ஷத்து ஒரு பதினாயிரத்து அறுநூற்றைந்து யோஜனை யாகும் (91,70,605).

மத்யத்தில் வலயம் ஒரு கோடியும் பதினேழு லக்ஷத்து நானூற்றிருபத்தேழு யோஜனை யாகும் (1,17,00427).

பாஹ்யத்தில் வலயம் கோடியும் நாற்பத்திரண்டு லக்ஷத்து முப்பதினாயிரத்து இருநூற்று நாற்பத்தொன்பது யோஜனை சரியாகும் (1,42,30,249).

இப்பால், பூர்வாபரம் நாடு பர்வதம் முதலான ப்ரமாண ஸ்வரூபம் சொல்லுதும்:

பூர்வ பாக அபேக்ஷையால் மந்தரம் ஒன்பதனாயிரத்து நானூறு யோஜனை (9400). அதன் கிழக்கு பத்ராஸாலவனம் இரண்டு லக்ஷத்து ஒருபத்தையாயிரத்து எழுநூற்றைம்பத்தெட்டு யோஜனையும் (2,15,758) அதன் கிழக்கு கச்ச விஷயம் பத்தொன்பதனாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19,796 3/4).

அதன் கிழக்கு சித்ரகூட வக்ஷார பர்வதம் இரண்டாயிரம் யோஜனை (2000).

அதன் கிழக்கு ஸுகச்சா நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்று தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19796 3/4).

அதன் கிழக்கு காதவதி என்னும் விபங்க நதி ஐந்நூறு யோஜனை (500).

அதன் கிழக்கு மஹாகச்சா நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19,796 3/4).

அதன் கிழக்கு பத்மகூட வக்ஷார பர்வதம் இரண்டாயிரம் யோஜனை (2000).

அதன் கிழக்கு கச்சகாவதி நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19,796 3/4).

அதன் கிழக்கு ஹ்ருதயவதி என்னும் விபங்க நதி ஐந்நூறு யோஜனை (500).

அதன் கிழக்கு ஆவர்த்தா நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்று தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19,796 3/4).

அதன் கிழக்கு நளினகூட வக்ஷார பர்வதம் இரண்டாயிரம் யோஜனை (2000).

அதன் கிழக்கு லாங்கலாவர்த்த நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19,796 3/4).

அதன் கிழக்கு பங்கவதி என்னும் விபங்க நதி ஐந்நூறு (500) யோஜனை.

அதன் கிழக்கு புஷ்கலாவதி[1] நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்று தொண்ணூற்றாறே முக்கால் (19796) 3/4 யோஜனை.

அதன் கிழக்கு ஏகசைல வக்ஷார பர்வதம் இரண்டாயிரம் யோஜனை (2000).

அதன் கிழக்கு புஷ்கலாவதி நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை ஆகும், (19,796 3/4).

அதன் கிழக்கு தேவாரண்யம் என்னும் வனம் பதினோராயிரத்து அறுநூற்றெண்பத்தெட்டு யோஜனை ஆகும். (11,688).

இவ்வண்ணம், மேற்கு பத்ராஸால வனம் இரண்டு லக்ஷத்து ஒருபத்தையாயிரத்து எழுநூற்றைம்பத்தெட்டு (2,15,758).

அதன் மேற்கு கந்தமாலிநி நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19796 3/4).

அதன் மேற்கு தேவ மாலா வக்ஷார பர்வதம் இரண்டாயிரம் யோஜனை (2000).

பா.வே.: - 1. புஷ்கலா என்று இருத்தல் வேண்டும்.

அதன் மேற்கு கந்திலா நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19796 3/4).

அதன் மேற்கு ஊர்மிமாலிநி என்னும் விபங்க நதி ஐந்நூறு யோஜனை (500).

அதன் மேற்கு ஸுகந்தா நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19796 3/4).

அதன் மேற்கு நாகமாலா வக்ஷார பர்வதம் இரண்டாயிரம் யோஜனை (2000).

அதன் மேற்கு கந்தா நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றுாறே முக்கால் யோஜனை (19,796 3/4).

அதன் மேற்கு பேநமாலிநி என்னும் விபங்க நதி ஐந்நூறு யோஜனை (500).

அதன் மேற்கு வப்ரகாவதி நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19,796 3/4).

அதன் மேற்கு ஸூர்யமாலா வக்ஷார பர்வதம் இரண்டாயிரம் யோஜனை (2000).

அதன் மேற்கு மஹா வப்ரா நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19,796 3/4).

அதன் மேற்கு கம்பீரமாலிநி என்னும் விபங்க நதி ஐந்நூறு யோஜனை (500).

அதன் மேற்கு ஸுவப்ரா நாடு பத்தொன்பதினாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19,796 3/4).

அதன் மேற்கு சந்த்ரமாலா வக்ஷார பர்வதம் இரண்டாயிரம் யோஜனை (2000).

அதன் மேற்கு வப்ரா நாடு பத்தொன்பதாயிரத்து எழுநூற்று தொண்ணூற்றாறே முக்கால் யோஜனை (19,796 3/4).

அதன் மேற்கு பூதாரண்யம் என்னும் வனம் பதினோராயிரத்து அறுநூற்றெண்பத்தெட்டு யோஜனை (11,688).

அளவுகள் கூட்டுத்தொகை:

ஆக தொகையும் மந்தரம் ஒன்பதினாயிரத்து நானூறு யோஜனை, *(9400)*; பத்ராஸால வனம் நாலு லக்ஷத்து முப்பத்தொராயிரத்து ஐந்நூற்றொருபத்தாறு யோஜனை *(4,31,516)*; நாடு பதினாறுக்கும் மூன்று லக்ஷத்து ஒருபத்தாறாயிரத்து எழுநூற்றெட்டு யோஜனை *(3,16,708)*; வக்ஷார பர்வதம் எட்டுக்கும் பதினாறாயிரம் *(16000)*; விபங்க நதி ஆறுக்கும் மூவாயிரம் *(3000)* யோஜனை; தேவாரண்யம் பூதாரண்யம் இரண்டுக்கும் இருபத்து மூவாயிரத்து முன்னூற்றெழுபத்தாறு யோஜனை *(23,376)*; ஆக எட்டு லக்ஷம் யோஜனை யாகும் *(800000)*.

இவ்வண்ணம் தென்கரை நாடும் பர்வதங்களும் இவற்றுள் அந்தர்பாவம் ஆகும்.

மேற்கு மேரு மலைக்கு:

மேற்கு மந்தரம் நாடு முதலானதுகளும் இவ்வண்ணமே யாகும்.

இப்பால் தாதகிஷண்டத்திலும் புஷ்கரவர த்வீபத்திலும் சற்று விசேஷ ஸ்வரூபம் சொல்லுதும்:

குலகிரிகளும், வக்ஷார பர்வதங்களும், மஹா நதிகளும், பொய்கைகளும், வனங்களும், குண்டங்களும் இவைகள் எல்லாம் ஆழமும் உயரமும் ஜம்பூ த்வீபத்தில் சொன்னபடி ஸமானமாகும். விஸ்தாரம் அதற்கு இரட்டிப்பு தாதகீஷண்டத்துள்ளாகும். தாதகீஷண்டத்தில் சொன்னபடியில் புஷ்கரவர த்வீபத்தில் இரட்டிப்பாகும்.

தாதகீஷண்ட த்வீபத்தில் இருக்கிற வ்ருக்ஷம் தாதகீவ்ருக்ஷம் என்னும் பெயராகும். புஷ்கரவர த்வீபத்தில் இருக்கிற வ்ருக்ஷம் புஷ்கர

அடிக்குறிப்பு : 800000 - இது புஷ்கரவர அர்த்த தீவின் விஸ்தாரமாகும். இந்த விஸ்தாரத்திற்குள் அடங்கிய மேரு, பத்ராசாலவனம், விதேக நாடுகள், மலைகள், விபங்க நதிகள், காடுகள் இவற்றின் கூட்டு விஸ்தாரம் காட்டப்பட்டுள்ளது. மேற்கு மந்தரம் - மேலை கிழக்கு மேருவிற்குச் சொன்னதுபோல மேற்கு மேருவிற்கும் கொள்ளவேண்டும். அதுவும் எட்டு லட்சம் யோஜனை விஸ்தாரமுடையது.

இரண்டரைத் தீவு



வ்ருக்ஷம் என்னும் பெயராகும். இவை இரண்டுக்கும் வர்ணனைகள் ஜம்பூ வ்ருக்ஷத்துக்குச் சொன்ன வர்ணனை போலே யாகும்.

தாதகிஷண்ட த்வீபத்தில் ஹிமவான் பர்வதத்திலும் சிகரி பர்வதத்திலும் கங்கா சிந்து நதியும் ரக்தா ரக்தோதா நதியும் பத்மை என்னும் பொய்கையிலும் புண்டரீகை என்னும் பொய்கையிலும் உத்பன்னமாய் ப்ரத்யேகம் பர்வதத்தின் மேலே நடு மத்யையில் செவ்வைக்குப் பத்தொன்பதினாயிரத்து முந்நூற்றொன்பது யோஜனை சென்று திரும்பி பரத ஐராவதத்தில் ப்ரவேச மாகும். திரும்பி ப்ரவேசிக்கிற வர்ணனை எல்லாம் ஜம்பூ த்வீபத்துக்குச் சொன்னபடியே என்று அறிவது.

புஷ்கரவர த்வீபத்திலும் இவ் சொன்னபடியே யாகும்.[1]

மாநுஷோத்தர பர்வதத்துக்கு அப்பால் ஸ்வயம்பூ ரமண த்வீப பர்யந்தம் இருக்கிற பர்வதங்களுக்கு எல்லாம் ஆயிரம் ஆயிரம் யோஜனை ஆழ மாகும். (1000; 1000).

ஸ்வயம்பூரமண ஸமுத்ர பர்யந்தம் ஸகல ஸமுத்ரங்களும் ஆயிரம் ஆயிரம் யோஜனை ஆழமாகும்.

மாநுஷோத்ர பெருமலை:

அநந்தரம், மாநுஷோத்ர பர்வத ஸ்வரூபம் சொல்லுதும்:

மநுஷ்ஸய லோகம் இரண்டரை த்வீபத்துள் பாஹ்யத்தில் வலய ஆகாரமாக அப்யந்தரத்தில் உளி நாட்டப்பட்டது போல; பாஹ்யத்தில் சிகரத்திலும்நின்று அடி பர்யந்தம் க்ரமத்தால் குறைந்து தேர் முட்டி ஆகாரமாய், கனக மயமாய், மஹா நதிகள் ப்ரவேசிக்கிற பதினாறு குஹைகளையுடைத்தாய், இரண்டரை த்வீபத்தைச் சுற்றி மாநுஷோத்ரம் என்னும் பேரையுடைய தாகும்.

அடிக்குறிப்பு : உளி நாட்டப்பட்டது போல - அடியிலிருந்து மேல்வரை சமானமாக; க்ரமத்தால் குறைந்து - சிகரத்திலிருந்து விரிந்தும், அடியிலிருந்து குறைந்தும் செல்லும்;

பாவே: 1 புஷ்கரவர த்வீபத்திலும் இச் சொன்ன நாலு நதிகளும் முன் சொன்னபடி பர்வதத்தின் மேலே முப்பத்தொண்ணாயிரத்து அறு நூற்றொருபத்தெட்டு யோஜனை செவ்வையிலே சென்று அப்பால் திரும்பிற ஸ்வரூபம் முன் சொன்னபடியே யாகும்.

அவற்றுக்கு உயரம் முதலானதும்:-

அடியில் ஆயிரத்திருபத்திரண்டு யோஜனை அகலமாய், பாஹ்யத்தில் க்ரமத்தால் குறைந்து சென்று, தலை அகலம் நானூற்றிருபத்துநாலு யோஜனை உடைத்தாய் ஆயிரத்தெழுநூற்றி இருபத்தொரு யோஜனை உயரம் உடைத்தாய் நானூற்று முப்பதே கால் யோஜனை ஆழ முடைத்தாய் இருக்கும்.

அந்த மாநுஷோத்தர பர்வத சிகரத்தில் நாலாயிரம் வில் உயரமும் இரண்டாயிரத்தைந்நூறு வில் அகலமுமாய் வலய ஆகாரமாகிய வேதிகை ஆகும்.

கூடங்கள் வர்ணனை:

அந்த பர்வதத்தின் மேல் இருக்கிற கூட ஸ்வரூபம் சொல்லுதும்:

நாலு திக்கிலும், ஈசான்ய மூலையிலும் அக்நி மூலையிலும், ஆக ஆறு திசையிலும் ஒவ்வொரு திசைக்கும் மும்மூன்று கூடம் நிரைநிரையாக பதினெட்டாகும். மஹா திசை நான்கிலும் அப்யந்தரத்துள் நாலுகூடமாகும். அந்த நாலு கூட சிகரத்தில் ஜிந சைத்யாலய மாகும். ஆக மாநுஷோத்தர பர்வதத்தில் இருபத்திரண்டு (22) கூட மாகும்.

அவற்றுள் சைத்யாலயம் இருக்கிற நாலு கூடம் போக நின்ற கூடம் பதினெட்டிலும் இருக்கிற தேவர்கள் பெயர் சொல்லுதும்:

ஈசான்யத்திலும் அக்நி மூலையிலும் இருக்கிற ஆறு கூடத்திலும் கருடகுமாரற்கு இருப்பிட மாகும். சேஷ திக்கில் நாலிலும் இருக்கிற பன்னிரண்டு கூடத்திலும் ஸ்வர்ண குலத்தில் திக் குமாரியர் இருப்பிட மாகும்.

நந்தீஸ்வர த்வீபம்:

அநந்தரம் நந்தீஸ்வர த்வீப ஸ்வரூபம் சொல்லுதும்:

ஜம்பூ த்வீப முதலாக எட்டாம் த்வீபம் நந்தீஸ்வர த்வீபம் வலய ஆகாரமாய் நூற்றறுபத்துமூன்று கோடியே எண்பத்து நாலு லக்ஷம் யோஜனை ஆகும்.

அந்த த்வீபத்தில் நான்கு திக்கிலும் வலைய மத்யத்து க்ருஷ்ண வர்ண மாகிய நாலு அஞ்ஜன பர்வதம் ப்ரத்யேகம் எண்பத்து

நாலாயிரம் யோஜனை உத்ஸேதமும் அவ்வளவு விஸ்தாரமுமாய் வருத்த ஆகாரமும் ஆகும்.

அவற்றுள் கிழக்கே இருக்கிற அஞ்ஜன பர்வதத்துக்கு நாலு திக்கிலும் லக்ஷம் யோஜனை விட்டு லக்ஷம் யோஜனை அகலமும் நீளமுமாகிய பொய்கைகள் நான்கு ஆகும்.

இவ்வண்ணம் தெற்கில் இருக்கிற அஞ்ஜன பர்வதத்துக்கு நாலு, மேற்கு திக்கில் இருக்கிற அஞ்ஜன பர்வதத்துக்கு நாலு, வடக்கு திக்கில் இருக்கிற அஞ்ஜன பர்வதத்துக்குநாலு ஆக பதினாறு பொய்கை யாகும், இந்த பொய்கைகள் எல்லாம் ஸம சதுரமாய் உளி நாட்டப்பட்ட கவர் கொழப்பம் போல ரத்ன மயமாகிய கரையை யுடைத்தாய் மூன்று

மேகலா வேதிகை யுடைத்தாய், ஒவ்வொரு பொய்கைக்கு ஆயிரம் யோஜனை ஆழமுடைத்தாய், பொய்கைகளைச் சூழ வேதிகைகளுக்கும் ஒவ்வொரு பொய்கைக்கு நாலு திக்கிலும் நாலு வனங்களும் உடைத்தாய், ஜலசர ஜீவன்கள் ரஹிதமாய், ஜலங்களும் ஸம்பூர்ணமாய் இருக்கும்.

பொய்கைகள் பெயர்:

அந்த வாபிகளுடைய நாமங்களும் கிழக்கு திக்கில் கிழக்கு முதலாக:- நந்தா, நந்தவதி, நந்தோத்தரா, நந்திஷேணா, என நாலு. தெற்கு திக்கில் கிழக்கு முதலாக:- அரஜா, விரஜா, அசோகா[1], வீதசோகா என நாலு. மேற்கு திக்கில் கிழக்கு முதலாக:- விஜயா, வைஜயந்தி, ஜயந்தி, அபராஜிதா என நாலு. வடக்கு திக்கில் கிழக்கு முதலாக:- ரம்யா, ரமணீயா, ஸுப்ரபா, ஸர்வதோபத்ரா என நான்காகும்.

அடிக்குறிப்பு:- நந்தீஸ்வர த்வீப விஸ்தாரம் 1638400000 யோஜனை; மேபு 1253; கஜதந்த பர்வதம் - அஞ்ஜன கிரி; 'ஆயிரம் புகை நான்கொரு என்பதே மேபு 1258' ஜலசர - நீர்வாழ் ; ரஹிதம் - இன்றி; ஸம்பூர்ணம் - நிறைந்து; வாபி-பொய்கை; வ்ருத்தம்-வட்டம்; பாஹ்யம்-வெளியே, புறத்தே; 52 - அஞ்சனகிரி 4 + ததிமுகம் 16 + ரதிகரம் 32 ;

ததிமுக மலைகள்:

இந்தப் பதினாறு பொய்கையுள் ப்ரத்யேகம் மத்யத்தில் பதினாயிரம் யோஜனை உயரமும் அவ்வளவு அகலமும் வ்ருத்தமு மாய ததிவர்ண மாகிய ததிமுக பர்வதங்கள் பதினாறாகும்.

வனங்கள் பெயர்கள்:

அந்த வாபிகள் ஒவ்வொன்றுக்கு நாலு திக்கிலும் முன் சொன்னபடி நூறாயிரம் யோஜனை நீளமும் ஐம்பதினாயிரம் யோஜனை அகலமு மாகிய வனங்கள் நாலாகப் பொய்கை பதினாறுக்கும் அறுபத்து நாலு வன மாகும்.

அவற்றுள் வனங்களுக்கு நாமமும் ஒவ்வொரு பொய்கைக்கு கிழக்கு முதலாக அசோகம், ஸப்தசதம் செண்பகம் மாமரம் என நான்கு திக்கிலும் ஆகும். இவ்வண்ணம் பதினாறு பொய்கைக்கும் நாலு நாலு வனங்களுக்கும் இந்தப் பெயரே யாகும்.

ரதிகர மலைகள்

இந்தப் பொய்கைக்கு பாஹ்யத்தில் இருக்கிற வனத்தில் பாஹ்ய மூலை இரண்டிலும் இரண்டு இரண்டு பர்வதமாக பதினாறு பொய்கைக்கும் முப்பத்திரண்டு பர்வதங்கள் ப்ரத்யேகம் ஆயிரம் யோஜனை உயரமும் ஆயிரம் யோஜனை அகலமுமாய் வ்ருத்தமாய் கனக வர்ணமாய ரதிகரம் என்னும் பெயரையுடையன வாகும்

இவை எல்லாம் கூட்ட நந்தீஸ்வர த்வீபத்தில் ஐம்பத்திரண்டு பர்வதங்க ளாகும்*(52)*.

அந்த பர்வதங்கள் சிகரத்தில் ஐம்பத்திரண்டு அக்ருத்திரிம சைத்யாலய மாகும். அந்த சைத்யாலயங்களுடைய ஸ்வரூபங்களும் ப்ராமணங்களும் சொல்லத் தொடங்கி மூன்று லோகத்திலும் இருக்கிற சைத்யாயலயங்களுக்கு உத்க்ருஷ்ட, மத்யம ஜகன்யாதி ப்ராமணங்கள் சொல்லுதும்:

சைத்யாலய ப்ரமாணம்:

அவற்றுள் நந்தீச்வர சைத்யாலயங்களும் பத்ராஸால வனங்களில் இருக்கிற சைத்யாலயங்களும், நந்தன வனங்களில் இருக்கிற

பா.வே.1. கதசோகா என்பது தி.ஸா.பாடம்.

சைத்யாலயங்களும், விமானங்களில் இருக்கிற சைத்யாலயங்களும் உத்க்ருஷ்டம்.

ஸௌமனஸ வன, ருசக பர்வத, குண்டல, வக்ஷார, இஷ்வாகார, மாநுஷோத்தர, பர்வதங்கள், குல பர்வதங்கள் இதுகளில் இருக்கிற சைத்யாலயங்கள் மத்யம ப்ரமாணங்கள். பாண்டுக வனங்களில் இருக்கிற ஜிநாலயங்கள் ஜகன்ய ப்ரமாண மாகும்.

இவைகளுடைய ப்ரமாணங்களும் உத்க்ருஷ்டம் தெற்கு வடக்கு நீளம் நூறு யோஜனை (100); கிழக்கு மேற்கு அகலம் ஐம்பது யோஜனை (50); உயரம் எழுபத்தைந்து யோஜனை (75); ஆழம் அரை யோஜனை யாகும்.

மத்யமத்துக்கு தெற்கு வடக்கு நீளம் ஐம்பது யோஜனை (50); கிழக்கு மேற்கு அகலம் இருபத்தைந்து யோஜனை (25); உயரம் முப்பத்தேழரை யோஜனை (37 1/2); ஆழம் கால் யோஜனை (1/4);

ஜகன்யத்துக்குத் தெற்கு வடக்கு நீளம் இருபத்தைந்து யோஜனை (25); கிழக்கு மேற்கு அகலம் பன்னிரண்டரை யோஜனை (12 1/2); உயரம் பதினெட்டே முக்கால் யோஜனை (18 3/4); ஆழம் அரைக்கால் யோஜனை யாகும் (1/8) இச் சொல்லப்பட்ட உத்க்ருஷ்டாதியில் சொல்லப்படாத சைத்யாலயங்களுக்கு ப்ரமாணம் சொல்லுதும்:

வெள்ளியம் பெருமலைகளிலும், ஜம்பூ, ஸால்மலி வ்ருக்ஷங்களில் இருக்கிற சைத்யாலயங்களுக்கு ப்ரமாணம் தெற்கு வடக்கு நீளம் காதம்; கிழக்கு மேற்கு அகலம் அரைக் காதம்; உயரம் முக்கால் காத மாகும்.

பவன லோகம் முதலான தேவ லோகங்களில் இருக்கிற[1] அதற்கு அதற்கு யோக்யமான அளவு ப்ரமாணங்கள் ஸர்வஜ்ஞராலே அறியப்படும் என்று அறிவது.

சைத்யாலயங்கள் அமைப்பு:

இச் சொல்லப்பட்ட சைத்யாலயங்களுக்கு எல்லாம் ரத்ன மயமாகிய மும்மூன்று மதிலை யுடைய நாலு திக்கிலும் நாலு வீதிகளும், நாலு நாலு கோபுரங்களும், வீதிக்கு ஒவ்வொரு மான ஸ்தம்பங்களும் உடைத்தாய், ஒன்பது ஒன்பது ஸ்தூபைகளும் உடைத்தாயிருக்கும்.

அடிக்குறிப்பு: காதம்-குரோசம்.

பா.வே : 1 – இருக்கிற சைத்யாலங்களும்

அந்த மதிலுக்குள்ளே பாஹ்ய ப்ரகாரம் வனங்களும், மத்யம ப்ரகாரம் த்வஜங்களும், அப்யந்தரம் சைத்யாலய பூமி யாகும். அவற்றுள் வஸதி யாகும்.

இச்சொல்லப்பட்ட சைத்யாலயங்களுக்கு கர்ப்ப க்ருஹத்தில் இருக்கிற ஸ்வரூபம் சொல்லுதும்:

முன் சொன்ன உத்க்ருஷ்ட ஜிந பவனத்தில் நூற்றெட்டு கர்ப்ப க்ருஹ மாகும். (108). அந்த பவனத்துக்குக் கிழக்கே மத்யத்தில் இருக்கிற வாசல் உயரம் பதினாறு (16) யோஜனை; அகலம் எட்டு (8) யோஜனை; தெற்கும் வடக்கும் இருக்கிற க்ஷுல்லக வாசல் இரண்டுக்கும் ப்ரத்யேகம் உயரம் எட்டு (8) யோஜனை; அகலம் நாலு யோஜனை யாகும்.

இச் சொன்னதுகளில் பாதி பாதி மத்யம சைத்யாலயங்களுக்கு ஆகும். அதில் பாதி பாதி ஜகன்ய சைத்ய ஆலயங்களுக்கு ஆகும்.

முன் சொன்ன கர்ப்பக்ருஹத்துக்கு நடுவே கிழக்கு வாசலுக்கு செவ்வையிலே எட்டு யோஜனை நீளமும் இரண்டு யோஜனை அகலமும் நாலு யோஜனை உயரமுமாய், ரத்ன ஸ்தம்பங்களாகிய காலை உடைத்தாய ரத்ன மணிகளினாலும் கனக புஷ்பங்களினாலும் சோபித மாகிய, கனக மய மாகிய, தேவச் சந்த்ரம் என்னும் பேரை யுடைய சப்பர மாகும்.

அந்த கர்ப்பக்ருஹம் நூற்றெட்டிலும் ஸிம்ஹாஸநாதி ஸஹிதமாக நூற்றெட்டு ஜிந பிம்பங்கள் ஐந்நூறு வில்லு உயரமாய் பல்யங்காஸனமாய் ரத்ன மயமும், தசதாள ப்ரமாண லக்ஷணத்துடன் நீல ரத்னம் போன்ற மயிர் சுருளும் நல்ல வஜ்ரமயமாகிய தந்தங்களும் பவழம் போன்ற அதரங்களும் தளிர் போன்ற ஹஸ்த பாதங்களும் மற்றும் அனேக லக்ஷணங்களை உடைத்தாய், ஜனங்களை அழைக்கிறாப் போலவும், பேசுகிறாப் போலவும் இருக்கிற அதி ஸௌந்தர்ய மாகிய திருமுகங்களை உடைத்தாகிய பிம்பங்கள் ஒவ்வொரு க்ருஹத்துள் ஒவ்வொன்றாகும்.

அடிக்குறிப்பு : சப்பரம் - மண்டபம்; 'கந்தக்குடி மண்டபங்கள் நூற்றெட்டு மே.பு.1274; 'செம்மணி மண்டபத்தினிடை சீய அனை மீது- ஐந்நூறு தனுவாகி உயர்ந்தனவே' மே.பு.1275.

மற்றும் அந்த ஒவ்வொரு கர்ப்பக்ருஹத்துள் ஜிந பிம்பத்து முன்னே நாக யக்ஷ மிதுனங்கள் முப்பத்திரண்டு முப்பத்திரண்டு பேர் ஸமானமாக. பந்தி கொண்டு சாமரை பிடித்திருக்கும். ஜிந பிம்பத்து இரு பார்ச்வத்திலும் ஸ்ரீதேவி, சுருத தேவி ஸர்வாண்ஹ யக்ஷ, ஸநத்குமார யக்ஷர் இவர்களுடைய ப்ரதி பிம்பங்கள் இருக்கும்.

மற்றும் இரு பார்ச்வத்திலும் நூற்றெட்டு ப்ருங்கார, கலச, தர்ப்பண, வ்யஜன, த்வஜ், சாமர, ஆதபத்ர, ஸுப்ரதிஷ்டம் என்னும் அஷ்ட மங்கலங்கள் இருக்கும்.

மற்றும் வசதி மத்யத்தில் முன் சொன்ன தேவ சந்த்ரம் என்னும் சப்பரத்து முன்னே வெள்ளி மயமும் பொன் மயமும் ஆகிய கடங்கள் முப்பத்திராயிர மாகும் *(32000)* .

மற்றும் கிழக்கு வாசலுக்குள்ளாக இரு பார்ச்வத்திலும் தூப கடங்கள் இருபத்து நாலாயிரம் ஆகும் *(24,000).*

மற்றும் அந்த வாசலுக்குப் புறத்தில் இரு பார்ச்வத்திலும் மணி மாலைகள் எண்ணாயிரம் ஆகும். *(8000)*அந்த மணிமாலைகள் மத்யத்தில் ஸ்வர்ண மாலைகள் இருபத்து நாலாயிரம் ஆகும்.*(24000).*

மற்றும் அந்த வஸதி வாசலுக்கு முன் மண்டபத்தில் ஸ்வர்ண கலசம் பதினாறாயிரம் *(16000).* ஸ்வர்ண மாலைகள் பதினாறாயிரம் *(16000).* தூப கடங்களும் பதினாறாயிரமாகும் *(16000).*

மற்றும் அந்த முன் மண்டபத்து மத்யத்தில் அனேகம் ஆராக்ஷி மணிகள் ஒவ்வொன்றுக்கு முத்துகளினாலும் ரத்னங்களினாலும் அநேகம் சிறு சதங்கைளினாலும் அலங்காரமாய் அநேக விசித்ரமாய் எந்நேரமும் மதுரமான ஜண ஜண என்னும் ஸப்தங்களை உடைத்தாய் இருக்கும்.

அடிக்குறிப்பு: தந்தங்கள் - பற்கள் ; ஹஸ்த பாதங்கள் -கை, கால்கள்; மிதுனங்கள் - ஜோடிகள், இணைகள்; 'இருமருங்கும் சாமரைகள் இயக்கரொடும் இயக்க' மே.பு.1276; அஷ்ட மங்கலம் - எட்டு மங்கலங்கள்; 'பூரகலசம் முதல் எண் மங்கலங்கள் ஏந்தி' மே.பு.1036; தர்ப்பணம் - கண்ணாடி; வ்யஜன வீஜனம் -விசிறி; ஆதபத்ரம்சப்ரம் -குடை;

தெற்கு வடக்கில் இருக்கிற க்ஷுல்லக த்வாரம் இரண்டுக்கும் ஒவ்வொன்றுக்கு கிழக்கு த்வாரத்துக்கு சொன்னப்போல, தூப கடம் முதலாக ஆராக்ஷி மணி பர்யந்தம் பாதி பாதி யாகும்.

வஸதிக்கு மேற்கே பின் புறத்தில் ரத்னமாலை எண்ணாயிரம் (8000). ஸ்வர்ண மாலை இருபத்து நாலாயிரம் முகும் (24000).

இப்பால், வஸதிக்கு முன்னே இருக்கிற முன் சொன்ன முகமண்டபம் முதலாய் மற்றும் முன்னே முன்னே இருக்கிற மண்டபாதிகளுடைய ப்ரமாணமும் ஸ்வரூபம் சொல்லுதும்:

முக மண்டபம்:

முக மண்டபம் தெற்கு வடக்கு நீளம் நூறு யோஜனை (100), கிழக்கு மேற்கு அகலம் ஐம்பது யோஜனை (50), உயரம் பதினாறு யோஜனை யாகும் (16) அதன் முன் இருக்கிற ப்ரேக்ஷணீய மண்டபம் தெற்கு வடக்கு நீளம் நூறு யோஜனை (100), கிழக்கு மேற்கு அகலம் நூறு யோஜனை (100), உயரம் சற்று அதிகமாகிய பதினாறு யோஜனை (16).

அதன் முன் எண்பது யோஜனை நீளமும், அவ்வளவு அகலமும், இரண்டு யோஜனை உயரமும், ஸமசதுரமு மாகிய ஸ்வர்ண மயமாகிய மேடையாகும்.

அந்த மேடைமேலே அறுபத்து நாலு யோஜனை நீளமும், அவ்வளவு அகலமும், பதினாறு யோஜனை உயரமும், ஸம சதுரமுமாய ரத்ன மயமாகிய ஆஸ்தான மண்டபமாகும்.

அதன் முன்னே முன் சொன்னபடி அகலமும் நீளமும் உடைத்தாய நாற்பது யோஜனை உயரமாய் வ்ருத்தாகாரமாய் ரத்ன மய மாகிய மேடை யாகும்.

அந்த மேடைமேலே நடு மத்தியிலே அரசாணிக்குப் படி இருக்கிறாப் போல் இருக்கிற மேகலா த்ரயத்து மேலே அறுபத்து நாலு யோஜனை அகலமும் அவ்வளவு நீளமும் அவ்வளவே உயர நீளமு மாகிய ஸ்தூபை அநேக விசித்ர ரதன்ங்களை யுடைத்தாய ஜிந பிம்பங்கள் ஸமூஹத்தை உடைத்தாய் இருக்கும்.

அந்த ஸ்தூபையைச்சுற்றிச் சுற்றிப் பன்னிரண்டு அம்புஜ வேதிகை, நாலு திக்கிலும் நாலு வீதியுடைத்தாய் ஒவ்வொரு வேதிகைக்கு நாலு திக்கிலும் நாலு கோபுரமுடைத்தாய் முன்சொன்ன மேடை மேலே இருக்கும்.

இந்த இந்தபடி ஒன்பது ஒன்பது ஸ்தூபைகளுக்கும் ஆகும்.

அதன் முன்னே ஆயிரம் யோஜனை நீளமும் அவ்வளவு அகலமு மாகிய முன் சொன்னபடி பன்னிரண்டு வேதிகை உடைத்தாய் கனக மய மாகிய பீட மாகும்.

அந்த பீடத்தின் மேலே சைத்யவருக்ஷம் ஸித்த[1] வ்ருக்ஷம் என்னும் இரண்டும் மும்மூன்று மதிலை யுடைத்தாய் இருக்கும். அந்த வ்ருக்ஷங்களுடைய ப்ரமாணமும் ஒவ்வொன்றுக்கு அடியில் நாலு யோஜனை, கிளைகள் இல்லாத உயரம், ஒரு யோஜனை கனமுமாய, அதன் மேல் பன்னிரண்டு யோஜனை உயரமும் தலை அகலம் பன்னிரண்டு யோஜனை யாகும்.

முன் சொன்ன ஸ்கந்தம் நாலு யோஜனைக்கு மேலே பன்னிரண்டு பன்னிரண்டு யோஜனை நீளத்திலே நாலு திக்கிலும் நாலு மஹா ஸாகைகளாகும். அதன் மேல் சிறு ஸாகைகள் பல வாகும். ஆக உயரம் பதினாறு யோஜனை ஆகும்.

அந்த வ்ருக்ஷங்கள் அடியில் இருக்கிற பீடத்தின் மேலே வ்ருக்ஷத்தண்டையோடே நாலு திக்கிலும் ஸித்தார்த்த வ்ருக்ஷத்தில் ஸித்த ப்ரதிமை யாகும்.

சைத்ய வ்ருக்ஷத்தில் ஜிந ப்ரதிமை யாகும். இந்த வ்ருக்ஷத்தில் அர்த்தார்த்த ப்ரமாணம் ஒவ்வொரு வ்ருக்ஷத்திற்கு ப்ரத்யேகம் நூற்று நாற்பதினாயிரத்து ஒரு நூற்றிருபது பரிவார வ்ருக்ஷங்களாகும் (1,40,120).

அதன் முன்னே இருக்கிற பீடத்தின் மேலே பதினாறு யோஜனை உயரமும் ஒரு யோஜனை அகலமு மாகிய கனக ஸ்தம்பங்கள் சிகரத்தில் நானா வர்ணங்களாகிய கோடி சிலைக்கு மேலே சத்ர த்ரயத்துடன் ஜனங்களிட கண்ணுக்கும் மனஸுக்கும் மநோஜ்ஞ மாகிய கொடிகள் பல வாகும்.

பா.வே. 1 ஸித்தார்த்த

அடிக்குறிப்பு: அரசாணி - மணமேடை; மேகலா த்ரயத்து - மூன்று மேகலை பீடம்; ஸ்கந்தம் - அடிமரம்; ஸாகை - கிளை; வ்ருக்ஷத்தண்டையோடே - மரத்தின் அண்மையிலே;

அதன் முன்னே ஜிந பவன மாகும். அந்த ஜிந பவனத்து நாலு திக்கிலும் நாலு பொய்கை ப்ரத்யேகம் நூறு (100) யோஜனை நீளமும், ஐம்பது (50) யோஜனை அகலமும் பத்து (10) யோஜனை ஆழமுமாய் மணி கனக மய மாகிய வேதிகையு முடைத்தாய், விவத மாகிய புஷ்பங்களுடன் கூடி இருக்கும்.

அதன் முன்னே தேவர்கள் விளையாடுகிற மணிமய ப்ராஸாதம் இரண்டாகும். அந்த இரண்டு ப்ராஸாதமும் வீதி இரு பார்ச்வத்திலும் ஐம்பது (50) யோஜனை உயரமும் 25 யோஜனை அகலமுமாகும்.

அதன் முன்னே தோரணங்கள் ஆகும்.

அந்த தோரணங்களும் மணிமயமாய் இருக்கிற ஸ்தம்பத்தின் மேலே முத்து மாலைகளும் கண்டைகளுடன் கூடி ஐம்பது (50) யோஜனை உயரமும் இருபத்தைந்து (25) யோஜனை அகலமுமாய் ஜிந பிம்பங்கள் ஸமூஹமுமாய் ரமணீயமுமாய் இருக்கும்.

அதன் முன்னே ஸ்படிக மயமாகிய, முதல் ப்ரகாரத்துக்குள்ளாக வாசலுக்கு இரு பார்ச்வத்திலும் நூறு (100) யோஜனை உயரத்திலும் ஐம்பது (50) யோஜனை அகலத்திலும் ரத்ன மயமாகிய ப்ராஸாதங்கள் இரண்டாகும்.

இவ்வண்ணம் வீதிவீதிகளுக்கும் ஆகும்.

இச்சொல்லப்பட்ட பூர்வ த்வாரத்துக்குச் சொன்ன முக மண்டபாதி ப்ரமாணங்களில் பாதி பாதி தக்ஷிண த்வாரத்துக்கும் உத்தர த்வாரத்துக்கும் ஆகும் என்று அறிவது.

மற்றும் அந்த சைத்யாலயங்களுக்குள்ளே வதநாபிஷேக மண்டபங்களும் ந்ருத்ய மண்டபங்களும், ஸங்கீத மண்டபங்களும், விளையாடுகிற க்ருஹங்களும், ஸஸ்த்ர ஸாஸ்த்ர அப்யாஸ க்ருஹங்களும் உத்க்ருஷ்ட பட்டக சாலைகளும் ஆகும்.

அடிக்குறிப்பு: அர்த்தார்த்த ப்ரமாணம் பாதி பாதி அளவு; சத்ர த்ரயத்துடன்-முக்குடையுடன்; கண்டை-பெருமணி; ப்ராஸாதம் -உபரிகை; பவனம்;

இப்பால், இரண்டாம் ப்ராகாரத்தில் இருக்கிற ஸ்வரூபம் சொல்லுதும். ஒவ்வொரு திக்கில் மஹாத்வஜம், ஸிம்ஹத்வஜம், நூற்றெட்டு (108), கஜ த்வஜம் நூற்றெட்டு (108) வ்ரஷப த்வஜம் நூற்றெட்டு (108), கருட த்வஜம் நூற்றெட்டு (108), மயில் த்வஜம் நூற்றெட்டு (108), சந்தர த்வஜம் நூற்றெட்டு (108), சூரிய த்வஜம் நூற்றெட்டு (108), ஹம்ஸ த்வஜம் நூற்றெட்டு (108), அரவிந்த தவ்ஜம் நூற்றெட்டு (108). சக்கர த்வஜம் நூற்றெட்டு (108), ஆக மஹா த்வஜம் ஆயிரத்தெண்பது (1080).

அவை ஒவ்வொன்றுக்கு பரிவார த்வஜம் நூற்றெட்டு (108) ஆக நூற்றெட்டுக்கும் பதினோராயிரத்து அறுநூற்றறுபத்து நாலு பரிவார த்வஜம் ஆகும். (11,664). இவ்வண்ணம் பத்து வகைக்கும் பரிவார த்வஜம் நூற்றொருபத்து ஆறாயிரத்து அறுநூற்றுநாற்பது ஆகும் (1,16,640). மஹா த்வஜம் கூட நூற்றொருபத்தேழாயிரத்து எழுநூற்றிருபது ஆகும் (1,17,720). இவ்வண்ணணம் நாலு திக்கிலும் இருக்கிற த்வஜங்கள் நானூற்று எழுபதினாயிரத்து எண்ணூற்றெண்பது ஆகும். (470,880)

இப்பால், மூன்றாம் ப்ராகார ஸ்வரூபம் சொல்லுதும்:

அசோக வ்ருக்ஷங்களும், ஏழிலம் பாலை வ்ருக்ஷங்களும், செண்பக வ்ருக்ஷங்களும், சூத வ்ருக்ஷங்களும், ஆகிய வனங்கள் நாலு திக்கிலும் நாலு வனங்கள் ஆகும். அந்த வனங்கள் மத்யங்களில் கனக மயமாகிய புஷ்பங்களினாலும் மரகத மயமாகிய விவித பத்ரங்களனிாலும், வைடுர்ய மயமாகிய பலங்களினாலும், சோபிதங்களாய், பவழ வர்ணமாய், விசாலமாய் இருக்கிற கிளைகளோடு கூடிய கல்பக வ்ருக்ஷங்கள் பத்து விதமாகும்.

மற்றும் அந்த வனங்கள் மத்யத்தில் மூன்று மதிலை உடைத்தாய் மூன்று பீடத்தின் மேலே மணிமய மாகிய சாகைகளும், பத்ர, புஷ்ப, பலங்களுமாய் இருக்கிற சைத்ய வ்ருக்ஷங்கள் நாலு வனத்திலும் நாலாகும். அந்த வ்ருக்ஷங்கள் மூலத்தில் ஒவ்வொரு வ்ருக்ஷத்துக்கு நாலு திக்கிலும் ஜிந ப்ரதிமைகள் பல்யங்காஸனமாய் அஷ்ட (8) மஹா ப்ராதிஹார்யத்துடன் கூடி இருக்கும்.

அடிக்குறிப்பு : வதநாபிஷேக - வந்தனா அபிஷேக என்று இருத்தல் வேண்டும்; ஸஸ்தர; படைக் கருவி; ஸிம்ஹ - சிம்மம்; கஜ - யானை; வ்ரஷப - எருது; ஹம்ஸ - அன்னம்; பரிவார - சுற்று அல்லது துணை; சூத - மா;

இப்பால் வீதியில் இருக்கிற மான ஸ்தம்பங்களுடைய ஸ்வரூபம் சொல்லுதும்:

வன பூமியினுடைய வீதி மத்யத்தில் முன் சொன்னபடி மூன்று மதிலை உடைத்தாய மூன்று பீடத்தின் மேலே மத்யத்திலே மான ஸ்தம்பங்கள் ஆகும். அந்த மான ஸ்தம்பங்கங்களுடைய சிகரத்திலே நாலு திக்கிலும் நாலு ஜிந பிம்பங்களாகும்.

இவ்வண்ணம் தர்மத்தினுடைய விபவம் சோபித்திருக்கும் இச்சொல்லப்பட்ட முகமண்டபாதி ப்ரமாணங்களில் பாதி பாதி மத்யம சைத்யாலயங்களுக்கு ஆகும். அதில் பாதிபாதி ஜகன்ய சைத்யாலயங்களுக்கு ஆகும். சேஷ சைத்யாலாயங்களுக்கு தந்தான் யோக்யங்கள் ஆகும்.

இவ்வண்ணம் சொல்லப்பட்ட ஐம்பத்திரண்டு சைத்யாலயங்களுக்கும் பூஜைப் பண்ணத் தக்கதாக ஆடி, கார்த்திகை, பங்குனி மாஸங்களில் பூர்வ பக்ஷத்தில் அஷ்டமி தொடங்கி பர்வத் தளவும் ஸௌதர்மேந்த்ராதி ஷோடஸ வித (16) கல்ப வாஸியரும், சந்தர சூர்யாதி பஞ்ச (5) வித ஜ்யோதிஷ்கரும், கின்னராத்யஷ்ட (8) வித வ்யந்தரரும், சமர வைரோசனாதி தஸ (10) வித பவனவாஸியரும், முக்யமான தேவர்கள் கரி, துரக, ரத, மஹிஷ, வ்ருஷப, குக்குட, வராஹ, ஸிம்ஹ, கருட, பேருண்ட, சரப, சார்துலாதி தம்தம் வாஹனங்களை ஏறி தம்தம் சின்ஹ ஸமந்வித ராகி, திவ்ய வஸ்த்ராபரண பூஷிதராகி, திவ்ய ஸ்த்ரீகள் பரிவார த்வஜாயுத ஸமந்விதராகி, கீத வாத்ய ந்ருத்தாஷ்டவிதார்ச்சனையுடன் தேவ ஸமூஹங்கள் எல்லாம் வந்து இழிந்து நந்திஸ்வர ஜிநாலயங்களுள் ஸாஷ்டாங்க ப்ரணீதராகி, ததந்த்தரம் ஸமுசித ஸ்தானங்களுள் இருந்து அந்த ஸமயத்தில் இந்த்ராணி முதலான தேவ ஸ்த்ரீகளும் தும்புரு நாரதரும் மங்கல கீதங்களைப்பாட, ரம்பை ஊர்வசி முதலானவர்கள் ந்ருத்த கீதங்களுடன் பஞ்ச மஹா ஸப்தம் முழங்க தேவர்கள் ஸ்வர்ண

அடிக்குறிப்பு: பத்ர - இலை; பலம் - பழம்; பல்யங்காஸனம் - அமர்ந்த நிலை; அஷ்ம மஹா ப்ராதிஹாரியம் - எண் பெரும் அற்புதங்கள்; பா மண்டலம், அஸியாசனம், சாமரை, துந்துபி, பூமழை பிண்டி நிழல், முக்குடை, பொன்வெயில் (பன்னிரு சபை); பூர்வ பக்ஷம் - வளர்பிறை; 'கத்திகை பங்குனி ஆடிய காசறு, சக்கில பக்க நல் அட்டமி தன்னில்' மே.பு. 1285;

கடங்களில் க்ஷீராப்தி ஜலங்களினாலும், நாளிகேர இக்ஷுரஸ, சூத ரஸ, காடிய, த்ராக்ஷ ரஸ, பநஸரஸ, கதளி ரஸ, சக்கர, க்ரத, க்ஷீர, ததி இவைகளினால் அபிஷேகம் பண்ணுவர். ஐந்த்ர த்வஜ முதலான கல்யாணங்களையும் பண்ணுவர்.

மற்றும் ஸர்வௌஷதி ஸமன்வித பஞ்ச சூர்ணத்தினாலும், உத்வர்த்தனம் பண்ணி, கர்ப்பூராதி ஸுகந்த த்ரவ்ய மிஸ்ர கங்காதி தீர்த்தங்களில் ஜலங்களாலும், மற்றுமுள்ள திவ்ய ஜலங்களாலும் மந்த்ர ஸமன்விதமாகி கந்தோதக அபிஷேகம் பண்ணி ததனந்தரம், பஞ்ச பக்ஷ பாயஸ சருவினுடன் அஷ்ட வித அர்ச்சனையும் நிர்ப்பர பக்தியும் பண்ணி, வலங்கொண்டு தேவ ஸமூஹ மெல்லாம் பூர்வ பக்ஷத்து அஷ்டமி முதல் பௌர்ணமி பர்யந்தம் அநவரதமும் கிழக்கு திக்கில் ஸௌதர்ம இந்தரனும், தெற்கு திக்கில் சமரனும், மேற்கு திக்கில் ஈசானேந்திரனும் வடக்கு திக்கில் வைரோசனனும் தங்கள் தங்கள் பரிவார தேவர்களுடன் நின்று கொண்டு ப்ரதக்ஷிண க்ரமத்தினால் ஒவ்வொருத்தர் பதினைந்து நாழிகை சாஸ்த்ர க்ரமத்துடன் எட்டு தினமும் அநவரதமும் பூஜா கல்யாணத்தைப் பண்ணுவர்.

மற்றும் அநவரதங்களும் நாநா விதமாகிய வாத்யங்கள் ப்ரத்யேகம் கோடிகோடியாக தானே நின்று முழங்கும் என்று அறிவது.

மற்றும் இச்சொல்லப்பட்ட விபவங்கள் முதலாய் நாநாவித மாகிய பலவும் உள என்று அறிவது.

இவ்வண்ணம் நந்தீச்வர த்வீப ஸ்வரூபம் சொல்லப்பட்டது:

---

1. அடிக்குறிப்பு : த்வஜாயுத ஸமந்விதராகி - கொடி, படைக் கருவிகளுடன் கூடி; நருத்தாஷ்டவிதார்ச்சனை - நாட்டியத்துடனும், எட்டு அர்ச்சனை பொருளுடனும்; க்ஷாஷ்டாங்க ப்ரணீதராகி - எட்டு அங்கமும் படிய வணங்கி; 'தும்புரு நாரதர் தொக்குடன் மிக்கவர் எங்கும் யாழிசையோடு ஒலி தொட்டனர் தாமே' அம.பு.1288; க்ஷீராப்தி - பாற்கடல்; நிரப்பர - துவிர; அநவரதமும் - இடைவிடாமல்; கீழ்த்திசைச் சோதமன் தேன்திசைச் சமரன் மேற்றிசை ஈசானன் வயிரோசனனே, வடதிசைப் பக்கம் வலமா முறைமுறை, திடவதின் அர்ச்சனை சீர்பெற இயற்றி' -திருப்பாமாலை , பக்.12

குண்டல ருசகவர மலைகள்:

அநந்தரம், பதினோராம் த்வீப மத்யத்திலும் பதின் மூன்றாம் த்வீப மத்யத்திலும் இருக்கிற குண்டல, ருசகர பர்வத ஸ்வரூபம் சொல்லுதும்:

அதெவ்வண்ணம் எனில், குண்டல பர்வதம் அடி அகலமும் தலை அகலமும் மாநுஷோத்தர பர்வதத்துக்குச் சொன்னபடிக்கு பதிற்று[1] மடியாகும்.

அது எங்ஙனம் எனில், அடியில் பூமியில் அகலம் பதினாயிரத்து இருநூற்று இருபது யோஜனை (10220). தலை அகலம் நாலாயிரத்து இருநூற்று நாற்பது யோஜனை (4240) உயரம் எழுபத்தையாயிரம் யோஜனை யாகும் (75000). ருசகவர பர்வதம் அடி அகலமும் தலை அகலமும் உயரமும் எண்பத்து நாலாயிரம் யோஜனை ஆகும் (84000).

இரண்டு பர்வதமும் ஸகலமும் ஸ்வர்ண மயமாகும்.

குண்டல மலை கூடம்:

அவற்றுள், குண்டல பர்வதத்து உயர இருக்கிற கூட ஸ்வரூபம் சொல்லுதும்:

பர்வதத்தின் சிகரத்திலே திக்குக்கு நாலு நாலு கூடம், நிரை நிரையே யாகும். அந்த நாலு திக்கிலும் அப்யந்தரத்தில் திக்குக்கு ஒரு கூடமாக நாலு கூடம். அக்ருத்த்ரிம சைத்யாலயம் இருக்கிற கூட மாகும். ஆக இருபது கூட மாகும்.

குண்டல பர்வதம் இருக்கிற ஆகாரமும் முன் சொன்ன படி விஸ்தாரத்தில் அடியில் அகன்று, இரு பார்ச்வமும் குறைந்து சென்று தலை அகலம் முன் சொன்ன விஸ்தாரத்து குண்டல ஆகாரமாய் பதினோறாம் த்வீப மத்யத்து சுற்றி இருக்கும் என்று அறிவது.

அடிக்குறிப்பு: பதிற்று - பத்து; மடி மடங்கு; மாநுஷோத்தரம் அடி அகலம் 1022 யோஜனை; தலை அகலம் 424 யோஜனை. பார்க்க பக்கம் -

பா.வே. - 1 பதித்து

குண்டலவர தீவு



ருசகவர மலை.

ருசகவர பர்வதமும் பதின்மூன்றாம் த்வீப மத்யத்து முன் சொன்ன அளவு ப்ரமாணத்துச் சுற்றி இருக்கும் என்று அறிவது.

குண்டல மலைகள் கூடங்கள் பெயர்கள்:

குண்டல பர்வதத்தில் இருக்கிற இருபது கூடத்துக்கும் நாமங்களும் அதிலே இருக்கிற தேவர்களுடைய நாமங்களும் சொல்லுதும்:

வஜ்ரா, வஜ்ர ப்ரபம், கனகம், கனக ப்ரபம், ரஜத கூடம், ரஜதாபம், ஸுப்ரபம், மஹாப்ரபம், அங்கம் அங்கப்ரபம், மணி கூடம், மணிப்ரபம், ருசகம், ருசகாபம் ஹிமவத் கூடம், மந்தாரம்.[1]

நாலு ஸித்த கூடத்திலும் நாலு சைத்யாலயமாகும்[2]. சேஷ பதினாறு கூடங்களில் அந்த அந்த கூடங்களுக்குச் சொன்ன நாமத்தை யுடைத்தான அந்த அந்த தேவர்களுக்கு ஆவாஸ மாகும்.

ருசகவர கூடங்கள்:

இப்பால், ருசகவர பர்வத சிகரத்தில் இருக்கிற கூடங்களும் அந்த கூடத்து மேலே இருக்கிற தேவியரும் அவர்கள் செய்யும் க்ருத்யமும் சொல்லுதும்:

ருசகவர பர்வத சிகரத்திலே கிழக்கு முதலாக நாலு திக்கிலும் ப்ரத்யேகம் ப்ரத்யேகம் எட்டெட்டு கூடம் க்ரமத்திலே யாகும். அந்த நாலு திக்கிலும் அப்யந்தரத்தில் ஒவ்வொன்றாக நாலு திக்கிலும் நாலு கூட மாகும். அதன் அப்யந்தரத்தில் ஒவ்வொன்றாக நாலு திக்கிலும் நாலு கூடமாகும்.

கூடங்கள்பெயர்களும் தேவியர் பெயர்களும்:

இவ்வண்ணம் அப்யந்தரத்தில் ப்ரத்யேகம் திக்திக்குத் திக்கு மூன்று மூன்று கூடங்களாகும். நாற்பத்து நாலு (44) கூடமாகும்.

அடிக்குறிப்பு: நாமங்கள்- பெயர்கள்: பதினாறு கூடங்களுக்கு பெயர்கள் கூறப்பட்டுள்ளன. மற்ற நாலு கூடங்களும் ஸித்த கூடம் எனப்படும்;

பா.வே: பா.வே1. மந்தரம் 2. ஜிந சைத்யாலய மாகும்

எல்லாத்துக்கும் அப்யந்தரத்தில் இருக்கிற நாலு கூடத்திலும் ஜிந சைத்யாலய மாகும்.

சேஷ நாற்பது கூடத்துக்கும் நாமங்களும் அதிலே இருக்கிற தேவியர்கள் ஸ்வரூபம்: பூர்வ திக்கில் க்ரமத்தில் ப்ரதக்ஷிணமாக கநகம், காஞ்சனம், தபனம், ஸ்ஸ்திக கூடம், ஸுபத்ரம், அஞ்ஜனகம், அஞ்ஜனமூலம் வஜ்ரம் என எட்டாகும். இந்த கூடத்து மேலே இருக்கிற திக்குமாரிகளும் கிரமத்தில் விஜயா, வைஜயந்தி ஜயந்தி, அபராஜிதா, நந்தா, நந்தவதி, நந்தோத்தரா, நந்திஷேணா, என எட்டு நாமத்தை யுடைத்தானவர்கள் ஆகும்.

தக்ஷிண திக்கில் எட்டு கூடங்களுக்கு நாமம்:

ஸ்படிகம், ரஜதம், குமுதம், நளிநம், பத்மம், சசி, வைச்ரவனம், வைடுர்யம் என வாகும்.

அதில் இருக்கிற தேவியரும் இச்சா, ஸமாஹாரா, ஸுப்ரகீர்ணா, யசோதரா, லக்ஷ்மீ, சேஷவதி, சித்ரகுப்தா, வஸுந்தரா என எண்மராகும்.

பச்சிம திக்கில், அமோகம், ஸ்வஸ்திகம், மந்தரம், ஹைமவதம், ராஜ்யம், ராஜ்யோத்தமம், சந்த்ரம், ஸுதர்ஸனம் என எட்டாகும்.

அதில் இருக்கும் தேவியரும் க்ரமத்தில் இலாதேவி, ஸுராதேவி, ப்ருத்வி, பத்மாவதி, ஏகநாசாதேவி, நவமிகா, சீதா, பத்ரை என எண்மராகும்.

உத்தர திக்கில் க்ரமத்தில் விஜயா, வைஜயந்தா ஜயந்தா, அபராஜிதா, குண்டலம், ருசகம், ரத்னவத், ஸர்வ ரத்னம் என எட்டு கூடமாகும்.

அதில் இருக்கிற தேவியரும் அலப்பூஷா, மிச்ரகேசி, தேவி, புண்டரீகிணீ, வாருணீ, ஹர்ஸா, ஸத்யா, ஹ்ரீ, ஸ்ரீ என எண்மராகும்.

ஜிந மாதா சேவகியர்:

இவர்களில் பூர்வ திக்கில் இருக்கிற எட்டு பேரும் தீர்த்தங்கர குமாரர் ஜனன காலத்தில் ஜிந மாதாக்களைச் சேவை[1] பண்ணிக்கொண்டு ப்ருங்காரமாகிய[2] கண்டிகை தரிப்பார்கள்.

தக்ஷிண திக்கில் இருக்கிற எட்டு பேரும் கண்ணாடி தரிப்பார்கள்.

பச்சிம திக்கில் இருக்கிற எட்டு பேரும் சத்ர த்ரயம் தரிப்பார்கள். உத்தர திக்கில் இருக்கிற எட்டு பேரும் சாமரைகள் தரிப்பார்கள்.

பா.வே. 1. சேர்வை: 2. ஸ்ருங்காரமாகிய

இவர்கள் அனைவரும் மிகுந்த ஸந்தோஷத்தையுடையராய்க் கொண்டு ஜிந ஜனன காலத்தில் ஜிந மாதாக்களுக்கு தங்கள்தங்கள் ஊழியத்தைப் பண்ணுவார்கள் என்று அறிவது.

உள் கூடங்கள் பெயரும் தேவியர் பெயரும்:

முதல் அப்யந்தர கூடம் நான்கிலும் பூர்வ திக்கில் விமலகூடம், தக்ஷிண திக்கில் நித்யாலோகம், பச்சிம திக்கில் ஸ்வயம்ப்ரபம், உத்தரதிக்கில் நித்யோத்யோதம் என வாகும்.

அதில் இருக்கிற தேவியரும் பூர்வ திக்கில் கநகா, தெற்கில் ஸதஹ்ரதா மேற்கு கனக சித்ரா, வடக்கு ஸௌதாமணி என நால்வரும் தீர்த்தங்கரர் ஜனன காலத்திலே சர்வ திக்குகளையும் நிர்மலமாகப் பண்ணுவார்கள்.

அதன் அப்யந்தரத்தில் நாலு கூடத்திலும் பூர்வ திக்கில் வைடுர்யம், தக்ஷிண திக்கில் ருஜக, பச்சிம திக்கில் மணிகூடம், உத்தர திக்கில் ராஜ்யோத்தமம் என வாகும்.

அதில் இருக்கிற தேவியரும் பூர்வம் ருஜகா, தக்ஷிண திக்கில் ருஜக கீர்த்தி, பச்சிம திக்கில் ருஜகாந்தா, உத்தர திக்கில் ருஜக ப்ரபா என நால்வரும் ஜிந ஜனன காலத்தில் ஜன்ம க்ருத்யத்தில் குசலர் ஆகும்.

அதன் அப்யந்தரத்தில் நாலு கூடத்திலும் முன் சொன்ன படி ஜிந சைத்யாலயமாகும்.

கூடங்கள் அளவுகள்:

இப்பால், குண்டல, ருசகவர பர்வதங்களில் இருக்கிற கூடங்களுக்கு ப்ரமாணம் சொல்லுதும்.

இரண்டு பர்வதங்களிலும் இருக்கிற சர்வ கூடங்களுக்கு ப்ரத்யேகம் ஒவ்வொரு கூடத்துக்கு அடி அகலம் ஐநூறு யோஜனை *(500)*, உயரம் ஐநூறு யோஜனை *(500)*, தலை அகலம் இருநூற்று ஐம்பது யோஜனை.

அடிக்குறிப்பு: ப்ருங்காரம் - அணிகல செப்பு; கண்டிகை - அணிகலன்கள் உள்ள செப்பு அல்லது கலசம்; சத்ர த்ரையம் - மூன்று குடைகள் ; ஜென்ம க்ருத்யத்தில் - குழந்தை பிறக்கும் காலத்தில் செய்யும் சடங்குகள், குசலர் - திறமையுடையவர்.

தீவு கடல்களுக்கு அதிபதி:

இப்பால், த்வீப ஸமுத்ரங்களுக்கு அதிபதியாகிய வ்யந்தர வேர்களுடைய நாமங்கள் சொல்லுதும்:

ஜம்பூ த்வீபத்துக்கு தக்ஷிண பாகத்தில் அநாதர தேவனும், உத்தர பாக்த்தில் ஸுஸ்தித தேவன் ஆகும்.

லவண ஸமுத்ரத்துக்கும் இவ் வண்ணம் பேரையுடைய தேவனாகும்.

தாதகீஷண்ட த்வீபத்துக்கு தெற்கு ப்ரபாஸனும் வடக்கு ப்ரியதர்ஸனனும் ஆகும்.

காளோதக ஸமுத்ரத்தில் தெற்கு காளன் என்னும் தேவனாகும்; வடக்கு மஹா காளன் என்னும் தேவன்ாகும்.

புஷ்கரவர த்வீபத்தில் மாநுஷோத்தர பர்வதத்தில் தெற்கு பத்மனும், வடக்கே புண்டரீகன் என்னும் தேவனாகும்.

மாநுஷோத்ரத்துக்கு அப்பால், அரை த்வீபத்தில் தெற்கே சக்ஷுஷ்மானும் வடக்கே ஸுசக்ஷுஷ்மான் என்னும் தேவனாகும்.

புஷ்கரவர ஸமுத்ரத்தில் தெற்கே ஸ்ரீப்ரபனும், வடக்கே ஸ்ரீதரனும் என்னும் தேவனாகும்.

வாருணிவர த்வீபத்தில் தெற்கே வருணனும் வடக்கே வருண ப்ரபன் என்னும் தேவனாகும்.

வாருணிவர ஸமுத்ரத்தில் தெற்கே மத்யனும் வடக்கே மத்யமனும் என்னும் தேவனாகும்.

க்ஷீர த்வீபத்தில் தெற்கே பாண்டுரனும் வடக்கே புஷ்பதந்தனும் என்னும் தேவனாகும்.

க்ஷீர ஸமுத்ரத்தில் தெற்கே விமலனும் வடக்கே விமலப்ரபன் என்னும் தேவனாகும்.

க்ருத த்வீபத்தில் தெற்கே ஸுப்ரனும் வடக்கே மகா ப்ரபனும் என்னும் தேவனாகும்.

க்ருத ஸமுத்ரத்தில் தெற்கே கனகனும் வடக்கே கனக ப்ரபனும் என்னும் தேவனாகும்.

க்ஷௌத்ர த்வீபத்தில் தெற்கே புண்யனும் வடக்கே புண்ய ப்ரபனும் என்னும் தேவ னாகும்.

க்ஷௌத்ர ஸமுத்ரத்தில் தெற்கே தேவகந்தனும் வடக்கே மகாகந்தனும் என்னும் தேவனாகும்.

நந்தீச்வர த்வீபத்தில் தெற்கே நந்தியும் வடக்கே நந்திப்ரபனும் என்னும் தேவனாகும்.

நந்தீச்வர ஸமுத்ரத்தில் தெற்கே பத்ரனும் வடக்கே ஸுப்ரபத்ரனும்[1] என்னும் தேவனாகும்.

அருண த்வீபத்தில் தெற்கே அருணனும் வடக்கே அருணப்ரபனும் என்னும் தேவனாகும்.

அருண ஸமுத்ரத்தில் தெற்கே ஸுகந்தன் வடக்கே ஸர்வகந்தன் என்னும் தேவனாகும்.

இவ்வண்ணம் ஒழிந்த த்வீபங்களிலும் ஸமுத்ரங்களிலும் இரண்டு இரண்டு அதிபதிகளாகிய தேவர்கள் ஆகும்.ஃநஏ ? ஸ்வயம்பு ரமணம்:

இப்பால், ஸ்வயம்புரமண பர்யந்தம் இருக்கிற ஸ்வரூபம் சொல்லுதும்:

ஸ்வயம்புரமண த்வீபத்தின் அர்த்தத்தினை, மாநு ஷோத்ர பர்வதம் போல, ஸ்வயம்ப்ர பாசலம் சுற்றி இருந்தது. மாநுஷோத்தர பர்வதத்துக்கும் ஸ்வயம்ப்ரப நாகேந்தரத்துக்கும் மத்யத்தில் அஸங்க்யாத த்வீப ஸமுத்ரங்கள் எங்கும் திர்யஞ்ச போகபூமிகளாகி ஜலசரங்களின்றியே ஸ்தலசர ககசரங்கள் மிதுனங்களாகிப் பிறந்து பரஸ்பர விரோதமின்றி த்ரண, பத்ர, பல புஷ்பாதிகள் ஆஹாரமாக ஸுகத்தில் ஒரு பலிதோபமம் வர்த்தித்து தேவ கதியில் செல்லும்.

அவற்றுள் நிச்சில அவிரத தான தான அனுமோதங்களினால் பிறப்பார்கள்.

ஸ்வயம்ப்ரபாசலத்தினின்றும் ஸ்வயம்புரமன ஸமுத்ர முடிவளவும் கர்மபூமி ப்ரவிபாகமாம். அதில் மழையும் காற்றும்

அடிக்குறிப்பு: அர்த்தத்தினை – பாதியை; நாகேந்திரம் – பெருமலை; த்ரியஞ்ச – விலங்குகள்; ஜல சரம் – நீர்வாழ்வன; ஸ்தலசரம் – நிலம் வாழ்வன; ககசரம் – வானில் வாழ்வன; மிதுனம் – இணைகள்; த்ரண – புல்; பலிதோபமம் – பல்யம் ஆண்டுகள்; 'ஸ்வயம்பு ரமண ——— செல்வர்.' பத.சா.(பக்கம். 223 – 224) எடுத்தாளப்பட்டுள்ளது.

பா.வே. 1 சுபத்ரன்

வெயிலும் பனியும் முதலாக வுடைத்தாகிய அவ்விடத்து திர்யக் யோனிஜங்கள் பஞ்சம குணஸ்தான வர்த்திகளும் தன்தான் பரிணாமத்துக்குத் தக்க ஆயுஷ்யத்தைப் பெற்று சதுர் கதியிலும் செல்வர்.

ஸ்வயம்புரமண ஸமுத்ர பாஹ்ய கோண சதுஷ்யத்தில் இருந்த ஸ்தண்டில க்ஷேத்ரம் உள்பட த்ரஸநாளமாம்.

விலங்கு கதியுள் பிறப்போர்.

இப்படிப்பட்ட திர்யக் கதியில் பிறப்பவர் யாரெனில், நெய்யுள் எண்ணையும், உப்பினுள் மணலும் முதலாகிய ஸாத்ரஸ்யங்களைக் கலந்து விற்கும் ப்ரதிரூபக வ்யாவஹாரிகளும், கௌடில்யமான துலா ப்ரஸ்தாதியினால் வியவஹாரம் பண்ணும் அவரும், க்ருத்திரிம மணி மௌக்திகாதிகளை விற்பவரும், ஹிரண்ய ஸ்வர்ணாதிகள் அவ்வவ த்ரவ்யங்களை வைத்து மறைத்து விற்பவரும், ஸாக்ஷியும் ப்ரமாணமுமாகப் பொய் சொல்லி வர்த்திக்கும் நிக்ஷேப தன அபஹாரிகளும், கள்ளரைக் கொண்டு திருடுவிக்கும் சோர ப்ரயோகிகளும், பிறர் த்ரவ்யங்களை ஹடாத் காரணத்தினாலும் கையடைகளினாலும் வாத வஸ்யங்கள் வல்லேன் என்று அநேக ப்ரகாரங்களினால் வஞ்சிக்கும் மாயா சோர பரிணதரும், பராங்கனையாரை அங்க விகாரத்தினால் அழிக்கும் அவரும், ப்ராணிகளைத் தாயையும் பிள்ளையும் பிரித்து ஒரு நாட்டிலும் மற்றொரு நாட்டில் விற்கும் நர வாணிஜ்ய, திர்யக் வாணிஜ்யரும், மற்றும் விஷம் உகிரும், பீலி, கேச, சர்மமயண, தேன், சணம்பு, சவுரி, இரும்பு, மத்யம் அடகு முதலாயினவும், ஸ்வான ஸுகர, குக்குட, கபோத, மார்ஜார, கிளி, கிரி, குரங்கு, புலி, கரடி, ஆடு முதலாயினவும் இவற்றின் அங்கம் முதலாயினவும் விற்பவரும் வாங்கிக் கொள்ளு மவரும், மது மத்ய மாம்ஸ ஆஹாரிகளும், ராஜ த்ரோஹிகளும், முதலாகிய பாபிகளுடன் கூடி வர்த்திப்பவரும், இஷ்ட வியோக அநிஷ்ட ஸம்யோகாத்ய ஆர்த்த த்யானங்களுடன் கூடி பஞ்சத்வம் எய்தி திர்யக்

அடிக்குறிப்பு: யோனிஜங்கள் - பிறவிகள்; பஞ்சம குணஸ்தானம் - ஐந்தாம் குணஸ்தானம்; சதுர்கதி - நரக, விலங்கு, மனித, தேவ கதிகள்; கோண சதுஷ்யத்தில் - 4 கோணத்தில் - மூலையில்; ஸ்தண்டில க்ஷேத்திரம் - எல்லைப் பகுதி; சாத்ரஸ்யம் - சமமான; ப்ரதிரூபக - கலப்பட; கௌடில்யம் - ஏமாற்றும்; துலா - தராசு;

கதியில் பிறந்து சேதன, பந்தன, வ்யஸன, பேதன, பானான்ன ரோதன, த்ராஸன துக்காதிகளை அஹோராத்ரம் அநுபவிக்கும்.

விலங்குகள் எடுக்கும் எதிர் பிறவிகள்:

இந்த திர்யக் ஜீவன்கள், தேஜ:காயிக, வாத காயிகங்களாகி மீண்டும் திர்யக்காகி பிறக்கும். ப்ருத்வீ, அப்பு, வனஸ்பதிகள் பாதர ஸூக்ஷ்ம பேதங்கள், விகல த்ரயங்கள், பர்யாப்த அபர்யாப்தங்களாகியும் தீர்த்தங்கரத்வ மல்லாத மநுஷ்யத்வத்திலும் பிறக்கும்.

அஸஞ்ஜிகள் முன் சொன்னதிலும் கதஞ்சித் ப்ரதம நரகத்திலும் பவன வ்யந்தரரிலும் பிறக்கும்.

ஸஞ்ஜிகள் முன் சொன்ன ஸ்தானத்திலும் பிறக்கும்; ஒழிந்த நரகத்திலும் போகபூமியிலும் அச்யுத கல்ப பர்யந்தம் பிறக்கும்.

மனிதர் எடுக்கும் பிறவிகள்:

மநுஷ்யர் சதுர்கதியிலும் ஸ்வ ஸ்வரூபோபலப்தி ரூப ஸித்த கதியிலும் பிறப்பர்[1].

ப்ரஸ்த - நாழி அல்லது உழப்பு; க்ருத்த்ரிம - போலி; மௌக்திகம் - முத்து; ஹிரண்ய - பொன்; சோர - திருடன்; ஹடாத் - வலி, பலாத்காரம்; வாத வஸ்யம் - பேச்சுத்திறன்; பராங்கனை - பிறர் பெண்டிர்; வாணிஜ்யர் - வணிகர்; உகிர் - நகம்; சர்ம்மயண - மெழுகு. பாவே: பிறப்பர். நந்தீஸ்வர த்வீபம் முடிந்தது. முற்றும் ஸுபமஸ்து

4. வியந்தர உலகம்

அநந்தரம், வ்யந்தர லோக ஸ்வரூபம் சொல்லுதும்:

திண்ணியலய [1]ஜோயணாணி கதிஹிதபதரம்ஸ

ஸங்கபாக மிதே!

போம்மாணம்[2] ஜிணகேஹே கணாதிதே

ணமம்ஸாமி!!

மங்கல வாழ்த்து:

இதெவ்வண்ணமெனில், "முந்நூறு யோஜனையை அங்குலி ப்ரமாணம் பண்ணி கண்ட லக்கத்தை ஒன்றுக்கொன்று குழி மாற கண்ட லக்கம் அசங்கியாத மாகும். அவ்வளவு ப்ரமாண மாகிய வ்யந்தர ஆவாஸங்களுள் அவ்வளவு ஜிந பவனங்களு மாகும். அந்த ஜிந சைத்ய சைத்யாலயங்களுக்கு நமஸ்காரம் பண்ணி வ்யந்தரருடைய குல ஸ்வரூபங்களைச் சொல்லுதும்: "

(பக். 204) அடிக்குறிப்பு: பஞ்சத்வம் - மரணம்; த்ரியக் - விலங்கு; சேதனம் - சிதைத்தல்; பந்தனம் - கட்டுதல்; பேதனம் - பிரித்தல்; பானான்ன- நீரும் திவனமும்; ரோதன - தடை; பொறாமை; த்ராஸன- அச்சம்; அஹோராத்ரம் - இரவும் பகலும்; தேஜ:காயிக - நெருப்புடலி; வாத காயிகம் - காற்றுடலி; ப்ருத்வீ - மண்ணுடலி; அப்பு - நீருடலி; பாதரம் - பருமை; ஸூக்ஷ்மம் - நுண்மை; விகல த்ரயங்கள் - 2,3,4 பொறியுடைய விலங்குகள்; அஸஞ்ஜி - மனமில்லாதன; ஸஞ்ஜி - மனமுடையன; நெய்யுள் __________ பிறப்பர்' - இப்பகுதி ப.ஸா. இருந்து எடுத்தாளப்பட்டுள்ளது. பார்க்க பக்: 225 - 226. பா.வே. 1. திண்ணிஸய 2. பௌமாணம் என்பன தி.ஸா. பாடம்

வியந்தரர் வகை:

கின்னர, கிம்புருஷ, கருட, கந்தர்வ, யக்ஷ, ராக்ஷஸ, பூத, பிசாசர் என எட்டு குலங்களாகும். இவர்கள் எல்லாரும் அநேக விதமாகிய ஆபரணங்களும் வஸ்த்ரங்களும் உடையராய் திவ்ய சந்தனங்கள் முதலாகிய லேபனங்களுமாய் இருப்பர்.

வியந்தரர் உடல் நிறம்:

அவர்களுடைய சரீர வர்ணங்களும் சைத்ய வ்ருக்ஷங்களும் சொல்லுதும்:

கின்னர குலம் ப்ரியங்கு பல வர்ணமும் அஸோக வ்ருக்ஷமு மாகும். கிம்புருஷ குலம் தவள[1] வர்ணமும் சண்பக வ்ருக்ஷமும் ஆகும். கருட குலம் நீல வர்ணமும் நாக கேஸர வ்ருக்ஷமும் ஆகும். கந்தர்வ குலம் ஹேம வர்ணமும் தும்புரு வ்ருக்ஷமும் ஆகும். யக்ஷ குலம் பச்சைச வர்ணமும் ஆல வ்ருக்ஷமும் ஆகும். ராக்ஷஸ குலம் பச்சை வர்ணமும் முள்ளில வ்ருக்ஷமு மாகும். பூத குலம் பச்சை வர்ணமும் துளசி வ்ருக்ஷமு மாகும். பிசாச குலம் க்ருஷ்ண வர்ணமும் கதம்ப வ்ருக்ஷமு ஆகும்.

அந்த வ்ருக்ஷங்ககளும் முன் சொன்ன பவன லோகத்து வ்ருக்ஷங்களு மெல்லாம் ப்ரத்வீ ஸாரமு மான பரிணமனங்களும் ஜம்பூ வ்ருக்ஷத்துக்குச் சொன்ன ப்ரமாணங்களில் பாதி பாதிகள் ஆகும்.

அதெவ்வண்ணம் எனில், மூல வ்ருக்ஷங்கூட எழுபதினாயிரத்து அறுபதாகும் (70060). அவற்றின் அடியில் நாலு திக்கிலும் திக்குக்கு நாலு நாலு ஜிந பிம்பங்கள் பல்யங்காஸனமாய் தோரண வாசலுடன் கூடி இருக்கும். அந்த ஜிந பிம்பங்களுடைய முன்னே மான ஸ்தபங்கள் ஒவ்வொரு ஜிந பிம்பத்து முன்னே ஒவ்வொரு மான ஸ்தம்பம். மூன்று மதிலையும் மூன்று ப்ராகாரத்தையும் யுடைத்தாய் முத்து மாலைகளாலும் திவ்யமாகிய கண்டாஜாலாதிகளாலும் ஸோபித மாகும்.

அடிக்குறிப்பு: அங்குலி பிரமாணம் பண்ணி: - அங்குலமாக மாற்றி; ஒரு யோஜனைக்கு 768000 அங்குலமாகும்; லேபனம் - பூச்சு; ப்ரியங்கு - குங்குமப்பூ

பா.வே. 1 பவள

குல பிரிவுகள்:

அந்த அஷ்ட (8) வித வ்யந்தரார்களுடைய ப்ரதி குல பேதம் சொல்லுதும்:

கின்னர குலத்து பத்து (10), கிம்புருஷ குலத்து பத்து (10) கருட குலத்து பத்து (10), கந்தர்வ குலத்து பத்து (10), யக்ஷ குலத்து பன்னிரண்டு (12), ராக்ஷஸ குலத்து ஏழு (7), பூத குலத்து ஏழு (7), பிசாச குலத்து பதினாறு (14), என குல பேதங்களாகும்.

இந்திரர்கள், வல்லபையர்கள் பெயர்கள்:

மற்றும் அந்த குல பேதங்களுடைய நாமங்கள் சொல்லுதும்:

அந்த அஷ்ட (8) விதத்துக்கும் ஒவ்வொரு குலத்து இரண்டு இரண்டு இந்த்ரரும், ஒவ்வொரு இந்திரற்கு இரண்டு இரண்டு வல்லபையரும், ஒவ்வொரு வல்லபையர்க்கு தக்க தக்க தேவியருடனும் ஆகும். ஃநஏ ? அவர்களுடைய ஸ்வரூபம் சொல்லுதும்:

கின்னர குலத்து கிம்புருஷ, கின்னரர் என இரண்டு இந்த்ரர் ஆகும். அவருள் கிம்புருஷேந்த்ரற்கு வல்லபையர்-அவதம்ஸையும், கேதுமதியும், ஆகும். கின்னரேந்த்ரற்கு ரதிஷேணையும் ரதி ப்ரியையும் ஆகும்.

கிம்புருஷ குலத்து இந்த்ரர் ஸத்புருஷ, மஹாபுருஷர் என இருவராகும். அவருள் ஸத்புருஷேந்தரற்கு வல்லபையர் ரோகிணியும், நவமிகையும் ஆகும். மஹா புருஷேந்தரற்கு ஹ்ரீயும், புஷ்பவதியும் ஆகும்.

கருட குலத்து இந்த்ரர் மஹாகாய, அதிகாயர் என இருவர் ஆகும். அவருள் மஹா காயேந்த்ரற்கு வல்லபையர் போகவதியும், போகதேவியும் ஆகும். அதிகாயேந்தரற்கு வல்லபையர் புஷ்ப கந்தியும், அநிந்திதையும் ஆகும்.

கந்தர்வ குலத்து இந்த்ரர் கீதரதி, கீதயசர் என இருவர் ஆகும். அவருள் கீதரதிதேந்த்ரற்கு வல்லபையர் சரஸ்வதியும், சரஸேனையுமாகும். கீதயசேந்த்ரற்கு வல்லபையர் தாரையும் உத்தமாதேவியு' மாகும்.

யக்ஷ குலத்து இந்த்ரர் பூர்ணபத்ர, மாணிபத்ரர் என இருவர் ஆகும். அவருள் பூர்ண பத்ரேந்த்ரற்கு வல்லபையர் குந்தாதேவியும், பகுபுத்ர தேவியும் ஆகும். மாணிபத்ரேந்த்ரற்கு வல்லபையர் தாராதேவியும் உத்தமாதேவியுமாகும்.

ராக்ஷஸ குலத்து இந்த்ரர் பீம மஹாபீமர் என இருவராகும். அவருள் பீமேந்த்ரற்கு வல்லபையர் பத்மா, ஸுமித்ரா, என இருவர் ஆகும். மஹாபீமேந்தரற்கு வல்லபையர் ரத்னாக்யா கனக ப்ரபா என இருவர் ஆகும்.

பூத குலத்து இந்த்ரர் ஸ்வரூப, ப்ரதிரூபர் என இருவராகும். அவருள் சொரூபேந்த்ரற்கு வல்லபையர் ரூபவதியும், பஹுரூபியும் ஆகும். ப்ரதிரூபேந்த்ரற்கு வல்லபையர் ஸுஸீமையும், ஸுமுகையும் ஆகும்.

பிசாச குலத்து இந்த்ரர் காலா, மஹாகாளர் என இருவர் ஆகும். அவருள் காளேந்தரற்கு வல்லபையர் கமலா, கமல ப்ரபா என இருவர் ஆகும். மஹாகாளேந்த்ரற்கு வல்லபையர் உத்பலா , ஸுதர்சனா என இருவர் ஆகும்.

மற்றும் அந்த கிம்புருஷாதி இந்த்ரற்கு ஸாமானிகர் முதலானவர்கள் ஸங்க்யா பேதம் சொல்லுதும்:

பரிவார தேவர்கள் எண்ணிக்கை:

இந்த்ரர் பதினாறு பேருக்கும் ப்ரதீந்தரர் ஒரு இந்த்ரற்கு ஒருவர் ஆகும்.

ஒரு இந்த்ரர்க்கு ஸாமாநிகர் நாலாயிரம் (4000). தநுரக்ஷகர் பதினாறாயிரம் (16000). அப்யந்தர பரீஷர் எண்ணூறு (800). மத்யம பரீஷர் ஆயிரம் (1000). பாஹ்ய பரீஷர் ஆயிரத்து இருநூறாகும் (1200). அநீகர் கஜாநீகர், பாதாநீகர், ரதாநீகர், கந்தர்வாநீகர், ந்ருத்யாநீகர், வ்ருஷபாநீகர், மஹிஷாநீகர் என எழுவர் ஆகும். அவருள் ஓவ்வொரு வகை இருபத்தெண்ணாயிரம் முதற்கொண்டு இரட்டிரட்டியாக ஏழாவது பதினேழு லக்ஷத்துத் தொண்ணூற்றீராயிரம் ஆகும் (17,92,000). இவ்வண்ணம் எழு வகை அநீகர்க்கு ப்ரத்யேகம் ப்ரத்யேகம் ஆகும்.

பா.பே. 1. நந்தினி, ப்ரியதர்ஸனா என்பது தி.ஸா பாடம்.

ஆநீகர் பிரிவுகள் தொகை வருமாறு.

பிரிவுகள்	யானை	குதிரை	காலாள்	தேர்	கந்தர்வர்	நாட்டியர்	எருது
பிரிவு 1	28000	28000	28000	28000	28000	28000	28000
பிரிவு 2	56000	56000	56000	56000	56000	56000	56000
பிரிவு 3	112000	112000	112000	112000	112000	112000	112000
பிரிவு 4	224000	224000	224000	224000	224000	224000	224000
பிரிவு 5	448000	448000	448000	448000	448000	448000	448000
பிரிவு 6	896000	896000	896000	896000	896000	896000	896000
பிரிவு 7	1792000	1792000	1792000	1792000	1792000	1792000	1792000

படை அதிபதிகள் பெயர்:

ஸேனா மஹத்தரற்கு ஸுஜ்யேஷ்டா, ஸுக்ரீவ:, விமல:, மருதேவ:, ஸ்ரீதாமா, தாமஸ்ரீ, விசாலாக்ய: என எழுவர் ஆகும்.

ப்ரகீர்ணகர், ஆபியோக்யர், கில்விஷர் என்னும் தேவர்கள் நாலு வகை தேவர்களுக்கும் ப்ரத்யேகம் அஸங்க்யாத மாகும்.

வியந்தரர் நகர் உள்ள தீவுகள்:

இப்பால் வியந்தரேந்த்ரர்களுக்கு பட்டணங்க்ள் இருக்கிற த்வீபங்களுடைய பெயர் சொல்லுதும்:

அஞ்ஜநகை, வஜ்ரதாதுகை, ஸுவர்ணணை, மனச்சிலக, வஜ்ர ரஜத, ஹிங்குலிகம், ஹரிதாள என எட்டு த்வீபத்திலும் தக்ஷிண பாகத்தில் தக்ஷிணேந்த்ரர் எண்மரும், உத்தர பாகத்து உத்தரேந்த்ரர் எண்மரும் இருப்பிடம் நகரமாகும்.

பட்டணங்கள் வருணனை:

அந்த பட்டணங்களில் இருக்கிற அடையாளமும் ஆயாம விஸ்தாரமும் சொல்லுதும்:

த்வீபத்து மத்யங்களில் மத்யத்தில் ஒன்றும் நான்கு திசையிலும் நான்குமாக ஜம்பூ த்வீபத்து ப்ரமாண மாகிய ஐந்து ஐந்து பட்டண மாகும். அவர்களுடைய நாமங்களும் மத்யத்திலிருக்கிற பட்டணம் அந்த அந்த இந்த்ரருடைய நாமங்களாகும். நாலு திக்கிலும் இருக்கிற பட்டணங்கள் பூர்வாதியாக அந்த அந்த இந்த்ரர் பெயர் கூடிய ப்ரபாபுர, காந்தாபுர, ஆவர்த்தனபுர, மத்யபுரம் என ஆகும்.

அது எவ்வண்ணமெனில், கின்னர ப்ரபா, கின்னர காந்தா, கின்னராவர்த்தா, கின்னர மத்ய என வாகும். இவ் வண்ணம் ஒழிந்த இந்தரற்கும் ஆகும்.

பட்டணங்கள் அளவுகள்:

அந்தப் பட்டணங்கள் முதலானதுக்கு அளவு ப்ரமாணமும் தத் ஸ்வரூபமும் சொல்லுதும்:

சுற்றி இருக்கிற ப்ராகாரம் உயரம் முப்பத்தேழரை யோஜனை (37 1/2); அடி அகலம் பன்னிரண்டரை யோஜனை(12 1/2); க்ரமத்தால் சுருங்கி தலை அகலம் இரண்டரை யோஜனை (2 1/2) யாகும்.

அந்த ப்ராகாரத்து வாசல் உயரம் அறுபத்திரண்டரை யோஜனை (62 1/2); அகலம் முப்பத்தொன்றேகால் யோஜனை (31 1/4) யாகும்.

அந்த வாசலுக்கு மேலே ப்ராஸாதம் எழுபத்தைந்து யோஜனை உன்னத மாகும் (75). அந்த ப்ராஸாதத்துள்ளே பன்னிரண்டு[1] யோஜனை அகலமும், ஆறேகால் யோஜனை உயரமும் ஆகிய ஸுதர்ம:ஸபை ஒன்று. அவைகளுக்குச் சுவர்கொழப்பமும் க்ரோச மாகும். அந்த ஸுதர்ம ஸபைக்கு வாசல் இரண்டு யோஜனை உயரமும் ஒரு யோஜனை அகலமும் ஆகும்.

இந்தப்ரமாணம் தக்ஷிணேந்த்ரர் உத்தரேந்த்ரர்கள் ஸர்வ இந்த்ரர்களுக்கும், ஸமான மாகும்.

அந்த நகரங்களுக்கும் பாஹ்யத்தில் இருக்கிற வன ஸ்வரூபம் சொல்லுதும்: பட்டணத்திற்குப் புறத்தில் அநேக தூரம் சென்றவிடத்து நாலு திக்கிலும் லக்ஷம் யோஜனை (100000) நீளமும் ஐம்பதினாயிரம்

அடிக்குறிப்பு: மத்யத்தில் இருக்கிற - நடுவில் உள்ள பட்டணம் இந்திரனுடைய பெயரை பெறும் - கிம்புருஷபுரம் என்பது போல; திசைகளில் உள்ள பட்டணம் கிம்புருஷ பிரபா, கிம்புருஷ காந்தா, கிம்புருஷ ஆவர்த்தா, கிம் புருஷ மத்திய என அழைக்கப்படும்; பிற இந்திரர் பட்டணங்களும் இதுபோல அழைக்கப்படும் என்க; பிரகாரம் - மதில் பாவே.: பன்னிரண்டரை யோஜனை நீளம், 6 1/4 யோஜனை அகலம், 9 யோஜனை உயரம் தி.ஸா. மூலம்.

யோஜனை (50000) அகலமுமாய், ரம்யங்களுமாயிருக்கிற வனங்கள் நான்கு நான்காகும்.

அந்த வனத்தில் வல்லபையர் இருப்பிடம் எண்பத்து நாலாயிரம் யோஜனை (84000) விஸ்தார மாகும். ஒழிந்த வ்யந்தரர் இருப்பிடம் அஸங்க்யாத த்வீப ஸாகரங்களில் ஆகும்.

பூத, ராக்ஷஸ, வியந்தரர் இருப்பிடம்:

கர பாகத்தின் மேலாயிரம் யோஜனை உயரமாகிய சித்தையின் பூமியுள் பூத குல வ்யந்தரற்குப் பதினாலாயிரம் பவனங்கள் ஆகும் (14000). ராக்ஷஸ குல வ்யந்தரற்கு பங்க பாகத்துப் பதினாறாயிரம் பவனங்கள் ஆகும் (16000). சேஷ வ்யந்தரருடைய நிவாஸம் எல்லாம் மேலே யாகும்.

அதெங்ஙன மெனில், பூமியின் மேல் ஹஸ்த ப்ரமாணத்தில் நீசோபபாதிக வ்யந்தரர் ஆகும். அவர்க்கு ஆயுஷ்ய ப்ரமாணம் பதினாயிரம் வருஷ மாகும் (10000).

அதன் மேல், பதினாயிரம் முழத்துக்கு மேல் திக்வாஸிகள் ஆவாஸ மாகும். அவர்களுக்கு ஆயுஷ்யம் இருபதினாயிரம் வருஷ மாகும் (20000).

அதன் மேல் பதினாயிரம் முழத்துக்கு மேல் அந்தர நிவாஸிகர் ஆவாஸ மாகும். அவர்களுக்கு ஆயுஷ்யம் முப்பதினாயிரம் வர்ஷ மாகும் (30000).

அதன் மேல் பதினாயிரம் முழத்துக்கு மேல் கூஷ்மாண்டர் ஆவாஸ மாகும். அவர்களுக்கு ஆயுஷ்யம் நாற்பதினாயிரம் வர்ஷ மாகும் (40000).

அதன் மேல் இருபதினாயிரம் முழத்துக்கு மேல் உத்பன்னர் ஆவாஸம் ஆகும். அவர்கள் ஆயுஷ்யம் ஐம்பதினாயிரம் வருஷ மாகும் (50000).

அதன் மேல் இருபதினாயிரம் முழத்துக்கு மேலே அநுத்பன்னர் ஆவாஸ மாகும். அவர்கள் ஆயுஷ்யம் அறுபதினாயிரம் வர்ஷம் (60000) ஆகும்.

அதன் மேல் இருபதினாயிரம் முழத்துக்கு மேல் ப்ரமாணர் ஆவாஸ மாகும். அவர்கள் ஆயுஷ்யம் எழுபதினாயிரம் வர்ஷம் (70000) ஆகும்.

அதன் மேல் இருபதினாயிரம் முழத்துக்கு மேல் கந்தர்வர் ஆவாஸ மாகும். அவர்கள் ஆயுஷ்யம் எண்பதினாயிரம் வர்ஷ மாகும் (80000)

அதன் மேல் இருபதினாயிரம் முழத்துக்கு மேல் மஹா கந்தர்வர் ஆவாஸ மாகும். அவர்கள் ஆயுஷ்யம் எண்பத்து நாலாயிரம் வர்ஷ மாகும் (84000).

அதன் மேல் இருபதினாயிரம் முழத்துக்கு மேல் புஜங்கரர் ஆவாஸ மாகும். அவர்கள் ஆயுஷ்யம் அரைக்கால் பல்ல மாகும். அதன் மேல் இருபதினாயிரம் முழத்துக்கு மேல் ப்ரீத்திங்கரர் ஆவாஸம் ஆகும். அவர்கள் ஆயுஷ்யம் கால் பல்ல மாகும்.

அதன் மேல் இருபதினாயிரம் முழத்துக்கு மேல் ஆகாஸோபபன்னர் ஆவாஸம் ஆகும். அவர்கள் ஆயுஷ்யம் அரைப் பல்ல மாகும்.

வியந்தரர் வாழிட வகைகள்:

மற்றும், வ்யந்தர நிலயங்கள் பவன, பவன புர, ஆவாஸ பேதத்தினால் த்ரி (3) வித மாகும். அதெங்ஙனமெனில், கோபுர ஸமன்வித ப்ரகார பரிதங்களும் வனஷண்ட மண்டிதங்களும் அதி விசால மஹாசாலாபிராமங்களும் வ்ருத்தாதியு மாகிய பவன புரம். அந்த பவன புரம் என்பது த்வீபங்களிலும் ஸமுத்ரங்களிலும் ஆகும். மற்றும் பத்மாதி ஸரோவரங்களிலும் ஜம்பூ வ்ருக்ஷாதி வ்ருக்ஷங்களிலும் ருசகாதி பர்வதங்களிலுமாக இருந்து ஆவாஸம் என்பதாகும். சித்தை என்னம் பூமியுள் இருந்து பவன மாகும்.

அடிக்குறிப்பு: அனேக தூரம் - 2000 யோஜனை சென்று என்பது தி.லா. உரை; கர பாகம் - ரத்திர பிரபா பூமி கரபாகம் பங்கபாகம் அப் பஹுல பாகம் என மூன்று பகுதிபடும். கரபாகத்தில் 16000 யோஜனையாகும். அதில் 16 பூமிகள் ஒவ்வொன்றும் 1000 யோஜனை அளவுடையது; அதில் முதலில் இருப்பது சித்திரா பூமி. அதனையே சித்தை என்றார். பங்க பாகம் 84000 யோஜனை அளவுடையது.

வியந்தரர் வாழிட எல்லை:

சித்தை வஜ்ரயின் கூட்டத்திலும் தொடங்கி உயரம் மேருவின் உத்ஸேத பர்யந்தமும், அகலம் ஸ்வயம்புரமண ஸமுத்ர பாஹ்ய பர்யந்த மாகிய திர்யக் லோக விஸ்தாரம் உள்ள அளவும் இச் சொன்ன த்ரி (3) வித நிலையங்களையுடைய வ்யந்தரர் ஆகுவர்.

வாழிடங்கள் அளவு:

இந்த நிலையங்களின் ப்ரமாணம்:

வ்ருத்தாதி புரங்கள் உத்க்ருஷ்டம் லக்ஷ யோஜனை (100000) க்ரமத்தினால் சிறுகி ஜகன்யம் ஒரு யோஜனை யாகும்.

ஆவாஸங்கள் உத்க்ருஷ்டம் பன்னீராயிரத்திருநூறு யோஜனை (12200). அதுவும் கிரமத்தினால் சிறுகி ஜகன்யம் முக்கால் யோஜனை யாகும்.

பவனங்கள் உத்க்ருஷ்டம் பன்னீராயிரம் யோஜனை (12000); உயரம் முந்நூறு யோஜனை (300). இவை மத்யத்தில் கூடம் உயரம் நூறு யோஜனை யாகும் (100). இவைகளும் க்ரம்த்தினால் சிறுகி வந்து ஜகன்யம் இருபத்தைந்து யோஜனை (25) உயரம் முக்கால் யோஜனை; அதன் மத்யத்தில் இருக்கிற கூடம் கால் யோஜனை யாகும்.

உடல் அளவு:

மற்றும் வ்யந்தரத்திரற்கு சரீர உத்ஸேதம் பத்து வில்லளவு ஆகும் (10). உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் ஏக பல்யோபம் ஆகும். ஃநஓ 7

உணவும் உயர்ப்பும்:

அவர்களுக்கு ஆஹாரமும் அம்ருத ஆஹாரம் சற்று அதிகமான ஐந்து நாளைக் கொருக்கால் ஆகும். உச்சவாஸமும் நிச்வாஸமும் சற்று அதிகமான ஐந்து முகூர்த்தத்துக்கு ஒருக்கால் ஆகும்.

அடிக்குறிப்பு: சித்தை - வஜ்ரையின் கூட்டத்திலும் - சித்ரா பூமி வஜ்ரா பூமி சந்திப்பில் தொடங்கி; வ்ருத்தாதி - வட்டம் முதலான; 'எண்வகை எந்தரற்கு இடம் இதாகவும், பண்ணவர் பணித்தனர் பூல்லம், ஆயுதம் முன்னிலத்தெங்கனும் முறைவர் ஒக்கமும், பண்ணுறு சிலைகள் பத்தாகும். என்பவே.' மே.பு. 1308

இவ் வண்ணம் சிலருக்கு பவனங்களும், பவனபுரங்களும், சிலர்க்கு பவனபுரம் ஆவாஸமும் என ஆகும்.[1]

இவ்வண்ணமாகிய வ்யந்தர நிவாஸம் அஸங்க்யாத மாகும் இவற்றுள் முன் சொன்னபடி ப்ரத்யேகம் ஒவ்வொரு ஜிநக்ருஹ மாகும்.

இவ்வண்ணம் வ்யந்தர லோகம் சொல்லப்பட்டது.

பா.வே. 1 சிலருக்கு பவனமும், பவனபுரமும், சிலருக்கு பவனமும் பவன புரமும் ஆவாசமும். தி.ஸா. மூலம்.

5. ஜோதிர் லோகம்

இனி ஜ்யோதிர் லோகம் சொல்லுதும்.

மங்கல வாழ்த்து:

"இருநூற்றைம்பத்தாறு யோஜனையை முன் வ்யந்திர லோகத்துக்குச் சொன்னபடி அங்குலம் பண்ணி, ஒன்றுக்கொன்று மாறின ஸங்க்யை அஸங்க்யாத மாகும். அவற்றுள் ஒவ்வொன்றுள் ஒவ்வொரு ஜிந க்ருஹ மாகும். அவைகளை ஆனந்தத்தினால் நமஸ்கரித்து" அந்த விமானத்தில் இருக்கிற ஜ்யோதிஷ்கருடைய பேதம் சொல்லுதும்.

ஜோதிஷர் பிரிவு:

சந்தர், ஆதித்ய, க்ரஹ, நக்ஷத்ர, பரகீர்ணக தாரகைகள் என ஐந்து வகைப்படும். சந்த்ர ஆதித்யர் ஸமான ஸங்க்யையர் ஆகும்.

ஒவ்வொரு சந்த்ரனுக்கு சனைச்வர ப்ரப்ரதி க்ரஹங்கள் எண்பத்தெட்டு *(88)*, க்ரத்திரிகாதி நக்ஷத்திரங்கள் இருபத்தெட்டு; தாரகாதி விமான ஸங்க்யை அறுபத்தாறாயிரத்துத் தொள்ளாயிரத்துத் எழுபத்தைந்து கோடா கோடி ப்ரமாண மாகும். *(669750000000000000)*

க்ரஹங்களின் பெயர்:

இவற்றுள் எண்பத்தெட்டு க்ரஹங்களுக்கு நாமங்களும் சொல்லுதும்:

காலா:, விகாளோ, லோஹித நாமா, கனகாக்யா:, கனக ஸம்ஸ்தான:, அந்தர:, கசயவ:, துந்துபி:, ரத்னனிப:, ரூப நிர்ப பாஸ:, *(9)*, நீலோ, நீலபாஸோ, அச்வோ, அச்வஸ்தான:, கோச:, கம்ஸவர்ண:, கம்ஸ:, சங்கபரிணாம:, சங்கவர்னோபி*(9)*, உதய:, பஞ்ச வர்ண, தில:, திலபுச்ச:, பஸ்மராசி[1]:, தூமோ, தூமகேது:, ஏக ஸம்ஸ்தான:, அஜ்ஞ[2]:, காலேவரோ, விகட:, *(11)*, பின்னஸந்தி[3]:, க்ரந்தி:, மாந:, சதுஷ்பாதோ,

அடிக்குறிப்பு: மங்கல வாழ்த்து கூறும் தி.ஸா. காதை:
பேஸத சீப்பண்ணங்குல கதி ஹிதபதரஸ்ஸ ஸங்கபாகமிதே!
ஜோயிஸ ஜிணிந்தகேஹே கணணாதீதே ஸமம்ஸாமி.!! தி.ஸா.*(302)*
ஆதித்ய - சூரியன்;

பா.வே. *1* க்ஷார ராசி; *2.* அக்ஷ; *3.* அபின்ன ஸந்தி - தி.ஸா. பாடம்.

வித்யுஜ்ஜிஹ்வோ, நப, ஸத்ரசோ, நிலய, கால காலகேது, அநயாக்ய, ஸிம்ஹாயு,(12). விமல:, கால:, மஹாகால:, ருத்ரநாமா:, மஹாருத்ர:, சந்தான:, சம்பவாக்ய:, ஸர்வார்த்தி:, திஸ:, சாந்தி:, வஸ்துந:, நிச்சல:, (12) ப்ரலம்ப:, நிர்மந்தர்:, ஜ்யோதிஷ்கான்:, ஸ்வயம்ப்ரப:, பாஸுர:, விரஜ:, நிர்துக்க:, வீதசோக:, ஸீமங்கர(9), க்ஷேமங்கர:, அபயங்கர:, விஜய:, வைஜயந்த:, ஜயந்த:, அபராஜித:, விமல:, த்ரஸ்த:, விஜயிஷ்ணு:, விகஸ:, கிரிகாஷ்ட:, ஏகஜடிர:, அக்நிஜ்வால:, ஜீலகேது, கேது:, க்ஷீரஸ:, (16) அக,ஸ்ரவண:, ராஹு:, மஹாக்ரஹ:, பாவக்ரஹ:, குஜ:, சனி:, புத:, சுக்ர:, குரு:, இவ்வண்ணம் க்ரஹங்கள் எண்பத்தெட்டாகும். (88).

ஜம்பூ தீவு தாரகைகள்: எண்ணிக்கை

தாரகைகள் நடக்கிற ப்ரமாணம் சொல்லுதும்.

முன் ஒரு சந்தரனுக்குச் சொல்லி இருக்கிற ப்ரமாணப்படி, ஜம்பூ த்வீபத்திலே இருக்கிற இரண்டு சந்திரனுக்கும் கூட்ட ஒரு லக்ஷத்து முப்பத்து மூவாயிரத்துதொளாயிரத்து ஐம்பது கோடாகோடி யாகும். (1,33,950,00000000000000)

இவர்கள் நடக்கிற வகை சொல்லுதும்:

பரத க்ஷேத்ரத்துக்குச் செவ்வையிலே எழுநூற்றைந்து கோடாகோடி; ஹிமவத் பர்வதத்துக்குச் செவ்வையிலே ஆயிரத்து நாநூற்று ஒருபது கோடாகோடி; ஹைம வத க்ஷேத்ரத்துக்கு மேலே இரண்டாயிரத்து எண்ணூற்றிருபது கோடாகோடி; மஹா ஹிமவானுக்கு மேலே ஐயாயிரத்தறுநூற்று நாற்பது கோடா கோடி; ஹரி வர்ஷ க்ஷேத்ரத்து மேலே பதினோராயிரத்து இருநூற்றொண்பது கோடாகோடி; நிஷத பர்வதத்தின் மேலே இருபத்திராயிரத்து ஐந்நூற்றறுபது கோடா கோடி; விதேஹ க்ஷேத்ரத்துக்கு மேலே நாற்பத்தையாயிரத்து ஒரு நூற்றிருபது கோடாகோடி; நீல பர்வதத்தின் மேலே இருபத்திராயிரத்து ஐந்நூற்றறுபது கோடாகோடி; ரம்யக க்ஷேரத்துக்கு மேலே பதினோராயிரத்து இருநூற்றொண்பது கோடாகோடி; ருக்மி பர்வ்தத்தின் மேலே ஐயாயிரத்து அறுநூற்று நாற்பது கோடாகோடி; ஹைரண்யவத க்ஷேத்ரத்துக்கு மேலே இரண்டாயிர்த்து எண்ணூற்றிருபது கோடாகோடி; சிகரி பர்வதத்தின் மேலே ஆயிரத்து நாநூற்று ஒருபது கோடாகோடி; ஹைராவத

அடிக்குறிப்பு: முன் சொன்ன 1,33,9500000000000000

க்ஷேத்திரத்தின் மேலே எழுநூற்றைந்து கோடா கோடி. இதெல்லாம் கூட்ட முன் சொன்ன தொகைப்படி யாகும்.

விமானங்கள் அமைந்துள்ள இடம்:

தாரகாதி விமானங்கள் இருக்கிற ஸ்தான ஸ்வரூபம் சொல்லுதும்: பூமிக்கு மேலே எழுநூற்றுத்தொண்ணூறு யோஜனா னந்தரத்தில் தாரகா விமானங்கள் ஆகும். அதன் மேல் பத்து யோஜனானந்தரத்தில் சூர்ய விமானமாகும். அதன் மேலே எண்பது யோஜனானந்தரத்தில் சந்த்ர விமானம் ஆகும். அதன் மேல் நாலு யோஜனானந்தரத்தி நட்சத்திர விமானமாகும். அதன் மேல் நாலு யோஜனானந்தரத்தில் புத விமானம் ஆகும். அதன் மேல் மூன்று யோஜனானந்தரத்தில் சுக்ர விமானம் ஆகும். அதன் மேல் மூன்று யோஜனானந்தரத்தில் ப்ருஹஸ்பதி விமான மாகும். அதன் மேல் மூன்று யோஜனானந்தரத்தில் அங்காரக விமான மாகும். அதன் மேல் மூன்று யோஜனானந்தரத்தில் சனி விமான மாகும்.

சேஷ க்ரஹங்கள் விமானம் எல்லாம் புத விமானத்துக்கு மேல் சனி விமானத்துக்குக் கீழே அந்தராளங்களில் ஆகும்.

சேஷ க்ரஹங்கள் – மீதி 83 க்ரஹங்கள்; அந்தராளம் இடைவெளி; நூற்றொருபது யோஜனை – நூற்றுபத்து யோஜனை விபரம் வருமாறு.

வ. எண்	விமானங்கள் பெயர்	பூமியிலிருந்து உள்ள தொலைவு	மைல் கணக்கில்
1	தாரகை	பூமியிலிருந்து 790 யோஜனை உயரத்தில் உள்ளது.	3160000
2	சூரியன்	790+10= 800 யோஜனை உயரத்தில் உள்ளது	3200000
3	சந்திரன்	800+80=8800 யோஜனை உயரத்தில் உள்ளது	3520000
4	நக்ஷத்ரம்	880+4= 884 யோஜனை உயரத்தில் உள்ளது	3536000
5	புதன்	884+4= 888 யோஜனை உயரத்தில் உள்ளது	3552000
6	சுக்ரன்	888+3= 891 யோஜனை உயரத்தில் உள்ளது	3564000
7	குரு (பிரஹஸ்பதி)	891+3= 894 யோஜனை உயரத்தில் உள்ளது	3576000
8	அங்காரங்கன்	894+3= 897 யோஜனை உயரத்தில் உள்ளது	3588000
9	சனி	897+3= 900 யோஜனை உயரத்தில் உள்ளது	3600000
		110	

விமானங்கள் உள்ள இடப்பரப்பு

இவ்வண்ணம் நூற்றொருபது யோஜனை பாஹு ல்யத்து ஏக ரஜ்ஜு விஸ்தாரத்து இருந்த ஜ்யோதி லோக விமானம் லோக அந்தத்து கனோததி என்னும் வாத வலயத்து முட்டி இருந்தது.

விமானத் தோற்றம்:

அந்த விமானங்கள் எல்லாம் மலர்த்தி வைத்த கோளக தள ஸத்ரஸ மாகும். தேன் மேலே தேவபுரம் ஒன்றொன்றினுள் ஒவ்வொரு ஜிநாலயம் ஆகும்.

விமானங்களின் அளவுகள்:

அந்த விமானங்களுக்கு ப்ரமாணம் சொல்லுதும்:

வ. எண்	விமானங்கள் பெயர்	பூமியிலிருந்து உள்ள தொலைவு	மைல் கணக்கில்
1	தாரகை	பூமியிலிருந்து 790 யோஜனை உயரத்தில் உள்ளது.	3160000
2	சூரியன்	790+10= 800 யோஜனை உயரத்தில் உள்ளது	3200000
3	சந்திரன்	800+80=8800 யோஜனை உயரத்தில் உள்ளது	3520000
4	நக்ஷத்ரம்	880+4= 884 யோஜனை உயரத்தில் உள்ளது	3536000
5	புதன்	884+4= 888 யோஜனை உயரத்தில் உள்ளது	3552000
6	சுக்ரன்	888+3= 891 யோஜனை உயரத்தில் உள்ளது	3564000
7	குரு (பிரஹஸ்பதி)	891+3= 894 யோஜனை உயரத்தில் உள்ளது	3576000 8
9	சனி	897+3= 900 யோஜனை உயரத்தில் உள்ளது	3600000
		110	

(ஆதாரம் ஸ்ரீவிசுத்தமதி மாதாஜி இந்தி உரை)

ஒரு யோஜனையை அறுபத்தொரு பாகம் பண்ணினதில் சந்தர விமானத்துக்கு ஐம்பத்தாறும், (56) ஸுர்ய விமானத்துக்கு நாற்பத்தெட்டு பாகமும் ஆகும். (48) சுக்ர விமான விஸ்தாரம் ஒரு க்ரோச மாகும். ப்ருஹஸ்பதி விமானம் கிஞ்சின்யூன க்ரோசம். அங்கார, புத, சனி விமானங்கள் ப்ரத்யேகம் க்ரோசார்த்தம். நக்ஷத்ர விமான விஸ்தாரம் ஒரு க்ரோசம். தாரகைகள் சிறிது க்ரோச சதுர்த்த (1/4)பாகம். மத்யமம் சில க்ரோசார்த்தம், (1/2), சில க்ரோச த்ரி பாகம் (3/4). பெரியதுகள் க்ரோச மாகும்.

இச்சொலல்ப்பட்ட ஸர்வ விமானங்களும் கீழ் மேல் உயரம் முன் சொன்ன ப்ரமாணங்களில் பாதி பாதியாகும்.

வ.எண்	விமானங்கள் பெயர்	அகலம் (விஸ்தாரம்		கீழ்மேல் உயரம்	
		யோஜனை	மைல்	யோஜனை	மைல்
1.	சந்திரன்	56/61	3672 8/61	28/61	1836 4/61
2.	சூரியன்	48/61	3147 [illegible]	24/61	1573 47/61
3.	சுக்ரன்	1 க்ரோஸம்	1000	1/2 க்ரோஸம்	500
4.	[illegible] (பரகஸ்பதி)	சற்று குறைநத 1 க்ரோஸம்	சற்று குறைந்த 1000	சற்று குறைந்த 1/2 க்ரோஸம்	சற்று குறைந்த 500
5.	புதன்	1/2 க்ரோஸம்	500	1/4 க்ரோஸம்	250
6.	அங்காரகன்	1/2 க்ரோஸம்	500	1/4 க்ரோஸம்	250
7.	சனி	1/2 க்ரோஸம்	500	1/4 க்ரோஸம்	250
8.	நக்ஷத்திரம்	1 க்ரோஸம்	1000	1/2 க்ரோஸம்	500 9.
10.	கேது	சற்று குறைந்த 1 யோஜனை	சற்று குறைந்த 4000	சற்று குறைந்த 1/2 யோஜனை	சற்று குறைந்த 2000
11.	தாரகை ஜகன்யம்	1/4 க்ரோஸம்	250	1/8 க்ரோஸம்	125
	மத்யமம்	1/2 அல்லது 3/4 க்ரோஸம்			
	உத்க்ருஷ்டம்	1 க்ரோஸம்	1000	1/2 க்ரோஸம்	1000
	(ஆதாரம் ஸ்ரீ விசுத்தமதி மாதாஜி இந்தி உரை)				

சந்திர கிரஹணம்:

இப்பால், சந்தர ஸுர்ய விமானத்தின் கீழ்ச் செல்லும் ராஹு, கேது விமான ஸ்வரூபம் சொல்லுதும்:

சந்தர விமானத்தின் கீழ் சேர செல்லும் பர்வ ராஹு விமானம் கிஞ்சித் ஊன யோஜனை ப்ரமாணம். அந்த விமானம் சந்த்ர விமானத்தை ப்ரச்சாதித்து ஆறு மாஸத்தில் ஒருக்கால் பூர்ணையில் அந்த்யத்து ஸோம, சந்த்ர க்ரஹண மாகும்.

நித்ய, ராஹு, கமன விசேஷத்தினாலும் ஸ்வபாவத்தினாலும் சந்த்ரனை பூர்ணையில் ப்ரதமை தொடங்கி அமாவாஸ்யை பர்யந்தம் தினம் ப்ரதி நிஜ பிம்ப ஷோடஸ பாக மாத்ரம் க்ருஷ்ணமாம். அமாவாஸ்யையில் ப்ரதமை தொடங்கி பூர்ணை பர்யந்தம் தவள மாம்.

சூரிய கிரஹணம்:

ஸூர்ய பிம்பத்து அதோபாகத்துச் செல்லும் அரிஷ்டன் என்னும் கேது விமானம் தேஸோன யோஜனை ப்ரமாணம். அது ஸூர்ய பிம்பத்தை ஷண்(6)மாஸத்தில் ஒருக்கால் ப்ரச்சாதித்து அமாவாஸ்யையின் அந்த்யத்து ஸூர்ய க்ரஹண மாகும்.

இடைவெளி தூரம்:

இந்த இரண்டு விமானத்தின் மேல் சேரச் செல்லும் சந்த்ர சூர்ய விமானத்துக்கு அந்தரம் எவ்வண்ணம் எனில்:

ராஹு, கேது விமானத்தில் இருக்கிற த்வஜ தண்டத்தில் அக்ரத்தின் ப்ரமாணாங்குலத்தில் நாலங்குலம் விட்டு அதன்மேல் ஆகும்.

விமானங்களின் ஒளிஅளவு;

அந்த சந்திரன் முதலான பேருக்கு கிரண ப்ரமாணம் சொல்லுதும்:

சந்த்ரனுக்குப் பன்னீராயிரம் சீதள மாகிய கிரணமாகும் (12,000). ஸூர்யனுக்கும் பன்னீராயிரம் உஷ்ணமாகிய கிரணமாகும் (12,000). சுக்ரனுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு கிரணமாகும் (2500). சேஷங்களுக்கு எல்லாம் மந்த[1] ப்ரகாச மாகிய கிரணமாகும்.

அடிக்குறிப்பு: பர்வ ராகு என்ற சொல்லுக்குப் பொருள் விளங்கவில்லை. கிஞ்சித்யூன-சற்று குறைந்த; ப்ரச்சாதித்து - மறைத்து; அந்த்யத்து - கடைசியில்; ஸோம - சூரியன்; ஷோடஸ பாகம் பதினாறில் ஒன்று; சந்திரனுக்கு 16 கூறுஉண்டு. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கூறாக கருப்படையும் போது சந்திரன் பதினைந்து நாளில் தானே கருப்பாகி விடுகிறது. அதே போன்று ஒவ்வொரு கூறாக தினம் தினம் வெண்மை அடைந்து வரும்போது 15 நாளில் தானே வெண்மையாகிவிடுகிறது; தவளம் - வெண்மை க்ருஷ்ணம் - கருப்பு; அந்த்ரம் - இடைவெளி; த்வஜ தண்டம் - கொடிக் கம்பம்; அக்ரத்தின் - நுனியின்; ப்ரமாணாங்குலம் - உத்ஸேத அங்குலத்தைக் காட்டிலும் 500 மடங்கு

வாகன தேவர்கள்:

அந்த விமானங்களைக் கொண்டு நடக்கும் வாஹண தேவர்கள் ஸ்வரூபம் ஸங்கயையும் சொல்லுதும்:

சந்த்ர விமானத்துக்குக் கிழக்கே ஸிம்ஹ ஆகாரமும், தெற்கே கஜ ஆகாரமும், மேற்கே வ்ருஷப ஆகாரமும், வடக்கே துரக ஆகாரமாகிய வாஹண தேவர்கள் ப்ரத்யேகம் நாலாயிரமாகப் பாதினாறாயிரமாகும் (16000).

இவ்வண்ணம் ஸூர்ய விமானத்துக்கும் பதினாறாயிரமாகும் (16000).

க்ரஹங்களுக்கு எண்ணாயிர மாகும் (8000)

நக்ஷத்ரங்களுக்கு நாலாயிரம் ஆகும் (4000)

தாரகைகளுக்கு இரண்டாயிரம் ஆகும் (2000)

விமானங்கள் இயக்கம்:

இந்த ஜ்யோதிஷ்க விமானங்கள் ஜம்பூ த்வீப மந்தரத்தை ஆயிரத்து ஒருநூற்றிருபத்தொரு யோஜனானந்தரம் விட்டு ப்ரதக்ஷிண க்ரமத்தினால் மனுஷ்ய லோகத்து சரிப்பர்.

அதற்கப்பால் சலனமின்றி நிற்பர்.

ச்ந்த்ராதித்யர் ஸங்க்யை ஜம்பூ த்வீபத்துக்கு இரண்டு (2), லவண ஸமுத்ரத்துக்கு நாலு (4), தாதகீஷண்டத்துக்குப் பன்னிரண்டு (12), காளோதக ஸமுத்ரத்துக்கு நாற்பத்திரண்டு (42), புஷ்கரார்த்தத்துக்கு எழுபத்திரண்டும் (72) ஆகும்.

விமானங்கள் செல்கை முறை:

இச் சொன்ன ஸூர்ய, சந்த்ர, ப்ரப்ரதி ஜ்யோதிர் விமானங்கள் தன்தான் ஸங்க்யையில் பாதி த்வீப ஸமுத்ரத்துக்கு ஒவ்வொரு பாகத்து பங்க்தி க்ரமத்னால் சரிக்கும்.

அடிக்குறிப்பு: சுக்ரனுக்கு கிரணம் தீவிர பிரகாசமுடையது என்று தி.ஸா. மூலம் கூறுகிறது. சேஷங்களுக்கு - மீந்தவைக்கு; அதற்கப்பால் - இரண்டரை தீவுக்கு அப்பால்.

பா.வே. 1 'அந்தப்ப்ரகாஸம்' என ஏட்டில் உள்ளது. அதனால் தி.ஸா. மூலம் இங்கே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

சில நக்ஷத்ரங்கள் செல்கை:

ஸகல நக்ஷத்ரங்களுக்கும் வடக்கில் அபிஜித் தெற்கு மூல நக்ஷத்ரம், ஊர்த்வ பாகத்தில் ஸ்வாதி, அதோபாகத்தில் பரணி மத்யத்தில் கார்த்திகை ஆகும். மாநுஷோத்தரத்துக்கு அப்பால் சரியாத இடத்திலும் இவ் வண்ணமே நிற்கும்.

நிலையான தாரகைகள் எண்ணிக்கை:

மாநுஷோத்தர அப்யந்தரத்தில் அவஸ்தித தாரகா ஸங்கக்யைகள்: ஜம்பூ த்வீபத்தில் முப்பதாறு (36); லவண ஸமுத்ரத்தில் நூற்று முப்பத்தொன்பது (139); தாதகிஷண்டத்தில் ஆயிரத்து ஒருபது (1010); காளோதக ஸமுத்ரத்தில் நாற்பத்தோராயிரத்து ஒருநூற்றிருபது (41120); புஷ்கரார்த்தத்தில் ஐம்பத்து மூவாயிரத்து இருநூற்று முப்பதும் ஆகும். (53230). இவைகள் எந்நாளும் ஸ்த்ரமே யாகும்.

மானுஷோத்ர மலைக்கு வெளியே:

இப்பால், மநுஷ்ய க்ஷேத்ரத்துக்குப் புறம்பு சந்த்ராதித்ய வலய க்ரமமும் அவைகள் ஸங்க்யையும் சொல்லுதும்:

மாநுஷோத்தர பர்வதத்து அருகிலும் த்வீப ஸமுத்ர வேதிகா மூலத்தும் ஐம்பதினாயிரம் ஐம்பதினாயிரம் யோஜனை அந்தரத்திலும் ஒழிந்த இடத்தில் லக்ஷ லக்ஷ யோஜனை அந்தரத்திலும் ஆகும்.

வலையங்களில் உள்ளவை எண்ணிக்கை:

அந்த வலயங்களிலும் அவஸ்திதங்களாய் இருக்கிற சந்த்ர ஆதித்யர் ஸங்க்யையும் மாநுஷோத்தரத்துக்கு அப்பால் புஷ்கரவர த்வீ பார்த்த ப்ரதமவலயத்து நூற்று நாற்பத்து நாலு (144), அதன் மேல் வலயம் வலயம் தோறும் நான்கு நான்கு அதிகமாக இரண்டாம் வலயத்து நூற்று நாற்பத்தெட்டு(148), மூன்றாம் வலயத்து நூற்றைம்பத்திரண்டு (152), நாலாம் வலயத்து நூற்றைம்பத்தாறு (156), ஐந்தாம் வலயத்து நூற்றறுபதும் (160), ஆறாம் வலயத்து நூற்றறுபத்து நாலும் (164), ஏழாம் வலயத்து நூற்றறுபத்தெட்டும் (168), எட்டாம் வலயத்து நூற்றெழுபத்திரண்டும் ஆகும் (172).

தொடக்க வலைய எண்ணிக்கை:

அப்பால், ஸமுத்ர வேதிகை மூலத்து முன் சொன்ன ஐம்பதினாயிரம் யோஜனை வலயத்து-ப்ரதம வலயத்து ஸ்கியையில் இரட்டி இருநூற்றெண்பத் தெட்டாகும் (288). இவ் வண்ணம் ஸமுத்ர வேதிகா மூல வலயங்களில் இரட்டிப்பு இரட்டிப்பும் ஒழிந்த மத்ய

வலயங்களில் நான்கு நான்கு அதிகமாகச் சென்று, அந்த்ய ஸமுத்திர பர்யந்தம் அஸங்க்யாத சந்த்ர ஆதித்யர் முன் சொன்னபடி க்ரஹ நக்ஷத்ர தாரா கணங்களுடன் கூடி இருப்பர்.

வலயம் வலயந்தோறும் உண்டாகிய சந்த்ர ஆதித்யர் விபாகத்தினால் அவ்வவர் அந்தரமாகும். புஷ்யத்தில் ஆதித்யனும் அபிஜையுள் சந்த்ரனும் ஆகும்.ஃநஏ 7 சூரிய விமானங்களுக்கு இடையே உள்ள தூரம்:

மனுஷ்ய க்ஷேத்ரத்து ஆதித்யர் அந்தரம் லவணம் ஸமுத்ரம் தொடங்கி புஷ்கரார்த்தம் அளவும் தன்தான் க்ஷேத்ரத்து ஒவ்வொரு திக்கில் ஆதித்ய பிம்ப க்ஷேத்ரத்தினை தன்தான் விஷ்கம்பத்து உண்டாகிய பிம்பங்களினால் பாகங் கொண்டு அதன் மத்யமம் அந்தர மாகும்.

வேதிகைக்கு ஆஸன்ன வீதியின் ததர்த்த ப்ரமாணம் அந்த்ரம் ஆகும்.

அடிக்குறிப்பு: இரட்டிப்பு இரட்டிப்பு - இருமடங்கு இருமடங்கு; மானுஷோத்ர மலையைத் தாண்டியுள்ள வெளி புஷ்கரவர பாதி தீவில் முதல் வலயத்தில் 144,144 சூரிய சந்திரர் இருக்கின்றனர். தீவு முடிந்து கடல் தொடங்கி அதன் முதல் வலயத்தில் 288,288 சூரிய சந்திரர் இருப்பர். இதுபோன்று முன் உள்ள தீவு அல்லது கடலின் முதல் வலயத்து உள்ள சந்திரர் சூரியர் எண்ணிக்கையைக் காட்டிலும் இரண்டு மடங்கு அடுத்துள்ள கடல் அல்லது தீவின் முதல் வலயத்துள் ஆகும். மற்ற வலயங்களில் நான்கு நான்காக கூடிப் போகும்.

அவ்வவர் அந்தரம் - அவரவர் இடைவெளி; மானுஷோத்ர மலையை தாண்டியுள்ள புற புஷ்கரவர அரைதீவின் முதல் வலயத்தின் விட்டம் 46,00,000 [4(2+4, 8+8) x2+500 + 500] அதன் சுற்றளவு 1,45,46,477 யோஜனை (விட்டத்தின் வர்கத்தைப் பத்தால் பெருக்கி வந்த தொகையின் வர்க்க மூலம் வட்டத்தின் பரிதியாகும்ன இதனை 144-ல் வகுத்தால் (101017 29/144) யோஜனை வரும். இதுவே இடைவெளி தூரம் ஆகும். இதுபோல

சூரிய, சந்திரன் இயங்கும் இடப்பரப்பு

புஷ்பகரார்த்தம் அளவும் இவ்விரண்டு சந்த்ர ஆதித்யர்க்கு ஒவ்வொரு சார க்ஷேத்ர மாகும். அவைவிற்றின் ப்ரமாணம் ஐந்நூற்றொருபது யோஜனையும் ஒரு ஸூர்ய பிம்பாதிகமும் ஆகும்.

ஜம்பு த்வீபத்து சந்த்ர ஆதித்யர் த்வீபத்துள் நூற்றெண்பது யோஜனை சரிப்பர்; ஒழிந்த முன்னூற்று முப்பது யோஜனையும் ஒரு ஸூர்ய பிம்பாதிகமும் லவண ஸமுத்ரத்து சரிப்பர்.

பிற இடங்களில் இயங்குபவை:

ஒழிந்த சந்த்ர ஆதித்யர் தன்தான் க்ஷேத்ரத்து சரிப்பர்.

வீதிகள் எண்ணிக்கை:

ஆதித்யனுக்கு நூற்றெண்பத்து நாலு வீதியும் (184), சந்த்ரனுக்குப் பதினைத்து வீதியுமாகும் (15). இருவரும் ப்ரதி திவஸம் ஒவ்வொரு வீதியில் சரிப்பர்.

அடிக்குறிப்பு அந்தரம்-இடைவெளி: லவணசமுத்திரத்தில் நான்கு ஸூர்யர். இதில் பாதி இரண்டு. ஸூர்ய பிம்பம் 48/61 பாங்க டங். இதனை இரண்டால் பெருக்க 96/61 ஆகும். இதனை லவண சமுத்ர விஸ்தாரமான 2 லக்ஷத்தில் கழிக்க மீதி 12199904/61 ஆகும். இதனை இரண்டால் வகுக்க 99999 13/61 வரும். இது ஒரு ஸூர்யனுக்கும் மற்றொரு ஸூர்யனுக்கும் இடையேயுள்ள இடைவெளி தூரமாகும்.

ஆதித்ய பிம்ப-ஸூர்ய விமானம் விஷ்கம்பந்து- வட்டத்து அகலம்; பிம்பம் - விமானம்; பாகம் கொண்டு-வகுத்து; மத்யம அந்தரம்-நடுவில் இடைவெளி

தாதகிஷண்டத்து விட்டம் 4 லக்ஷம் சூரியர் எண்ணிக்கை 12. அதில் ஒரு திசையில் 6. சூரிய விமான அகலம் 48/61-எனவே ஆறு சூரியனுக்கும் 6X48/61=288/61. இதனை 4 லக்ஷத்தில் கழிக்க மீதி 399995 17/61. இதனை 6-ல் வகுக்க 66665 161/183 யோஜனை ஆகும். இது ஒரு சூரியனுக்கும் மற்றொரு சூரியனுக்கும் இடையே உள்ள இடைவெளி ஆகும்.

காலோதக சமுத்ர விட்டம் 8 லக்ஷம் சூரியர் எண்ணிக்கை 42. அதில் ஒரு திசையில் 21 சூரிய விமான அகலம் 48/61. எனவே 21 சூரியனுக்கும் 21 X 48/61 = 1008/61. இதனை 8 லக்ஷத்தில் கழிக்க மீதி 799983 29/61 இதனை 21-ல் வகுக்க 38094 578/1281 யோஜனை ஆகும். இது ஸூர்யர்களுக்கு இடையே உள்ள இடைவெளி

வீதிகளின் இரடவெளி:

தன்தான் வீதி விஸ்தார பிண்டத்தை சார க்ஷேத்ரத்துக் கழித்து ரூபோன பத பாகம் பண்ணினது வீதிகள் அந்தரம் ஆகும்.

புஷ்கரார்த்த தீவின் விட்டம் 8 லக்ஷம். சூரியர் எண்ணிக்கை 72. அதில் ஒரு திசையில் 36 ஸூர்யவிமான அகலம் 48/61. எனவே 36 ஸூர்யனுக்கும் 36X48-61= 1728/61. இதனை 8லக்ஷத்தில் கழிக்க மீதி 799971 41/61 இதனை 36-ல் வகுக்க 22221 239/549 யோஜனை ஆகும். இது சூரியர்களுக்கு இடையே உள்ள இடைவெளி. இதுபோல சந்திரர்களுக்கு இடையே உள்ள இடைவெளியைக் கணக்கிடலாம்.

வேதிகை-தீவு அல்லது கடலின் எல்லை மதில்; ஆஸன்ன-அருகில், அண்மையில்; ததர்த்தம்-அதில் பாதி; ஒரு சூரியனுக்கும் மற்றொரு சூரியனுக்கும் கூறப்பட்ட இடைவெளி தூரத்தில் (பக்.) பாதி என்க. வேதிகைக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம் இது. சூரியர்களுக்கு இடையே உள்ள தூரத்தையும் வேதிகைக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரத்தையும் விமானங்களின் விஸ்தாரத்தையும் கூட்டினால் வலய விஸ்தாரம் கிடைக்கும். (எ.கா.) லவண சமுத்திரம் இடைவெளி 2லக்ஷம் = 49999 37/61+48/61+ 99999 13/61+48/61+ 4 9999 37/61; சார க்ஷேத்ரம் Motion Space, இயங்கும் இடப்பரப்பு; பிம்பாதிகம்-விமானத்தின் விஸ்தாரம் அதிகம்; அதாவது 510 48/61 யோஜனை சூரியனுக்கு; ஜம்பு தீவின் சூரியனும் சந்திரனும் ஜம்பு தீவிலும் லவண சமுத்திரத்திலும் இயங்குகின்றன; பிற அந்த அந்த தீவு கடல் எல்லைக்குள்ளே இயங்குகின்றன; புஷ்கரார்த்தம் வரை இது நியமம். தன்தான் க்ஷேத்ரத்து என்றது இதனையே.

வீதி விஸ்தார பிண்டம் - வீதிகளின் எண்ணிக்கையைப் பிம்பத்தால் பெருக்கிய தொகை. அதாவது 184x 48/61= 144 48/61; சார க்ஷேத்ரம் - 510 48/61; கழிக்க -(510 48/61-144 48/61) 366. ரூபோன பத - ஒன்று கழிந்த வீதி எண்ணிக்கை; 184-1=183 பாகம்-வகுக்க 366-183 2 யேஜனை; சூரிய வீதிகளுக்கு இடையே உள்ள தூரம் 2 யோஜனை யாகும்.

சந்தரனுக்கு: சார க்ஷேத்ரம் 510 48/61; இதில் வீதி விஸ்தார பிண்டமான 15 x 56/61 = 13 47/61 ஐக் கழிக்க (510 48/61 13 47/61 497 1/61; ஒன்று கழிந்த வீதி எண்ணிக்கையால் இதனை பாகம் கொள்ள (497 1/61 / 14)= 35 214/427 யோஜனை சந்திர வீதிகளுக்கு இடையே உள்ள தூர மாகும்.

ஒரு நாளில் இயக்கம்:

அவற்றினுள் தன்தான் பிம்பங்கள் கூடிதின கதிகள் ஆகும். அதெவண்ணம் எனில், ஆதித்யனுக்கு இரண்டு யோஜனையும் ஒரு பிம்பாதிகமும் திவஸ கதியாகும். சந்த்ரனுக்கு சற்றுக் குறைய முப்பத்தஞ்சரை யோஜனையும் ஒரு பிம்பாதிகமும் திவஸ கதியாகும்.

வீதிகளில் சூரியர்களுக்கு இடைவெளி:

ஸர்வ அப்யந்தர வீதியுள் வைத்து மந்தர ஆதித்யர் அந்தரத்தினையும், ஆதித்ய ஆதித்யர் அந்தரத்தினையும் அறிந்து அதனுள்ளாகிய திவஸ கதி கூடிப் போகி வீதி வீதிகள் அந்தரம் ஆகும் என்று அறியப்படும்.

ஸர்வ அப்யந்தர வீதியின் பரிதி ப்ரமாணத்தை அறிந்து அதனுடன் திவஸ கதியினுடைய பரிதியைக் குணித்து கூட்டிப் போக வீதி வீதியின்கண் பரிதியின் ப்ரமாணம் அறியலாகும்.

சந்தரனுக்கும் இந்த க்ரமம் ஆகும்.

இவ்வண்ணம் மாநுஷோத்தர பர்யந்தம் ஆகும்.

உள் வீதியில் சூரியர் இடைவெளி:

ஜம்பூ த்வீபம் லக்ஷ யோஜனைக்கு சார க்ஷேத்ரம் த்வீபத்தில் இரு பார்ச்வத்திலும் முந்நூற்றறுபது யோஜனை நீக்கி நீக்கி நின்ற தொண்ணூற்றொன்பதினாயிரத்து அறுநூற்று நாற்பது யோஜனை அப்யந்தர வீதியில் ஆதித்யன் நிற்கிற போது ஸூர்ய ஸூர்ய அந்தர மாகும்.

அடிக்குறிப்பு: இரண்டு யோஜனையும் ஒரு பிம்பாதிகமும் -2 + 48/61 = 2 48/61; சற்றுக் குறைய முப்பத்தஞ்சரையும் பிம்பாதிகமும்-35 214/427 + 56/61 =36 179/427. சூரியன் நாளில் 2 48/61 யோஜனையும் சந்திரன் 36 179/427 யோஜனையும் கடக்கிறது.

அடிக்குறிப்பு: அப்யந்தர வீதி- உள் வீதி; குணித்து- பெருக்கி; உள் வீதியில் சூரியர்கள் இடைவெளி: 100000-(180x2)= 99640 யோஜனை; ஜம்பூ தீவில் இரண்டு சூரியன்களுக்கும் இடையே உள்ள தூரம் இது; 99640–10000 = 89640 / 2 = 44820 இது மேருவுக்கும் முதல் உள் வீதிக்கும் இடையே உள்ள தூரம்; ஸுரகிரி – மேரு மலை; 44820+2 48/61 =44822 48/61 இது இரண்டாவது வீதியில் உள்ள சூரியனுக்கும் மேருவுக்கும் இடையே உள்ள தூரம். இது போல முன் வீதி அளவோடு தின சூரிய கதி தூரத்தைக் கூட்ட அடுத்த வீதிக்கும் மேருவுக்கும் உள்ள இடைவெளி கிடைக்கும்.

மேருவுக்கும் உள்வீதிக்கும் இடைவெளி:

அவற்றுள் பதினாயிரம் யோஜனை மஹா மேரு நீக்கி நின்ற எண்பத்தொன்பதினாயிரத்து அறுநூற்று நாற்பது யோஜனையை பாதிப்பண்ண கண்ட ஸங்க்யை நாற்பத்து நாலாயிரத்து எண்ணூற்றிருபது ஸூரகிரி ஸூர்யர் அந்தரம் ஆகும்.

அவற்றுடன் தின கதி இரண்டு யோஜனையும் ஒரு யோஜனை அறுபத்தொரு பாகத்தில் நாற்பத்தெட்டு பாகமும் கூடினது இரண்டாம் வீதிக்கு ஸூரகிரி ஸூர்யர் அந்தரம் நாற்பது நாலாயிரத்து எண்ணூற்றிருபத்திரண்டு யோஜனையும் ஒரு யோஜனையை அறுபத்தொரு பாகம் பண்ணிதில் நாற்பத்தெட்டு பாகமும் ஆகும்.

இவ்வண்ணம் மூன்றாம் வீதி முதலாக பாஹ்ய வீதி பர்யந்தம் வீதி வீதி தோறும் தின கதி கூட்ட ஸூர கிரி சூர்ய அந்தரம் ஆகும்.

வீதிகளில் சூரியர்களுக்கு இடைவெளி:

ஸூர்ய ஸூர்ய அந்தரத்திலும் இரண்டாம் வீதியில் தின கதி ஐந்து யோஜனையும் ஒரு யோஜனை அறுபத்தொரு பாகத்தில் முப்பத்தைந்து பாகமும் கூட்டத் தொண்ணூற்றொன்பதினாயிரத்து அறுநூற்று நாற்பத்தைந்து யோஜனையும் ஒரு யோஜனை அறுபத்தொரு பாகத்தில் முப்பத்தைந்து பாகமும் ஆகும்.

இவ்வண்ணம் மூன்றாம் வீதி முதலாக பாஹ்ய வீதி பர்யந்தம் வீதி வீதி தோறும் தின கதி இரு பார்ச்வத்திலும் ஐந்து யோஜனையும் ஒரு யோஜனை அறுபத்தொரு பாகத்தில் முப்பத்தைந்து பாகமும் பெருகிப் பெருகி ஸூர்ய ஸூர்ய அந்தர ப்ரமாணம் அறிய லாகும்.

அடிக்குறிப்பு: பாஹ்யவீதி - கடைசி வீதி ; பர்யந்தம் - வரை; சூரிய சூரிய - சூரியனுக்கும் சூரியனுக்கும்; அந்தரத்திலும் - இடைவெளியில்; இடைவெளி தூரம் 99640 யோஜனை; இத்துடன் தினகதி தூரம் 5 35/61 ஐ கூட்ட 99645 35/61 யோஜனை. இரண்டாம் வீதியில் இரண்டு சூரியன்களுக்கு இடையில் உள்ள தூரம்; இதுபோல மூன்றாம் வீதி முதலாக தினகதியை கூட்டி அறியலாம்; சுரகிரி சந்திர- மேருவுக்கும் சந்திரனுக்கும்; அந்த்ரம் - இடைவெளி 44820 யோஜனை; சந்திரன் தினம் கடக்கும் தூரம் 36 179/427 யோஜனை. 44856 179/427 யோஜனை சந்திரனுக்கும் மேருவுக்கும் இடையில் உள்ள தூரம்; பிம்ப சகிதம் - விமானம் உள்பட;

வீதிகளில் சந்திரர்களுக்கு இடைவெளி:

சந்திரனுக்கும் அப்யந்தர வீதியில் ஸூரகிரி சந்தர அந்தரம் நாற்பது நாலாயிரத்து எண்ணூற்று இருபது யோஜனையுடன் தின கதி சந்தர பிம்ப ஸஹிதம் முப்பத்தாறு யோஜனையும் ஒரு யோஜனையை நானூற்றிருபத்தேழு பாகம்பண்ணினதில் நூற்றுெழுபத்தொன்பது பாகமும் கூடினது. இரண்டாம் வீதியில் ஸூரகிரி சந்த்ர அந்தரம் சந்த்ர பிம்ப ஸஹிதம் நாற்பத்து நாலாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தாறு யோஜனையும் ஒரு யோஜனை நானூற்றிருபத்தேழு பாகம் பண்ணினதில் நூற்றெழுபத் தொன்பது பாகமும் ஆகும்.

இவ்வண்ணம் மூன்றாம் வீதி முதலாக பாஹ்ய வீதி பர்யந்தம் வீதி வீதி தோறும் தின கதி கூட்ட சந்த்ர பிம்ப ஸஹிதம் அந்தரங்கள் அறிய லாகும்.

சந்திரன்களுக்கு இடையே இடைவெளி:

சந்த்ர சந்த்ர அந்தரமும், அப்யந்தர வீதியுள் நிற்கையில், அந்தரம் தொண்ணூற்றொன்பதினாயிரத்து அறுநூற்று நாற்பது யோஜனை யாகும். அவற்றுடன், தின கதி இரு பார்ச்வத்திலும் எழுபத்திரண்டு யோஜனையும், முன் சொன்னபடி, ஒரு யோஜனையை நானூற்றிருபத்தேழு பாகம் பண்ணினதில் முந்நூற்றைம்பதுதெட்டு பாகமும் கூட்ட இரண்டாம் வீதியில் பிம்ப ஸஹிதம் தொண்ணூற்றொன்பதினாயிரத்து எழுநூற்றொரு பத்திரண்டு யோஜனையும் ஒரு யோஜனை நானூற்றிருபத்தேழு பாகம் பண்ணினதில் முந்நூற்றைம்பத்தெட்டு பாகமும் அந்தர மாகும்.

அடிக்குறிப்பு: சந்த்ர சந்த்ர அந்தரம் - சந்திரனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம்; ஜம்பு தீவு விட்டம் 1 இலட்சம் யோஜனை. ஜம்பு தீவில் சந்திரன் சரிக்கும் க்ஷேத்திரம் இரண்டு பக்கமும் 180 x2 = 360 யோஜனை. இதனை கழிக்க (1,00,000 - 360) = 99,640 யோஜனை. உள் வீதியில் உள்ள சந்திரன் இரண்டுக்கும் இடையே உள்ள தூரமாகும். இத்துடன் 72 358/427 ஐக் கூட்ட 99,712 358/427 யோஜனையாகும். இரண்டாவது வீதியில் உள்ள சந்திரன்களுக்கு இடையே உள்ள தூரம் இது. இரட்டிப்பு இரட்டிப்பு கூட்ட - 72 358/427ஐக் கூட்ட; பரிதி பிரமாணம் - சுற்றளவு. முதல் வீதியின் விஸ்தாரம் 99,640. இதற்கு பரிதி 3,15,089 யோஜனை. இதனுடன் தினகதியின் பரிதி 17 38/61ஐக் கூட்ட 3,15,106 38/61 இரண்டாம் வீதியின் பரிதியாகும். இதுபோன்று முன் வீதியின் பரிதியுடன் 17 38/61 ஐக் கூட்ட அடுத்த வீதியின் பரிதி கிடைக்கும்.

இவ்வண்ணம், வீதி வீதி தோறும் தின கதி இரட்டிப்பு இரட்டிக் கூட்ட, பிம்ப ஸஹிதம், அவ்வவ் அந்தரங்கள் அறியலாகும்.

வீதிகள் சுற்றளவு–ஸூர்யனுக்கு:

பரிதி ப்ரமாணமும் அப்யந்தர வீதி மூன்று லக்ஷத்து ஒருபத்தையாயிரத்து எண்பத்தொண்பது யோஜனை யாகும். அவற்றுடன் வீதி வீதி தோறும் ஒவ்வொரு வீதிக்குப் பதினேழு யோஜனையும் ஒரு யோஜனை அறுபத்தொரு பாகம் பண்ணினதில் முப்பத்தெட்டு பாகமும் பெருகிப் பெருகிக் கூட்ட ஸூர்யனுக்கு இரண்டாம் வீதி முதலாக பரிதி ப்ரமாணங்கள் அறிய லாகும்.

வீதிகள் சுற்றளவு–சந்திரனுக்கு:

இவ்வண்ணம் சந்திரனுக்கும், முன் சொன்ன, அப்யந்தர பரிதி ப்ரமாணத்துடன் இரண்டாம் வீதி முதலாக வீதி வீதி தோறும் இருநூற்றுமுப்பது யோஜனையும் ஒரு யோஜனையை நானூற்று இருபத்தேழு பாகம் பண்ணினதில் நூற்றுநாற்பத்தூமூன்று பாகமும் பெருகிப் பெருகிக் கூட்ட இரண்டாம் பரிதி முதலாக பரிதி பரிதி ப்ரமாணம் அறிய லாகும்.

இரண்டரை தீவில் அளவுகள்:

இவ்வண்ணம் லவண ஸமுத்ரம் முதலாக புஷ்கரார்த்த பர்யந்தம் அந்தரம் சொல்லுதும்- அதுஎவ்வண்ணமெனில், லவண ஸமுத்திரத்தில் சரிக்கிற ஸூர்யன் நாலுக்கு பாகம் ஒன்றுக்கு ஸூர்யன் இரண்டு(2). இவர்களுக்கு அந்தரம் த்வீப வேதிகைக்கு அப்பால்

அடிக்குறிப்பு: சந்திரனுக்கு பரிதி: சந்திரனின் முதல் வீதியின் சுற்றளவு *315089* யோஜனை. இதனுடன் தின கதியின் பரிதி *230 143/427* யோஜனை கூட்ட *315319 143/427* யோஜனை. இது இரண்டாம் வீதி பரிதியாகும். இதனுடன் *230 143/427* ஐக் கூட்ட *315549 296/427* யோஜனை அறிக. இதனையே 'பெருகிப் பெருகிக் கூட்ட' என்றார்.

வேதிகைக்கு அப்பால்-எல்லைக்கு அப்பால்; லவண சமுத்திர விஸ்தாரம் லக்ஷம். ஒரு திசையில் *2* சூரியன்; சூரியன் விஸ்தாரம் *48/61* இரண்டு சூரியனுக்கும் *96/61.* இதனை *2* லக்ஷத்தில் கழிக்க *199998 36/61* ஆகும். இது இரண்டு சூரியனுக்கும் இடையேயும், வேதிகைக்கும் சூரியனுக்கும் இடையேயும் உள்ள தூரம். அதாவது இது இரண்டு இடைவெளிகளின் தூரம். எனவே ஒரு இடைவெளிக்குத் தூரம் 199998 36/61 / 2 = 99999 13/61 இது ஒரு சூரியனுக்கும் மற்றொரு சூரியனுக்கும் இடையே உள்ள தூரம். இதில் *(99999 13/61/2)* பாதி *49,999 37/61* யோஜனை வேதிகைக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம். முன் சொன்ன பாகப்படி என்றது *61;*

நாற்பத்தொன்பதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது யோஜனையும் ஒரு யோஜனையை அறுபத்தொரு பாகம் பண்ணினதில் முப்பத்தேழு பாகமும் சென்றவிடத்து ஒரு ஸூர்யன், அவன் இருப்பிடமும் முன் சொன்ன பாகப்படியில் நாற்பத்தெட்டு பாக மாகும்.

அதனுக்கு அப்பால் தொண்ணூற்றொன்பதினாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது யோஜனையும் பதின்மூன்று பாகமும் சென்றவிடத்து இரண்டாவது ஸூர்யன். அவன் இருப்பிடமும் முன் சொன்னபடி நாற்பத்தெட்டு பாகம்.

அதனுக்கப்பால், நாற்பத்தொன்பதினாயிரத்து தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது யோஜனையும் முப்பத்தேழு பாகமும் சென்றவிடத்து ஸமுத்ர பாஹ்ய அந்த்ய மாகும். ஆக மூன்று அந்தரமும் இரண்டு ஸூர்யன் இருப்பிடமும் கூட இரண்டு லக்ஷமாகும்.

தாதகீஷண்ட சூரியர்கள்:

அதனுக்கப்பால், தாதகிஷண்டத்தில் சரிக்கின்ற ஸூர்யர் பன்னிரண்டு. பாதி ஆறுக்கு லவண ஸமுத்தித்துக்கு அப்பால் முப்பத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்திரண்டு யோஜனையும் ஒரு யோஜனையை நூற்றெண்பத்து மூன்று பாகம் பண்ணினதில் நூற்றெழுபத்திரண்டு பாகமும் சென்றவிடத்து ஒரு ஸூர்யன் ஆகும்.

பா.வே1. நானூற்று நாற்பத்து நாலு:

அடிக்குறிப்பு: 2 லக்ஷம் - (49,999) 37/61 + 99,999 13/61 + 49,999 37/61 + 48/61 + 48/61); 144 - இது சரியன்று பாடபேதமாக வருவதும் வரியன்று; 48 பாகம் ஆகும் என்று இருத்தல் வேண்டும் அல்லது 6 சூரியன்களுக்கும் ஆன 288/61 என்று இருத்தல் வேண்டும். தாதகிஷண்ட விஸ்தாரம் 4,00,000 ஒரு திசையில் 6 சூரியன். சூரியன் விஸ்தாரம் 48/61. 6 சூரியனுக்கும் 4 44/61 அல்லது 288/61 ஆகும். இதனை கழிக்க (4,00,000 - 4 44/61) 3,99,995 17/61 ஆகும். இது 6 சூரியன்களுக்கு இடையேயும் இரு பக்க வேதிகைகட்கும் சூரியனுக்கும் இடையேயும் உள்ள தூரம். இதனை 6ஆல் வகுக்க (3,99,995 17/61 / 6) 66,665 161/183 ஆகும். இது சூரியர்களுக்கு இடையே உள்ள தூரம் இதனை 2ஆல் வகுக்க (66,665 161/183/2) 33,332 172/183 யோஜனையாகும். இது வேதிகைகட்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம். ஆனவே 33,332 172/183 + 66,665 161/183 x5 + 33,332 172/183 + 48/61 x 6 = 4,00,000 ஆகும்.

அவன் இருப்பிடம் முன் சொன்ன பாகப்படியில் நூற்று நாற்பத்து நாலு[1] பாக மாகும்.

அதனுக்கப்பால், அறுபத்தாறாயிரத்து அறுநூற்று அறுபத்தைந்து யோஜனையும் முன்சொன்ன படியில் நூற்றறுபத்தொரு பாகமும் சென்ற விடத்து ஒரு ஸூர்யன் ஆகும். அவன் இருப்பிடமும் முன் சொன்னபடி யாகும். இவ்வண்ணம் மேலும் மேலும் நாலு அந்தரமும் நாலு ஸூயன் இருப்பிடமும் சென்றவிடத்து, முப்பத்துமூவாயிரத்து முன்னூற்று முப்பத்திரண்டு யோஜனையும் நூற்றெழுபத்திரண்டு பாகமும் சென்றவிடத்து தாதகீஷண்ட த்வீபத்துக்கு அந்த்யம் ஆகும்.

இவ்வண்ணம் ஏழு அந்தரமும் ஆறு சூர்யன் இருப்பிடமும் கூட முன் சொன்னபடி நாலு லக்ஷம் யோஜனை சரியாகும்.

காளோதக கடல் சூரியர்கள்:அதனுக்கு அப்பால், காளோதக ஸமுத்திரத்தில் சரிக்கிற ஸூர்யர் நாற்பத்திரண்டு; பாதி இருபத்தொன்றுக்கு இருப்பிடம், அந்தரம் சொல்லுதும்:

தாதகீஷண்ட த்வீப பாஹ்யத்துக்கு அப்பால், பத்தொன் பதினாயிரத்து நாற்பத்தேழு யோஜனையும் ஒரு யோஜனையை ஆயிரத்து இருநூற்றெண்பத்தொரு பாகம் பண்ணினதில இருநூற்றென்பத்தொன்பது பாகம் சென்ற இடத்து ஒரு ஸூர்யன் ஆகும். அவன் இருப்பிடம் ஆயிரத்தெட்டு பாகமாகும். அதனக்கப்பால், முப்பத்தெண்ணாயிரத்துத் தொண்ணூற்று நாலு யோஜனையும் ஐந்நூற்யெழுபத்தெட்டு பாகமும் சென்றவிடத்து ஒரு ஸூர்யன் ஆகும். அவன் இருப்பிடம் முன் சொன்னபடி ஆகும். அதனுக்கப்பால்,

---

அடிக்குறிப்பு: ஆயிரத்து எட்டு பாகமாகும் - இது இருபத்தொரு சூரியர்கள் இருப்பிடம் (1008 / 61) ஆகும். ; இங்கே நாற்பத்து எட்டு பாகமாகும் என்று இருத்தல் வேண்டும். ஒவ்வொரு சூரியனுடைய இருப்பிடமும் 48 / 61 யோஜனை ஆகும். காளோதக கடல் விஸ்தாரம் 8 லஷம். இங்கே உள்ள மொத்த சூரியன்கள் 42. ஒரு திசையில் இருப்பன 21. சூரியன் விஸ்தாரம் 48/61 யோ. 21 சூரியன்களுக்கும் 21X48/61 1008/61 (அ) 16 32/61 யோ. இதனைக் கழிக்க (800000 - 16 32/61) 799983 29/61 யோ ஆகும். இது 21 சூரியன்களுக்கும் இருபக்க வேதிகைக்கும் சூரியனுக்கும் அதாவது மொத்தம் 22 இடைவெளிக்கு இடையே உள்ள தூரம். இதனை உடல் வகுக்க (799983 29/61 - 21) 38094 578/1281 யோ. ஆகம். இது சூரியர்களுக்கு இடையே உள்ள ஆகும். இதனை 2ல் வகுக்க (38094 578/1281 -2) 19047 289/1281 யோ.ஆகும். இது வேதிகைக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம். ஆகவே 19047 289/1281+38094 578/1281X20+19047 289/1281 +48/61 x 21= 800000 ஆகும்.

இவ்வண்ணமே க்ரமத்தால் பத்தொன்பது அந்தரமும் பத்தொன்பது ஸூர்யன் இருப்பிடமும் சென்ற விடத்துப் பத்தொன்பதினாயிரத்து நாற்பத்தேழு யோஜனையும் இரு நூற்றெண்பத்தொன்பது பாகமும் சென்றவிடத்து காளோதக ஸமுத்ரம் அந்த்யமும் ஆகும். ஆக இருபத்திரண்டு அந்தரமும் இருபத்தொரு ஸூர்யன் இருப்பிடமும் கூட முன்சொன்னபடி எட்டு லக்ஷம் சரியாகும்.

புஷ்கரவர பாதி தீவு சூரியர்கள்:

அதனுக்கு அப்பால், புஷ்கரவர த்வீபத்தில் சரிக்கிற ஸூர்யர் எழுபத்திரண்டுக்குப் பாதி முப்பத்தாறு இருக்கிற க்ஷேத்ராந்தரம் சொல்லுதும்:

காளோதக ஸமுத்ரம் அந்த்யத்துக்கு அப்ப பதினோறாயிரத்து ஒருநூற்றொருபது யோஜனையும் ஒரு யோஜனை இரண்டாயிரத்து ஒருநூற்றுத் தொண்ணூற்றாறு பாகம் பண்ணினதில் ஆயிரத்தைந்நூற்றெழுபத்தாறு பாகம் சென்றவிடத்து ஒரு ஸூர்யன் ஆகும். அவன் இருப்பிடம் ஆயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு பாகம் ஆகும். அதனுக்கப்பால், இருபத்திராயிரத்து இருநூற்று இருபத்தொரு யோஜனையும் முன் சொன்ன பாகப்படியில் தொளாயிரத்தைம்பத்தாறு பாகம் சென்றவிடத்து ஒரு ஸூர்யன் ஆகும். அவன் இருப்பிடம் முன் சொன்ன பாகப்படி ஆகும். அதனுக்கப்பால், இவ்வண்ணம் க்ரமத்தால் முப்பத்து நாலு அந்தரமும் முப்பத்து நாலு ஸூர்யன் இருப்பிடமும்

அடிக்குறிப்பு: புஷ்கரவர த்வீபத்தில்-புஷ்கரவர அர்த்த த்வீபத்தில் என்று கருத்துக் கொள்ள வேண்டும்; மாநுஷோத்தர மலைக்கு உட்பட்ட பகுதி இது. ஆயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு பாகம்-இது 36 சூரியன்கள் இருப்பிடம் *(1728/61)* ஆகும். ஒவ்வொரு சூரியனுடைய இருப்பிடமும் *48/61* யோஜனை ஆகும்.

புஷ்கரவர தீவின் விஸ்தாரம் *16*லக்ஷம். அதில் பாதி *8*லக்ஷம். அப்பாதியில் உள்ள மொத்த சூரியன்கள் *72* ஆகும். ஒரு திசையில் இருப்பன *36*. சூரியன் விஸ்தாரம் *48/61* யோ. *36* சூரியன்களுக்கும் *(36 48/61) 1728/61* (அல்) *28 20/61* யோ. இதனைக் கழிக்க *(800000–28 20/61) 799971 41/61* யோ. ஆகும். இது *36* சூரியன்களுக்கும் இருபக்க எல்லைக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம். இதனை *36*-ல் வகுக்க *(799971 41/61/ 36) 22,221 239/549* யோ.ஆகும். இது வேதிகைக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம். ஆகவே, *1110 394/549* *22,221 239/549*x *35*+ *1110 394/549*+ 48/61x 36 = 800000000 யோஜனை ஆகும்.

சென்ற பிறகு பதினோராயிரத்து ஒரு நூற்றொருபது யோஜனையும் ஆயிரத்தைந்நூற்று எழுபத்தாறு பாகம் சென்றவிடத்து மாநுஷோத்ர பர்வதம் அந்த்ய மாகும். ஆக, முப்பத்தேழு அந்தரமும் முப்பத்தாறு ஸூர்யன் இருப்பிடமும் கூட எட்டு லக்ஷம் சரியாகும்.

இவ்வண்ணம் ஆதித்ய ஆதித்யனுக்கும், மேரு, வேதிகைகளுக்கும் ஆதித்யனுக்கும் அந்தரம் சொல்லப்பட்டது.

சந்திர, சூரியர் இயக்க வேகம்:

இந்த பரிதி விஷயங்கள் எல்லாத்திலும் சந்த்ர, ஸூர்ய கமன காலம் பாஹ்யத்து சீக்ர கதியும், அப்யந்தரத்து மந்த கதியும் ஆகையினால் ஸமான மாகும். அதெவ்வண்ணம் எனில், அப்யந்தரத்து ஆனை போலவும், மத்யத்துக் குதிரை போலவும், பாஹ்யத்து ஸிம்ஹம் போலவும் கதிகளாகையினால் ஸமான மாகும்.

வீதிகள்:

க்ரஹங்களுக்கு வீதிகள் பல வாகும்.

இவ்வண்ணம் சந்த்ர, ஆதித்ய க்ரஹங்களுக்கு ஆகும். ஒழிந்த நக்ஷத்ரங்களுக்கும் தாரகைகளுக்கும் ஒவ்வொன்றே வீதியாகும்.

அடிக்குறிப்பு: கமன காலம்-செல்லும் காலம்; வீதிகளின் சுற்றளவில் வேறுபாடு இருந்தாலும் சூரியன் செல்லும் வேகத்தில் வேறுபாடு இருப்பதால் ஒவ்வொரு வீதியைக் கடக்க கால வேறுபாடு தோன்றுவதில்லை; இதனையே ஸமான மாகும் என்றார். வீதி-செல்லும் பாதை; அதிலும்-அதனைக் காட்டிலும்; ஸர்வ அப்யந்தர வீதி-உள் முதல் வீதி; சிராவண-ஆவணி; ஆவணியில் உள் முதல் வீதியில் சூரியன் இருக்கும் போது பகல் நேரம் 18 முகூர்த்தம்; இரவு 12 முகூர்த்தம். அடுத்த வீதிக்குச் செல்லும் போது பகல் (18-2/61)17 59/61ம் இரவு 12ம் ஆகும். இது போன்று பகல் நேரம் குறைந்து இரவு கூடிப் போகி பகல் 12ம் இரவு 18ம் முகூர்த்தம் ஆகும் போது சூரியன் மாக மாதத்தில் கடைசி வீதியில் இருக்கும். மொத்த வீதி 184. நேர வேறுபாடு (18-12)6 முகூர்த்தம். 183 இடைவெளி கடக்க 6 முகூர்த்தம் என்றால் ஒரு இடைவெளிக்கு கடக்க 6/183 2/61 முகூர்த்தம் ஆகும். இதுவே நாள் தோறும் காணப்படும் கால வேறுபாடு.

இயக்க வேக வேறுபாடு:

எல்லாத்திலும் சந்த்ர கதி மந்தம். அதிலும் ஸூர்ய கதி சீக்ரம்; அதிலும் க்ரஹங்கள் கதி சீக்ரம்; அதிலும் நக்ஷத்ர கதி சீக்ரம்; அதிலும் தாரகைகள் கதி சீக்ரங்கள் ஆகும்.

நாள் அளவு:

ஆதித்ய திசையினால் தின, ராத்ரி யாகும்.

அவற்றின் ப்ரமாணம்:

கர்கட ராசியில் ச்ராவண மாஸத்து ஸர்வ அப்யந்தர வீதியில் ஆதித்ய நிலையாகும். அப்பொழுது தினம் பதினெட்டு முஹூர்த்தமும் ராத்ரி பன்னிரண்டு முஹூர்த்தமும் ஆகும். தினம் ப்ரதி முஹூர்த்தத்து அறுபத்தொரு பாகத்தில் இரண்டு இரண்டு பாகம் ராத்ரி பெருகிச் சென்று மகர ராசியிலும் மாக மாஸத்திலும் ஸர்வ பாஹ்ய வீதியில் ஆதித்ய நிலையாகும். அப்பொழுது ராத்ரி பதினெட்டு முஹூர்த்தமும் பகல் பன்னிரண்டு முஹூர்த்தமும் ஆகும்.

பகல் இரவு காலம்:

மற்றும் அப்யந்தர, மத்யம, பாஹ்ய வீதிகள் ஜலஷஷ்ட பாகத்து பரிதிகளில் தொடங்கி ஆதித்யன் இருந்த மாஸத்து முஹூர்த்தம் அறுபதினால் மேரு முலம் தொடங்கி மாநுஷோத்தரம்

அடிக்குறிப்பு: அப்யந்தரம் - உள் வீதி; ஜம்பு தீவு 100000 யோ. இதில் வீதிகள் பகுதி (சார க்ஷேத்ரம்) (180X 2) 360யோ. இதனை கழிக்க (100000- 360) 99640 யோ; உள்வீதியின் விஸ்தாரம். இதற்கு பரிதி 315083 யோஜனை. மத்யம - நடு; சார க்ஷேத்ரம் 510; பாதி 255; 180ஐ கழிக்க (255 - 180) 75யோ; இரண்டு பக்கமும் 75 X 2 (150); இதனுடன் 1லக்ஷம் கூட்ட 100150யோ. நடு வீதி விஸ்தாரம்; இதன் பரிதி 316702 யோ; பாஹ்ய வீதி - கடைசி வீதி; லவண கடலில் சார க்ஷேத்ரம் 330X 2 660. இத்துடன் 1லக்ஷம் கூட்ட 100660யோ. விஸ்தாரம்; இதன் பரிதி 318314 யோ. ஜல ஷஷ்ட பாகம் - நீரின் ஆறு பாகத்தில் ஒன்று; லவண கடல் 2 லக்ஷம் யோ. விஸ்தாரம்; அதில் 6ல் ஒரு பாகம் 200000 /6 33333 1/3 யோ; இரண்டு பக்கமும் கூட்ட 66666 2/3; இதன் விஸ்தாரம் 100000 + 66666 2/3) 166662/3 இதன் பரிதி 527046யோ; மேரு 100000 யோ: விஸ்தாரம்: இதன் பரிதி31622யோ, இப்பரிதிகளை 60ல் வகுத்து அந்த அந்த மாத நாள் மற்றும் இரவின் நாழிகைகளால் (18,17,16,15,14,13,12) பெருக்க முறையே வெளிச்சம் மற்றும் இருள்படும் அளவு வரும். முகூர்த்தம் அறு பதினால் என்ற பகுதிக்கு மேல் கருத்துத் தொடர்பு இல்லை; ஆய வேண்டும்.

அளவும் சுற்றி இருந்த ஆகாஸத்தை ஒரு லக்ஷத்து ஒன்பதினாயிரத்து எண்ணூறு பாகம் பண்ணி மேருவினை ப்ரதக்ஷிணத்தினால் வளைத்திருந்து ஐம்பத்தாறு நக்ஷத்ரங்களுக்கும் இத்தனை இத்தனை என்பதனைச் சொல்லுகின்றார்.

ககன கண்டங்கள்:

அபிஜித்துக்கு அறுநூற்று முப்பது (630), சதபிஷ, பரணி, ஆத்ரை, ஸ்வாதி, ஆக்யேஷை, ஜ்யேஷ்டை, என்னும் ஜகன்ய நக்ஷத்ரம் ஆறினுக்கும் ப்ரத்யேகம் ப்ரத்யேகம் பஞ்சாதிக ஸஹஸ்ர மாகும் (1005).

அஸ்வனி, கார்த்திகை, ம்ருகசீர்ஷம், புஷ்யம், மகம், பூரம், ஹஸ்தம், சித்திரை, அநுராதம், மூலம், பூர்வாஷட, ச்ரவண, கனிஷ்டம், பூர்வாபாத்ரபத, ரேவதி என மத்யம நக்ஷத்ரங்கள் பதினைந்துக்கும் தஸாதிக[1] த்வி ஸஹஸ்ர மாகும் (2010).

ரோஹினி, விசாக, பூனர்வஸு, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, என உத்க்ருஷ்டங்கள் ஆறுக்கும் ப்ரத்யேகம் பஞ்ச தஸாதிக த்ரி ஸஹஸ்ரம் (3015). ஆக திக் பாகத்து ககன கண்டங்கள் ஒரு லக்ஷத்து ஒன்பதினாயிரத்து எண்ணூறு (109800).

அடிக்குறிப்பு: ககன கண்டங்கள்- பரிதி வடிவ ஆகாய பகுதிகள் 109800 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டவை. அறுபத்தேழு கண்டமும் - 1835 - 1768 = 67; ஐந்து கண்டம் -1835-1830 =5 ராஹு-1835-1829 11/12 = 5 1/12. ஒரு முகூர்த்தத்தில் சந்திரன் 1768 கண்டங்களையும் நக்ஷத்ரம் 1835 கண்டங்களையும் கடக்கும் என்றால் சந்திரன் 67 கண்டங்களில் பின்தங்கியுள்ளான். சந்திரன் அபிஜித் நக்ஷத்திரத்துக்கு மேலே உள்ளான்; அபிஜித் நக்ஷத்திரத்திற்கு 630 கண்டங்கள். 67 கண்டத்தைவிட ஒரு முகூர்த்தம் என்றால் 630 கண்டத்தையும் விட 9 27/67 முகூர்த்தமாகும். அதாவது இத்தனை நேரம் சந்திரன் அபிஜித் நக்ஷத்திரத்துடன் நெருங்கி இருப்பான் இதனை நக்ஷத்ர புக்தி என்றும் நக்ஷத்ர யோகம் என்றும் குறிப்பர். இதே போன்று சூரியனுக்குக் கணக்கிட்டால் 630/5 x 30) 4 நாள் 6 முகூர்த்தம் யோக காலம் கிடைக்கும். இதே போன்று ராஹுவுக்கும் கணக்கிட (630 x 12/61 x30) 4 8/61 யோக நாளாகும். இதனையே அதிகம் —— முகூர்த்தங்கள் ஆகும்' என்ற பகுதியில் கூறுகிறார்.

ஜகன்ய, மத்யம, உத்க்ருஷ்ட நக்ஷத்திரங்களோடும் இப்படிக் கணக்கிடலாம்.

பாவே: 1 ப்ரத்யேகம் தசாதிக

ககன கண்டங்களை கடத்தல்:

இவை தன்தான் முஹுர்த்த கதியில் ககன கண்டங்களை பாகங்கொண்டு பரிதியில் செல்லும் முஹுர்த்தம் அறியப்படும். அது எங்ஙனம் எனில், சந்த்ரன் ஒரு முஹுர்த்தத்து ஆயிரத்து எழுநூற்று அறுபத்தெட்டு ககன கண்டம் செல்லுவன் *(1768)*; ஆதித்யன் ஆயிரத்து எண்ணூற்று முப்பது பாகம் செல்லுவன் *(1830)*; நக்ஷத்ரங்கள் ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தைந்து பாகம் செல்லுவன் *(1835)*; இவ்வண்ணம் ராஹு *1829* பாகமும் ஒரு பாகம் பன்னிரண்டில் பதினொன்றில் செல்லுவான் *(11/12)*

கடக்கும் கால பேதம்:

நக்ஷத்ரங்களைய் பற்ற சந்த்ரன் ஒரு முஹுர்த்தத்துக்கு அறுபத்தேழு கண்டமும், ஆதித்யன் ஐந்து கண்டமும் குறைய செல்வர் ராஹு த்வாதஸ பாக அதிகமான ஐந்து பாகம் செல்லும்.

யோக காலம்:

அதிகம் செல்லும் பாகங்களை அபிஜித் ஆதிகளின் நபோ பாகங்களை பாகித்தால் அபிஜித் ஆதி நக்ஷத்ரங்களுடன் சந்த்ர ஆதித்ய ராஹுக்கள் இருந்த முஹுர்த்தங்கள் ஆகும்.

அது எத்தனை எனில், சந்திரன் அபிஜையுள் இருக்கும் காலம் முஹுர்த்தத்தினை அறுபத்தேழு பாகம் பண்ணி அதில் இருபத்தேழு பாகம் அதிகமான ஒன்பது முஹுர்த்த மாகும்.

ஜகன்ய நக்ஷத்ரங்களுள் பதினைந்து முகூர்த்தம் மத்யம நக்ஷத்ரங்களுள் முப்பது முகூர்த்தம், உத்க்ருஷ்ட நக்ஷத்ரங்களுள் நாற்பத்தைந்து முஹுர்த்தம் ஆகும்.

அடிக்குறிப்பு : திவஸங்கள்- நாள்கள்; உத்தராயனம்-வடக்கு ஆறு திங்கள்; தக்ஷிணாயனம் - தெற்கு ஆறு திங்கள்; ஸம்வத்ஸரம் - ஆண்டு; க்ருஷ்ண பக்ஷம் - தேய் பிறை; *183* உத்தராய்ண திவஸங்கள் - உத்தராயனத்தில் முதலில் அபிஜை *(21/5)* அடுத்து ச்ரவண *(67/5)* கணிஷ்ட *(67/5)*, சதபிஷா *(67/10)*, பூர்வா பாத்ரபத *(67/5)*, உத்தராபாத்ரபத *(201/10)*, ரேவதி *(67/5)*, அச்வினி *(67/5)*, பரணி*(67/10)* கிருத்திகை *67/5*, ரோஹிணி *201 /10*, மிருகசீரிஷம் *(67/5)*, ஆதிரை *(67/10)*, புனர்வசு *(201/10)*, புஷ்ய *(23/5)*. இந்த யோக காலங்களை கூட்ட *183* நாளாகும். $(21/5 + 67/10 \times 3 + 67/5 \times 7 + 201/10 \times 3 + 23/5)$

ஆதித்யன் இருக்கும் காலம் அபிஜையுள் நாலு திவஸமும் ஆறு முஹூர்த்தமும்; ஜகன்ய நக்ஷத்ரங்களுள் இருபத்தொரு முஹூரத்தம் அதிகமான ஆறு திவஸம்; மத்யமங்களுள் பன்னிரண்டு முஹூர்த்தம் அதிகமான பதின்மூன்று திவஸம்; உத்க்ருஷ்டங்களுள் மூன்று முஹூர்த்தம் அதிகமான இருபது திவஸம்.

இவ் வண்ணம் அபிஜித் ஆதியாக நூற்று எண்பத்து மூன்று உத்தராயண திவஸங்கள்; அவ்வண்ணமாகிய தக்ஷிணாயன திவஸங்கள்; இவ் விரண்டும் கூடினது ஒரு ஸம்வத்ஸரம். ஸம்வத்ஸரம் பஞ்சகம் (5) யுகம் என்பதாகும்.

ச்ராவண மாஸத்து க்ருஷ்ண பக்ஷ ப்ரதமையில் அபிஜித் நக்ஷத்ரத்து சந்த்ரன் இருக்கையில் யுக ப்ராரம்பமாகும். ஆஷாட மாஸ பூர்ணமையில் யுக நிர்வர்த்தன மாகும். மற்றும் ஆதித்யனுக்கு தாப ஸ்வரூபம் சொல்லுதும்;

ஆதித்யன் அப்யந்தர ப்ரதம வீதியுள் நிற்கையில் உத்தர தாபம் நாற்பத்தொன்பதினாயிரத்து எண்ணூற்று இருபது யோஜனை யாகும்.

தக்ஷிண தாபதம் முப்பத்து மூவாயிரத்து ஐந்நூற்றொருபத்து மூன்று யோஜனையும் ஒரு யோஜனையில் மூன்றத்தொரு பாகமும் ஆகும்.

பூர்வ தாபம் நாறபத்தேழாயிரத்து இருநூற்றறுபத்து மூன்று யோஜனையும் ஒரு யோஜனை இருபது பாகம் பண்ணினதில் ஏழு பாகமும் ஆகும். பச்சிம தாபம் இவ் வண்ணம் ஆகும்.

அடிக்குறிப்பு: தாபம்-ஒளி; ஜம்பூ தீவின் விஸ்தாரம் 1லக்ஷம் யோஜனை. அதில் பாதி 50000யோ. இதில் சார க்ஷேத்ர அளவைக் கழிக்க (50000-180) 49820 யோ. மீதி. மேருவின் நடுவிலிருந்து உள் வீதி வரை வடக்கு திசையில் 49820 யோ. ஒளி பரவுகிறது. லவண கடல் விஸ்தாரம் 2லக்ஷம் யோ. இதன் 6 பாகம் (200000/6) 33333 1/3 இதோடு தீவின் சார க்ஷேத்ரம் கூட (33333 1/3+180) 33513 1/3 யோ. ஆகும். உள் வீதி தொடங்கி லவணகடலில் ஆறாம் பாகம் வரை 33513 1/3 யோ. தூரம் தெற்கே சூரிய ஒளிபரவுகிறது; இது போல மற்ற வீதிகளுக்கும் கணக்கிடலாம். அதன்தாபம்-இருபக்க ஒளி; 800யோ. கீழே சித்ரா பூமி; சித்ரா பூமியின் உயரம் 1000யோ. எனவே 1800யோ. உபரிம-மேல்.

அதஸ்தாபம் ஆயிரத்தெண்ணூறு யோஜனை ஆகும். உபரிம தாபம் நூறு யோஜனை யாகும். அதஸ் தாபம் ஆயிரத்தெண்ணூறு யோஜனை எங்ஙனம் எனில், சித்ர பூமியுள்ளளவும் என்று அறிவது.

நக்ஷத்திரங்கள் பெயர்:

நக்ஷத்ரங்களுக்கு நாமங்கள் சொல்லுதும்:

கார்த்திகை, ரோஹினி, ம்ருகசீர்ஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, விசாகம், அநுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், அபிஜித், திருவோணம், அவிட்டம், சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, அசுவனி, பரணி, ஆக இருபத்தெட்டாகும்.

அதிதேவதைகளின் பெயர்:

இந்த நஷ்த்ரங்களுக்கு அதிதேவதையும் க்ரமத்தினால் சொல்லுதும்: அக்நி, ப்ரஜாபதி, ஸோமோ, ருத்ர; அதிதி:, தேவமந்த்ரி, ஸர்பச்ச, பிதா, பஹ॰; அர்யமா, தினகர: த்வஷ்டா, அனில:, இந்த்ராக்நி, மித்ர:, இந்த்ர: நைருதி:, ஜலோ, விச்வோ, ப்ரம்ஹா, விஷ்ணு:, வஸ॰:, வருண; அஜ, அபிப்ருத்தி, பூஷா, அச்வ:, யம: ஆக இருபத்தெட்டும் நக்ஷத்ரங்களுக்கு அதிதேவதைகளாகும்.

நக்ஷத்திரங்களின் நிலைகள்:

இப்பால், நக்ஷத்ரங்கள் நடக்கிறதில் ஸ்தான விசேஷம் சொல்லுதும்:

கார்த்திகை நக்ஷத்ரம் அஸ்தமய வேளையில் எட்டாம் நஷத்ரம், மகம் மத்யத்தில் உச்சியும், பதினைந்தாம் நக்ஷத்ரம் அனுராதை உதயம் ஆகும். இவ் வண்ணம் சேஷ ரோஹிணி நக்ஷத்ரம்

அடிக்குறிப்பு: சேஷ ரோஹிணி - மீந்த ரோஹிணி முதலானவை: ரோஹிணி மறையும்போது பூரம் நடு உச்சியும் கேட்டை உதயமும் அடையும் மிருக சீரம் மறையும்போது உத்திராபால்குணி நடு உச்சியும் முலம் உதயமும் அடையும்; திருவாதிரை மறையும் போது ஹஸ்தம் நடு உச்சியும் பூராடம் உதயமும் அடையும்; புனர்வசு மறையும் போது சித்திரா நடு உச்சியும் உத்தராடம் உதயமும் அடையும். இது போல அறிந்து கொள்க.

முதலானதுகளுக்கும் எட்டாம் எட்டாம் நக்ஷத்ரம் உச்சமும் பதினைந்தாம் நக்ஷத்ரம் உதயமும் என்று அறிக.

சந்த்ரனுடைய பதினைந்து வீதியில் எந்த எந்த வீதியில் எந்த எந்த நஷத்ரங்கள் என்பதனைத் சொல்லுதல்: அபிஜித், ச்ரவணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி அசுவனி, பரணி, பூரம், உத்திரம், ஸ்வாதி, ஆக பன்னிரண்டும் சந்த்ரனுடைய ப்ரதம விதியிலே சந்த்ரனுக்கு மேலே நாலு யோஜனை மேலாக கமன மாகும். மூன்றாம் வீதியில் மகம், புனர்பூசம் இரண்டும் கமன மாகும். ஏழாம் விதியில் ரோஹிணி, சித்திரை இரண்டும் கமன மாகும்.

ஆறாம் வீதியில் கார்த்திகை,

எட்டாம் வீதியில் விசாகம்,

பத்தாம் வீதியில் அநுஷம்,

பதினோராம் வீதியில் கேட்டையும் கமனமாகும்.

பதினைந்தாம் வீதியில் ஹஸ்தம், மூலம் பூராடம்,

உத்திராடம், ம்ருகசீர்ஷம், திருவாதிரை, பூசம் ஆயில்யம்.

இவ்வண்ணம் எட்டு வீதியில் இருபத்தெட்டு நக்ஷத்ரத்துக்கும் கமனம். மற்ற ஏழு வீதியும் ஸூன்யம் என்று அறிக.

நக்ஷத்திரங்களுக்குரிய தாரகைகள்

நக்ஷத்ரங்களுக்கு இன்ன நக்ஷத்ரங்களுக்கு இத்தனை தாரகை என்கிறதைச் சொல்லுதும்:

கார்த்திகை ஆறுக்கும் ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு தாரகை யாகும் (6666); ரோஹிணி ஐந்துக்கும் ஐயாயிரத்து ஐஞ்ஞூற்று ஐம்பத்தைந்து (5555); ம்ருக சீர்ஷடம் மூன்றுக்கும் மூவாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று(3333); திருவாதிரை ஒன்றுக்கும் ஆயிரத்தொரு நூற்றொருபத்தொன்று(1111); புனர்பூசம் ஆறுக்கும் ஆறாயிரத்து அறநூற்று அறுபத்தாறு(6666); பூசம் மூன்றுக்கும்

அடிக்குறிப்பு: தாரகை-தாரகையின் எண்ணிக்கையும் ஒவ்வொரு தாரகைக்கும் ஏ விதம் பரிவார தாரகைகள் எண்ணிக்கையும் இங்கே தரப்பட்டுள்ளன.

மூவாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று(3333); ஆயில்யம் ஆறுக்கும் ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு(6666); மகம் நாலுக்கும் நாலாயிரத்து நானூற்றா நாற்பத்து நாலு(4444); பூரம் இரண்டுக்கும் இரண்டாயிரத்து இருநூற்று இருபத்திரண்டு(2222); உத்திரம் இரண்டுக்கும் இரண்டாயிரத்து இருநூற்று இருபத்திரண்டு(2222); ஹஸ்தம் ஐந்துக்கும் ஐயாயிரத்து ஐஞ்ஞூற்று ஐம்பத்தைந்து(5555); சித்திரை ஒன்றுக்கும் ஆயிரத்து ஒருநூற்று ஒருபத்தொன்று(1111); ஸ்வாதிக்கும் அவ்வண்ணமே(1111); விசாகம் நாலுக்கும் நாலாயிரத்து நாநூற்று நாற்பத்துநாலு(4444); அனுராதா ஆறுக்கும் ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு(6666); கேட்டை மூன்றுக்கும் மூவாயிரத்து முன்னூற்று முப்பத்து மூன்று(3333); மூலம் ஒன்பதுக்கும் ஒன்பதினாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது(9999); பூராடம் நாலுக்கும் நாலாயிரத்து நாநூற்று நாற்பத்து நாலு(4444); உத்திராடத்துக்கும் அப்படியயே(4444); அபிஜித் மூன்றுக்கும் மூவாயிரத்து முந்நூற்று மூப்பத்து மூன்று(3333); திருவோணமும் அப்படியே(3333); அவிட்டம் ஐந்துக்கும் ஐயாயிரத்து ஐஞ்ஞாற்று ஐம்பத்தைந்து(5555); சதையம் நூற்றொருபத்தொன்றுக்கும் ஒரு லக்ஷத்து இருபத்து மூவாயிரத்து மூந்நூற்றிருபத்தொன்று(1,23,321); பூரட்டாதி இரண்டுக்கும் இரண்டாயிரத்து இருநூற்று இருபத்திரண்டு (2222); உத்திரட்டாதியும் அப்படியே(2222); ரேவதி முப்பத்திரண்டுக்கும் முப்பத்தையாயிரத்து ஐஞ்ஞூற்று ஐம்பத்திரண்டு (35,552); அசுவனி ஐந்துக்கும் ஐயாயிரத்து ஐஞ்ஞூற்று ஐம்பத்திஐந்து(5555); பரணி மூன்றுக்கும் மூவாயிரத்து முந்நாற்று முப்பத்து மூன்று(3333);

இவர்களுக்கு எல்லாம், நக்ஷத்ரங்களுக்குத் தாரா ஸேனை யாகும். ஆக, நக்ஷத்ரம் இருநூற்று நாற்பத்தொன்று(241) இவர்களுக்கு ஸேனா தாரகை இரண்டு லக்ஷத்து அறுபத்தேழாயிரத்து எழுநூற்று அறுபத்தொன்று (2,67,761). ஆக நக்ஷத்ரம் கூட இரண்டு லக்ஷத்து அறுபத்தேழாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றிரண்டு (2,67,992)

அடிக்குறிப்பு: 267761-இது 2,67,751 என்று இருத்தல் வேண்டும்; 1111 x 241 = 2,67,7.. இதனுடன் 241 ஐக் கூட்ட 2,67,992 ஆகும். வண்டில்-சக்கரம்; சத்ரம்-குடை; புத்தை-புற்று; பாணம்-அம்பு;

நக்ஷத்திரங்களின் தோற்றம்:

நக்ஷத்ரங்களுடைய ஆகார ஸ்வருபம் சொல்லுதும்: கார்த்திகை ஆறும் விசிறி போல; ரோஹிணி ஐந்தும் கல்லேறின வண்டியைப்போல ம்ருகசீர்ஷம் மூன்றும் தீபத்தைப் போல; திருவாதிரை ஒன்றும் தோரணத்தைப் போல; புனர்பூசம் ஆறும் சத்ரம் போல; பூசம் மூன்றும் புத்தைப் போல; ஆயிலியம் மூன்றும் கோமூத்தரத்தைப் போல; மகம் நாலும் பாணத்தைப் போல; பூரம் இரண்டும் நுகத்தடிப் போல; உத்திரம் இரண்டும் கையைப் போல; ஹஸ்தம் ஐந்தும் நெய்தல் பூவைப் போல; சித்திரை ஒன்றும் தீபம் போல; ஸ்வாதி ஒன்றும் கம்மாளர் அடைக்கல்லைப் போல, விசாகம் நாலும் முத்துமாலையைப் போல; அநுஷம் ஆறும் தம்புரு போல, கேட்டை மூன்றும் மான் கொம்பு போல, மூலம் ஒன்பதும் தேளைப் போல; பூராடம் நாலும் பழங்கிணறு போல; உத்திராடம் நாலும் ஸிம்ஹ கும்பத்தைப் போல; அபிஜித் மூன்றும் ஆனைக்[1] கும்பத்தைப் போல; திருவோனம் மூன்றும் மத்தளம் போல; அவிட்டம் ஐந்தும் பக்ஷி போல; சதயம் நூற்றொருபத்தொன்றும் ஸேனையைப் போல; பூரட்டாதி இரண்டும் ஆனை முகம் போல, உத்திரட்டாதி இரண்டும் ஆனை பின் பாகம் போல; ரேவதி முப்பத்திரன்டும் ஓடம் போல;[2] அசுவனி ஐந்தும் குதிரை முகம் போல; பரணி மூன்றும் அடுப்புப் போல ஆகும்.

சோதிட தேவர் ஆயுள்:

ஜோதிஷ்கர்களுக்கு ஆயுஷ்ய ப்ரமாணம் சொல்லுதும்:

சந்த்ரனுக்கு ஒரு பல்லமும் லக்ஷம் வர்ஷமும் ஆகும். ஸூர்யனுக்கு ஒரு பல்லமும் ஆயிரம் வர்ஷமும் ஆகும்; சுக்ரனுக்கு ஒரு பல்லமும் நூறு வருஷமும் ஆகும். ப்ருஹஸ்பதிக்கு ஒரு பல்லமும் ஆகும்; புத; அங்காரக, சனி இவர்க்கு அரைப் பல்லம்; தாரகைகளுக்கு உத்க்ருஷ்டம் கால் பல்லம்; ஜகன்யம் அரைக்கால் பல்லம்; மத்யமம் நாநா விதம்.

தன்தான் தேவிகளுக்கு ஆயுஷ்யம் அவர்கள் தேவர்களுடைய ஆயுஷ்யத்திலே பாதி பாதி யாகும்.

தேவியர் எண்ணிக்கை:

ஜ்யோதிஷ்கர்களுக்கு தேவியர் ப்ரமாணம் சொல்லுதும்:

சந்திரனுக்கு பட்ட தேவி சந்த்ராப, ஸுஸிமா, ப்ரபங்கரா, அர்ச்சிமாலினி, என நாலாகும். இவர்களுக்கு விகுர்வணா தேவியரும்

ஒருத்தருக்கு நாலாயிரமாக நாலு பேருக்கும் மூல சரீரம் கூட பதினாறாயிரம் தேவியராகும்.

ஸூர்யனுக்கு த்யுதி:, ஸூர்ய ப்ரபா,-ப்ரபங்கரா, அர்ச்சிமாலிநி, இவர்கள் நாலு பேருக்கும் முன் சொன்னபடி நாலாயிரம் நாலாயிரமாகப் பதினாறாயிரம் ஆரும்(16000).

ஒவ்வொரு தேவியருக்கு மூல சரீரம் தவிர மூவாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது ஆகும்(3999)

ஸர்வ நிக்ருஷ்ட தேவர்களுக்கு தேவியர் முப்பத்திருவர முப்பத்திருவர் ஜகன்யமாகும். மத்யமம் நாநா ப்ரகாரமாகும்.

சோதிட உலகில் பிறப்போர்;

இப்படிப்பட்ட ஜ்யோதிர் லோகத்தில் பிறப்பவர் யாரெனில், சொல்லுதும்:

மித்யாத்ருஷ்டிகளும், சாரித்ர சஞ்சலரும், நிதானம் பண்ணின பேரும், அகாமத்தினின்றும் விஷயத்திலே விரக்தரானவர்களும், அக்நி முதலானத்தினாலே மரித்த பேரும், மந்த கஷாயிகளும் மலினமாயிருக்கப்பட்ட குமதி ஜ்ஞானிகளும், கஷாய இந்த்ரிய நிக்ரஹமான குதிரைகளும், பவன, வ்யந்தர, ஜயோதிஷ்கரும் என்கின்ற மூன்று கதியிலும் பிறப்பவர்கள். மற்றும் ஸம்யக்த்வம் இல்லாமல் அந்த்யத்திலே ஒரு வ்ரதத்தோடே மரித்தவர்களும் முன் சொன்ன பவன த்ரயத்தில் நீச தேவியர் ஆகுவர்.

ஜ்யோதிர் லோக கதனம்

இவ் வண்ணம் ஜ்யோதிர் லோகம் ஸம்க்ஷேபத்தினால் சொல்லப்பட்டது. விஸ்தாரம் சந்த்ரப்ரஜ்ஞப்தி, ஸூர்யப்ரஜ்ஞப்தி முதலான சாஸ்த்ரத்துள் பார்த்துக் கொள்ளவும்.

அகாமநிர்ஜரை: அகாமத்தினின்றும் - தன் இச்சை இல்லாமல் பிற காரணங்களால் பொறுத்துக் கொண்டு அனுபவித்தல்

பாடபேதம் 1 பூரண, 2 மேரும்

6. கல்ப லோகம்

இனி கல்ப லோக ஸ்வரூபம் சொல்லுதும்: வைமானிக தேவர் கல்போபபன்னர், கல்பாதீதர் என த்வீ(2) விதம். இந்த்ர ஸாமாநிகாதி விகல்ப முடையது கல்பம். அதனுள் வஸிப்பர் கல்போபபன்ர். இந்த விகல்பம் இல்லாத இடத்து வஸிப்பர் கல்பாதீதர்.

கல்பங்களின் பெயர்:

அந்த கல்பங்கள் கல்ப அபேக்ஷயினால், ஸௌதர்ம, ஈசான, ஸநத்குமார, மாஹேந்த்ர, ப்ரஹ்ம, ப்ரஹ்மோத்தர, லாந்தவ, காபிஷ்ட, ஸுக்ர, மஹாஸுக்ர, ஸதார, ஸஹஸ்ரார, ஆநத ப்ராணத, ஆரண, அச்யுதம் எனப் பதினாறாகும்.

இந்திரர்கள் பிரிவு:

இந்த்ர அபேக்ஷயினால், பன்னிரண்டாகும். எங்ஙனம் எனில், ஸௌதர்மாதி நான்கிலும் இந்த்ரர் ஒவ்வொருவர், ப்ரஹ்ம, ப்ரஹ்மோத்தர இரண்டுக்கும் ப்ரஹ்மேந்தரன் ஒருவன். லாந்தவ, காபிஷ்டம் என இரண்டுக்கும் லாத்வேந்த்ரன் ஒருவன். சுக்ர மஹா சுக்ர என இரண்டுக்கும் மஹாஸுக்ரேந்த்ரன் ஒருவன். ஸதார, ஸஹஸ்ராரம் என இரண்டுக்கும் ஸஹஸ்ராரேந்த்ரன் ஒருவன். ஆனதாதி நான்கிலும் நால்வர் இந்த்ரர் ஆகும்.

கல்பாதீத பேதங்கள்:

அதன் மேல் கல்பாதீத ஸ்வரூபம் சொல்லுதும்:

மும்மூன்றாக அதோ, மத்யம, ஊர்த்வ பேதமான நவ க்ரைவேயகங்களும், நவாநுதிசையும், பஞ்சானுத்தரமும் என இவை கல்பாதீதங்களாகிய அஹமிந்த்ர நிவாஸங்கள்.

அடிக்குறிப்பு: ஸௌதர்மாதி நான்கு-ஸௌதர்ம, ஈசான, ஸநத்குமார மாஹேந்த்ர கல்பங்கள்; ஆனதாதி நான்கு - ஆனத, பிராணத, ஆரண, அச்யுத கல்பங்கள் இந்த்ரர்களை வைத்துப் பார்க்கும் போது பன்னிரண்டு கல்பங்கள் என்பர்; கல்பங்களை வைத்துப் பார்க்கும் போது பதினாறு கல்பங்கள் என்பர்.

ஒன்பது கிரைவேயகங்கள்:

அது எவ்வண்ணம் எனில், ஹேட்டிம ஹேட்டிம, ஹேட்டிம மத்யம, ஹேட்டிம உபரிம என அதோ க்ரைவேயகம் மூன்று வித மாகும். மத்ய ஹேட்டிம, மத்யம மத்யம, மத்யம உபரிம என மத்யம கிரைவேயகம் மூன்று வித மாகும். உபரிம ஹேட்டிம, உபரிம மத்யம உபரிம உபரிம என உபரிம க்ரை வேயகம் மூன்று வித மாகும். ஆக க்ரைவேயகங்கள் ஒன்பது விதமாகும்.

நவாநுதிசை:

நவாநுதிசை நாலு திக்கிலும் நாலு ச்ரேணி பந்தமும், விதிக்கில் புஷ்ப ப்ரகீர்ண என நாலும், மத்யத்தில் ஆதித்ய விமானமும் என ஒன்பதாகும்.

பஞ்சாணுத்தரம்:

பஞ்சாணுத்தரம் நாலு திக்கிலும் நாலும் நடுவில் ஸர்வார்த்த ஸித்தியும் என ஐந்தாகும்.

தேவ உலக அமைப்பு:

இச் சொல்லப்பட்ட கல்பங்களும் கல்பாதீதங்களும் இருக்கிற ஸ்தான ஸ்வரூபம் சொல்லுதும்:

மந்தர அசலத்து அடியினும் தொடங்கி ஒன்றரை ரஜ்ஜு பர்யந்தம் ஸௌதர்ம - ஈசான கல்பம், அதன்மேல் ஒன்றை ரஜ்ஜு பர்யந்தம் ஸனத்குமார-மஹேந்த்ர கல்பம். அதன் மேல் ஆறு யுகளங்களும் அரை அரை ரஜ்ஜுவாக மூன்று ரஜ்ஜுவும், அதன் மேல் நவ க்ரைவேயகம் அதி விமானங்கள் ஒரு ரஜ்ஜுவில் ஆகும்.

இடைவெளிகள்:

கல்பங்களுக்கும் கல்பாதீதங்களுக்கும் க்ஷேத்ர அந்தரம் தன்தான் கடை இந்த்ரகத்து த்வஜ தண்ட அக்ரம் கல்பாவனிகளுக்கு அந்தம்: கல்பாதீதங்களுக்கு அந்தம் லோகத்து அந்தமாகும்.

விமானங்கள் எண்ணிக்கை:

இச் சொல்லப்பட்ட கல்பாதிகளுள் விமான கணனைகள் சொல்லுதும்:

ஸௌதர்ம கல்பத்து முப்பத்திரண்டு லக்ஷம் (3200000); ஈசான கல்பத்து இருபத்தெட்டு லக்ஷம் (2800000); ஸனத்குமார கல்பத்து

பன்னிரண்டு லக்ஷம் (1200000); மாஹேந்த்ர கல்பத்து எட்டு லக்ஷம் (8,00,000); பிரம்ம யுகளத்து நான்கு லக்ஷம் (400000); லாந்தவ த்வயத்து ஐம்பதினாயிரம் (50,000); ஸுக்ர யுகளத்து நாற்பதினாயிரம் (40,000); ஸதார த்வயத்து ஆறாயிரம் (6000); ஆனதாதி நான்கிலும் எழுநூறு (700); அதோக்ரைவேயகம் மூன்றிலும்நூற்றொருபத்தொன்று (111). மத்யம க்ரைவேயகம் மூன்றிலும் நூற்றி ஏழு (107). உபரிம க்ரைவேயகம் மூன்றிலும் தொண்ணூற்றொரு விமானங்களாகும்.

நவ அநுதிசை விமானங்கள்

அர்ச்சி, அர்ச்சிமாலிநி, வைர, வைரோசன என நான்கும் ச்ரேணிபத்தங்கள் பூர்வாதியாக நாலு திக்கிலும் ஆகும். சோம, ஸோமரூப, அங்க, ஸ்படிக என நான்கும் பிரகீர்ணகங்கள் அக்னியாகி விதிக்கலாம். ஆதித்ய விமானம் மத்யத்தில் இந்த்ரகமாகும். இவைகள் ஒன்பதும் நவாநுதிசை என்னும் பெயராகும். ஃநஏ 7 பஞ்ச அநுத்தரம்

விஜய வைஜயந்த, ஜயந்த, அபராஜித என பூர்வாதியாக நாலு திக்கிலும், மத்யத்தில் ஸர்வார்த்த ஸித்தியில் என ஐந்தும் பஞ்சாநுத்தரம் எனும் பெயராகும்.

இப்பால், ஸௌதர்மாதி கல்பங்களிலும், கல்பாதீதங்களிலும் ப்ரதர ஸங்க்யா ப்ரதிபாதனார்த்தம் இந்த்ரகங்கள் ப்ரமானம் சொல்லுதும்:

ஸௌதர்ம த்வயத்துக்கு முப்பத்தொரு இந்த்ரகங்கள் (31) ஸனத்குமார த்வயத்துக்கு இந்த்ரகங்கள் ஏழு (7) ப்ரம்ஹ யுகளத்துக்கு இந்த்ரகம் நாலு,(4) லாந்தவ த்வ்யத்துக்கு இந்த்ரகங்கள் இரண்டு (2), சுக்ர யுகளத்துக்கு இந்த்ரகம் ஒன்று (1), சதார யுகளத்துக்கு இந்த்ரகம் ஒன்று (1), ஆனதாதி நான்கிலும் இந்த்ரகங்கள் ஆறு (6), நவக்ரைவேயகத்துக்கு இந்த்ரகங்கள் ஒன்பது (9), நவாநுதிசையில் இந்த்ரகம் ஒன்று (1), பஞ்சாநுத்தரத்தில் இந்த்ரகம் ஒன்றுமாக அறுபத்தி மூன்று இந்த்ரகங்கள் ஆகும்

இந்திரகங்களுக்கு இடைவெளி

அந்த இந்த்ரகங்களுக்கு உபரி நடு அந்தரமும் அதுகளுடைய நாமங்களும் சொல்லுதும்.

ஒவ்வொரு இந்திரகத்துக்கு உபரிம உபரிம இந்த்ரகத்துக்கு நடு அந்தராளம் அஸங்க்யாத யோஜனைகள் ஆகும்.

இந்திரகங்கள் பெயர் :

அந்த இந்த்ரகங்களுடைய பெயர்களும் : ருது, விமலம், சந்தரம், வல்கு, வீரம், அருணம், நந்தனம், நளினம், காஞ்சனம், ரோஹிதம், சஞ்சத், மருத், ரூர்திசம், வைடூர்யம், ருசகம், ருசிரம், அங்கம், ஸ்படிகம், தபனீயம், மேகம், அப்ரம், ஹாரித்ரம், பத்மம், லோஹிதம், வஜ்ரம், நந்தயாவர்த்தம், ப்ரபங்கரம், பரஷ்டகம், கஜம், மித்ரம், ப்ரபம் ஆக ஸௌதர்ம ஈசான கல்பத்து முப்பத்தொரு இந்த்ரகங்களுக்கு நாமமாகும்.

அடிக்குறிப்பு : ' நூற்றினோடு ஒருபத்தொன்றாம் மேட்டிம த்ரயத்தின் கண், நூற்றினோடு ஏழுமாகும். மத்திம மும்மையில், தொண்ணூற்றினோடு ஒன்றுமாகும். உபரிம மும்மையின் கண், ஆற்றவும் ஒன்பது ஐந்துமாம் அனுதிசாணுத்தரத்தே' மே.டீ. 1317.

சொர்கம்	விமான எண்ணிக்கை	சொர்கம்	விமான எண்ணிக்கை
1. ஸௌதர்மம்	3200000	ஆனத. ப்ராணதாதி	440 + 260 (o' 400 + 300 =
2. ஈசானம்	2800000	கீழ் க்ரைவேயகம் – 3	111
3. சனத்குமாரம் மாகேந்த்ரம்	1200000 800000	நடு க்ரைவேயகம் – 3	107
4. ப்ரம்ம ப்ரம்மோத்ரம்	200096 + 199904 = 400000	மேல் க்ரைவேயகம் – 3	91
5. லாந்தவ காபிஷ்ட	25042+24958 = 1/2ல.	அனுதிசை	9
6. சுக்ர – மகாசுக்ர	20020 + 199950 = 40000	அனுத்தரம்	5
7. சதார சஹஸ்ரார	3019 + 2981 = 6000	மொத்தம்	84,97,023

அஞ்ஜனம், வனமாலம், நாகம், கருடம், லாங்கவம், பலபத்ரம், சரமேந்த்ரகம் சக்ரம் ஆக ஏழும் ஸநத்குமார மாஹேந்த்ர கல்பத்து இந்த்ரகம் ஏழுக்கும் நாமமாகும்.

அரிஷ்ட, ஸுரஸமதி, ப்ரம்ஹ, ப்ரஹ்மோத்தரம் என நான்கும் ப்ரம்ஹ யுகளத்து இந்த்ரகங்கள் நாலுக்கும் நாமங்கள் ஆகும்.

ப்ரம்ஹ ஹ்ருதயம், லாந்தவம் என இரண்டும் லாந்தவ த்வயத்து இந்த்ரகங்கள் இரண்டுக்கும் நாமங்களாம்.

சுக்ர யுகளத்தில் ஒன்றும் சுக்ரேந்த்ரகம் சதார யுகளத்தில் ஒன்றும் சதார விமானேந்த்ரகம் என்னும் நாமம்.

ஆனத, ப்ராணத, புஷ்பக, ஸாதக, ஹாரண, அச்யுதம் என ஆறும் ஆநதாதி ஆறு இந்த்ரகங்களுக்கு நாமங்களாகும்.

ஸுதர்சனம், அமோகம், ஸுப்ரபத்தம், யசோதரம் ஸுபத்ரம், ஸுவிசாலம், ஸுமநலம், ஸௌமநஸனம், ப்ரதிங்கரம் என ஒன்பதும் நவக்ரைவேயக இந்த்ரங்கள் ஒன்பதுக்கும் நாமங்கள்.

நவாநுதிசை இந்த்ரகம் ஆதித்ய விமானம் என்னும் நாமமாகும். பஞ்சாநுத்தரத்து இந்த்ரகம் ஸர்வார்த்தஸித்தி என்னும் பெயராகும்.

ருது விமானம் உள்ள இடம் :

இச் சொல்லப்பட்ட இந்த்ரகங்கள் இருக்கிற ஸ்தான ஸ்வரூபம் சொல்லுதும்:

முன் சொன்ன மந்தர மஹீதரம் என்னும் மஹீபதிக்கு மகுடம் இருக்கிறார் போல் இருந்த வைடூரிய மய சூளிகை நாற்பது யோஜனை உத்ஸேதம் அடியில் பன்னிரண்டு யோஜனை ஆகும். அகலமும்

அடிக்குறிப்பு : உபரிம உபரிம - மேல், மேல் அந்தராளம் - இடைவெளி ; 'அந்தரத்து அறுபத்து மூன்றதாகிய இந்திரபடலமும்' மே.பு. 91.

மஹீதரம் - மலை; மஹீவதி - அரசன்; குரு - உத்தம போகபூமி; பாலாக்ர - மயிர் நுனி; இந்திரக பிரமாணம் அறிய வாய்பாடு: (4500000 - 100000) / (63 - 1) = 70967 23/31; 4500000 - 70967 23/31 = 4429032 8/31. பார்க்க பக்கம் 7; அட்டவணை 17

மத்யத்தில் எட்டு யோஜனை அகலமும் உபரிம தலத்து நான்கு யோஜனை விஸ்தாரமும் ஆகி அதில் அக்ரத்து குரு பாலாக்ர அந்த்ரம் இடைவிட்டு இருந்தது ருது விமானம்.

ஸர்வார்த்தஸித்தி விமானம் :

ஸித்த க்ஷேத்ரத்துக்கு பன்னிரண்டு யோஜனை அந்தரத்துக் கீழேயிருந்தது சர்வார்த்த சித்தி இந்த்ரகமாகும்.

இந்திரகங்கள் விஸ்தாரம் :

இப்பால் அந்த இந்த்ரகங்களுக்கு விஸ்தாரம் சொல்லுதும்:

மனுஷ்ய க்ஷேத்ர ப்ரமாணம் நாற்பத்தைந்து லட்சம் யோஜனை ருது இந்த்ரகம். ஸர்வார்வ ஸித்தி இந்த்ரகம் ஜம்பு த்வீப ப்ரமாணம் லக்ஷ யோஜனை. அவ்விரண்டினையும் விசேஷித்து ரூபோன இந்த்ரகத்தினால் பாகம் கொண்டு படைத்த லப்தியினை முதலிலிருந்து தொடங்கி கழிக்க சேஷ இந்த்ரகங்களுக்கு ப்ரமாணங்கள் ஆகும்.

அதெவ்வண்ணம் எனில் முன்சொன்ன நாற்பத்தைந்து லக்ஷத்தில் ஒரு லக்ஷம் கழித்து நின்ற நாற்பத்து நாலு லக்ஷத்து முன்சொன்ன அறுபத்து மூன்று படலத்தில் ஒரு படலம் கழித்து நின்ற அறுபத்தி இரண்டில் பாகம் கொள்ளக் கண்ட லப்தம், ஒவ்வொரு படலத்துக்கு, எழுபதிணாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி ஏழு யோஜனையும் ஒரு யோஜனையை 31 பாகம் பண்ணியதில் 23 பாகமும் ஆகும். இதனை முன் சொன்ன ருது இந்த்ரக விஸ்தாரம் 45 லக்ஷத்தில் கழிக்க இரண்டாவது விமான இந்த்ரகத்துக்கு நாற்பத்து நான்கு லக்ஷத்துக்கு இருபத்தொண்பதினாயிரத்து முப்பத்திரண்டு யோஜனையும் ஒரு யோஜனை முப்பத்தொரு பாகத்தில் எட்டு பாகமும் ஆகும்.

இவ்வண்ணம் முன் சொன்னபடி கழித்துப்[1] போக சந்த்ர இந்த்ரகம் முதலாகிய இந்த்ரகங்களுக்கு ப்ரமாணம் அறியலாம் கடைசி ஸர்வார்த்தஸித்திக்கு நின்றது ஒரு லக்ஷ மாகும்.

சேணிபத்தங்கள்:

இப்பால் ச்ரேணிபத்தங்கள் இருக்கிற ஸ்வரூபம் சொல்லுதும்:

பா.வே. 1. கழித்து கழித்துப் போக.

ப்ரதம இந்த்ரகத்து சதுர்திக்கிலும் ச்ரேணிபத்தங்கள் ப்ரத்யேகம் அறுபத்திரண்டாகும். அதன் மேல் உபரி த்விதீய படலாதி படலம் படலம் தோறும் ப்ரதி திக்குக்கு ஓவ்வொன்று குறைந்து போய் நவாநுதிசையில் சதுர் திக்கிலும் ஒவ்வொன்றாகும். அதன்மேல் பஞ்சாநுத்தரத்திலும் திக்குகளில் ஒவ்வொன்றேயாகும்.

சேணிபத்தங்கள் எண்ணிக்கை

அவற்றுள் தக்ஷிண உத்தர இந்த்ர விபாகம் கூடின லக்கம் சொல்லுதும்.

தக்ஷிண இந்த்ரனுக்கு ஆதிபத்யம் கிழக்கும் தெற்கும் மேற்கும் ஆகும். உத்தர இந்த்ரனுக்கு வடக்குத் திக்கு ஒன்றேயாகும். ஒவ்வொரு திக்குக்கும் முப்பத்தொரு படலத்திலும் கண்ட ஸங்க்யை ஆயிரத்து நானூற்று ஐம்பத்தேழாகும் (1457). அதனை ஸௌதர்ம இந்த்ரனுக்கு மூன்று திக்குக்கும் கூட்ட நாலாயிரத்து முந்நூற்று எழுபத்தொன்று (4371) மத்யமத்து இந்த்ரகம் முப்பத்தொன்றும் ஸௌதர்ம இந்த்ரனுக்கு ஆகும். அதுவும் கூட்ட நாலாயிரத்து நானூற்று இரண்டாகும் (4402).

ஈசான இந்த்ரனுக்கு ச்ரேணி பத்தம் மாத்திரம் ஆயிரத்து நானூற்று ஐம்பத்தேழு ஆகும் (1457).

ஸநத்குமார மாஹேந்த்ர கல்பத்து ப்ரதம படலத்து ஒவ்வொரு திக்குக்கு ச்ரேணிபத்தங்கள் முப்பத்தொன்று. முப்பத்தொன்றில் ஏழு படலத்துக்கும் ஒவ்வொன்று குறைத்துக் கூட்ட ஒவ்வொரு திக்குக் கண்டலக்கம் நூற்றுத் தொண்ணூற்றாறாகும் (196). ஸநத்குமார இந்த்ரன் மூன்று திக்குக்கும் ஐந்நூற்றென்பத்தெட்டும் இந்த்ரகம் ஏழும் கூட்ட ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்றைந்தாகும் (595). மாஹேந்திர கல்பம் ஒரு திக்கு நூற்றுத் தொண்ணூற்றாறாகும். (196). பிரம்ஹ ப்ரஹ்மோத்தரம் ப்ரதம படலத்தில் திக்குக்கு இருபத்தி நாலு (24). ஆக நாலு படலத்துக்கும் கழித்துக் கூட்ட இந்த்ரகம் கூட முந்நூற்று அறுபத்து நாலாகும் (364). லாந்தவ காபிஷ்டத்துக்கு இந்த்ரகங்கள் கூட

அடிக்குறிப்பு : '62 - சேனி பந்தம் இருது நாற்றிசையும் சென்ற'. இரண்டு மே.பு. 1314 லக்கம் - எண்ணிக்கை 1457= (62+61+.... +32). அறுபதோடு 4371=1457 x 3, 4402 - 4371=31 இதுபோல பிறவற்றையும் கணக்கிடுக.

நூற்றைம்பத்தெட்டு (158). சுக்ர மஹாசுக்ர கல்பத்துக்கு எழுபத்து மூன்று (73). சதார, ஸஹஸ்ராரம் அறுபத்தொன்பது (69). ஆநாதாதி நான்கிலும் ஆறு படலத்திலும் இந்த்ரகம் கூட முந்நூற்று முப்பது (330). அதோ க்ரைவேயகம் மூன்றிலும் இந்த்ரகம் கூட நூற்றொருபத்தொன்று (111). மத்யம க்ரைவேயகம் மூன்றிலும் இந்த்ரகம் கூட எழுபத்தைந்து (75). உபரிம க்ரைவேயகம் மூன்றிலும் இந்த்ரகம் கூட மூப்பத்தொன்பது (39). நவாநுதிசையில் இந்த்ரகம் கூட ஐந்து(5) பஞ்சாநுத்தரத்திலும் ஐந்தே யாகும் (5).

சேனி பத்தங்கள் அமைவு முறை:

இச்சொன்ன ச்ரேணிபத்தங்கள் திக்குகள்தோறும் செவ்வையிலே ஸமான மாயிருக்கும் என்று அறிவது.

சேணிபத்த விமானங்கள் உள்ள இடம் :

இப்பால், முன் சொன்ன ப்ரதம இந்த்ரகத்து ச்ரேணிபத்தங்கள் இருக்கிற தேச ஸ்வரூபம் சொல்லுதும்.

ப்ரதம இந்தரகத்து ச்ரேணிபத்தங்கள் அறுபத்திரண்டில் பாதி முப்பத்தொன்று ஸ்வயம்புரமண ஸமுத்தரத்துக்குச் செவ்வையிலே இருக்கும். அவற்றுள் தத் த்வீபத்துக்குச் செவ்வையிலே பதினைந்து (15). சமுத்ரத்துக்கு செவ்வையிலே எட்டு (8) த்வீபத்துக்குச் செவ்வையிலே நான்கு (4). ஸமுத்தரத்துக்குச் செவ்வையிலே இரண்டு (2) த்வீபத்து செவ்வையிலே (1) ஸமுத்ரத்து செவ்வையிலே ஒன்று. இவ்வண்ண அந்த்யத்தில் நாலு ஸமுத்ரத்துக்கும் மூன்று த்வீபத்துச் செவ்வையிலே ஆகும்.

பிரகீர்ணக விமானங்கள் :

இப்பால் புஷ்ப ப்ரகீர்ணகங்கள் ஸ்வரூப ப்ரமாணம் சொல்லுதும்:

அடிக்குறிப்பு : தத் - ஸ்வயம்புரமண; 8 - அஹீந்தரவர ஸமுத்திரம்; 4 அஹீந்தரவர திவு; 2-தேவவர ஸமுத்ரம் ; 1 தேவவர திவு; 1 - யக்ஷவர ஸமுத்ர அந்த்யத்தில் - கடைசியில் ; முதல் படலத்து 62 சேணி பத்தங்கள் அமைந்துள்ள இடத்துக்குக் கீழே உள்ள கடல், திவுகளின் பெயர் இங்கே கூறப்பட்டுள்ளன.

ச்ரேணிபத்தங்களுடைய அந்தராளங்களிலே புஷ்பங்களைத் தெளித்தாற் போன்று இருந்தது புஷ்ப ப்ரகீர்ணகம் என்னும் பெயரையுடைய விமானங்கள் ஆகும்.

ப்ரகீர்ணக விமானங்கள் எண்ணிக்கை :

அதன் ப்ரமாணங்களும்; ஸௌதர்ம கல்பத்து முப்பதிரண்டு லக்ஷத்தில் முன் சொன்ன இந்த்ரகம் முப்பத்தொன்றும் ச்ரேணிபத்தங்கள் நாலாயிரத்து முந்நூற்றெழுபத்தொன்றும் கழிக்க நின்ற முப்பத்தொரு லக்ஷத்து தொண்ணூற்றையாயிரத்து ஐஞ்ஞூற்றுத் தொண்ணூற்றெட்டு புஷ்ப ப்ரகீர்ணகங்கள் ஆகும். *(31,95,598).*

ஈசான கல்பத்து இருபத்தெட்டு லக்ஷத்தில் ச்ரேணி பத்தம் ஆயிரத்து நானூற்று ஐம்பத்தேழு கழிக்க நின்றது இருபத்தேழு லக்ஷத்துத் தொண்ணூற்றெண்ணாயிரத்து ஐஞ்ஞூற்று நாற்பத்து மூன்று ஆகும் *(27,98,543).*

ஸநத்குமார கல்பத்து பன்னிரண்டு லக்ஷத்தில் இந்த்ரகம் ஏழும், ச்ரேணிபத்தம் ஐந்நூற்றெண்பத்தெட்டும் கழிக்க நின்றது பதினோரு லக்ஷத்துத் தொண்ணூற் றொன்பதினாயிரத்து நானூற்றைந்தாகும் *(11,99,405).*

மாஹேந்த்ர கல்பத்தில் எட்டு லக்ஷத்தில் ச்ரேணி பத்தம் நூற்றுத்தொண்ணூற்றாறு கழிக்க ஏழு லக்ஷத்துத் தொண்ணூற்றொன் பதினாயிரத்து எண்ணூற்று நாலு ப்ரகீர்ணகங்கள் ஆகும் *(7,99,804).*

ப்ரம்ஹ ப்ரஹ்மோத்தரத்து நாலு லக்ஷத்தில் இந்த்ரகம் நாலும் ச்ரேணிபத்தம் முந்நூற்றறுபதும் கழிக்க மூன்று லக்ஷத்து தொண்ணூற்றொன்பதினாயிரத்து அறுநூற்று முப்பத்தாறு ப்ரகீர்ணகங்கள் ஆகும். *(3,99,636).*

லாந்தவ காபிஷ்டத்து ஐம்பதினாயிரத்தில் இந்தரகம் இரண்டும், ச்ரேணிபத்தம் முந்நூற்றைம்பத்தாறும் கழிக்க நின்றது. நாற்பத்தொன்பதினாயிரத்து எண்ணூற்று நாற்பத்திரண்டு ப்ரகீர்ணகங்கள் ஆகும் (*49,842).*

சுக்ர மஹாசுக்ரத்து நாற்பதினாயிரத்தில் இந்த்ரகம் ஒன்றும், ச்ரேணிபத்தம் எழுபத்திரண்டும் கழிக்க முப்பத்தொன்பதினாயிரத்துத் தொளாயிரத்து இருபத்தேழு ப்ரகீர்ணகங்கள் ஆகும். *(39,927).*

சதார ஸஹஸ்ராரத்தில் ஆறாயிரத்தில் இந்த்ரகம் ஒன்றும் ச்ரேணிபத்தங்கள் அறுபத்தெட்டும் கழிக்க நின்றது. ஐயாயிரத்து தொளாயிரத்து முப்பத்தொன்று ப்ரகீர்ணகங்கள் ஆகும் (5931).

ஆநதாதி நான்கிலும் எழுநூற்றில் இந்த்ரகம் ஆறும் ச்ரேணிபத்தம் முந்நூற்றிருபத்து நாலும் கழித்து நின்றது முந்நூற்றெழுபது ப்ரகீர்ணங்களாகும் (370). அதோ க்ரைவேயகம் மூன்றிலும் நூற்றொருபத்தொன்றில் இந்த்ரகம் மூன்றும் ச்ரேணிபத்தம் நூற்றெட்டும் ப்ரகீர்ணகங்கள் ஸூன்யமும் ஆகும். மத்யம க்ரைவேயகம் மூன்றிலும் நூற்றேழில் இந்த்ரகம் மூன்றும் ச்ரேணிபத்தம் எழுபத்திரண்டும் கழிக்க நின்றது முப்பத்திரண்டு ப்ரகீர்ணகங்கள் ஆகும் (32). உபரிம க்ரைவேயகம் மூன்றிலும் தொண்ணூற்றொன்பதில் இந்த்ரகம் மூன்றும் ச்ரேணிபந்தம் முப்பத்தாறும் கழிக்க நின்றது ஐம்பத்திரண்டு ப்ரகீர்ணகங்கள் ஆகும் (52). நவாநுதிசை ஒன்பதில் இந்த்ரகம் ஒன்றும் ச்ரேணிபத்தம் நாலும் கழிக்க ப்ரகீர்ணகங்கள் நாலாகும் (4). பஞ்சாநுத்தரம் ஐந்தில் இந்த்ரகம் ஒன்றும் ச்ரேணிபத்தங்கள் நாலும் ப்ரகீர்ணகங்கள் ஸூன்யமும் ஆகும்.

தெற்கு வடக்கு இந்திரர்களுக்கு உரியன:

மற்றும் தக்ஷிண உத்தர இந்த்ரர்க்கு ச்ரேணிபத்[illegible] ப்ரகீர்ணக விபாக ஸ்வரூபம் சொல்லுதும்:

வாயு மூலைக்கும் ஈசான்ய மூலைக்கும் நடுப்[illegible] சரேணிபத்தங்களும் ப்ரகீர்ணகங்களும் உத்தர இந்த்ரனது ஆகும். நி[illegible] மூன்று பார்ச்வத்தில் ச்ரேணிபத்தங்களும் ப்ரகீர்ணங்களும் இந்தரகங்களும் தக்ஷின இந்தரனது ஆகும். இவ்வண்ணம் எல்லா கல்பத்திலும் ஆகும்.

விமானங்கள் விஸ்தாரம் :

இப்பால் இந்த்ரகம் முதலான மூன்று வகைக்கும் விஸ்தா[illegible] ஸ்வரூபம் சொல்லுதும்.

இந்த்ரகங்கள் எல்லாம் முன் சொன்னபடியே ஸங்க்யா[illegible] யோஜனையாகும். ச்ரேணிபத்தங்கள் எல்லாம் அஸங்க்யாத யோஜனை ஆகும். புஷ்ப ப்ரகிர்ணகங்கள் எல்லாம் சில ஸங்க்யாத யோஜனை, சில அஸங்க்யாத யோஜனையும் ஆகும்.

அடிக்குறிப்பு : ப்ரகீர்ணகம் - 'சொல்லிய படலம் தோறும், இறப்ப இந்திரகம் சேணிபந்தம் கிண்ணகமும் ஆகும்' மே.பு.1314.

மற்றும் ஸௌதர்மாதி கல்பங்களில் ஸங்க்யாத யோஜனை, அஸங்க்யாத யோஜனை விஸ்தார விமானங்களுக்கு ஸங்க்யை சொல்லும்:

ஸௌதர்ம கல்பம் முதற்கொண்டு அச்யுத கல்ப பர்யந்தம் தன்தான் ராசியை பஞ்ச பாகம் பண்ணியதில் ஒரு பாகம் ஸங்க்யாத யோஜனை விஸ்தார மாகும். நின்ற நாலு பாகமும் அஸங்க்யாத யோஜனை விஸ்தாரமாகும். அதெவ்வண்ணம் எனில்,

ஸௌதர்ம கல்பத்தில் முப்பத்திரண்டு லக்ஷத்தில் ஆறு லக்ஷத்து நாற்பதினாயிரம் விமானம் ஸங்க்யாத யோஜனை விஸ்தாரமும், இருபத்தைந்து லக்ஷத்து அறுபதினாயிரம் விமானம் அலங்க்யாத யோஜனை விஸ்தாரமும் ஆகும்.

ஈசான கல்பத்து இருபத்தெட்டு லக்ஷத்தில் ஐந்து லட்சத்து அறுபதினாயிரம் ஸங்க்யாதமும், இருபத்திரண்டு லட்சத்து நாற்பதினாயிரம் அஸங்க்யாதமும் ஆகும்.

ஸநத்குமார கல்பத்தில் பன்னிரண்டு லட்சத்தில் இரண்டு லட்சத்து நாற்பதினாயிரம் ஸங்க்யாதமும், ஒன்பது லட்சத்து அறுபதினாயிரம் அஸங்க்யாதமும் ஆகும்.

மாஹேந்த்ர கல்பத்து எட்டு லட்சத்தில் ஒரு லட்சத்து அறுபதினாயிரம் ஸங்க்யாதமும் ஆறு லக்ஷத்து நாற்பதினாயிரம் அஸங்க்யாதமும் ஆகும்.

ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தரத்து நாலு லக்ஷத்தில் எண்பதினாயிரம் ஸங்க்யாதமும், மூன்று லக்ஷத்து இருபதினாயிரம் அஸங்க்யாதமும் ஆகும்.

லாந்தவ காபிஷ்டத்தில் ஐம்பதினாயிரத்தில் பதினாயிரம் ஸங்க்யாதமும், நாற்பதினாயிரம் அஸங்க்யாதமும் ஆகும்,

சுக்ர மஹா சுக்ரத்து நாற்பதினாயிரத்தில் எண்ணாயிரம் ஸங்க்யாதமும் முப்பத்த்ராயிரம் அஸங்க்யாதமும் ஆகும்.

சதார ஸஹஸ்ராரத்து ஆறாயிரத்தில் ஆயிரத்து இருநூறு ஸங்க்யாதமும் நாலாயிரத்து எண்ணூறு அஸங்க்யாதமும் ஆகும்.

ஆநதாதி நான்கிலும் எழுநூற்றில் நூற்றுநாற்பது ஸங்க்யாதமும், ஐந்நூற்றறுபது அஸங்க்யாதமும் ஆகும்.

அதோ க்ரைவேயகம் மூன்றிலும் நூற்றொருபத் தொன்றில் மூன்று ஸங்க்யாதமும், நூற்றெட்டு அஸங்க்யாதமும் ஆகும்.

மத்யம கிரைவேயகம் நூற்றேழில் பதினெட்டு ஸங்க்யாதமும் எண்பத்தொன்பது அஸங்க்யாதமும் ஆகும்,

உபரிம க்ரைவேயகம் மூன்றிலும் தொண்ணூற்றொன்றில் பதினேழு ஸங்க்யாதமும், எழுபத்து நாலு அஸங்க்யாதமும் ஆகும்.

நவாநுதிசையில் ஒன்பதுக்கு ஒன்று ஸங்க்யாதமும், எட்டு அஸங்யாதமும் ஆகும்.

பஞ்சாநுத்ரம் ஐந்துக்கு ஒன்று ஸங்க்யாதமும் நாலு அஸங்க்யாதமும்[1] ஆகும்.

விமானங்கள் தள அளவும் நிறமும்:

இப்பால் விமான தள பாஹுல்யமும் வர்ணங்களும் சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசான கல்பத்து விமான தளம் ஆயிரத்தொருநூற்றிருபத்தொரு யோஜனையும் பஞ்சவர்ணங்களும் ஆகும். ஸநத்குமார மாஹேந்தர கல்பத்து விமான தளம் ஆயிரத்திருபத்திரண்டு யோஜனையும் கிருஷ்ண வர்ண வர்ஜித நாலு வர்ணங்களும் ஆகும். ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தரத்து விமான தளம் தொளாயிரத்து இருபத்து மூன்று யோஜனையும் நீல வர்ண வர்ஜிதம் மூன்று வர்ணமும் ஆகும். லாந்தவ காபிஷ்டத்து விமான தளம் எண்ணூற்றிருபத்து நாலு யோஜனையும் முன் சொன்ன மூன்று வர்ணமும் ஆகும். சுக்ர மஹா சுக்ர கல்பத்து விமான தளம் எழுநூற்றுஇருபத்தைந்து யோஜனையும் ரக்த வர்ண வர்ஜித இரண்டு வர்ணமாகும். சதார ஸஹஸ்ராரகல்பத்து விமான தளம்

அடிக்குறிப்பு: பஞ்ச வர்ணம் - ஐந்து நிறம்: கருப்பு, நீலம், சிவப்பு, வெள்ளை, மஞ்சள்,; வர்ஜிதம் - நீங்கிய ; நாலு வர்ணம் - நீலம், சிவப்பு, மஞ்சள் , வெள்ளை; மூன்று வர்ணம் - சிவப்பு, மஞ்சள், வெள்ளை இரண்டு வர்ணம் - மஞ்சள், வெள்ளை; சுக்ல - வெள்ளை;

பா.வே. 1 அசங்கியாத யோஜனையும்

அறுநூற்றிருபத்தாறு யோஜனையும் முன் சொன்ன இரண்டு வர்ணங்களும் ஆகும். ஆநதாதி நான்கிலும் விமான தளம் ஐந்நூற்றிருபத்தேழு யோஜனையும் பத்ம வர்ண வர்ஜித சுக்ல வர்ணம் ஒன்றே ஆகும். அப்பால் மேலெல்லாம் சுக்ல வர்ணமே யாகும். அதோ க்ரைவேயகம் மூன்றில் விமான தளம் நானூற்றிருபத்தெட்டு யோஜனையாகும். மத்யம க்ரைவேயகம் மூன்றில் விமான தளம் முந்நூற்றிருபத்தொன்பது யோஜனை யாகும். உபரிம க்ரைவேயகம் மூன்றில் விமான தளம் இருநூற்று முப்பது யோஜனை யாகும். நவாநுதிசை பஞ்சாநுத்தரம் இரண்டிலும் விமான தளம் நூற்று முப்பத்தொரு யோஜனை யாகும்.

விமானங்களுக்கு ஆதாரம்:

இப்பால், முன் சொன்ன விமானங்களுக்கு ஆதார ஸ்தானம் சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசான கல்பம் இரண்டிலும் அறுபது லக்ஷ விமானம் ஜல ப்ரதிஷ்டித மாகும். ஸநத்குமார மாஹேந்தரத்துகல்பத்து இருபது லக்ஷ விமானம் வாத ப்ரதிஷ்டிதமாகும். ப்ரஹ்ம ஆதி எட்டு கல்பத்து நாலு லக்ஷத்துத் தெண்ணூற்றாயிரம் விமானம் ஜல, வாத உபய ப்ரதிஷ்டிதமாகும். ஆநதாதி ஆயிரத்து இப்த்து மூன்று விமானமும் ஆகாச ப்ரதிஷ்டிதமாகும்.

தேவேந்திரர் வாழிடம்:

இப்பால், தேவேந்த்ரர்கள் இருக்கிற பட்டண ஸ்தானங்களுக்கு ப்ரமாணமும் பேரும் சொல்லுதும்:

ஸௌதர்ம இந்த்ரன் இருக்கிற பட்டணம் எல்லாத்துக்கும் மேலே முப்பத்தோராம் படலத்தில் இருக்கிற தக்ஷிண ச்ரேணிபத்தத்தில் பதினெட்டாம் விமானம் ஸௌதர்மம் என்னும் பேருடைய விமானத்தில் ஆகும். அந்த விமானத்துக்கு நாலு திக்கிலும் கிழக்கே

அடிக்குறிப்பு: ப்ரதிஷ்டிதம் - ஆதாரம்; வாத - காற்று; உபய / இரண்டு

* ப்ரம்மோத்ர, லாந்தவ கல்பத்து இந்திர பட்டிணங்கள் சொல்லப்படாமல் விடுபட்டுள்ளன.

வைடுர்யமும் தெற்றே ரஜதமும் மேற்கே அசோகமும் வடக்கே ம்ருஷத்கஸாரமும் என்னும் பெயருடைய நாலு விமானங்கள் ஆகும்.

ஸநத்குமார கல்பதது உபரிம ஏழாம் படலத்தில் தக்ஷிண ச்ரேணிபத்தத்தில் பதினாறாவது ஸநத்குமாரம் என்னும் பெயருடைய விமானத்தில் ஸநத்குமார இந்த்ரனுக்கு பட்டண மாகும். அந்த விமானத்துக்கு நாலு திக்கிலும் முன் சொன்ன பெயரை உடையதாகிய விமானங்கள் நாலாகும்.*

அதன் மேல் சுக்ர மஹாசுக்ர கல்பத்து தக்ஷிண ச்ரேணிபத்தத்து பத்தாவது சுக்ரம் என்னும் நாம முடைய விமானத்து சுக்ர இந்த்ரனுக்கு பட்டணம் ஆகும். அதன் நாலு திக்கிலும் நாலு விமானம் முன் சொன்ன பெயரை யடையதாகும்.

அதன் மேல் சதார ஸஹஸ்ரார கல்பத்து தக்ஷிண ச்ரேணிபத்தத்தில் எட்டாவது சதாரை என்னும் பெயருடைய விமானத்தில் சதார இந்த்ரனுக்குப் பட்டணமாகும். அதன் நாலு திக்கிலும் முன் சொன்ன பெயருடைய நாலு விமாமாகும்.

அதன்மேல் ஆநதாதி நான்கிலும் தக்ஷிண ச்ரேணி பத்தம் ஆறாவதில் தன்தான் பெயருடைய விமானத்தில் ஆநத இந்த்ரனுக்கும் ஆரண இந்த்ரனுக்கும் பட்டணமாகும். அதன் இரண்டினுடைய நாலு திக்கிலும் முன் சொன்ன பெயருடைய நாலு நாலு விமானங்கள் ஆகும்.

இவ் வண்ணம் உத்தர இந்த்ரர்களுக்கும் முன் சொன்னபடி பதினெட்டிலும், பதினாறிலும் ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தர இந்த்ரனுக்கு பதினாலிலும் காபிஷ்ட இந்த்ரனுக்கு பன்னிரண்டிலும், ப்ராணத அச்யுத இந்த்ரனுக்கு ஆறு ஆறிலும் தன்தான் பெயருடைய விமானங்களும் அதில் தன்தான் இந்த்ரனுக்கு பட்டணங்கள் ஆகும். அந்த பட்டணம் இருக்கிற விமானங்களுக்கு நாலு திக்கிலும் முன் சொன்னபடி நாலு நாலு விமானங்கள் ஆகும்; விசேஷம் உண்டு. அது எப்படி எனில் கிழக்கே ருஜகம் தெற்கே மந்த்ரம், மேற்கே அசோகம், வடக்கு ஸப்தச்சதம் என்னும் நாமங்கள் வேறாகும்.

மகுட அடையாளங்கள்:

இப்பால் ஸௌதர்ம ஆதி தேவர்களுக்கு மகுடங்களில் இருக்கிற அடையாளம் சொல்லுதும்:

ஸௌதர்ம கல்பத்துத் தேவர்களுக்குக் காட்டுப் பன்றி, ஈசான கல்பத்தார்க்கு மான், ஸநத்குமார கல்பத்தார்க்கு எருமைக்கிடா, மாஹேந்த்ர கல்பத்தார்க்கு கெண்டைமீன், ப்ரம்ம கல்பத்தார்க்கு ஆமை, ப்ரஹ்மோத்தர கல்பத்தார்க்கு தவளை, லாந்தவ கல்பத்தார்க்கு குதிரை, காபிஷ்ட கல்பத்தார்க்கு ஆனை, சுக்ர கல்பத்தார்க்கு சந்த்ரன், மஹா சுக்ர கல்பத்தார்க்கு ஸர்ப்பம், சதார கல்பத்தார்க்கு வாளமீன், ஸஹஸ்ரார கல்பத்தார்க்கு வெள்ளாட்டுக்கிடா, ஆநத ப்ராணத இரண்டு கல்பத்தார்க்கும் ரிஷபம், ஆரண அச்யுத கல்பத்தார்க்கு கல்பக வ்ருஷம், இவைகள் தேவர்கள் மகுடத்தில் அடையாளங்கள் ஆகும்.

தேவ பட்டணங்கள் விஸ்தாரம்:

இப்பால் தேவ இந்த்ரர்கள் பட்ண்ங்களுடைய விஸ்தாரம் சொல்லுதும்:

ஸௌதர்ம இந்த்ரன் பட்டணம் எண்பத்து நாலாயிரம் யோஜனை *(84,000)*; ஈசன இந்த்ரன் பட்டணம் எண்பதினாயிரம் யோஜனை *(80,000)*; ஸநத்குமார இந்த்ரன் பட்டணம் எழுபத்தீராயிரம் *(72,000)*, மாஹேந்த்ரன் பட்டணம் எழுபதினாயிரம் *(70,000)*, ப்ரஹ்மோத்தர இந்த்ரன் பட்டணம் அறபதினாயிரம் *(60,000)*, காபிஷ்ட இந்த்ரன் பட்டணம் ஐம்பதினாயிரம் *(50,000)*, சுக்ர இந்த்ரன் பட்டணம் நாற்பதினாயிரம் *(40,000)*, சதார இந்த்ரன் பட்டணம் முப்பதினாயிரம் *(30,000)*, ஆநதாதி நால்வர் இந்த்ரர்கள் பட்டணம் ப்ரத்யேகம் இருபதினாயிரம் *(20,000)*, யோஜனை யாகும்.

இவர்கள் தன்தான் தேவிகளுடன் கூடின பட்டணங்கள் ஆகும்,

பட்டணங்கள் இயல்பு:

இந்தப் பட்டணங்கள் எல்லாம் ஸம சதுரங்களும், ரம்யங்களும், அபரிமித ஸுக நிவாஸங்களும் ஆகும்.

சுற்று மதில் வருணனை:

இந்தப் பட்டணங்களுக்கு ப்ராகார உத்சேத சொரூபம் சொல்லுதும்:

அடிக்குறிப்பு: ப்ராகாரம்-சுற்று மதில் ; உத்ஸேதம் - உயரம்;

ஸௌதர்ம ஈசான இந்த்ரன் பட்டணத்துக்கு ப்ராகார உத்சேதம் முந்நூறு யோஜனை (300); ஸநத்குமார மாஹேந்த்ர பட்டணத்துக்கு பிராகார உத்சேதம் இருநூற்றைம்பது யோஜனை (250); ப்ரஹ்மோத்தர இந்த்ரனுடைய பட்டணத்துக்கு ப்ராகார உத்சேதம் இருநூறு யோஜனை (200); காபிஷ்ட இந்த்ரன் பட்டணத்துக்கு ப்ராகார உத்சேதம் நூற்றைம்பது யோஜனை (150);

சுக்ர இந்த்ரன் பட்டணத்துக்கு ப்ராகார உத்சேதம் நூற்றிருபது யோஜனை (120); சதார இந்த்ரனுடைய பட்டணத்துக்கு ப்ராகார உத்ஸேதம் நூறு யோஜனை (100); ஆநதாதி நான்கு இந்த்ரர் பட்டணத்துக்கு ப்ராகார உத்சேதம் ப்ரத்யேகம் எண்பது யோஜனை யாகும் (80).

அந்த ப்ராகாரங்களுக்கு பூமியில் இருக்கிற ஆழமும் விஸ்தாரமும் சொல்லத் தொடங்கி இரண்டுக்கும் ப்ரமாணம் ஸமானமாகையினால் ஒருங்கே சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசான இந்த்ரன் பட்டண ப்ராகாரத்தினிட ஆழமும் விஸ்தாரமும் ஐம்பது ஐம்பது யோஜனை யாகும் (50;50) ஸநத்குமார மாஹேந்த்ரர் பட்டண ப்ராகாரத்தினிட ஆழமும் விஸ்தாரமும் இருபத்தைந்து இருபத்தைந்து யோஜனை (25;25). ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தர இந்த்ரன் பட்டண ப்ராகாரத்தினிட ஆழமும் விஸ்தாரமும் பன்னிரண்டரை, பன்னிரண்டரை யோஜனை (12 1/2; 12 1/2). காபிஷ்ட இந்த்ரன் பட்டண ப்ரகாரத்தினிட ஆழமும் விஸ்தாரமும் ஆறேகால் ஆறேகால் யோஜனை (6 1/4;6 1/4). சுக்ர இந்த்ரன் பட்டண ப்ரகாரத்தினிட ஆழமும் விஸ்தாரமும் நாலு நாலு யோஜனை (4;4), சதார இந்த்ரன் பட்டண ப்ரகாரத்தினிட ஆழமும் விஸ்தாரமும் மூன்று, மூன்று யோஜனை (3; 3). ஆநதாதி நால்வர் இந்த்ரர் பட்டண ப்ராகாரத்தினிட ஆழமும் விஸ்தாரமும் இரண்டரை யோஜனை, இரண்டரை யோஜனை ஆகும். (2 1/2 ; 2 1/2)

கோபுர வர்ணனை:

இப்பால், அந்த ப்ராகாரங்களுக்கு கோபுர ஸங்க்யைகளும், அதனிட உத்ஸேத ஸ்வரூபமும் சொல்ல தொடங்கி இரண்டுக்கும் ஸமானமாகையினால் ஒருங்கே சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசான இந்தரர் பட்டண ப்ராகாரத்தினிட கோபுரம் ப்ரதி திசை நானூறு கோபுரங்களும் ப்ரத்யேகம் நானூறு

நானூறு யோஜனை உத்ஸேதங்களும் ஆகும். இவ்வண்ணம் ஸநத்குமார மாஹேந்த்ர பட்டண ப்ராகாரத்து ப்ரதி திசை முந்நூறு முந்நூறு கோபுரங்களும் தத் ப்ராமண உத்ஸேதங்ளும் ஆகும். ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தர இந்த்ரன் பட்டண ப்ராகாரங்களுக்கு ப்ரதி திசை இருநூறு இருநூறு கோபுரங்களும் தத் ப்ராமணங்கள் உத்ஸேதங்களும் ஆகும். காபிஷ்ட இந்த்ரன் பட்டண ப்ராகாரங்களுக்கு ப்ரதி திசை நூற்றறுபது நூற்றறுபது கோபுரங்களும் தத் ப்ராமணங்கள் உத்ஸேதங்களும் ஆகும். சுக்ர இந்த்ரன் பட்டண ப்ராகாரங்களுக்கு ப்ரதி திசை நூற்று நாற்பது நூற்று நாற்பது கோபுரங்களும் தத் ப்ரமாணங்கள் உத்ஸேதங்களும் ஆகும். ஸதார இந்த்ரன் பட்டண ப்ராகரங்களுக்கு ப்ரதி திசை நூற்றிருபது நூற்றிருபது கோபுரங்களும் தத் ப்ரமாணங்கள் உத்ஸேதங்களும் ஆகும். ஆநதாதி நால்வர் இந்த்ரர் பட்டண ப்ராகாரங்களுக்கு ப்ரதி திசை நூறு நூறு கோபுரங்களும் தத் ப்ராமணங்கள் உத்ஸேதங்களும் ஆகும்.

இச் சொல்லப்பட்ட கோபுரங்களுக்கு விஸ்தாரம் சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசான இந்த்ரர் பட்டணத்து கோபுர விஸ்தாரம நூறு யோஜனை (100). ஸநத்குமார மாஹேந்த்ரர் பட்டணத்து கோபுர விஸ்தாரம் தொண்ணூறு யோஜனை (90) . ப்ரஹ்மோத்தர இந்த்ரன் பட்டணத்து கோபுர விஸ்தாரம் எண்பது யோஜனை(80). காபிஷ்ட இந்த்ரன் பட்டணத்து கோபுர விஸ்தாரம் எழுபது யோஜனை (70). சுக்ர இந்த்ரன் பட்டணத்துகோபுர விஸ்தாரம் ஐம்பது யோஜனை (50), சதார இந்த்ரன் பட்டணத்து கோபுரவிஸ்தாரம் நாற்பது யோஜனை (40), ஆநதாதி நால்வர் பட்டணத்து கோபுர விஸ்தாரம் ப்ரத்யேகம் முப்பது முப்பது யோஜனை யாகும் (30;30).

பரிவார தேவர்கள்:

இப்பால், முன் சொல்லப்பட்ட விஸ்தாரங்களில் உண்டாகி இருக்கிற ஸாமாநிகர், தநுரக்ஷாநீக தேவர்களுக்கு ப்ரமாணம் சொல்லுதும்:

அடிக்குறிப்பு: விஸ்தார ஸங்க்யை - விஸ்தார அளவு; (பார்க்க பக். 257), சதுர்க்குணம் - நான்கு மடங்கு; ஸாமானிகர் எண்ணிக்கையை விட நான்கு மடங்கு ஆகும்; பார்க்க அட்டவணை 19;

ஸாமாநிக தேவர்கள் ஸங்க்யை அந்த அந்த பட்டணங்கள் விஸ்தார ஸங்க்யைகளுக்கு ஸமான மாகும். தநுரக்ஷாநீக தேவர்களுக்கு ப்ராமணம் முன் சொன்னதில் சதுர்க்குண சதுர்க்குண மாகும். அதெவ்வண்ணம் எனில், ஸௌத்ரம் இந்த்ரனுக்கு ஸாமாநிகர் எண்பத்து நாலாயிரம் (84,000), தநுரக்ஷாநீகர் மூன்று லக்ஷத்து முப்பத்தாறாயிரம் (3,36,000). ஈசான இந்த்ரற்கு ஸாமாநீகர் எண்பதினாயிரம் (80,000). தநுரக்ஷர் மூன்று லக்ஷத்து இருபதினாயிரம் (3,20,000). ஸநத்குமார இந்த்ரனுக்கு ஸாமாநிகர் எழுபத்திரண்டாயிரம் (72,000). தநுரக்ஷர் இரண்டு லக்ஷத்து எண்பத்து எண்ணாயிரம் (2,88,000). மாஹேந்த்ரர்க்கு ஸாமாநிகர் எழுபதினாயிரம் (70,000). தநுரக்ஷகர் இரண்டு லக்ஷத்து எண்பதினாயிரம் (2,80,000). ப்ரஹ்மோத்தர இந்த்ரர்க்கு ஸாமாநிகர் அறுபதினாயிரம் (60,000). தநுரக்ஷகர் இரண்டு லக்ஷத்து நாற்பதினாயிரம் (2,40,000). காபிஷ்ட இந்த்ரற்கு ஸாமாநிகர் ஐம்பதினாயிரம் (50,000). தநுரக்ஷர் இரண்டு லக்ஷம் (2,00,000). சுக்ர இந்த்ரனுக்கு ஸாமாநிகர் நாற்பதினாயிரம் (40,000). தநுரக்ஷர் லக்ஷத்து அறுபதினாயிரம் (1,60,000). சதரா இந்த்ரனுக்கு ஸாமாநிகர் முப்பதினாயிரம் (30,000),. தநுரக்ஷர் ஒரு லக்ஷத்து இருபதினாயிரம் (1,20,000). ஆநதாதி நான்கிலும் நாலு இந்த்ரர்க்கும் ப்ரத்யேகம் ஸாமாநிகர் இருபதினாயிரம் (20,000). தநுரக்ஷர் எண்பதினாயிரம் ஆகும் (80,000).

அனீகர் பெயர்:

இப்பால், ஸப்தாநீக ஸ்வரூபமும் தத் ப்ரமாணங்களும் சொர்லுதும்:

வ்ரஷபானீகர், அச்வாநீகர், ரதாநீகர், கஜாநீகர், பதாநீகர், கந்த்ர்வாநீகர், ந்ருத்யாநீகர் என இவர்கள் ஏழு வகையும் ஸப்த அநீகர்

அடிக்குறிப்பு: ப்ரதானன் - தலைவன்; ப்ரதானை - தலைவி ;
பா.வே. 1 இவர்கள் ஸங்க்யையும் முன் சொல்லப்பட்ட ஸாமாநீகர் ஸங்க்யைப்படி வருஷபாநீகர்க்கு ஆகும். அதனை இரட்டித்த ஸங்க்யை அஸ்வாநீகர்ளுக்கு ஆகும். அதனை இரட்டித்த ஸங்க்யை ரதாநீகர்க்கு ஆகும். அதனை இரட்டித்த ஸங்க்யை கஜாநீகருக்காகும்; அதனை இரட்டித்த ஸங்க்யை பதாநீகருக் காகும்; அதனை இரட்டித்த ஸங்க்யை கந்தர்வாநீகருக்காகும்; அதனை இரட்டித்த ஸங்க்யை ந்ருத்யா நீகர்க்காகும். அதெவ்வண்ணம் எனில்.........................

என்னும் தேவர்கள் ஆகும். இவர்கள் எழுவரும் பன்னிரண்டு இந்த்ரர்க்கும் பரத்யேகம் ப்ரத்யேகம் ஸமானமாகும்.

இவர்கள் ஸங்க்யையும் வ்ருஷபாநீகர் ஆதி இரட்டித்த பேர்கள்.[1]

ஸௌதர்ம கல்பத்து வ்ருஷாபாநீகர் எண்பத்து நாலாயிரம் (84,000) ஈசான கல்பத்து வ்ருஷபாநீகர் எண்பதினாயிரம் (80,000). ஸநத்குமார கல்பத்து வ்ருஷபாநீகர் எழுபத்திராயிரம் (72,000). மாஹேந்த்ர கல்பத்து வ்ருஷபாநீகர் எழுபதினாயிரம் (70,000). ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தர கல்பத்து வ்ருஷபாநீகர் அறுபதிநாயிரம் (60,000). லாந்தவ காபிஷ்ட கல்பத்து வ்ருஷபாநீகர் ஐம்பதினாயிரம் (50,000). சுக்ர மஹாசுக்ர கல்பத்து வ்ருஷாாநீகர் நாற்பதினாயிரம் (40,000). சதார ஸஹஸ்ரார கர்பத்து வ்ருஷபாநீகர் முப்பதினாயிரம் (30,000). ஆநதாதி நான்கிலும் ப்ரத்யேகம் வ்ருஷபாநீகர் இருபதினாயிரம் (20,000). இருபதினாயிரம் (20,000) ஆகும்.

இவர்களை முன் சொன்னபடி, ந்ருத்யாநீகர் பர்யந்தம் இரட்டித்துப் போக தன்தான் ஸங்க்யை தன்தான் கல்பங்களுக்கு அறியலாகும்.

அநீகர் தலைவர்:

இப்பால், தக்ஷிண உத்தர இந்த்ரர்கள் ஸப்த அநீகர்க்கும் ப்ரதானனுடைய நாமங்கள் சொல்லுதும்:

தக்ஷிண இந்த்ரன் வருஷபாநீகர்க்கு ப்ரதானன் தாமயஷ்டி, அச்வாநீகர்க்கு ப்ரதானன் ஹரிதாமன், ரதாநீகர்க்கு ப்ரதானன் மாதனி, கஜாநீகர்க்கு ப்ரதானன் ஐராவதம், பதாநீகர்க்கு ப்ரதானன் வாயுரதன், கந்தர்வாநீகர்க்கு ப்ரதானன் அரிஷ்டயஸா, இவர்கள் அறுவரும் புருஷ தேவர்கள் ஆகும். ந்ருத்த கலாநீகர்க்கு ப்ரதானை நீலாஞ்சனை என்னும் பெயராகும்.

உத்தர இந்த்ரர்களுக்கு வ்ருஷபாநீகருக்கு ப்ரதானன் மஹாதாம யஷ்டி, அச்வாநீகர்க்கு ப்ரதானன் அமிதகதி ரதாநீகர்க்கு ப்ரதானன் ரதமந்த:, கஜாநீகர்க்கு ப்ராதானன் புஷ்பதந்தம், பதாநீகர்க்கு ப்ரதானன் லகு பராக்ரம, கந்தர்வா நீகர்க்கு ப்ரதானன் கீதரதி, இவர்கள் அறுவரும் புருஷ தேவர்கள் ஆகும். ந்ருத்தகீயநீகர்க்கு ப்ரதானை மஹாஸேனை என்னும் ஸ்த்ரீ பெயராகும்.

பாரிஷதர் எண்ணிக்கை:

இப்பால் பாரிஷ த்ரயர் ப்ரமாணம் சொல்லுதும்:

ஸௌதர்ம கல்பத்து அப்யந்தர பாரிஷதர் பன்னீராயிரம் (12,000); மத்யம பாரிஷதர் பதினாலாயிரம் (14,000) பாஹ்ய பாரிஷதர் பதினாறாயிரம் (16,000). ஈசான கல்பத்து அப்யந்தர பாரிஷதர் பதினாயிரம் (10,000) மத்யம பாரிஷதர் பன்னீராயிரம் (12,0000), பாஹிய பாரிஷதர் பதினாலாயிரம் (14,000). ஸநத்குமாரகல்பத்து அப்யந்தர பாரிஷதர் எண்ணாயிரம் (8,000). மத்யம பாரிஷதர் பதினாயிரம்(10,000). பாஹ்ய பாரிஷதர் பன்னீராயிரம் (12,000). மாஹேந்தர கல்பத்து அப்யந்தர பாரிஷதர் ஆறாயிரம் (6,000) மத்யம பாரிஷதர் எண்ணாயிரம் (8,000). பாஹ்ய பாரிஷதர் பதினாயிரம் (10,000). ப்ரம்ம, ப்ரம்மோத்ர கல்பத்து அப்யந்தர பாரிஷதர் நாலாயிரம் (4,000). மத்யம பாரிஷதர் ஆறாயிரம் (6,000). பாஹிய பாரிஷதர் எண்ணாயிரம். லாந்தவ காபிஷ்ட கல்பத்து அப்யந்தர பாரிஷதர் இரண்டாயிரம் (2,000). மத்யம பாரிஷதர் (4,000). பாஹ்ய பாரிஷதர் ஆறாயிரம் (6000). சுக்ர மஹாசுக்ர கல்பத்து அப்யந்தர பாரிஷதர் ஆயிரம் (1000). மத்யம பாரிஷதர் இரண்டாயிரம் (2000). பாஹ்ய பாரிஷதர் நாலாயிரம் (4000). சதார ஸஹஸ்ரார கல்பத்து அப்யந்தர பாரிஷதர் அஞ்நூறு (500). மத்யம பாரிஷதர் ஆயிரம் (1,000). பாஹ்ய பாரிஷதர் இரண்டாயிரம் (2,000). ஆநதாதி நான்கிலும் ப்ரத்யேகம் அப்யந்தர பாரிஷத இருநூற்றைம்பது (250). மத்யம பாரிஷதர் ஐஞ்நூறு (500). பாஹ்ய பாரிஷதர் ஆயிரம் (1000).

புற மதில்கள் வருணனை:

இப்பால், முன் சொன்ன ப்ரகாரத்துக்கு இதர ப்ரகார ஸங்கையையும் அதற்கு அதற்கு அந்தர ப்ரமாணங்களும் சொல்லுதும்:

முன் சொன்ன பட்டணத்து ப்ரகாரத்துக்கு அப்பால் பதின்மூன்று லக்ஷ யோஜனை அந்தரத்து இரண்டாம் ப்ரகார மாகும். அதனுக்கப்பால், அறுபத்துமூன்று லக்ஷ யோஜனை அந்தரத்து மூன்றாம் ப்ரகார மாகும். அதனுக்கப்பால், அறுபத்து நாலு லக்ஷ யோஜனை அந்தரத்து நாலாம் ப்ரகார மாகும். அதற்கு அப்பால் எண்பத்துநாலு லக்ஷ யோஜனை அந்தரத்து ஐந்தாம் ப்ரகாரம் ஆகும். ஆக பஞ்ச ப்ரகாரமும் ஆகும். இவைகள் வ்யவஹார யோஜனை யாகும்.

அந்தராளங்களில் தேவர்கள்:

இச் சொன்ன பட்டணம் கூட ஐந்து அந்தராளத்திலும் இருக்கிற தேவர்கள் ஸ்வரூபம் சொல்லுதும்:

பட்டணத்தில் தேவேந்த்ரனும் தேவிமாரும் ஆகும். முதல் அந்தராளத்து ஸேநாதிபதியும், தநு ரக்ஷ தேவர்களும் இருப்பர். இரண்டாம் அந்தரளத்து பாரிஷ த்ரயர் இருப்பர் மூன்றாம் அந்தராளத்து ஸாமாநிக தேவர்கள் இருப்பர். நாலாம் அந்தராளத்து ஆரோஹர், ஆபியோக்யர், கில்விஷிகர் முதலான தேவர்கள் தங்கள் தங்கள் யோக்ய ப்ராஸாதத்தில் இருப்பார்கள்.

நந்தன வனம்:

அப்பால், பஞ்ச ப்ரகாரத்துக்கு அப்பால் ஐம்பதினாயிரம் யோஜனை அந்தரத்து நந்தன வனம் இருக்கும். அந்த வனத்துக்கு விசேஷ நாமங்கள் சொல்லுதும். கிழக்கே அசாக வனம், தெற்கே ஸப்தச்சத வனம், மேற்கே சண்பக வனம், வடக்கே சூத வன ஷண்டங்கள் ஆகும்.

இந்த வனங்களுக்கு ப்ரமாணங்கள் ஹிமவத் பர்வத்தில் இருக்கிற பத்மை என்னும் பொய்கைக்குச் சொன்ன ப்ரமாணம் ஆயிரம் (1000) யோஜனை நீளமும் ஐந்நூறு யோஜனை அகலங்களும் ஆகும். (500). அந்த வனங்களில் மத்யத்தில் ப்ரத்யேகம் ஒவ்வொரு சைத்ய வ்ருக்ஷ மாகும்.

சைத்ய வ்ருக்ஷம்:

அந் சைத்ய வ்ருக்ஷத்தினுடைய ஸ்வரூபம் சொல்லி அவைகளுக்கு நமஸ்காரம் சொல்லுதும்:

நாலு வனத்திலும் இருக்கிற சைத்ய வ்ருக்ஷங்கள் முன்சொன்ன ஜம்பூ வ்ருக்ஷ ப்ரமாணங்கள் ஆகும். இவ்வண்ணம் ஸௌதர்ம ஆதி கல்பங்கள் எல்லாத்திலும் ஆகும். அந்த வ்ருக்ஷங்களில் நாலு பார்ச்வத்திலும் பல்யங்காஸான மாகிய ஜிந ப்ரதிமைகள் ப்ரத்யேக மாகும். இந்த ப்ரதிமைகளுக்கு நமஸ்காரம் ஆவதாகும்.

லோகபாலர் நகர்:

இப்பால், லோகபாலர்களுடைய நகர ஸ்வரூபம் சொல்லுதும்:

முன் சொன்ன வனங்களுக்கு அப்பால், பஹு யோஜனை அந்தரத்து நாலு திக்கிலும் லோகபாலர்கள் பட்டணம். விஸ்தாரம்

அடிக்குறிப்பு: ஷண்டங்கள்-கூட்டங்கள்; சூத வனம் - மாமர வனம்; பார்ச்வத்தில்- பக்கங்களில்;

பன்னிரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம் யோஜனை யாகும். (12,50,000). அவற்றுள் கணிகர் மஹத்தர்கள் பட்டணம் சொல்லுதும்:

கணிகையர் பெயர்:

முன் சொன்ன திக்குகளுக்கு விதிக்குகளில் லக்ஷம் யோஜனை விஸ்தாரமும் தத் ப்ரமான நீளமுமாகிய பட்டணங்கள் கணிகா மஹத்தர்க்கு இருக்கும். அவர்களுடை நாமம் சொல்லுதும்: ஸௌதர்ம ஆதி கல்பங்களுள் காமா, காமனி, பத்மகந்தா, அலம்பூஷா என நால்வர் ஆகும். இவ்வண்ணம் ஸர்வ இந்த்ர புரங்களுக்கும் க்ரமமாக அறியப்படும்.

வாழிட அளவுகள்:

அப்பால், ஸௌதர்ம ஆதி கல்பங்களுள் தேவர்களுக்கு க்ரஹ உத்ஸேதங்களும் அகல நீளங்களும் சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசானத்து க்ருஹ உத்ஸேதம் அறுநூறு யோஜனை (600), நீளம் நூற்றிருபது யோஜனை (120), அகலம் அறுபது யோஜனை(60). ஸநத்குமார மாஹேந்தரத்து க்ருஹ உத்ஸேதம் ஐந்நூறு யோஜனை (500), நீளம் நூறு யோஜனை(100) அகலம் ஐம்பது யோஜனை(50), ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தரத்து க்ருஹ உத்ஸேதம் நானூற்றம்பது யோஜனை (450), நீளம் தொண்ணூறு யோஜனை(90), அகலம் நாற்பத்தைந்து யோஜனை (45)யாகும். லாந்தவ காபிஷ்டத்து க்ருஹ உத்ஸேகம் நானூறு யோஜனை (400), நீளம் எண்பது யோஜனை (80), அகலம் நாற்பது யோஜனை (40)யாகும். சுக்ர மஹாசுக்ர க்ருஹ உத்ஸேதம் முந்நூற்றைம்பது யோஜனை(350), நீளம் எழுபது யோஜனை(70), அகலம் முப்பத்தைந்து யோஜனை யாகும்.(35) சதார ஸஹஸ்ராரத்து க்ருஹ உத்ஸேதம் முந்நூறு யோஜனை (300), நீளம் அறுபது யோஜனை (60), அகலம் முப்பது யோஜனை (30), ஆநதாதி நான்கிலும் ப்ரத்யேகம் க்ருஹ உத்ஸேதம் இருநூற்றைம்பது யோஜனை (250), நீளம் ஐம்பது யோஜனை(50), அகலம் இருபத்தைந்து யோஜனை(25), அதோ க்ரைவேயகம் மூன்றிலும் க்ருஹ உத்ஸேதம் இருநூறு யோஜனை (200), நீளம் நாற்பது யோஜனை (40), அகலம் இருபது யோஜனை (20) யாகும். மத்யம க்ரைவேயகத்து மூன்றிலும் க்ருஹ உத்ஸேதம் நூற்றைம்பது யோஜனை (150), நீளம் முப்பது யோஜனை(30), அகலம் பதினைந்து யோஜனை யாகும். (15). ஊர்த்வ க்ரைவேயகம் மூன்றிலும் உயரம் நூறு யோஜனை (100) நீளம் இருபது யோஜனையாகும். (20), அகலம் பத்து யோஜனை யாகும்(10). நவாநுதிசை ஒன்பதிலும் உயரம் 50 யோஜனை (50), நீளம் பத்து

யோஜனை (10), அகலம் ஐந்து யோஜனையாகும்(5). பஞ்சாநுத்தரம் ஐந்திலும் க்ருஹ உத்ஸேதம் இருபத்தைந்து யோஜனை (25), நீளம் ஐந்து யோஜனை(5), அகலம் இரண்டரை யோஜனையாகும் (2 1/2). இச்சொல்லப்பட்டது தேவர்களுக்கு.

கல்பத்து தேவிகளுடைய க்ருஹ உத்ஸேதம் நீளம் அகலம் சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசான கல்பத்து தேவிகளுக்கு க்ருஹ உத்ஸேதம் ஐந்நூறு யோஜனை (500), நீளம் நூறு யோஜனை (100), அகலம் ஐம்பது யோஜனை(50), ஸநத்குமார மாஹேந்தரத்து தேவிகளுக்கு க்ருஹ உத்ஸேதம் நானூற்றும்பது யோஜனை (450), நீளம் தொண்ணூறு யோஜனை(90). அகலம் நாற்பத்தைந்து யோஜனை(45), ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தரத்து தேவிகளுக்கு க்ருஹ உத்ஸேதம் நானூறு யோஜனை (400), நீளம் எண்பது யோஜனை(80), அகலம் நாற்பது யோஜனை (40)யாகும். லாந்தவ காபிஷ்ட தேவிகளுக்கு க்ருஹ உத்ஸேதம் முந்நூற்றைம்பது யோஜனை(350), நீளம் எழுபது யோஜனை(70), அகலம் முப்பத்தைந்து யோஜனை யாகும்(35) சுக்ர மஹாசுக்ர தேவிகளுக்கு க்ருஹ உத்ஸேதம் முந்நூறு யோஜனை (300), நீளம் அறுபது யோஜனை (60), அகலம் முப்பது யோஜனை (30), சதார ஸகஸ்ரார தேவிகளுக்கு க்ருஹ உத்ஸேதம் இருநூற்றைம்பது யோஜனை (250), நீளம் ஐம்பது யோஜனை(50), அகலம் இருபத்தைந்து யோஜனை(25), ஆநதாதி நான்கிலும் க்ருஹ உத்ஸேதம் இருநூறு யோஜனை (200), நீளம் நாற்பது யோஜனை (40), அகலம் இருபது யோஜனை யாகும். (20).

அளவீடு முறை:

அக்ருத்த்ரிம சைத்யாலயங்களும், நகர விஸ்தாரங்களும், ப்ரகார உத்ஸேதங்களும் ப்ரகார அந்தரங்களும் சரீர உத்ஸேதங்களும், வ்யவஹார யோஜனையாகும்.

அடிக்குறிப்பு: வ்யவஹா யோஜனை-ப்ரமாண யோஜனை, வியவஹார யோஜனை என யோஜனை இரண்டாகக் கூறப்படும். ப்ரமாண யோஜனை வியவஹார யோஜனையைக் காட்டிலும் 500 மடங்கு பெரியதாகும். தீவு, முதலானவற்றின் அளவு ப்ரமாண யோஜனையால் கூறப்படும்.

பட்ட தேவியர் பெயர்:

கல்பங்களின் அக்ர தேவிகள் ப்ரமாணங்கள் சொல்லுதும்:

கல்பத்து இந்த்ரர் எல்லாருக்கும் ப்ரத்யேகம் எட்டு எட்டு பட்ட தேவிகள் ஆகும். அவர்களுடைய நாமங்களும்: சசி, பத்மா, சிவா, ச்யாமா, காளிந்தீ, ஸுலஸா, அஜ்ஜுகா, பாநு என இந்த எட்டு பேரும் தக்ஷிண இந்த்ரர் எல்லார்க்கும் பட்ட தேவிகளுக்கு ப்ரத்யேகம் நாமம் ஆகும். ஸ்ரீமதி, ராமா, ஸுஸிமா, ப்ரபாவதி, ஜயஸேனா, ஸுஷேண, வஸுமித்ரா, வஸுந்தரா என எட்டு நாமங்களும் உத்தர இந்த்ரர்கள் பட்ட தேவியர் எண்பருக்கும் ப்ரத்யேகம் ப்ரத்யேகம் நாமம் ஆகும்.

அவர்களுடைய பரிவார தேவியர் ப்ரமாணமும்:

ஸௌதர்ம ஈசான கல்பத்து ப்ரதான தேவியர் ஒவ்வொருத்தர்க்கு தாங்கள் கூட, பதினாறாயிரம் பதினாறாயிரம் பரிவார தேவியர் ஆகும். இவ் வண்ணம் ஸநத்குமார மாஹேந்த்ர பட்ட தேவியர்க்கு எண்ணாயிரம் எண்ணாயிரம் ஆகும். ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தரத்து நாலாயிரம் ஆகும். லாந்தவ காபிஷ்டத்து இரண்டாயிரம் இரண்டாயிரம் ஆகும். சுக்ர மஹாசுக்ரத்து ஆயிரம் ஆயிரம் ஆகும். சதார ஸஹஸ்ராரத்து ஐந்நூறு ஐந்நூறாகும். ஆநதாதி நான்கிலும் இருநூற்றைம்பது இருநூற்றைம்பது ஆகும்.

அடிக்குறிப்பு : தேவியர், பரிவார தேவியர் முதலானார் விவரம்.

கல்பம்	பட்ட தேவியர்	பரிவார தேவியர்		விகுர்வணை உடல்	
		ஒரு தேவிக்கு	எட்டு பேருக்கும்	ஒரு தேவிக்கு	எட்டு பேருக்கும்
ஸௌதர்ம – ஈசான	8,8	16,000	1,28,000	16,000	1,28,000
ஸநத் – மாஹேந்த்ர	8,8	8,000	64,000	32,000	2,56,000
பிரம்ம – ப்ரம்மோத்ர	8	4,000	32,000	64,000	5,12,000

வல்லபையர் எண்ணிக்கை:

இச்சொல்லப்பட்ட தேவியருள் வல்லபையர் ப்ரமாணம் சொல்லுதும்:

முன் சொன்ன தேவியர்க்குள்ளே ஸௌதர்ம ஈசானத்து முப்பத்திராயிரம் (32,000), ஸநத்குமார மாஹேந்தரத்து எண்ணாயிரம் (8000), ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தரத்து இரண்டாயிரம் (2000), லாந்தவ காபிஷ்டத்து ஐந்நூறு (500), சுக்ர மஹாசுக்ரத்து இருநூற்றைம்பது(250), சதார-ஸஹஸ்ராரத்து நூற்றிரு பத்தைந்து(125), ஆநதாதி நான்கிலும் அறுபத்தி மூன்று அறுபத்து மூன்று ஆகும்(63).

பட்ட தேவியர் விகுர்வணை:

மற்றும் பட்ட தேவியர் எண்மரும் தனித்தனி விகுர்வணா ஸ்வரூபம் சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசான கல்பத்தார் தனித்தனி மூல சரீரம் கூட பதினாறாயிரம் பதினாறாயிரம் ஆகும் (16,000), இவ்வண்ணம் ஸநத்குமார மாஹேந்த்ரத்தார் முப்த்திராயிரம் (32,000), ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தரத்தார் அறுபத்து நாலாயிரம் (64,000), லாந்தவ காபிஷ்டத்தார் லக்ஷத்து இருபத்தெண்ணாயிரம் (128000), சுக்ர மஹாசுக்ரத்தார் இரண்டு லக்ஷத்து ஐம்பத்தாறாயிரம் (2,56,000), சதார ஸஹஸ்ராரத்தார் ஐந்து லக்ஷத்து ஒருபத்து ஈராயிரம் (5,12,000), ஆநதாதி நாலு கல்பத்தார் பத்து லக்ஷத்து இருபத்து நாலாயிரம் ஆகும் (10,24,000).

முன் சொன்ன வல்லபையர்க்கு ப்ரஸாத உத்ஸேதங்களும் அவைகள் இருக்கிற ஸ்தானங்களும் சொல்லுதும்:

முன் சொல்லப்பட்ட தேவியர் ப்ராஸாத உதயங்களுக்கு இருபது யோஜனை அதிகங்கள் ஆகும். அவைகளும், இந்த்ரர்களுடைய ப்ராஸாதங்களுக்கு பூர்வ திக்கிலே இருப்பிட மாகும்.

அடிக்குறிப்பு: மூல சரீரம் கூட–மூல உடம்போடு சேர்த்து; விகுர்வணை – வேற்று உருவம் எடுத்தல்; உதயம்–உயரம்; இருபது யோஜனை அதிகங்கள்–அதாவது 520,470,420,370,320,270,220 யோஜனைகளாகும். பார்க்க.ப. 265 –ல் தேவியர் இல்ல உயரம்.

இந்திரன் சபை மண்டப வருணனை:

இப்பால், இந்த்ரர்களுக்கு ஆஸ்தான மண்டப ஸ்வரூபம் சொல்லுதும்:

அமராவதி என்னும் பட்டணத்து நடுவே இந்த்ரனுக்கு ஆவாஸ க்ருஹங்கள் ஆகும். அதன் ஈசான திசையில் ஸுதர்மம் என்னும்பெயரையுடைய ஆஸ்தான மண்டபம் ஆகும். இவ்வண்ணம் அச்யுத கல்பம் பர்யந்த மாகும். அந்த ஆஸ்தான மண்டபம் நீளம் நூறு யோஜனை *(100)*, அகலம் ஐம்பது யோஜனை *(50)*, உயரம் எழுபத்தைந்து யோஜனை யாகும்*(75)*. அந்த ஆஸ்தான மண்டபத்துக்குக் கிழக்கிலும் வடக்கிலும் தெற்கிலும் மூன்று வாசல் ஆகும். அந்த வாசல்கள் ப்ரத்யேகம் அகலம் எட்டு *(8)* யோஜனையும் உயரம் பதினாறு *(16)* யோஜனையும் ஆகும். அந்த மண்டபத்து மத்யத்திலே இந்த்ரனுக்கு ஸிம்ஹாஸனம் ஆகும். அந்த ஸிம்ஹாஸனத்து பூர்வ திக்கில் முன்னே எட்டு பட்ட தேவிகளுக்கும் எட்டு ஆஸனங்கள் ஆகும். அந்த தேவியர் ஆஸனங்களுக்குப் புறம்பாக லோகபாலர்கள் ஆஸனங்கள் நாலு திக்கிலும் நாலாகும். அந்த லோகபாலர் நாமங்களும் கிழக்கே ஸோமன், தெற்கே யமன், மேற்கே வருணன், வடக்கே குபேரன் ஆகும். அக்நி திசையில் அப்யந்தர பரீஷர்க்கு ஆஸனம் பன்னீராயிரம் *(12,000)*, தக்ஷிண திசையில் யமன் ஆஸனத்துக்குப் புறத்திலே மத்யம பரீஷர்க்கு ஆஸனம் பதினாலாயிரம்*(14,000)*, நைருதி திசையில் பாஹ்ய பரீஷர்க்கு ஆஸனம் பதினாறாயிரம் *(16000)*, ஆகும். அந்த திசையிலேதானே முன் சொன்னதற்குள்ளாக த்ராய ஸ்த்ரிம்ஸர்க்கு ஆஸனம் முப்பத்து மூன்றாகும் *(33)*, பச்சிம திசையில் வருணன் ஆஸனத்துக்கு மேற்காக ஸேனாபதிகளுக்க ஆஸனம் ஏழாகும். வாயு திசையிலும் ஈசான திசையிலும் ஸாமா நிகர்க்கு நாற்பத்தீராயிரம் நாற்பத்தீராயிரம் ஆஸன மாகும். இச் சொல்லப்பட்ட ஆஸனங்களுக்குப் புறம்பு பூர்வாதியாக நாலு திக்கிலும் அங்க ரக்ஷர்க்கு பத்ராஸனம் ப்ரத்யேகம் எண்பத்த நாலாயிரம் எண்பத்து நாலாயிரங்கள் ஆகும். *(84,000)*.

அடிக்குறிப்பு: ஆஸ்தான மண்டபம்-அரச அவை, இங்கே இந்திரன் அவை; பத்ராஸனம்-சிம்மாசனம்; மானஸ்தம்ப விஸ்தாரம்-ஒரு யோஜனை-4குரோசம். மான ஸ்தம்பம் வட்டமானது. எனவே அதன் சுற்றளவு 3x4=12 குரோசம். எனவே பன்னிரண்டு பட்டை அமைகிறது.

இச் சொல்லப்பட்ட மண்டபத்துக்கு முன்பாக இருக்கிற மானஸ்தம்ப ஸ்வரூபம் சொல்லுதும்:

மானஸ்தம்பம் ஒரு யோஜனை அகலமும் முப்பத்தாறு யோஜனை உயரமுமாய் பீட ஸஹிதமாகி வஜ்ரமயமாய் இருக்கம். அந்த மான ஸ்தம்பத்துக்குப் பன்னிரண்டு பட்டை க்ரோச, க்ரோச விஸ்தாரத்தில் ஆகும். மற்றும் மணிகள் முதலாகியது ரம்யங்களாகி இருக்கும்.

நகைப் பெட்டி:

இந்த மான ஸ்தம்பத்தில் இருக்கும் பூஷணப் பெட்டிகள் சொல்லுதும்:

அடியில் ஐந்தே முக்கால் யோஜனைக்கு மேலே உபரி ஆறேகால் யோஜனைக்குக் கீழே மத்யத்திலே ஒரு க்ரோச நீளமும் கால் க்ரோச அகலமும் ஆகிய பெட்டிகள் தீர்த்தகர பரம தேவர்கள் ஆபரணங்கள் நிறைந்து ரத்ன பூட்டுகளினாலே பூட்டி முன் சொல்லப்பட்ட பட்டைகள் மேலே இருக்கும்.

ஸௌதர்ம ஈசான கல்பத்தில் இருக்கிற மான ஸ்தம்பத்தில் இருக்கிற பெட்டிகளில் பரத, ஐராவத தீர்த்தகர பரம தேவர்களுக்கு ஆபரணங்கள் ஆகும். ஸநத்குமார மாஹேந்த்ரத்தில் இருக்கிற பெட்டிகளில் பூர்வ அபர விதேஹ தீர்த்தகர பரம தேவர்கள் பூஷணங்கள் ஆகும். இந்த பூஷணப் பெட்டிகளை தேவர்கள் எந்நேரமும் அர்ச்சனை பண்ணுவர்கள்.

இந்திரன் பிறப்பிடம்:

அப்பால் இந்த்ர உத்பத்தி க்ருஹ ஸ்வரூபம் சொல்லுதும்:

முன் சொன்ன மான ஸ்தம்பத்து அண்டையிலே எட்டு யோஜனை அகலமும் தாவத் ப்ரமாண நீளமும் அவ்வளவு உயரமுமாகிய க்ருஹ மாகும். அதன் மத்யத்திலே இரண்டு ரத்ன மயமாகிய உப பாத மாகும். அதன் பார்ச்வத்திலே பஹு கூடங்கள் ஜிந க்ருஹ மாகும்.

தேவியர் பிறப்பிடம்:

இப்பால், கல்ப ஸ்த்ரீகள் உத்பத்தி ஸ்தானம் சொல்லுதும்:

ஸௌதர்ம கல்பத்து சுத்தம் தேவியராய்ப் பிறக்கிற விமானம் ஆறு லக்ஷம் ஆகும். சேஷ இருபத்தாறு லக்ஷமும் தேவரும் தேவியரும் கலந்து பிறக்கிற விமானமாகும். சுத்த தேவியர் எல்லாரும் உபரி ஸநத்குமார முதலாகிய தக்ஷிண கல்பத்தார் ஸம்பந்த மாகும்.

ஈசான கல்பத்து இருபத்து நாலு லக்ஷம் தேவரும் தேவியரும் பிறக்கிற இடமாகும். சேஷ நாலு லக்ஷம் சுத்த தேவியர் பிறக்கிற விமானங்கள் ஆகும். அவர்கள் அனைவரும் மாஹேந்தர கல்ப முதலாகிய உத்தர கல்பத்தார் ஸம்பந்த மாகும்.

காமசேவை:

இப்பால், கல்பவாஸிகளுக்கு ப்ரவீசாரம் சொல்லுதும்:

தேவ தேவிகளுக்கு ஸௌதர்ம ஈசானத்தார் காய ப்ரவீசாரம்; ஸநத்குமார மாஹேந்த்ரத்தார் ஸ்பர்ச் ப்ரவீசாரம்; ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தர, லாந்தவ காபிஷ்ட இந் நால்வரும் த்ரசன ப்ரவீசாரம்; அதன் மேல் சுக்ர மஹாசுக்ர, சதார ஸஹஸ்ரார இந்நால்வரும் சப்த ப்ரவீசாரம்; அதன் மேல் ஆநதாதி நால்வரும் மன ப்ரவீசாரம்; அதன்மேல் அஹமிந்த்ரர் அனைவரும் அப்ரவீசாரர் ஆகும்.

விகுர்வணையும் அவதி ஞானமும்:

அநந்தரம் வைமானிக தேவர்களுக்கு விக்ரியா சக்தியும் ஜ்ஞான விஷயங்களும் சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசான கல்பத்தார்க்கு ப்ரதம நரக பர்யந்தம் விகுர்வணா சக்தியும் அவதி ஜ்ஞான விஷயமும் ஆகும். ஸநத்குமார மாஹேந்த்ர கல்பத்தார்க்கு இரண்டாம் நரகம் பர்யந்தம் விகுர்வணா சக்தியும் அவதி ஜ்ஞான விஷயமும் ஆகும். ப்ரஹ்மாதி நாலு கல்பத்தார்க்கு மூன்றாம் நரக பர்யந்தம் விகுர்வணா சக்தியும் அவதிஜ்ஞான விஷயமும் ஆகும். சுக்ராதி நாலு கல்பத்தார்க்கும் நாலாம் நரக பர்யந்தம் விகுர்வணா சக்தியும் அவதிஜ்ஞான விஷயமும் ஆகும். ஆநதாதி நாலு கல்பத்தார்க்கும் அஞ்சாம் நரக பர்யந்தம் விகுர்வணா

அடிக்குறிப்பு: சுத்தம் தேவியராய்-தேவியர் மட்டும்; அங்கே பிறக்கின்றவர்களை ஸநத்குமார முதலான மேல் கல்பத்தார் தம்தம் தேவியரை அழைத்துச் செல்வர்; ஈசான கல்பத்து பிறப்பவர்களை மாஹேந்த்ர முதலான கல்பத்தார் அழைத்துச் செல்வர். மேல் கல்பங்களில் தேவியர் பிறப்பதில்லை.

சக்தியும் அவதிஜ்ஞான விஷயமும் ஆகும். நவக்ரைவேயக ஒன்பதின் மருக்கும் ஆறாம் நரக பர்யந்தம் விகுர்வணா சக்தியும் அவதிஜ்ஞான விஷயமும் ஆகும். அநுதிசா அநுத்தர விமானம் பதினால்வருக்கும் ஏழாம் நரக பர்யந்தம் விகுர்வணா சக்தியும் அவதிஜ்ஞான விஷயமும் ஆகும்.

இவர்கள் அனைவருக்கு உபரி ஜ்ஞான ஸ்வரூபம் சொல்லுதும்:

ஸௌதர்ம கல்பம் முதலாக நவ க்ரைவேயக பர்யந்தம் இருக்கிற தேவர்கள் தங்கள் தங்கள் கல்ப த்வஜ தண்ட நுனியளவும் அவதி ஜ்ஞானமும் அவதி தர்சனமும் ஆகும். நவாநுதிசை தேவர்கள் தங்கள் தங்கள் விமான சிகர முதலாக கீழ் பாஹ்ய வாதவலயம் பர்யந்தம் சற்றுக் குறைய பதினாலு கயறு ப்ரமாணமும் ஒரு கயற்று ப்ரமாண விஸ்தாரமு மாகிய ஸர்வ லோக நாளிகையும் அறியும் ஜ்ஞான முடையார். பஞ்சாநுத்தர தேவர்கள் ஸர்வ லோக நாளிகையும் காணும் சக்தியுமுடையராகும்.

அடிக்குறிப்பு: ப்ரவீசாரம்-காம உணர்வு தணித்தல்; காய ப்ரவீசாரம்- உடல் உறவு கொள்ளுதல்; ஸ்பர்ச--தொடுணர்வு; தர்சன-பார்த்தல்; மன-நினைத்தல்; அப்ரவீசாரர்-காமமில்லார்; 'மிடையில் மேனியைத் திண்டலில், காண்டலில்; அடையும் இன் சொலில், சிந்தையில் மேவலில்; மட நல்லாரின் வரும் பயன் எய்துவர்' மே.பு.503; விகுர்வணை-உருப்பல ஆகுதல்; 'உருப்பல ஆகும் மேனியான்' மே.பு. 509. அவதி ஞானம்-ஓதி ஓானம்; 'சோதம் ஈசானர்தம் மேல் இருவர்தம்; ஓதிமண் ஒன்றிரண்டு அம்முறையுறும்; நீதியால் நிலம் கீழ் மூன்று நால் ஐந்தாம் ஓதியால் மேல முன் நால்வர் உணர்வரே'; 'ஆற தாவதைக் கேவச்சம் ஆய்ந்திடும்; ஈறில் அவ்விருவர்க்கும் ஏழாவதாம்; மாறிலாச் சவ்வ சித்தியில் வானவர்; ஊறிலா ஓதி நாழிகை யுள் கொளும்' மே.பு.501,502.

ரஜ்ஜு நோக்கு:

மற்றும் விகுர்வணா சக்தியும் அவதி ஜ்ஞான விஷயமும் அந்த அந்த கல்பத்தார்க்கு லோக ப்ரமாணத்திலே இத்தனை உண்டு என்பதனைச் சொல்லுதும்:

லோகம் முந்நூற்று நாற்பத்து மூன்று கயறு ப்ரமாணத்தில் ஸௌதர்ம ஈசான கல்பத்தார்க்கு ஒன்றரைக் கயிறும், ஸநத்குமார மாஹேந்த்ர கல்பத்தார்க்கு நாலு கயறும், ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தர கல்பத்தார்க்கு அஞ்சரை கயறும், லாந்தவ காபிஷ்டத்தார்க்கு ஆறு கயறும், சுக்ர மஹாசுக்ர கல்பத்தார்க்கு ஏழரைக் கயறும், சதார ஸஹஸ்ரார கல்பத்தார்க்கு எட்டு கயறும், ஆநத ப்ராணத கல்பத்தார்க்கு ஒன்பதரைக் கயறும், ஆரண அச்யுத கல்பத்தார்க்கு பத்துக் கயறும், நவ க்ரைவேயகத்தார்க்கு சற்று அதிக மாகிய பதினொரு கயறும், நவாநுதிசையாருக்குச் சற்றுக் குறைய பதின்மூன்று கயறும், பஞ்சாநுத்தரர்க்குச் சற்றுக் குறைய பதினாலு கயறும் நாளிகையுள்ளளவும் அறியும் சக்தி யுடைய தாகும்.

பிறப்பு இறப்பு இல்லா இடைவெளிக் காலம்:

தேவர்கள் ஜனனத்துக்கும் தேவர்கள் மரணத்துக்கும் அந்தரம் சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசான கல்பத்தார்க்கு ஏழு நாள் (7); ஸநத்குமார மாஹேந்த்ர கல்பத்தார்க்கு பதினைந்து நாள்(15); ப்ரஹ்மாதி நாலு கல்பத்தார்க்கு ஒரு மாஸம்(1); சுக்ராதி நாலு கல்ப்பத்தார்க்கு இரண்டு மாஸம்(2); ஆநதாதி நாலு கல்பத்தார்க்கு நாலு மாஸம் (4); சேஷ அஹமிந்த்ரர்க்கு எல்லாம் ஆறு மாஸம் ஆகும்(6).

மற்றும் இந்த்ராதிகட்கு உத்க்ருஷ்ட அந்தரம் விசேஷத்தினால் சொல்லுதும்:

ஸர்வ இந்த்ரர்களுக்கும் அவர்கள் மஹா தேவியர்க் லோகபாலர்க்கும் உத்க்ருஷ்டத்தினால் ஆறு மாஸமாகும் (6) த்ர

அடிக்குறிப்பு: அந்தரம்-இடைவெளி காலம்; பிறப்பு அல்லது இறப்பு நிகழாமல் இருந்தால் அதிக அளவு எவ்வளவு கால இடைவெளி அப்படி இருக்கும் என்று இங்கே கூறப்பட்டுள்ளது.

ஸ்த்ரிம்ச தேவர்க [illegible] ங்க ரக்ஷகர்க்கும், ஸாமாநிகர்க்கும், பாரிஷதர் [illegible] ரம் (4).

[illegible] னன மரணங்களுக்கு அந்தரம் சொல்லப்பட்டது.

தேவராகப் பிறப்போர் சிலர்:

இப்பால், தேவ கதியில் பிறக்கிற பேருடைய விசேஷ ஸ்வரூபம் சொல்லுதும்:

மநுஷ்ய லோகத்திலே விட லக்ஷண காந்தர்ப்ப பரிணாமத்திலே கூடினவர்கள் ஸ்வ யோக்ய சுப கர்ம வசனத்தினால் ஈசான கல்ப பர்யந்தம் கந்தர்ப்ப தேவர்களாகிப் பிறப்பார். அதன் மேல், கிதோபதேச விலக்ஷண கைல்விஷிக பரிணாமர்தோடே கூடின பேர்கள் ஸ்வ யோக்ய சுப கர்ம வசத்தினால் லாந்தவ கல்ப பர்யந்தம்

அடிக்குறிப்பு: ஜனன மரணங்களுக்கு அந்தரம்-பிறப்பு இறப்பு இல்லா இடைவெளிக்காலம்; அதாவது எத்தனைக்காலம் வரை தேவ விமானத்தில் வந்து ஒருவரும் பிறக்க வில்லையோ அது அங்கு பிறப்பு இல்லா இடைவெளிக்காலம்; அதே போன்று எத்தனைக்காலம் வரை எந்தத்தேவனும் இறக்க வில்லையோ அது அங்கு இறப்பு இல்லா இடைவெளிக்காலம். உதாரணமாக சௌதர்ம ஈசான கல்பத்தில் யாரும் வந்து பிறக்க வில்லை என்றால் ஏழு நாள், உயர்ந்தளவு, பிறக்காமல் இருக்கலாம். அதற்கு மேல் நிச்சயாமாக யாராவது வந்து பிறப்பர். இது போல மரணத்தையும் புரிந்து கொள்கதி.ப. காதை 8/544-548ல் வந்துள்ள இடைவெளிக்காலம் வேறுபட்டுள்ளது. அதனை அங்குக் கண்டு கொள்க; மநுஷ்ய லோகத்திலே-மனிதப் பிறவியில்; விட லக்ஷண-காம இயல்பு; காந்தர்ப்பய-மிகு காமம்; ஸ்வ யோக்ய-தனக்குரிய; கிதோபதேச - கிதோபஜீவி - இசையினால் பிழைப்பவர்; கைல்விஷிக - பாப; கில்விஷிக - காண்டாளரைப் போன்ற நீச தேவன் (தி.ப.3/68) ஸாவத்ய க்ரியை - பாப காரியங்கள்; இழி செயல்கள்; ஆபியோக்ய பாவனை - இழிசெயல் உணர்வு; ஆபியோக்ய தேவர் - வேலைக்காரன் போல நீச தேவன் (தி.ப.3/68) வாஹனமாக உருக்கொள்ளும் தேவர்.

கில்விஷிக தேவர்களாகிப் பிறப்பர். அதன் மேலே ஸாவத்ய க்ரியைகளில் தங்கள் தங்கள் கைகளினால் வ்யாபார லக்ஷண ஆபியோக்ய பாவனையோடு கூடினவர்கள் ஸ்வ யோக்ய சுப கர்மவசத்தினால் அச்யுத கல்ப பர்யந்தம் ஆபியோக்ய தேவர்களாகிப் பிறப்பர். இவர்கள் அனைவருக்கும் அந்த அந்த கல்பத்து ஜகன்ய ஆயுஷ்யம் ஆகும்.

தேவர்கள் ஆயுள்

இப்பால், ஸௌதர்ம கல்ப முதலாகிய தேவர்களுக்கு ஆயுஷ்ய ப்ரமாணம் சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசான கல்பத்தார்க்கு ஜகன்யம் ஒரு பல்லம்; உத்க்ருஷ்டம் இரண்டு கடல் ஆயுஷ்ய மாகும். ஸநத்குமார மாஹேந்த்ர கல்பத்தார்க்கு ஏழு கடல்(7); ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தர கல்பத்தார்க்கு பத்து கடல்(10); லாந்தவ காபிஷ்ட கல்பத்தார்க்கு பதினாலு கடல் (14); சுக்ர மஹாசுக்ரக்ல்பத்தார்க்கு பதினாறு கடற்காலம் (16); சதார சஹஸ்ரார கல்பத்தார்க்கு பதினெட்டு கடல் (18); ஆநத ப்ராணத கல்பத்தார்க்கு இருபது கடல்(20); ஆரண அச்யுத கல்பத்தார்க்கு இருபத்திரண்டு கடல்(22); நவக்ரைவேயகத்தார்க்கு படலம் [illegible] தோறும் ஒவ்வொன்று அதிகமாகி உபரிமோ உபரிமத்து முப்பத்தொரு கடல்(31); நவாநுதிசையார்க்கு முப்பத்திரண்டு கடல் (32); பஞ்சாநுத்தரத்தார்க்கு முப்பத்துமூன்று கடல் (33); ஆயுஷ்யம்-உத்க்ருஷ்டம் மாகும். ஜகன்யம் கீழோர் கீழோர் உத்க்ருட்த்தின் மேலே ஸமயம் அதிகம்-மேலோர் மேலோர் ஜகன்ய ஆயுஷ்ய மாகும்.

அடிக்குறிப்பு: ஆயுஷ்ய ப்ரமாணம்-ஆயுள் அளவு; 'இரண்டும் ஏழும் ஈரைந்தும் ஈரேழுமாய், இரண்டு மேல்சென்று இருபத்திரணடு எய்த, திரண்ட அவற்றின் மேல் ஒன்று சென்று ஆயுகம், முரண்டெழும் கடல் முப்பத்து மூன்று' மே.பு.498 படலம் ப்ரதி-படலந் தோறும்; ஜகன்யம்-குறைந்தளவு; ஆயுள் படலத்து உயர்ந்த ஆயுளோடு ஒரு ஸமயம் கூட்டினால் அடுத்த படலத்து குறைந்த ஆயுளாகும். 1/2+1/20=11/20+1/20=12/20+1/20 ......20/20; 1+1/20 2/20......1+20/20 =2 கடல்; 31ம் படலத்து 2 கடலாகும்.

இச் சொல்லப்பட்ட ஆயுஷ்யங்கள் கல்ப கல்பங்களில் படலம் ப்ரதி பேதம் சொல்லுதும்:

ஸௌதர்ம ஈசான கல்பத்து ப்ரதம படலத்து ஜகன்ய ஆயுஷ்யம் ஒரு பல்லம்; உத்க்ருஷ்ட ஆயுஷ்யம் அரைக் கடலாகும்.

இரண்டாம் படலத்துக்கு ஜகன்யம் அரைக் கடலும் ஒரு ஸமயமும்; உத்க்ருஷ்டம் ஒரு கடலை இருபது பாகம் பண்ணி அதில் ஒரு பாகமும் கூட அரைக்கடலும் ஒரு பாகமும் ஆகும்.

மூன்றாம் படலத்துக்கு இவ்வண்ணம் ஒரு பாகம் கூட்ட அரைக் கடலும் இரண்டு பாகமும் ஆகும்.

இவ்வண்ணம் படலம் ப்ரதி ஒவ்வொரு பாகம் கூட்ட அந்த்யம் முப்பத்தோராம் படலத்து இரண்டு கடலாகும்.

ஸநத்குமார மாஹேந்த்ர கல்பத்து ப்ரதம படலத்துஜகன்ய ஆயுஷ்யம் இரண்டு கடலும் ஒரு ஸமயமும் ஆகும்; உத்க்ருஷ்டம் ஒரு கடலைப் பதினாலு பாகம் பண்ணினதில் பத்து பாகமும் ஆகும்.

அடிக்குறிப்பு:2/1+10/14=38/14+10/14=48/14+10/14=58/14+10/14=68/14+10/14=78/14+10/14=88/14+10/14=98/14=7 கடல்; 7+3/4=7 3/4+3/4=8 1/2+3/4=9 1/4=3/4=10கடலாகும்; 10+2=12+2=14கடலாகும்; இது போல படலந்தோறும் கூட்டிச் சென்று அறிக. காதாயுஷ்யர்க்கு-ஆயுள் கூடும் தேவர்க்கு; உதாரணமாக ஒருவன் ஸய்யம (ஒழுக்க) நிலையில் அச்யுத கல்ப 22 கடல் கால ஆயுளைப் பந்திக்கிறான். பிறகு, ஒழுக்கத்தில் தளர்ந்து கட்டிய ஆயுளைக் குறைத்து விரதமில்லா நற்காட்சியுடையவனாக வாழ்ந்து மரணம் அடைகிறான். ஸஹஸ்ரார கல்பத்தில் அவன் பிறப்பதாக வைத்துக் கொள்வோம். அங்கே. உயர்ந்த அளவு ஆயுள் 18 கடலாகும். அதைக்காட்டிலும் 1/2 கடல் கூடுதலான ஆயுளுடன் இந்த அவிரதி இருப்பான். இதனையே காதாயுஷ்ய ஸம்யக் த்ருஷ்டி ஆயுள் என்பர் அவனே ஒழுக்கத்தையும் விட்டு நற்காட்சியையும் விட்டு மித்யா திருஷ்டியாகி இறந்து அங்கே பிறப்பானானால் பல்யத்தின் அஸங்க்யாத பாகம் காலம் கூடுதலோடு பிறப்பான். இது போல பிறவற்றையும் அறிக.

இவ்வண்ணம் படலம் ப்ரதி பத்து பாகம் பெருகி அந்த்யம் ஏழாம் படலத்திலே ஏழு கடலாகும்(7).

ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தர ப்ரதம படலத்து ஜகன்ய ஆயுஷ்யம் ஏழு கடலும் ஒரு ஸமயமும் ஆகும். உத்க்ருஷ்டம் ஏழே முக்கால் கடலாகும் (73/4). இவ்வண்ணம் படலம் ப்ரதி முக்கால் முக்கால் பெருகி அந்த்யம் நாலாம் படலத்து பத்து கடலாகும். (10).

லாந்தவ காபிஷ்டத்து ஜகன்யம் ப்ரதம படலத்து பத்து கடலும் ஒரு ஸமயமும் ஆகும்; உத்க்ருஷ்டம் பன்னிரண்டு கடல். இரண்டாம் படலத்து ஜகன்ய ஆயுஷ்யம் பன்னிரண்டு கடலும் ஒரு ஸமயமும் ஆகும்; உத்க்ருஷ்டம் பதினாலு கடல்(14).

சுக்ர மஹாசுக்ர கல்பத்து ஜகன்யம் பதினாலு கடலும் ஒரு ஸமயமும் ஆகும். உத்க்ருஷ்டம் பதினெட்டு கடலாகும்.

சதார - ஸகஸ்ராதத்து ஜகன்ய ஆயுஷ்யம் பதினாறு (16) கடலும் ஒரு சமயமும்; உத்க்ருஷ்டம் பதினெட்டு கடலாகும்.

ஆநதாதி நான்கிலும் ஆறு படலத்துக்கு ப்ரதம படலத்து ஜகன்யம் பதினெட்டு கடலும் ஒரு ஸமயமும்; உத்க்ருஷ்டம் ஒரு கடலை மூன்று பாகம் பண்ணி இரண்டு பாகமும் கூட்ட பதினெட்டு கடலும் இரண்டு பாகமும் ஆகும். இவ்வண்ணம் படலம் ப்ரதி இரண்டிரண்டு பாகம் கூட்ட அந்த்யம் ஆறாம் படலத்து உத்க்ருஷ்டம் இருபத்திரண்டு கடலாகும்.

